என்றும் உங்களுடன் புத்தகம்-1

மங்கையர் மலர்

மார்ச் 2009 MANGAYAR MALAR 258 பக்கங்கள் ரூ.20/-




3 புத்தகங்கள்

இணைப்பு: முதலீடு 64!

அடடா... புடவை கலாட்டா!

மகளிர் தின ஸ்பெஷல்


சீர்மை... செழுமை...
... கலந்தொன்றாய் காலந்தோறும்.



பைபாஸ் சர்ஜரிக்கு பை பை

மாரடைப்பா ? நெஞ்சு வலியா ? பைபாஸ் சர்ஜரி அல்லது
ஆஞ்சியோபிளாஸ்டி செய்ய வேண்டிய நிலையில் உள்ளீர்களா?

அறுவை சிகிச்சையற்ற ஓர் மாற்று வழியை நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும்

சொன்னவர்களின் உண்மைக்கதை



R. Karunanithi, Age:53, Mobile: 94427 04042.
Tamilnadu State Transport Corporation, Madurai.

முதற்கண் என் மகிழ்ச்சி கலந்த நன்றியை நியோமெட் மருத்துவர் டாக்டர் சிவபாலன் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன். நான் வேகமாக நடக்கும் போதும், கடினமாக வேலை செய்யும் போதும் மார்பு பகுதியில் ஓர் அசாதாரணமான ஒரு உணர்வு ஏற்படுவதை உணர்ந்தேன். என் இருதயத்தில் அடைப்பு இருப்பதை கண்டறியப்பட்டு பைபாஸ் சர்ஜரி பரிந்துரைக்கப்பட்டது. நியோமெட் மருத்துவமனையில் 3 மாதங்கள் சிகிச்சைக்குப் பிறகு எனக்கு அடைப்புகள் நீங்கி ஒரு புதிய சக்தி கிடைத்தது போல் உணர்ந்தேன். சிகிச்சை முடிந்து 3 வருடங்கள் ஆன பிறகும் இன்னும் நான் என் வேலைகளை நன்றாக செய்ய முடிகிறது.



S. Tamil Maran, Age : 57, Dharmapuri, Mobile : 94428 52687

எனக்கு ஜூலை 2006ல் எதிர்பாராத விதமாக Heart Attack என்ற இதய அடைப்பு ஏற்பட்டது. மருத்துவர்கள் பைபாஸ் சிகிச்சை செய்தால்தான் உடல் நலம் பெறும் என்று கூறினார்கள். 90% இரண்டு அடைப்பு உள்ளது என்றும் எட்டு நாட்களில் பைபாஸ் சர்ஜரி செய்யவேண்டும் இல்லையெனில் ஆபத்து நிலையை எதிர்கொள்ள வேண்டியதிருக்கும் என்று கூறினார்கள். இந்த சூழ்நிலையில் அறுவையில்லா பைபாஸ் செய்துவரும் நியோமெட் மருத்துவமனையை நண்பர்கள் மூலம் அறிந்து டாக்டர் சிவபாலன் அவர்களை சந்தித்தேன். அவரது சிறப்பான சிகிச்சையால் சிதிலமடைந்த என் இதயத்தை சீராக்கி இரண்டரை மாதங்கள் சிறப்பான சிகிச்சை அளித்தார்கள். Insulin ஊசி பயன்படுத்திய எனக்கு ஊசியை அகற்றி மாத்திரைகள் மூலம் நீரழிவு நோயை கட்டுப்படுத்தி சிகிச்சை அளித்தார்கள். தற்போது எந்த குறைபாடும் இல்லாமல் எந்தவித வலியும் இல்லாமல் நன்றாக உள்ளேன். டாக்டரின் ஆலோசனைப்படி உணவு கட்டுப்பாடு உடற்பயிற்சி, யோகா மூலம் சிறப்பாக செயல்படுவதால் இதய நோய்க்கு பைபை சொல்லிவிட்டேன். டாக்டரின் அன்பான உபசரிப்பு, என் தன்னம்பிக்கை கிடைத்த வெற்றியாக கருதுகிறேன்.



J.M.Iqbal, Age:58, Ramnad, Mobile: 9443619722

எனக்கு மார்ச் 2006ல் மாரடைப்பு வந்தது. 13.3.2006ல் ஆஞ்சியோகிராமில் 3 இடங்களில் அடைப்புகள் இருப்பது தெரியவந்தது. அதில் முக்கியமான இரத்தக்குழாய்களில் 100% அடைப்பு இருந்ததால் அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டது. இருதயத்தின் செயல்பாடு EF - 38% – 40% தான் இருப்பதாக தெரியவந்தது. அப்போது சர்ஜரி இல்லாமல் எளிய முறையில் சிகிச்சை செய்து வரும் நியோமெட் மருத்துவமனையை தொடர்பு கொண்டு மூன்றரை மாதங்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். இந்த அற்புதமான சிகிச்சைக்குப்பிறகு கடந்த இரண்டரை வருடங்களாக எந்தவித தொந்தரவும் இல்லாமல் மன நிம்மதியுடன் வாழ்கின்றேன். இந்த அறுவையில்லா சிகிச்சை முறையை காட்டித்தந்த இறைவனுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நியோமெட் மருத்துவமனையின் சாதனைகள் தொடர வாழ்த்துகின்றேன்.

NEOMED HOSPITAL
CARE FOR BETTER LIVING

MADURAI : 11, Lakeview Road, Opp.Sundaram Theatre, K.K.Nagar, Madurai - 625 020. Ph: 0452-2581414, 2581515
SALEM : 127/1, 'Varalakshmi Towers', Gandhi Road, Salem - 636 007. Ph: 0427-2311818, 2311819
TRICHY : New No. 52, General Bazaar Street, Thennur, Trichy, Phone : 0431-2791051, 2791052
CHENNAI : 2181, L-Block, 12th Main Road, Anna Nagar, Chennai - 600 040. Ph: 044-26201147, 26200882

Timing: Weekdays 9 am to 6 pm. Sunday holiday. www.neomedhospitals.com

அட்டை : பூனம் பூஜ்வா

நன்றி : நியூ சரவணா ஸ்டோர்ஸ்

படம் : மீடியா பார்க்













148

நம்பிக்கை மனுஷி



52

பகவான் பாபா!

ரூ.5,000 பரிசு

ஆன்மிகப் போட்டி 145



36

சாதனை சுதா



79

அடடா... புடவை கலாட்டா!

'கல்கி'யின் கோவை மாவட்ட விசிட் கூப்பன் உள்ளே... 46



29

நியூவேவ் சமையல் தொடர்

ளிர் மாத இதழ்!

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

மலர் : 29 இதழ் : 2 மார்ச் 2009

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

அடுத்த இதழில்...



உங்கள் அபிமான
குட்டி புக்கில்
விஜயலட்சுமி பந்தையன்
வழங்கும்
மனவியல் டிப்ஸ்!

நேசிக்க நேரமில்லை!

ராஜேஷ்குமார்
எழுதும்



யூத்
சிறுகதை

ஆழ்மனசு 64!





காலை முதல் மாலை வரை

'அஷ்டாவதார சமையல்!'

சீதா, சாவித்திரி, அகல்யா, அருந்ததி, தமயந்தி, அனுசுயா, ஜாபாலி, லோபமுத்ரா, நளாயினி, கார்க்கி, மைத்ரேயி, ஔவையார், காக்கைப் பாடினியார், ஸ்ரீ ஆண்டாள், ஒக்கூர் மாசாத்தியார், வெள்ளி வீதியார், பூங்கணுத்தரையார், வாசுகி, கண்ணகி, மாதவி, மணிமேகலை, பக்தமீரா, சக்குபாய், அக்கமகாதேவி, ராணி லக்ஷ்மிபாய், இராணிமங்கம்மா,

உலக



மகளிர் தின

வாழ்த்துக்கள்!

ஒரு வார்த்தை!

ராணி மங்கையர்க்கரசி, குந்தவை நாச்சியார், தாராபாய், ஜீஜாபாய், மும்தாஜ் பேகம், இரஸியா பேகம், நூர்ஜஹான், சாந்த் பீவி, ஸ்ரீ சாரதாதேவி, ஸ்ரீ அன்னை, சகோதரி நிவேதிதா, மாதா ஆனந்த மயி, டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி, கஸ்தூரிபா, அருணா ஆசாஃப் அலி, அன்னி பெசன்ட், துர்காபாய் தேஷ்முக், ருக்மணி அருண்டேல், தில்லையாடி வள்ளியம்மை, வேலு நாச்சியார், மணியம்மை, எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி, எம்.எல்.வசந்தகுமாரி, டி.கே.பட்டம்மாள், பாலசரஸ்வதி, கே.பி.சுந்தராம்பாள், வீணை தனம்மாள், அவர் மேல் வள்ளி, வை.மு.கோதை நாயகி அம்மாள், டி.பி. ராஜலக்ஷ்மி, பி. பானுமதி, டாக்டர் லக்ஷ்மி, ராஜம் கிருஷ்ணன், சிவசங்கரி, வாஸந்தி, பத்மா சுப்ரமணியம், புனிதர் அல்ஃபோன்ஸா, அன்னை தெரஸா, அன்னை நிர்மலா, சின்னப்பிள்ளை, கிருஷ்ணம்மாள், சாவித்ரி வைத்தி, பி.டி.உஷா, கல்பனா சாவ்லா, சானியா மிர்ஸா, கர்ணம் மல்லேஸ்வரி, இளவழகி, இந்திரா நூயி, கிரண் மஜூம்தார், சுதா நாராயண்மூர்த்தி, கிரண்பேடி, சபானா அஸ்மி, ஐஸ்வர்யா ராய், லதா மங்கேஷ்கர், பி. சுசிலா, தாமரை, இந்திரா காந்தி, விஜயராஜே சிந்தியா, ஜெ.ஜெயலலிதா, மேனகா காந்தி, சோனியா காந்தி, மேதா பட்கர், டாக்டர் சாந்தா, டாக்டர் கமலா செல்வராஜ், சகுந்தலா தேவி, அருந்ததி ராய், மம்தா பானர்ஜி, மாயாவதி, சுஷ்மா ஸ்வராஜ், கேப்டன் லக்ஷ்மி சேகல், ப்ரதிபா பாடீல்... நீங்கள்... நான்... நம்மைப் போலவே.. இன்னும்... இன்னும்...

அன்பும் பண்பும் பொறுப்பும் மிக்க பெண்கள் அனைவருக்கும்...

இனிய மகளிர் தின நல்வாழ்த்துக்கள்!

அனுஷா நடராஜன்

கல்கி

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பொறுப்பாசிரியர் : **அனுராதா சேகர்**

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன், பா.கோபால்

தொலைபேசி : 4343 8888
சந்தா பிரிவு : 4343 8833
தொலைநகல் : 044 - 4343 8899

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
mangayarmalar@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
இன்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 250/-
வெளிநாடு (விமானத்தபால்):
ஒரு வருடம் : ரூ. 2,200/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல


அறிமுகம்
ஓர் சக்தி வாய்ந்த கலவை
NATURE & SCIENCE
ஒரு Windmill என்பது nature and science கலவை. அதாவது காற்றின் சக்தியையும், தொழில்நுட்ப விஞ்ஞானத்தையும் உபயோகத்திற்கு ஏற்ற மின்சாரமாக மாற்றித் தருகிறது.
புதிய காட்பரி போர்ன்விட்டா++ இதிலுள்ளது கோகோ, பார்லி, பால் குளுகோஸ் போன்ற இயற்கை நற்குணங்கள் மற்றும் 20க்கும் மேற்பட்ட விஞ்ஞான உட்பொருட்கள். இது இன்றைய வாழ்வின் சவால்களை மேற்கொள்ள உங்கள் குழந்தையை சுறுசுறுப்பாகவும் உஷாராகவும் வைக்கிறது.
Cadbury
Bourn Vita ++
Cadbury
Bourn Vita ++
O&M 1127 TAM

மங்கையர் மலர் வாசகியரே!! திரளாக வருக! மாணவ சமுதாயமே!! திரண்டு வருக!



என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

பூஞ்சாரல்

2008 - 2009



ஆட்டம்... பாட்டம்... கொண்டாட்டம்...

40 கல்லூரிகளுக்கும் மேல் பங்கேற்பு...

500 க்கும் மேற்பட்ட மாணவர்களின் அசத்தல் அணிவகுப்பு...

திருச்சியில் மெகா இறுதிப் போட்டி...

14.03.2009 (சனிக்கிழமை) **& 15.03.2009** (ஞாயிறு)

திருமதி இந்திராகாந்தி மகளிர் கல்லூரி,

சத்திரம் பஸ் நிலையம் அருகில், திருச்சி 620 002.

நிகழ்ச்சி நேரம் :
காலை 10 மணி முதல்

பரிசளிப்பு விழா :
15.03.2009 மாலை 6 மணி அளவில்

ஆன்மிகம் என்பது என்ன?

- வி.ஸ்ரீவித்யா, குடந்தை-1.

ஆண்டவனை நினைத்துக்கொண்டு மனிதனுக்கு உதவுவதுதான் உண்மையான ஆன்மிகம்.

வானொலி, சின்னத்திரை, பொது மேடை, மாணவர் வட்டம் - இவற்றுள் எதில் அதிக விருப்பத்துடன் பங்கேற்பீர்கள்? ஏன்?

-ஆர்.ஜி.காயத்ரி, திசையன்விளை.

வானொலிதான் எனக்கு வசதி. ஏனென்றால் என் முகத்தைக் காட்ட வேண்டிய அவசியம் அதில் இல்லை. அதுதான் எனக்குப் பாதுகாப்பு!

வானொலியில் நீங்கள் சாதிக்கக் காரணமாக இருந்தது உங்களுடைய குரலா? இல்லை... குட்டிக் கதைகளா?

- கே.காளீஸ்வரி காளிதாசன், நீர்விளங்குளம்.

நேயர்களின் ஆதரவு!

வேண்டும்போது பெண்களைத் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள்... வேண்டாதபோது தூக்கிப் போட்டு விடுகிறார்களே... இது ஏன்?

- திலகவதி, தேனி.



ஏனென்றால் ஆண்களை அப்படித் தூக்கிப்போட வேண்டிய சிரமம் பெண்களுக்கு ஏற்படுவதில்லை. அப்படி ஒரு சிரமத்தை ஆண்கள், பெண்களுக்குக் கொடுப்பதில்லை. இந்தக் கதையைக் கேளுங்கள். ஒரு கணவனும், மனைவியும் சுற்றுலா போனார்கள். ஒரு கோயில். அதன் அருகே ஒரு குளம். அந்தக் குளத்தின் கரையோரமாகத் திரும்பி நின்றுகொண்டு தலைக்கு மேலாக ஒரு ரூபாய்க் காசை குளத்தில் வீசி எறிந்தாள் அந்தப் பெண்.

''எதுக்காக அப்படிச் செய்யறே?'' என்று கேட்டான் கணவன்.

மனைவிக்கு சமையலில் உதவுவதுண்டா?

வாசகர்களின் 'பளீர்' கேள்விகளுக்கு தென்கச்சி கோ. சுவாமிநாதன் தந்த 'பளிச்' பதில்கள்!

''இப்படிப் பின்பக்கமாக காசை வீசி எறிஞ்சா நாம மனசுலே நினைக்கிறது நடக்கும்!''

''அப்படியா... அப்படின்னா நானும் போடுறேன்'' என்று சொல்லிக் கொண்டே அவன் அந்தக் கரையோரமாகப் போய்த் திரும்பி நின்றான்.

கால்தடுமாறி குளத்தில் விழுந்து விட்டான்.

அவள் மனசுக்குள் நினைத்துக் கொண்டாள் : ''பரவாயில்லையே... நினைச்சது உடனே நடக்குதே...!''

தாங்கள் தங்கள் மனைவிக்கு சமையலில் உதவுவது உண்டா?

- பா.பனிமலர், மதுரை-14.

உண்டு! சாப்பிடுவது நான்தானே...!

தாங்கள் பெரிதும் நம்புவது விதியையா? மதியையா?

- சீதா, சென்னை-64.

எதைச் சந்திக்கிறோமோ அது விதி... எப்படிச் சந்திக்கிறோமோ அது மதி... இரண்டையும் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் வெற்றி நிச்சயம்!

தென்கச்சி சார், நீங்க ஒரு நரசிம்மராவ் என்று சொன்னால் வருத்தப்படுவீர்களா? சந்தோஷப்படுவீர்களா?

- எம். வேலம்மாள், பணகுடி

அதைக்கூட என் முகத்தைப் பார்த்து உங்களால் கண்டுபிடிக்க முடியாது! ஆகவே அது இரகசியம்... சொல்ல மாட்டேன்.

தங்கள் ஓய்வுக் காலத்தை எப்படிப் பயனுள்ள வகையில் செலவழிக்கிறீர்கள்?

- ஆர். பிரேமா, மேற்கு மாம்பலம்.

என்னுடைய ஓய்வுக் காலத்தை

அடுத்தவர்களுக்குப் பயனுள்ள வகையில் நான் செலவழிக்கிறேன். அது எப்படி என்கிறீர்களா?

அடுத்தவர்களுக்கு எந்த ஆலோசனையும் சொல்வதில்லை. அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிடுவதில்லை.

தங்களை உயர்த்திய பெண்மணி யார்?

- ரம்யா ஷான், பெங்களூரு-6.

நான் குழந்தையாய் இருந்தபோது, என்னைத் தரையில் இருந்து தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்ட எல்லோருமே என்னை உயர்த்தியவர்கள்தான்!



அடுத்த பெப்பர் பாப்கார்னில் 'சிவா மனசுல சக்தி' இயக்குநர் ராஜேஷ் பதிலளிக்கிறார். வாசகியர் ஜாலி கேள்விகளை அனுப்பலாம்!

நடனப் போட்டிகளில் உங்களை நடுவராகப் போட்டால் என்ன செய்வீர்கள்?

- கலாவதி, தலையூர், அஸ்தினாபுரம்.

நானும் ஆட ஆரம்பித்து விடுவேன் நடுக்கம் காரணமாக...!

நீங்கள் பிரபலம் ஆகக் காரணம் தங்களின் குரலா? அறிவா?

உமாதேவி பலராமன், திருவண்ணாமலை.

வானொலி!

வானொலி அனுபவங்கள் ஏதாவது...?

- ஹேமமாலினி, சென்னை-101, சியாமளா ராஜகோபால், சென்னை-64.

இன்று ஒரு தகவல் கேட்டுவிட்டு, என்னை ஒரு சாமியாராக எண்ணிக் கொண்டு நேரில் வந்து, 'என் பெண்ணுக்குச் சீக்கிரம் கல்யாணம் ஆகணும்னு ஆசீர்வாதம் பண்ணுங்க' என்று கேட்டு விபூதி பூசிக் கொண்டு போனவர்கள் உண்டு. அது எனக்கு ஆச்சரியமாக இருக்கும். ''உங்கள் ஆசீர்வாதத்தால் என் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டது!'' என்று அவர்களே திரும்ப வந்து சொல்லும்போது அதைவிட ஆச்சரியமாக இருக்கும்.

தாய்நாட்டுக்காக நாம் என்ன செய்ய வேண்டும்?

- எம்.எச். உஷா, பரமக்குடி

இன்றைக்கு நடப்பதையெல்லாம் பார்க்கிறபொழுது, நாம் சும்மா இருந்தாலே தாய்நாடு சுகமாக இருக்கும் என்று தோன்றுகிறது.

வானொலியில் நீங்கள் ஒருநாள் கூட விடுமுறை எடுத்தது இல்லையாமே...?

-எல். மோகன சுந்தரி, கிருஷ்ணகிரி-1.

அப்படியெல்லாம் இல்லை... நானும் லீவு எடுத்திருக்கிறேன். என் தொல்லைக்குப் பயந்து மற்றவர்களும் 'லீவு' எடுத்திருக்கிறார்கள்.


சுதந்திர வானில் சிறகடித்துப் பறந்திடுங்கள்!
TVS
new Scooty Teenz
Scooty Teenz
ELECTRIC
IT'S YOUR TURN NOW
எளிதாக ஓட்டலாம்.
எளிதாக வாங்கலாம்.
* Patent applied for
ஸ்கூட்டி ரேஞ்ச் ரூ.27,285* முதல் ஆரம்பம்
செல்ப் ஸ்டார்ட்
ஆட்டோ கியர்
அதிக ஸ்டோரேஜ்
பேட்டரியில் செயல்படுகிறது
லோ சார்ஜ் இண்டிகேட்டர்
கூடுதல் ஸ்டோரேஜ் இடம்
மொபைல் சார்ஜர்
பஞ்சர் ஆகாத டயர்கள்
EaZy சென்டர் ஸ்டாண்டு
ரேஞ்ச் செலக்டர்
மேலும் விபரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள டிவிஎஸ் டீலரை அணுகவும்.

காரடையான் நோன்பு

சுமங்கலிப் பெண்கள் தங்கள் மாங்கல்ய பாக்கியம் நீடித்து நிலைத்திருக்க ஸ்ரீகாமாட்சி அம்மன் அருள் வேண்டி வழிபடும் நேரம் இது. இதனைக் 'காரடையான் நோன்பு' என்றும் 'சாவித்ரி விரதம்' என்றும் சொல்வார்கள்.

தனக்கு வரப்போகும் கணவன் குறைந்த ஆயுளை உடையவர் என்று தெரிந் தும், சத்தியவானை தைரியமாக மணந்தாள் சாவித்ரி.

த்ரியுமத்சேனன் மன்னன் மகனான சத்தியவான், விதி வசத்தால் பகைவர்களால் விரட்டப்பட்டதால் காட்டில் வாழும் நிலை ஏற்பட்டது.

ஒருநாள் காட்டில் மரம் வெட்டிக் கொண்டிருந்த சத்தியவான், திடீர் என்று மரணமடைந்தான். உடனே, சாவித்திரி அங்கிருந்த மண்ணைப் பிசைந்து அடை தட்டி, அவள் மேற்கொண்டிருந்த கௌரி விரதத்தை முடித்தாள். அந்த விரதத்தின் பயனால், அவள் கண்களுக்கு எமதர்மன் தெரிந்தான். சாவித்திரி எமனோடு வாதிட்டு, தன் கணவன் உயிரை மீட்டாள்; இழந்த ராஜ்யத்தையும் பெற்றாள்.

சாவித்திரி முதன்முதலில் அன்னை காமாட்சியைப் பூஜித்து மேற்கொண்ட விரதம் என்பதால் சாவித்திரி விரதம் என்றும் பெயர் வந்தது.

காரடையான் விரதம் கடைப்பிடிப்பவர்கள், அன்று காலை முதல் விரதமிருந்து நோன்பு முடியும்வரை உபவாசம் இருப்பார்கள். இரண்டு மாதங்களும் (மாசி- பங்குனி) சங்கமிக்கும் நேரம் வந்ததும் பூஜை செய்வார்கள்.

'உருகாத வெண்ணையும், ஓரடையும் நான் படைத்தேன் என் கணவன் ஒரு நாளும் என்னை விட்டு பிரியாதிருக்க வேண்டும்' என்று வேண்டுவர். பூஜையில் வைத்த மெல்லிய மஞ்சள் நூலால் ஆன சரடை அணிவர். கன்னிப் பெண்களுக்கு பெரியவர்கள் கட்டி விடுவர். இந்த விரதத்தை அனுஷ்டித்தால்



உருகாத வெண்ணெயும் ஓரடையும்!

ஸ்ரீகாமாட்சி அம்மனின் அருள் கிட்டி, மாங்கல்ய பலம் கூடும்; மங்களகரமான வாழ்வு நிலைத் திருக்கும் என்பது நம்பிக்கை!

– ராதா பரிமளம்,
திருச்சி

குக்கரி க்வீன்!

மிக்ஸ் அண்ட் மேட்ச் சமையல் போட்டி



குக்கரி தர்பாரில் கலந்துக் கொள்ள சமையல் ராணிகளை அழைக்கிறோம். ஒரிஜினல் சமையல் குறிப்புகளைத் தெளிவாக எழுதி, கீழே உள்ள கூப்பனையும் நிரப்பி அனுப்புங்க. தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து ரெஸிபிகளுக்கு தலா ரூ. 250/- பரிசு!

குக்கரி க்வீன் சமையல் போட்டி (மார்ச்)

கண்டிப்பாகப் பயன்படுத்த வேண்டிய பொருட்கள் :

புதினா + உருளைக் கிழங்கு

பெயர் : ....

முகவரி : ....

....

....

கடைசித் தேதி : 25.3.2009



அலுவலகங்களில் சில மேல் அதிகாரிகள் அவர்களுக்குக் கீழ் வேலை செய்யும் பெண்களிடம் தவறாக நடக்க முயற்சிக்கிறார்கள். இம்மாதிரி பெண்களுக்கு உதவி செய்ய டில்லியில் ஒரு சமூக, சட்ட, ஆலோசனை மையம் இருக்கிறது. இதன் பெயர் 'மத்யம்'. இதன் தலைவி ஒரு பெண். உதவி கேட்டு இந்த மையத்துக்கு மாதம் நாற்பதுக்கும் மேற்பட்ட தொலைப்பேசிப் புகார்கள் வருகின்றன!

– அனிதா ராமச்சந்திரன், பெங்களூரு

மகளிர் தின ஸ்பெஷல்

You can

Win 75% Scholarship

on total course fee

CSC

Announcing

SAT 2009

16th Scholarship Aptitude Test

PROVE YOUR INTELLIGENCE & WIN SCHOLARSHIP

CSC-ல SAT இருக்கும் போது
கம்ப்யூட்டர் Course படிக்க
Loan எதுக்கு



Exam Date

MARCH

29

SUNDAY

SAT is conducted only once in a year
Don't miss IT.

ABOUT THE SCHOLARSHIP APTITUDE TEST

- No Entry Fee for SAT.
- SAT question paper comprises of 25 objective type questions from Science, General Knowledge, Maths & Geography.
- SAT question paper will be in English / Tamil.
- No age bar to participate in this test
- Basic Qualification must be 9th Std.

இத்தேர்வுக்கு எவ்வித கட்டணமும் கிடையாது!
பயிற்சிக் கட்டணத்தை தவணைமுறையிலும் செலுத்தலாம்

Collect FREE admit card from your nearest CSC centre

For more details contact nearest CSC centre or Call: 9941007206 / 9940496325 / 9444953620

பழமொழிகள்

அவசரம்னா அடுக்கஞ்சட்டிக்குள்ளகூட கை நுழையாது.

நாய்க்கு எங்கே அடிபட்டாலும் காலைத் தூக்கும்.

தான் தேடா பொருளுக்கு விலையுமில்லை; மதிப்புமில்லை.

- விஜயலட்சுமி சிவசங்கரன், வேலூர்

புளியிட்டு அழைத்தாளாம்...

வேணும்னா வேலையிலகூட காய்க்கும்.
வேண்டாம்னா கொடியிலகூட காய்க்காது!

பணமும் பத்தா இருக்கணும். பவுனும் முத்தா இருக்கணும்.

போன ஜுரத்தை புளியிட்டு அழைத்தாளாம்!

- ஆர். பட்டம்மாள், கும்பகோணம்

தேளுக்கு இடம் கொடுத்தால்,
ஜாமத்துக்கு ஜாமம் கொட்டுமாம்!

இல்லாள் அகத்திருக்க, இல்லாதது ஒன்றுமில்லை!

இடுகிறவர்கள் இட்டால், இலந்தை இலையிலும் சாப்பிடலாம்!

- பானுமதி நாராயணன், பெங்களூரு



சிறுநீர் கசிவு பிரச்னையா?

இன்னும் ஏன் தயக்கம்?

"நீங்கள் அணுக வேண்டிய சிறப்பு மருத்துவர்

UROGYNECOLOGIST

இருமினாலோ,
தும்மினாலோ
சிறுநீர் கசிவு
ஏற்படுகிறதா?

"சிலிங் சிகிச்சை"

"வலியில்லாமல், இரத்தக் கசிவில்லாமல் ஒரே நாளில் வீடு திரும்புங்கள்". அமெரிக்காவில் UROGYNECOLOGY FELLOWSHIP பட்டம் முடித்த மருத்துவர்கள் உள்ள இந்தியாவின் முதல் ISO 9001:2000 Certified சிறப்பு மையம்

விரைவில் கோவையிலும்...

நீங்கள் அணுக வேண்டிய 'ஹெல்ப்லைன்'

லயன் கௌரி இலவச ஆலோசனை மையம்

'கௌரி' அமைப்பின் கீழ் இயங்க இருக்கும் இந்த ஆலோசனை மையம், காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை இயங்கும்.

இதன் தொலைபேசி எண் : (044) 32904166

தங்கள் பிரச்னையை மேற்படி மையத்திலுள்ள முறையான பயிற்சி பெற்ற நபரிடம் தொலைபேசியில் தெரிவித்து கவுன்சலிங் அல்லது ஆலோசனை பெறலாம்.
ஆலோசனைக்குக் கட்டணம் எதுவும் கிடையாது!

GUNA ASSOCIATES IN UROGYNECOLOGY & RESEARCH FOR INCONTINENCE (GAURI)

1, Crescent Park Street, T.Nagar, Chennai - 600 017. Ph : 24341055, 24322591
E-mail : gunasek@gmail.com Web : www.urogynecology.in

இது ஒரு வார்த்தையில்லை, பவுன் கோடி பெறும் வார்த்தை!

அமெரிக்காவிலுள்ள சூப்பர் மார்க்கெட்டுகளில் ஒரு சலுகை உண்டு. நம் வீட்டிலிருந்து கேரி பேக் கொண்டு போனால் ஒரு பேக்குக்கு 5 சென்ட் கழித்துக் கொள்வார்கள். பத்து பையில் சாமான் வாங்கினால் ஐம்பது டாலர் மிச்சம். இதை அநேகமாக எல்லோரும் கடைப்பிடிப்பார்கள். மொத்த கடை சூப்பர் மார்க்கெட் என்று உண்டு. அங்கு எல்லா சாமான்களும் 30% தள்ளுபடியில் கிடைக்கும். நாமே கேரி பேக் கொண்டு போய் நாமே பேக் பண்ண வேண்டும். அதற்குத்தான் அந்தத் தள்ளுபடி. அவர்களிடம் கேரி பேக் வேண்டுமானால் பணம் கொடுத்து வாங்க வேண்டும். இந்த வழியை நம் ஊரிலும் பின்பற்றலாமே!

– கே. பாக்கியலட்சுமி,
பாப்புநாயக்கன்பட்டி



உற்சாகமூட்டிய பை!

என் அப்பா எப்பவும் பைகள் எடுத்துப் போவது வழக்கம். சாமான்கள் வாங்கி வந்தவுடன் 'என் பைகளைக் கொண்டா' என்று கேட்டு வாங்கிக் கொள்வார். ''எப்பவும் 'பை'தான் முக்கியம் உங்களுக்கு!'' என்று அப்பாவைக் கேலி செய்தாலும், நஅதையே நானும் கடைப்பிடித்து வருகிறேன். திருச்சி வரும்போது என் அம்மாவிடம் சேர்ந்து இருக்கும் பைகளை எடுத்து வந்து, தாம்பூலம் போட்டுக் கொடுப்பேன். நம்மவர்கள் நக்கல் செய்ய, வட இந்தியர்கள் விரும்பி எடுத்துச் செல்வார்கள்.

திருச்சியில் இன்ஜினியர் ஒருவரது வீட்டு விசேஷத்தில் கலந்து கொண்டபோது ஒரு சிறிய பை தந்தார்கள். என் அம்மா அவர்களிடம் விசாரித்து அதேபோல நூறு பைகளை நான்கு நிறங்களில் வாங்கித் தந்தார். என் மகன் பிறந்த நாளுக்கு எங்கள் அபார்ட்மெண்ட்டிலிருந்து குறைந்தது அறுபது சிறுவர், சிறுமியர்கள் வந்த போது, சாக்லெட், பலூன்களுடன் பைகளைக் கொடுத்தேன். அப்புறம் என்ன! வராத சிறுவர், சிறுமியர் அடுத்தநாள் வந்து பைகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

நவராத்திரி கொலு, மாதாந்திர பஜனையில் தாம்பூலப் பையாக நான் கொடுக்க, சில பேர் எக்ஸ்டிரா பைகளைக் கேட்டு வாங்கினர். என் தங்கை, அண்ணனும் எங்களுக்கு வேலைப்பாடுள்ள பெரிய துணிப்பைகளையே பரிசளித்தனர்.

என் கணவர், மகன் உட்பட நாங்கள் அனைவரும் கடைகளுக்கு துணிப் பைகளை எடுத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளோம்.

என் உயிர்த் தோழியான 'மங்கையர் மலரின்' நாயகியானத் தாங்களும் துணிப்பையை உபயோகிப்பது எங்களுக்கு உற்சாகமூட்டியது.

– ரா.வைஜயந்தி,
மும்பை - 43

என் அண்ணாவின் பேத்தி நேத்ரா. வயது 1½. சுட்டிப் பெண். நாம் 'கொழுப் பெடுத்த' என்று சொன்னால் அவள் 'குந்தாணி' என்று முடிப்பாள். 'வாம்மா' என்றால், 'மின்னல்' என்பாள். வாயாடி என்றால் 'மங்கம்மா' என்பாள்.

ஒருநாள் அவள் வேகமாகச் சென்று வாசல் கேட்டைத் தாண்டி நின்றுகொண் டிருந்தாள். என் அண்ணா, கோபமாக ''வெளியில் போகாதே. இங்கே வாம்மா'' என்று பதற்றத்துடன் சொன்னார். உடனே அந்த வாண்டு தலையைச் சாய்த்தபடி 'மின்னல்' என்று சொன்னதே பார்க்கலாம். அண்ணனின் கோபம் போன இடம் தெரிய வில்லை.

- பி. மீனாக்ஷி, சென்னை - 44

என்னுடைய 6 வயது பேரன் படு சுட்டி. ஏதாவது கேள்விகள் கேட் டுக் கொண்டேயிருப்பான். காலண்டரில்





அண்ணா, பெரியார் இவர்களின் படங் களைப் பார்த்துவிட்டு 'என்ன?' என்று கேட்டான். அவர்களது பிறந்த தினங்கள் என்றேன். வேறு பக்கத்தில் இருந்த நந்தி (பிரதோஷம்) படத்தைப் பார்த்து விட்டு ''மாட்டுக்கும் பிறந்தநாளா?'' என்றானே பார்க்கலாம். அனைவரும் சிரித்து விட் டோம்.

- பி. பானுமதி, திருவாரூர்

என் சித்தப்பா அவரது மகன்களான என் தம்பிகளுக்கு ஜாதகம் பார்த்துவிட்டு வந்து, ''இரண்டு பேரும் பத்தொன்பது வயதுக்கு மேல் நன்றாகப் படிப்பார்களாம்'' என்று எங்களிடம் கூறிக்கொண்டு இருந்



நான், என் கணவர், என் மூன்று வயது சுட்டிப் பையன் - மூவரும் திருவல்லிக்கேணி பார்த்த சாரதி கோயிலுக்குச் சென்றிருந் தோம். வெளியே வந்ததும் என் மகன், ''அம்மா, ஏன் உம்மாச்சி நம்மளையே முறைச்சுப் பார்க் கிறார்?'' என்று ஒரு கேள்வி கேட் டானே பாருங்கள். நான் அசந்து போய்விட்டேன். ''இல்லை கண்ணு, உம்மாச்சி முறைச்சுப் பார்க்கலை. அவருக்குக் கண்கள் பெரியதாக இருக்கும். அதனால்தான் உனக்கு அப்படித் தோணுது!'' என்று சொல்லிப் புரிய வைத் தேன். இந்தக் காலத்துச் சுட்டிகளின் 'அப்சர் வேஷன் பவர்' என்னை வியக்க வைத்தது.

- தீபா லக்ஷ்மி நாராயணன்,
சென்னை - 24

தார். ஐந்து வயது நிரம்பிய என் அண்ணன் மகள், சட்டென்று ''அதுக்கப்புறம் படிக்க கிளாஸ் எங்க தாத்தா இருக்கு?'' என்றாளே பார்க்கலாம்.

- திருமதி. இந்திராணி தங்கவேலு,
மும்பை - 36

என் மகள் ஜனனி, எல்.கே.ஜி படிக் கிறாள். ஊரிலிருந்து வந்த என் அப்பா, என் மகளிடம், ''உனக்கு எத்தனை ஃப்ரண்ட்ஸ்?'' எனக் கேட்டார். உடனே என் மகள், ''ஐந்து ஃப்ரண்ட்ஸ்'' என்றாள்.

''சரி. அவங்க பேர் சொல்?'' என்றார். உடனே என் மகள், ''காவ்யா, தர்ஷினி, அர்ஜுன்'' என மூன்று பேரைச் சொல்லி விட்டு ''அப்புறம் அர்ஜுலை, அர் ஆகஸ்டு. மொத்தம் ஐந்து பேர் சரியா...?'' என்றாளே பார்க்கலாம்!

- ஜெ. மூஹாதேவிமகேஷ்,
கோவை - 38



குட்டிஸ் லூட்டி



நல்ல நல்ல

''நாங்கள் வேலைக்குச் சென்றுவிட்டால், என் குழந்தையை யாரிடம் விட்டுச் செல்வது? என் குழந்தையைப் பொறுப்பாக வளர்க்க ஓர் அன்பான பெண் கிடைப்பாளா?'' என எங்கும் அம்மாக்களுக்கு ஒரு மிகப்பெரிய வரப்பிரசாத மாக 'பேபி-ஸிட்டர் ட்ரெயினிங்' பயிற்சியைத் தொடங்கி உள்ளார், சென்னை சாலிகிராமத்தைச் சேர்ந்த என்.விஜயா.

''2001ல் துவங்கி இதுவரை 4000 பெண்களுக்கு மான்டிஸோரி ஆசிரியைப் பயிற்சி அளித்துள்ளேன். அவர்கள் அனைவருமே வேலைக்குச் செல்லத் தயாராகும்போது, சந்திக்கும் முதல் பிரச்னை: 'என் குழந்தையை யாரிடம் விடுவது?' என்பதுதான். நிறைய மழலைக் காப்பகங்கள் இயங்கி வந்தாலும், பல இடங்களில் ஆஸ்பிரின் மாத்திரைகளைக் குழந்தைகளுக்குக் கொடுத்து தூங்க வைக்கும் அவலமும், பாலையும், ஜூஸையும் அங்கிருக்கும் ஆயாக்களே குடித்துவிடுவதும் என எத்தனையோ விஷயங்கள் நடந்து வருகின்றன. தப்பான வார்த்தைகள், பழக்க வழக்கங்களையும் சில குழந்தைகள் கற்றுக்கொண்டு விடுகின்றனர்.



சிறு குழந்தைகளை எப்படி பராமரிப்பது? என இளம் பெண்களுக்குச் சொல்லித் தந்து, அவர்களை சிறந்த பேபி கேர் டேக்கர்களாக உருவாக்கலாமே எனத் தோன்றியது. உடனே இப்பயிற்சித் திட்டத்தைத் துவக்கினேன்.

இந்தியாவிலேயே முதன்முறையாக இப்படி ஒரு பயிற்சி தோன்றியுள்ளது என்பதையும், இதற்கு நம் இந்திய அரசாங்கம் முழு அங்கீகாரம் அளித்துள்ளது என்பதையும் சந்தோஷமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.''



* என். விஜயா

இதில் என்னென்ன சொல்லிக் கொடுப்பீர்கள்?



''ஒரு மாத காலப் பயிற்சி. பயிற்சிக்கு வருபவர் ஐந்தாம் வகுப்பு வரை படித்திருந்தால் போதும். குழந்தைகளின் மொழியைப் புரிந்துகொள்வது, உணவூட்டுவது, விளையாட்டு, முதலுதவி, அடிப்படை சுத்தம், சுகாதாரம் என முறைப்படி சொல்லிக் கொடுக்கிறோம்.''

இந்தப் பயிற்சியின் சிறப்பம்சம் என்ன?

''நல்லறிவைப் போதிக்கக்கூடியவர்களின் அன்பான கைகளில் தம் குழந்தைகள் வளர்வது, பெற்றோர்களுக்கு நிச்சயம் பெரும் நிம்மதியைத் தரும். அப்படி தேர்ந்த குழந்தைக் காப்பாளர்களை இச்சமூகத்துக்கு அளிப்



பிள்ளைகளை வளர்த்து...



பதே மிகப் பெரிய சேவை. அதுவே ஒரு சிறப்பம்சம்!

இங்கிருந்து பயிற்சி பெற்று செல்லும் குழந்தைக் காப்பாளர்களின் முழு விவரமும் எங்களிடம் இருக்கும். அதைப் போலவே அவர்களிடமும் ஒரு செல்ஃபோன், மற்றும் ஒரு அட்டையில் பெற்றோர்களின் தொலைபேசி எண்கள், குழந்தையின் பிரத்யேக மருத்துவரின் தொலைபேசி எண்கள், எங்களது தொலைபேசி எண்கள் என அடிப்படை விவரங்கள் அனைத்துமே இருக்கும். தனக்கோ அல்லது அந்தக் குழந்தைக்கோ ஒரு சிறு ஆபத்து ஏற்பட்டால், அதைச் சமாளிக்கவும் சொல்லிக் கொடுக்கிறோம்.''

''நான் 9-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இதுவரை ஒரு எக்ஸ்போர்ட் கம்பெனியில் டெய்லராக வேலை பார்த்து வந்தேன். குழந்தை பராமரிப்பு என்பது மன நிறைவை அளிக்கக்கூடிய வேலை . குழந்தைகள் மீது எப்போதுமே எனக்கு ஒரு தனி பிரியம் உண்டு. இந்தப் பயிற்சியில் சேர்ந்த பிறகு குழந்தைகளின் உலகம் என்பது எப்படி ஒரு தனி குதூகலமான உலகம் என்பதை நன்கு புரிந்து கொண்டேன். குழந்தைகளிடம் அன்பாகப் பேசுவது, எப்படி மரியாதையாக அவர்களை நடத்த வேண்டும் என எல்லாவற்றையும் நன்கு அறிந்து கொண்டேன்''' என்கிறார் இந்தப் பயிற்சியில் படித்துக் கொண்டிருக்கும் ராஜலக்ஷ்மி.

''ஒரு குழந்தையைப் பற்றி முழுமையாக அறிந்தால்தான் நம்மால் ப்ளேஸ்கூலோ, க்ரெச்சோ ஆரம்பிக்க முடியும். மேலும் ஒரு தாயாக என் குழந்தையை நல்ல முறையில் நான் வளர்க்கவும் இப்பயிற்சி பேருதவியாக உள்ளது!''' என்கிறார் முதுகலைப் பட்டதாரியான சாவித்ரி.

- நளினி சம்பத்குமார்

அனுஷா நடராஜன்



சாத்தூர் எம். செல்லையா,
சாத்தூர்

அனுஷா சுற்றிப் பார்க்க விரும்பும் சுற்றுலா நகரம்?

உலகிலேயே மிக அழகான நகரங்கள் மூன்று. அவை, பாரீஸ், வெனீஸ், ஜெய்ப்பூர் எனக் கேள்விப் பட்டிருக்கிறேன். நம்ம பர்ஸ், ரொம்பவே ஸ்லிம்மாக இருப்பதால் முதல் இரண்டு இடங்களுக்குப் போக முடியாது.

உள் நாடாவது போகலாமே என்று திட்டமெல்லாம் போட்டு வைத்திருந்தோம். அந்த வாரம் பார்த்து ஜெய்ப்பூரில் வெடிகுண்டு, கோயிலில் மிதிபட்டு பக்தர்கள் பலி என மிரட்டல் தொடரவே, வீட்டிலேயே 'ராஜஸ்தான்!' சுற்றுலா சி.டி போட்டுப் பார்த்து திருப்திப் பட்டுக் கொண்டோம்!

கல்யாணி வாசுதேவன், திருச்சி - 2

என்னதான் சொல்லுங்க. இந்தக் காலத்து இளைஞர்கள் எல்லாம் நம்மைவிட உஷார்தானே?

அப்படித்தான் நானும் நம்பிக் கொண்டிருந்தேன், சென்னை வாலிபர் சுந்தர்ராஜின் செய்தியைப் படிக்கும் வரை!


ராபின் சுந்தர்ராஜ் பி.டெக் படித்தவர். வேலை தேடிக் கொண்டிருக்கும் 23 வயது இளைஞர். அவருக்கு ''உங்களுக்கு 5 கோடி ரூபாய் பரிசு விழுந்துள்ளது. வாழ்த்துக்கள். அதைப் பெற அறுபதாயிரம் ரூபாய் கமிஷனை முன் பணம் கட்டுங்கள்'' என்றொரு ஈ-மெயில் வந்திருக்கிறது. அதை நம்பி, பணம் கட்டியிருக்கிறார். அது ஒரு டுபாக்கூர் மெயில் என்று அறிந்ததும் மனம் நொந்து போய் விஷம் குடித்து, செத்தே போய்விட்டார்.

படித்த இளைஞர் செய்யும் காரியமா இது?

எஸ்.விஜயராணி, ஓசூர் - 2

சில பெண்கள், தத்தம் கணவர்களைவிட பல வயது இளமையாக இருக்கிறார்களே... அதன் ரகசியம்

அனுஷாவுக்குப் பிடிக்காத



அன்பு வட்டம்!

என்ன அனுஷா...?

எனக்கும் தெரியலை! ஒருவேளை, அவர்கள் மிகச் சரியாகச் சாப்பிட்டு, மிகச் சரியாகத் தூங்கி, மிகச் சரியாக உடை அணிந்து, மிகத் தப்பான வயதைச் சொல்வதால் இருக்குமோ?

சி.விஜயாம்பாள் பச்சமுத்து, கிருஷ்ணகிரி

பிடித்த பத்து?

★ மாம்பழம்

★ குழந்தைகள்

★ இளையராஜா இசை

★ மழை இரவுகள்

★ கவுண்டமணி ஜோக்ஸ்

★ பூ மரங்கள்

★ நாதஸ்வரம் - தவிலிசை

★ கமல் - லக்ஷ்மி நடிப்பு

★ பழைய கோயில்கள்

★ 'சோ'வின் மேடைப்பேச்சு

[பட்டியல் முடிவடையவில்லை...]

ஆர்.பிரேமா, சென்னை - 33

பள்ளியில் படிக்கும்போது தங்களுக்குப் பிடித்த பாடம் எது? நீங்கள் கணக்கில் புலியா?

வார்த்தை?



கணக்கில் பாதி புலி!

அதாவது பதுங்குவேன்; ஆனால் பாய மாட்டேன்!

Expand:- $(a + b)^m$

$= (a + b)^m$

$= (a \quad + \quad b)^m$

$= (a \qquad + \qquad b)^m$

என்னுடைய கணக்குத் தேர்வுத் தாளில் இது போன்ற ஜீனியஸ் பதில்கள் நிறையவே இருக்கும்.

கே. சங்கரலிங்கம், புதுவை

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, அனுஷா சந்திக்க விரும்பும் பெண்மணி யார்?



காந்தியவாதி, எண்பத்து இரண்டு வயது இளம் நங்கை, பத்மஸ்ரீ கிருஷ்ணம்மாள் ஜகந்நாதன்! ஏழைப் பெண்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவது, தலித்துகளுக்கு நிலம் பெற்றுத் தருவது, சர்வோதயக் கொள்கைகளைப் பரப்புவது, என அயராது பாடுபட்டு வரும் இவருக்கு, அமெரிக்க சியாட்டில் பல்கலைக் கழகத்தின் 'ஓபஸ்' விருதும் அண்மையில் கிடைத்துள்ளது. இந்தத் திண்டுக்கல் ரத்தினத்தைத்தான் சந்திக்க விரும்புகிறேன்.

ப.ராமகிருஷ்ணன், காயக்காடு

உலக மகளிர் தினத்தை, என்னைப் போன்ற ஆண்கள் எந்த வகையில் சிறப்பிக்கலாம்?

மனைவியின் தோளை அணைத்தபடி, அம்மாவின் பாதங்களில் தம்பதியாய்

விழுந்து...

பத்மஜா வாசுதேவன்,
தரமணி

நாகேஷ் நடித்த பாத்திரங்களில் தாங்கள் மிகவும் ரசித்தது?

'சர்வர் சுந்தரம்' படத்தில் ஒரு காட்சி! நாகேஷை, கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லி அவரது தாயார் எஸ்.என்.லட்சுமி வற்புறுத்திக் கொண்டேயிருப்பார். கே.ஆர்.விஜயாவைப் பார்த்ததும், நாகேஷுக்குக் கல்யாண ஆசை வந்துவிடும். தான் காதலிக்கும் விஷயத்தை அம்மாவிடம் பூடகமாகச் சொல்ல விரும்பும் நாகேஷ், "அம்மா, நீ எப்படா கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு கேளேன்!" என்பார். எஸ்.என்.லட்சுமியும் மிகவும் கண்டிப்பாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்பார்.

"இப்ப என்னம்மா அவசரம்?"னு நாகேஷ் வெட்கத்துடன் சொன்னதும் எஸ்.என்.லட்சுமி, படாரென்று, "சரிடா!" என்று படுகேஷுவலாக எழுந்து போய்விடுவார்.

அப்போது நாகேஷ் பதறியடித்துக்கொண்டு, "அம்மா... ம்மா!" என்று ஓடுவார் பாருங்கள்.... ரசிக்கத்தக்க நடிப்பு!

பஸ் ஸ்டாப்பில் நிற்கும் அவ்வை ஷண்முகியைப் பார்த்து "மாமி... ஏறிக்குங்க..." என்று கண்டக்டர் சொன்னதும் "டபுள் ரைட்!" என்று நாகேஷ் உற்சாகமாய்க் குரல் கொடுப்பார் பாருங்கள்... அடேயப்பா! நல்ல டைமிங் சென்ஸ்!

ச. இல.சுந்தரி, அவிநாசி

விளம்பரத்தில் வருவதுபோல், சப்பாத்தியை உருண்டோடும் வகையில் தயாரிக்க என்னால் இயலவில்லையே! தங்கள் அனுபவம்?

கோதுமை மாவை, தண்ணீர் பாதி - பால் பாதி சேர்த்து பதமாகப் பிசையவும். அரைமணி நேரம் ஊற வைக்கவும். மாவை மெல்லியதாகத் திரட்டவும். ரொம்ப அழுத்தக்கூடாது. சப்பாத்திக் கல்லை சூடு செய்து [நான்ஸ்டிக் தவா உபயோகித்தால் நலமோ நலம்!] அதில் திரட்டிய சப்பாத்தியைப் போடவும். அது லேசாக சுட்டவுடன், சிறிது சுழற்றிவிட்டு, கல்லிலேயே திருப்பி விடவும். ஃபுல்க்கா செய்யும் வலைக் கம்பியை, சிறிய பர்னர் இருக்கும் அடுப்பில் வைத்து, கல்லில் உள்ள சப்பாத்தியை மறுபுறமாக, வலைக் கம்பியில் போட்டு, மேலே தூக்கிப் போட்டு, திருப்பி விட்டால் ஃபுல்க்கா உப்பி அழகாக வரும்!

அப்படி வராவிட்டால் என்ன?

சப்பையாக வந்த சப்பாத்தியையே விளம்பரப் படத்தில் வரும் சிநேகாவைப் போல சிரித்துக் கொண்டே ஸ்டைலாகப் பரிமாறவும்! மேட்டர் ஓவர்!

எஸ். ப்ரியதர்ஷிணி, திருநெல்வேலி-7

கடவுளிடம் எதை வரமாகப் பெற்றதாக எண்ணுகிறீர்கள்?

'போதும்' என்ற மனத்துடன் மகிழ்ச்சியுடன் வாழ்வதை!

எம். பானுமதி, விருத்தாசலம்

எத்தனையோ வழிகளைப் பின்பற்றி விட்டேன். என்ன செய்தால் அழுது வடியும் முகம் 'பளிச்' என்று இருக்கும்? ப்ளீஸ் சொல்லுங்களேன்!

செலவில்லாத 100% கிளிக் ஆகக்கூடிய ஒரே வழி சொல்லட்டுமா? Keep smiling...

ஆர். அஜிதா, கம்பம்

ஆங்கிலத்தில், அனுஷாவுக்குப் பிடிக்காத ஒரே வார்த்தை எது?

டயட்டிங்!



* பத்மஸ்ரீ கிருஷ்ணம்மாள் ஜகந்நாதன்

ஹைடெக் சமையல்! 2



நம் சமையல் ராஜ்ஜியத்தை 'ஒரு விரல் தொடு முனையில்' ஆள உதவும் மந்திரக்கோலே 'மைக்ரோவேவ் அவன்!'

மைக்ரோவேவ் சமையல்

'கிரில் மோட்' உபயோகித்து இம்முறை நாம் நட்சத்திர அந்தஸ்து உடைய 'கிரில்டு பனீர் ப்ளாட்டர்' செய்யலாமா?

கிரில் மோட்:

கிரில் மோடில் உணவைக் குறைந்த எண்ணெயில், ஓரளவு பொன்னிறமாக வறுக்க முடியும். டச் பாடில் (Touch Pad) உள்ள கிரில் பட்டனை அழுத்தி, டைமரில் (Timer) நேரத்தை (உதாரணம்: 8/10 நிமிடங்கள்) தேர்ந்தெடுத்து உணவுப் பொருளை, எண்ணெய் தடவிய கிரில் தட்டில் அடுக்கி, கிரில் செய்ய வேண்டும். பிறகு அதை வெளியே எடுத்து, (மிகவும் சூடாக இருக்குமாதலால் கண்டிப்பாக கையுறைகளைப் பயன்படுத்தவும்) திருப்பி விட்டு, திரும்பவும் கிரில் மோடில் சில நிமிடங்கள் வைத்து எடுத்தால் இருபுறமும் சீரான ப்ரௌனிங் எஃபக்ட் கிடைக்கும்.

கீதா பாலகிருஷ்ணன்

கிரில்டு பனீர் ப்ளாட்டர்

தேவையான பொருட்கள்

பனீர் - 200 கிராம்

எண்ணெய் - 2/3 டேபிள் ஸ்பூன்

உப்பு - ½ டீஸ்பூன்

பனீரை ஊற வைக்க

கட்டித் தொங்கவிட்ட கெட்டித்



* படங்கள்: ஸ்ரீஹரி



தயிர் - 1 கப்
இஞ்சி - பூண்டு விழுது - ¼ டீஸ்பூன்
கரம் மசாலாத் தூள் - ¼ டீஸ்பூன்
சாட் மசாலாத் தூள் - ¼ டீஸ்பூன்
காய்ந்த வெந்தயக் கீரை, இலை (கசூரிமேத்தி) - ¼ டீஸ்பூன்
மிளகுத் தூள் - ¼ டீஸ்பூன்
சிவப்பு மிளகாய்த்தூள் - ¼ டீஸ்பூன்
கறுப்பு உப்பு (காலா நமக்) - ¼ டீஸ்பூன்

செய்முறை:

1. பனீரை ஒரு அங்குலத் துண்டுகளாக, நறுக்கி, 'பனீரை ஊற வைக்க'க் கொடுத்திருக்கும் பொருட்களை நன்கு கலந்து அதில் ஊற வைக்கவும். பிறகு 4 மணி நேரம் ஃபிரிட்ஜில் வைக்கவும்.

2. ஊறிய பனீர் துண்டுகளில் உப்பு கலந்த எண்ணெயைத் தடவி எண்ணெய் தடவிய கிரில் தட்டில் அடுக்கவும். இதை 10/12 நிமிடங்கள் 'கிரில்' செய்யவும்.

3. கிரில் தட்டை (கையுறை பயன்படுத்தி) வெளியே எடுத்து பனீர் துண்டுகளைத் திருப்பி மேலும் உப்பு கலந்த எண்ணெயைத் தடவி மேலும் 10/12 நிமிடங்கள் கிரில் செய்யவும்.

4. ஒரு உலோகக் கம்பியில் கிரில்டு பனீர் துண்டுகளை அடுக்கி, 'கிரில்டு பனீர் ப்ளாட்டராகப் பரிமாறவும்.

குறிப்பு: கிரில் செய்யும் நேரத்தை அவரவர் மைக்ரோவேவ் அவனின் செயல் திறனைப் பொறுத்து, கூட்டியோ குறைத்தோ வைக்கவும்.

கசூரி மேத்தி தனி மணமும் தந்து, பனீர் உடையாமலும் தடுக்க, கெட்டித் தயிர் கிரில்டு பனீரை மிகவும் மிருதுவாக்க, கறுப்பு உப்பு ஒரு ஸ்பைஸி சுவையைத் தர, ஐந்து நட்சத்திர ஹோட்டல் சுவையில் உங்கள் மைக்ரோவேவ் அவனில் மிக மிக சுலபமாக 'கிரில்டு பனீர் ப்ளாட்டர்' ரெடி!



தனியாவின் ஸ்பெஷாலிட்டி

'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது' என்பது போல செய்வது சுலபமானாலும் இப்பொடியின் மெயின் ஹீரோயினான 'தனியாவுக்கு' பலப்பல கீர்த்திகள் - தினப்படி உணவில் தனியாவைச் சேர்த்தால் அது பசியைத் தூண்டி, வயிற்றுப் பொருமலை நீக்கும், உணவைச் செரிக்க வைத்து, கெட்ட கொலஸ்ட்ராலைக் குறைக்கும், பிளட்-ஷுகரைக் கண்ட்ரோலில் வைத்து, இயற்கையாக இரும்புச்சத்து, மெக்னீஷியம், நார்ச்சத்து நம் உடலில் சேர வைத்து.... அப்பப்பா! 'நாரதர் கலகம் நன்மையில் முடியும்' என்பது போல 'மல்டி பர்பஸ் பொடியை' காம்பினேஷன் போட்டு நீங்கள் செய்த 'கமகம - ருசிருசி - சமையல் கலாட்டா' உங்கள் குடும்பத்தாரை ஓவர் - ஆல் ஹெல்த்தி ஆக்குவதற்குத்தான்?

'ஆல் இன் ஒன்' காம்பினேஷன் சமையல்

மைக்ரோவேவ் அவனில் ஒரு ஸ்டார்டிஷ் ஆயிற்று. இப்பொழுது 'காம்பினேஷன் சமையலில்' மிக மிக ஸிம்பிளான ஒரு 'மல்டி பர்பஸ் மசாலா பொடியை' நேரமும், மின்சாரமும் இருக்கையில் செய்து வைத்துக்கொண்டு, அவசர காலை வேளையில் அரைப்பதற்கு கரண்ட் இருக்கிறதா, இல்லையா என்று டென்ஷன் ஆகாமல், அவசர அவசரமாக தேங்காய் உடைத்து, துருவும் அவதி இல்லாமல் இப்பொடியின் உதவியோடு சாதாரண சமையலை சூப்பர் சுவையுடன் கம கம சமையலாக எப்படி மாற்றலாம் என்று பார்க்கலாமா?

மல்டிபர்பஸ் மசாலா பொடி



தேவையான பொருட்கள்:

தனியா - 200 கிராம்
கடலைப் பருப்பு - 100 கிராம்
காய்ந்த சிவப்பு மிளகாய் - 10/12
கொப்பரைத் தேங்காய்த் துருவல் பவுடர் (டெஸிகேடட் கோகனட் பவுடர்) - 100 கிராம்
எண்ணெய் - 2 டேபிள் ஸ்பூன்

செய்முறை

1. வெறும் வாணலியில் மிதமான தீயில் 'டெஸிகேடட் கோகனட் பவுடரை' நன்கு பிரட்டி எடுத்து வைக்கவும்.

2. பிறகு வாணலியில் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும், தனியா, கடலைப் பருப்பு, சிவப்பு மிளகாய் மூன்றையும் மிதமான தீயில் பொன்னிறமாக வறுத்து ஆற வைக்கவும்.

3. மிக்ஸியில் எல்லாவற்றையும் போட்டு நைஸாகப் பொடிக்கவும். காற்றுப் புகாத ஏர்-டைட் டப்பாவில் போட்டு ஃபிரிட்ஜில் வைத்து, தேவையானபோது, தேவையான அளவை மட்டுமே வெளியே எடுத்து உபயோகிக்கவும்.



சாம்பார் : இந்த மல்டி- பர்பஸ் பொடியை மசித்த துவரம் பருப்புடன் கலந்து சாம்பாரில் போட்டால், 'அரைத்து விட்ட சாம்பார்' டேஸ்ட்டுடன் 'டாக் ஆஃப் தி டே' ஆகி விடும்.

மைசூர் ரஸம்: நெய்யில் மிளகு - சீரகப் பொடி, நம் சூப்பர் பொடியை நன்கு பொரித்து, பருப்பு நீருடன் கொதிக்க விட்டு, நுரைக்கும் பொழுது இறக்கி 'ஃப்ரஷ்' கொத்த மல்லித்தழை தூவினால் 'சாதா ரஸம்', 'மைசூர் ரஸமாக' கமகமக்கும்!

கொத்ஸு: கடுகு சீரகம், பெருங்காயம் தாளிப்பில் நம் மல்டி- பர்பஸ் பொடி, தக்காளி, வெங்காயம், உப்பு சேர்த்து வதக்கி, புளிநீர் ஊற்றி, கெட்டியாகக் கொதிக்க விட்டு இறக்கினால் சூப்பர் கொத்ஸு ரெடி!





வற்றல் குழம்பு:

வற்றல் குழம்பு இறக்குவதற்குச் சற்று முன்பாக, நல்லெண்ணெயில் வெந்தயம் மற்றும் நம் சூப்பர் பொடியை சிறிது பிரட்டி, குழம்பில் போட்டு ஒரு கொதி விட்டு இறக்கினால், 'திக்கான' உங்கள் வற்றல் குழம்பு வாசம் வீடு முழுவதும் வியாபிப்பதோடு மட்டுமில்லாமல், ஊரையே கூட்டும்!



பிஸிபேளா ஹுளி:

தோலுரித்த வேர்க்கடலை, சிறிய வெங்காயத்துடன், நம் மல் டிபர்பஸ் பொடியை சிறிது வெண்ணெயில் வதக்கி, பிஸிபேளா ஹுளியுடன் கலந்தால், வற்றல் குழம்பு சாதம் + சாம்பார் சாதம் மிக்ஸிங் டேஸ்ட்டுடன், 'ஸ்பெஷல் பிஸி பேளா ஹுளி' தயார்!

வாங்கிபாத்:

'வாங்கிபாத்' செய்கையில் சிறிது அம்சூர் பொடியுடன் நம் சூப்பர் பொடி சேர்த்து வதக்கித்தான் பாருங்களேன். 'என் டிபன் பாக்ஸ் திறந்தவுடன் வந்த வாசனை பார்த்து எல்லா வாங்கிபாத்தையும் என் ப்ரண்ட்ஸே காலி செய்து விட்டார்கள்' என்ற கம்ப்ளெயிண்ட்டோடு உங்கள் குழந்தை வந்தால் நான் பொறுப்பல்ல!



பாகற்காய் பிட்லை:


பாகற்காய் பிட்லை செய்கையில் சிறிது வெல்லம் வடிகட்டிய நீருடன், நம் சூப்பர் பொடியைக் கலந்து ஒரு கொதிவிட்டு இறக்குங்கள். நம் மாஜிக் பொடி பிட்லையில் பாகற்காயின் கசப்பே தெரியாத அளவு மணக்க வைக்கும்!

சுண்டல்:

தாளிக்கையில் நம் மல்டி பர்பஸ் பொடியைச் சேர்த்து தாளித்தால், உங்கள் சுண்டலின் ருசிக்கும் மணத்துக்கும் ஒரு 'ஸ்பெஷல் டச்' கியாரண்டியாகக் கொடுக்கலாம்.

ஸ்டஃப்டு எண்ணெய்க் கத்தரிக்காய்:

எண்ணெய்க் கத்தரிக்காய் ஸ்டஃபிங்கில் நம் சொக்குப் பொடியையும் கலந்து ஸ்டஃப் செய்து வதக்கினால், அதன் சுவையும் மணமும் தூக்கி அடிக்கும்!



(தொடர்ந்து கலக்குவோம்!)


வலி உங்களை எப்பவேணாலும் தாக்கலாம்
மூட்டு வலிகளுக்கு
AMRUTANJAN
be ready!

சந்திரன் சூரியன்!

அனார்கலி



புற்களுக்கு
பனி ஆடை உடுத்தி
ரசித்துப் பார்க்கும் நிலவு!
அவசரமாய் ஓடி வந்து
அந்த ஆடையை உரித்து
அழகு பார்க்கும் சூரியன்

காதலர்கள்
கனவு காண உதவுகிறது
நிலவு!
அதைக் கலைத்துவிட்டு
கண்ணாமூச்சி விளையாடுகிறது
சூரியன்!

உழைப்பவனுக்கு
தாலாட்டுப் பாடுகிறது
நிலவு!
நிலவைத் தூங்க
வைத்து விடுகிறது
சூரியன்!

ரகசியங்களைப்
பாதுகாக்க
முயற்சித்துக் கொண்டேயிருக்கிறது
நிலவு!
அவற்றை
வெளிச்சம் போட்டு ஊருக்குக்
காட்டிக் கொண்டிருக்கிறது
சூரியன்!

கவிதை

அரசாங்கமும் ஆட்சியாளர்களும் செய்ய வேண்டிய கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தை, தனிப்பட்ட பெண்ணாக நின்று சாதித்திருக்கிறார் சென்னை தொழிலதிபர் சுதா ரமணி. கிராம மக்களிடையே வேலை வாய்ப்புகளைப் பெருக்கியதோடு, அவர்களுடைய சமுதாய, பொருளாதார முன்னேற்றத்துக்குப் பாடுபட்டதற்காக, இவருக்கு 'ஆல் இந்தியா அச்சீவர்ஸ் ஃபவுண்டேஷன்' என்ற பாரம்பரிய அமைப்பு, தேசிய விருது கொடுத்து கௌரவித்துள்ளது. இந்தியாவிலேயே 'பவர் அண்ட் எனர்ஜி' துறையில், இந்தப் பெருமைக்குரிய விருதைப் பெறும் முதல் பெண் தொழிலதிபரும் இவரே!

சாதனைப் பெண் சுதா!



''ஒரு விதைக்கு இருக்கின்ற வீரியம் விழித்துக்கொண்டு, மண்ணைத் துளைத்துக் கிளம்பி, மரமாகின்றபோதுதான், அதனுடைய முகவரி மற்றவர்களுக்குத் தெரியும். நான் எனக்குள் இருந்த, இருக்கின்ற சக்தியைக் கண்டுகொள்ள எனக்கு உதவியாக இருக்கின்ற என்னுடைய கணவர், புகுந்த வீட்டினர், எட்டு சகோதரிகள், தோழிகள், அலுவலகப் பணியாளர்கள் என அனைவருக்குமே இந்த விருதைக் காணிக்கையாக்குகின்றேன்!'' சுதாவின் முகத்தில் நன்றியும் பெருமிதமும் கலந்த புன்னகை பூக்கிறது!

சுதா ரமணி, 'சாய்சுதா ஆக்ரோடெக் பிரைவேட் லிமிடெட்' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்.

''என்னுடைய பெற்றோருக்கு நான் ஒன்பதாவது குழந்தை. அப்பா, எல்.ஐ.சி நிறுவனத்தில் உயரதிகாரியாக இருந்ததால், கேரளா, மதுரை, என ஊர் மாறிக் கொண்டேயிருந்தோம். பி.யூ.சி படிக்கும்போதே கல்யாணமாகிவிட்டது. என் கணவரின் ஊக்குவிப்பால், கம்ப்யூட்டர் படித்தேன். சில முன்னணி மருத்துவமனைகளின் நிர்வாகப் பிரிவிலும், பி.பி.ஓ போன்ற வேலைகளிலும் ஆர்வமாக பணியாற்றிக் கொண்டிருந்தபோதுதான், எனக்குத் தெரிந்தவர் மூலமாக இந்த வாய்ப்பு தேடி வந்தது.

ராய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள பவர் ப்ளாண்ட் துறைக்கு,



இயற்கை எரிபொருளை விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த 'பேஸ் பவர்' என்ற நிறுவனம், அந்த இயற்கை எரிபொருளை கொள் முதல் செய்யும் பணியை எனக்கு கொடுக்க முன் வந்தது.

பழைய காலத்து வீடுகளில் குளியலறையில் பெரிய வெந்நீர் தவலை இருக்கும். சாணம், கரித்தூள், உமி, வைக்கோல் துகள், தேங்காய் நார் என தோட்டத்தில் வீணாகக் கிடக்கும் இயற்கைப் பொருள்களை எல்லாம் கலந்து உருட்டி, அடுப்பைப் பற்ற வைப்பார்கள். எரிபொருள் செலவில்லாமலேயே, வீட்டுப் பயன்பாட்டுக்கு வெந்நீர் கிடைத்து விடுவதோடு, சுற்றுப்புறமும் சுத்தமாகும். இதே ஐடியாவைத்தான் பவர் பிளான்டுகளில் பயன்படுத்துகிறார்கள். உலை நீரைக் கொதிக்க வைத்து, ஆவியாக்கி, அதிலிருந்து மின்சக்தியை உற்பத்தி செய்கிறார்கள்.

கரும்புச் சக்கை, மரத்தூள், சவுக்குத் துண்டங்கள், வேலிகாத்தான் முள், உலர்ந்த சூரியகாந்தி இதழ்கள், மரவள்ளிக் கிழங்கு தோல், நாணல், வேர்க்கடலை ஓடு... இப்படி வேளாண்மையில் இயற்கையாக மிஞ்சும் மிச்சம் மீதி எல்லாமே 'பயோ மாஸ்' எனப்படுகிறது. இவற்றுடன் தரமான கரித்துண்டுகளை, ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து, நாளொன்றுக்கு 225 டன்கள் சப்ளை செய்ய வேண்டும் என்பதுதான் எனக்குத் தரப்பட்ட முதல் வேலை.

உடனே, ராய்ச்சூரின் அறுபது கிலோமீட்டர் பரப்பளவில் சுற்றுமுற்றுமுள்ள கிராமங்களுக்குப் பயணமானேன்.

கிராமப்புற வயல்வெளியெங்கும் தேங்காய் மட்டைகள், ஓடுகள், வைக்கோல்

மகளிர் தின ஸ்பெஷல்

பிரிகள் போன்றவை மலைமலையாகக் குவிந்து கிடந்தன.

''நூறு ரூபாயைக் கொடுத்துட்டு அள்ளிக்கிட்டு போம்மா! சும்மா குப்பையா கிடக்குறதுதானே?'' என்றார்கள். அவர்களுக்கு அதன் மதிப்பும், வீரியமும் தெரியவில்லை.

எங்கு பார்த்தாலும் வளமான கோழிப் பண்ணைகள். அதன் கழிவுகள். எப்பேர்ப்பட்ட எரிபொருள்? ஆனால், நாற்றமடிக்கும் அந்தக் கழிவுச் சகதியில் இறங்கி, அள்ளித்தர கிராமத்து ஆட்கள் யாரும் முன் வரவில்லை.



நான் சற்றுத் தள்ளியிருந்த தாழ்த்தப்பட்ட மக்களைத் தேடிப் போய் பேசினேன். மகிழ்ச்சியுடன் முன் வந்தனர்.

''எங்களுக்கு இங்கே, வேலை வாய்ப்பு இல்லை! பாதிநாள் பட்டினியாகக் கிடக்கிறோம். இது கோழிகளின் எச்சம்னு நினைக்கலை. எங்க ஜீவனமாகத்தான் பார்க்கிறோம்!'' என்று ஒரு வயதான மூதாட்டி சொன்னபோது என்னுடைய கண்கள் பனித்துவிட்டன!

''**எ**ன்னுடைய ஜீப் முன்னேற முன்னேற, என்னுடைய நம்பிக்கையும் வலுத்தது. கிருஷ்ணா நதியோரமாகப் பயணித்தேன். வண்டி போக முடியாத இடங்களில் எல்லாம் நடராஜா சர்வீஸ்தான்! வெள்ளம் புரண்டோடிய கிருஷ்ணா நதிக் கரையோரமாக கற்றைக் கற்றையாக நாணல் புதர்கள் மண்டிக் கிடந்தன. அவற்றை அறுப்பதும், சுமப்பதும் சிரமமான பணி என்பதால், பணியாட்கள் இலேசில் கிடைக்கவில்லை.

தற்செயலாக, லம்பாடி மக்களின் கூடாரங்களைக் கண்ணுற்றேன். அவர்களை அணுகியதும், அருவாளும் கையுமாகக் கிளம்பி, நாணல்களை நறுக்கிக் குவித்து விட்டனர். நல்லதொரு 'நெட் வர்க்'கை அமைத்து, பொறுப்பான ஆட்களிடம் வேலைகளை ஒப்படைத்ததில், பதினொரு மெகா வாட்ஸ் பிளான்ட்டுக்கு சப்ளை செய்வது சவாலான காரியமாகத் தெரியவில்லை.

''**2001**ல் கைநாட்டு வைக்கக்கூடத் தெரியாத லம்பாடிப் பெண்ணுக்கு, இன்றைக்கு சிண்டிகேட் வங்கியில் கணக்கு இருக்கிறது.

மாற்றுத் துணியில்லாமல் சிரமப்பட்ட தலித் பெண்கள் இன்று, கேமிரா ஃபோனில் கான்ஃப்ரன்ஸிங் செய்கிறார்கள்.

வீடு வீடாகப் போய் எரிபொருள் சேகரிக்கும் பெண்கள், நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார்கள். கோவணத்துடன் திரிந்த இளந்தாரிகள், மோட்டார்சைக்களில் பறக்கிறார்கள். கிராமப்புறங்களிலிருந்து பயோ-மாஸை தொழிற்சாலைக்குக் கொண்டுவர, மாட்டு வண்டிகள் பயன்படுத்தப்படுவதால், போக்குவரத்து செலவும் இல்லை. குப்பைகள்

எல்லாம் பணத்தாள்களாகி விடுவதால், கிராமம் சுத்தமாகிவிடுகிறது. சுகாதார சீர்கேடு இல்லை. முன்பெல்லாம் மழை பொய்த்தாலோ, அதிக மழை பெய்தாலோ, பயிர்கள் வீணாகி விடும். அப்போது, ஏழை விவசாயிகளுக்கு அவற்றை அறுத்து எறியக்கூட காசிருக்காது. அதனால் தீயிட்டுக் கொளுத்தி விடுவார்கள். ஆனால், இன்று உதவாமல் போன பயிரைக்கூட காசாக்கி, மறு விளைச்சலுக்குத் தயாராகிவிடுகின்றனர்'' என்கிறார் சுதாரமணி.



எட்டு வருடமாக, இத்தொழிலில் இருப்பதால் சுதா ரமணிக்கு அந்தக் கிராமத்து மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் அத்துப்படி. அவர்களும் சாய் சுதாவை ''சென்னை மேடம்!'' என்று அன்புடன் அழைக்கின்றனராம்.

''மருத்துவச் செலவு, பள்ளிச் செலவுகளுக்கு உதவி செய்வதோடு, டயர் வண்டிகள் வாங்க வங்கிகளுக்கு சிபாரிசு செய்து, கடனுதவி பெற்றுத் தருகிறார் சுதா. இதெல்லாவற்றுக்குமான ஒட்டுமொத்த பாராட்டுத்தான் இந்த தேசிய விருது!

''ராய்ச்சூரின் ஹெகசனஹள்ளி மற்றும் சுற்று வட்டாரங்களில் கிடைக்கும் வேளாண் மிச்சங்களைக் கொண்டே 'பேஸ் பவர் என்ற பிளான்ட் செயல்படுகிறது என்றால், தமிழ்நாட்டில் மக்கி வீணாகிக் கொண்டிருக்கும் பயோமாஸைக் கொண்டு என்னூர் தெர்மல் பிளான்ட் போன்றதொரு எனர்ஜி பிளான்ட்டை நிறுவ முடியும்.

இதனால் வேளாண் மிச்சங்கள் பயனுள்ளதாக வடிவெடுக்கும். உழவர்கள் நேரடியாகப் பயன் பெறுவார்கள். கிராமப்புற வேலை வாய்ப்பு அதிகரிக்கும். மின் உற்பத்தி பெருகும். புதிய தொழிற்சாலைகள் உருவாகும். வேலையில்லா திண்டாட்டம் ஒழியும். வறுமை மறையும். சமூகக் குற்றங்கள் குறையும். கிராமங்கள் சுபிட்சம் அடையும். தன்னிறைவு பெற்ற மாநிலங்களால், இந்தியாவே வல்லரசாக மாறும்... எல்லாமே சங்கிலித் தொடர் போல ஒன்றுக்கொன்று தொடர்புடைய சங்கதிகளாகி, நம்மை ஒட்டுமொத்தமாக உயர்த்தும்!'' என்று திட்டவட்டமாகச் சொல்லும் சுதா ரமணிக்கு, சர்வதேச அளவில் வழங்கப்படும் 'பாரத் கௌரவ்' விருதும் கிடைத்துள்ளது.

''தற்போது தூத்துக்குடி, விருதுநகர், ராமநாதபுரம் ஆகிய இடங்களில் தனியார் பவர் யூனிட்டுகள் செயல்படுகின்றனவே!'' என்றால்,

''அதெல்லாம் யானைப் பசிக்கு, சோளப்பொரி போல!'' என்கிறார் சுதா ரமணி!

– மங்களேஸ்வரி

படம்: **ஸ்ரீஹரி**

மூட்டுவலிக்கு வலியில்லாமல் நிவாரணம்

20 மில்லியன் அமெரிக்கர்கள் ஆஸ்டியோ ஆர்த்ரைடிஸ் எனும் மூட்டுவலியினால் பாதிக்கப்படுகிறார்கள். முழங்கால் மூட்டு பாதிக்கப்படுவதாலும், வயோதிகத்தினாலும் இந்நோய் ஏற்படுகிறது. இந்நோயின் காரணமாக மூட்டில் உள்ள மென் எலும்பு – கார்டிலேஜ் (Cartilage) சிதைதலும், எலும்புகளின் முடிவில் புதிய குறுத்தெலும்பு வளர்ந்தும் காணப்படும். கார்டிலேஜ் எனும் மென் எலும்பும், சினோவியல் திரவமும் சேர்ந்து இரண்டு எலும்புகளுக்கு இடையில் வழுக்கும் தன்மையைத் தருகிறது. கார்டிலேஜ் எலும்பு தேய்வடையும் போது மூட்டுவலியும், க்ளக் என்ற சத்தமும் கேட்கும். இந்நிலை நீடிக்கும்போது மூட்டு வலி அதிகமாவதால் நடக்க முடியாமல் போய்விடும்.



55-வயதிற்கு மேல் ஆண் – பெண் இருபாலருக்கும் ஆஸ்டியோ ஆர்த்ரைடிஸ் வரலாம். ஆனால் பெண்களுக்கு அதிக வாய்ப்பு உள்ளது. விளையாட்டில் ஈடுபட்டு அதிகமான மூட்டு அயர்ச்சி உள்ளவர்களுக்கு வரும் வாய்ப்பு அதிகமாகிறது. இந்நோய்க்கு முதல் காரணம், நிறைய நடப்பதாலும், ஓடுவதாலும், உடல் பருமன் அதிகம் இருப்பதாலும் மூட்டு தேய்வதுதான்.

இரண்டாவதாக வளர்சிதை மாற்றம், பாரம்பரியம் மற்றும் உடலின் வேதியல் மாற்றத்தினாலும் வரலாம். ருமாடிக் ஆர்த்ரைடிஸ் மற்றும் ஹிமோகுரோமாடோஸிஸ் போன்ற நோய்களினால் இந்நோயின் தீவிரம் அதிகமாகலாம். ஆஸ்டியோ ஆர்த்ரைடிஸினால் அதிகமாக பாதிக்கப்படும் மூட்டு எலும்புகள் இடுப்பு, கை, கால், கழுத்து, விரல்கள் கட்டைவிரல், கால்முட்டி எலும்புகளாகும்.

சோதனை கூட ஆய்வுகள் :

மருத்துவரின் நேரடி பரிசோதனைமூலமும், X-ரே மூலமும் நோயின் தீவிரத்தை தெரிந்து கொள்ள முடியும். மேலும் பின்வரும் சில ஆய்வுகள் மூலமும் கண்டறியலாம்.

1. ருமடாய்டு காரணி (RF)
2. சினோவியல் திரவத்தின் ஆய்வு
3. எரித்ரோசைட் தரம் (Sed. rate or ESR)
4. C-ரியாக்டிவ் புரத்தின் ஆய்வு
5. இரத்தத்தின் தரம்
6. Comprehensive Metabolic Panel (CMP)

ஆய்வுக்கூடமல்லாத ஆய்வுகள் :

1. பாதிக்கப்பட்ட மூட்டு எலும்பின் தரத்தையும் கார்டிலேஜ் எனும் மென் எலும்பின் தேய்மானத்தையும் X-ரே மூலம் அறியலாம். ஆனால் ஆரம்ப நிலையில்

மிகத் துல்லியமாகத் தெரியாது.

MRI - எனும் புகைப்படம் மூலம் மிகத் தெளிவாக அறிய முடியும்.

ஊசி துளைக்காத தீர்வு :

எமிட்ரான் என்ற PST சிகிச்சை மூலம், ஊசி துளைக்காமல் பல விதமான ஆர்த்ரைடிஸ் நோய்களைக் குணப்படுத்த முடியும். இந்த உபகரணம் குறைந்த நுண் அலைகள் மூலம் (Electro Magnetic Field) பாதிக்கப்பட்ட இடத்தை மென்மையாக அதிர்வுறச் செய்து சிகிச்சை செய்கிறது.



கார்டிலேஜ் மற்றும் சில திசுக்கள் நம் உடலில் உள்ள அனைத்து எலும்புகளையும் பாதுகாத்து வேலை செய்ய உதவுகிறது. அதிகப்படியான பயன்பாட்டின் காரணமாக பாதிக்கப்படுகிறது. இவை பாதிக்கப்படும் ஆரம்ப நிலையிலேயே ஒருவித எலக்ட்ரோ மேக்னடிக் நுண் அலைகளை உருவாக்கி தசைகளும் நுண் எலும்புகளும் பாதிக்கப் பட்டிருப்பதை நமக்கு அறிவுறுத்தும், கவனிக்காமல் போகும் பட்சத்தில் அதிக வலியும், மூட்டும் பாதிக்கப்பட்டு வேலை செய்ய முடியாத நிலைக்கு போய்விடும்.

எமிட்ரான் PST சிகிச்சை இயற்கை நுண் அலைகளை செயற்கையாக தூண்டி எலும்பு மற்றும் தசைகளை பழுதுபார்க்க உதவுகிறது. இதனால் நூற்றுக்கணக்கான ஆர்த்ரைடிஸ் நோயாளிகள் பயனடைந்து இயல்பு வாழ்க்கை வாழ முடிகிறது. பல மருத்துவ நாளிதழ்களும் இந்த எளிய சிகிச்சையின் பலன்களை பிரசுரித்துள்ளன.

சென்னையில் ஆக்ஸிமெட் மருத்துவமனையில் இந்த எமிட்ரான் சிகிச்சை முறையை முதல் முறையாக அறிமுகப்படுத்தியுள்ளனர். மற்றும் ஓர் ஊசி துளைக்காத சிகிச்சை முறையையும், அறிமுகப்படுத்த உள்ளனர்.

இங்கு 15 நாட்களில் 1 மணி நேர சிகிச்சை மூலம் ஆர்த்ரைடிஸிற்கு வலி இல்லாத, அறுவை சிகிச்சை இல்லாத, மருத்துவமனையில் தங்கும் தேவையில்லாத நிரந்தர தீர்வளிக்கிறார்கள். 70% மக்கள் இந்த சிகிச்சைக்கான செலவும் குறைவு என்று பாராட்டுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு

OXYMED HOSPITALS
PRIVATE LIMITED
CLOSE TO YOUR HEART
Phone : 42131010 / 1014 / 1016
email : oxymedhospitals@yahoo.com
www.oxymedhospital.in

Advt

மார்ச், ஏப்ரல் மாதங்கள் வந்துவிட்டாலே மாணவ மணிகளும், அவர்களது பெற்றோர்களும் கண்டிப்பாக மிகவும் டென்ஷன் அடைவார்கள். அதிலும், பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வுகளைச் சந்திப்பவர்கள் என்றால் கேட்கவே வேண்டாம்! நல்ல முறையில் தேர்வுகளை எழுதி, கல்வியில் பிரகாசிக்க, ஸ்ரீ ஹயக்ரீவரை வணங்கி வழிபடவும்.

ஸ்ரீ தேசிகர் கண்ட ஹயக்ரீவர்

தூப்புல் மஹாதேசிகன், சுமார் 102 ஆண்டுகள் வாழ்ந்தார். இவர், முதலில் கருடனைக் குறித்து தவம் செய்து, பின்பு ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமாளை நோக்கி தவம் புரிந்து, அவரை நேரில் கண்டு தரிசித்து, அவரைப் பற்றியும், மற்றபிற தெய்வங் களைப் பற்றியும் கற்கண்டு போல் இனிக் கும் பற்பல பாடல்களைப் புனைந்துள் ளார். இவர் எழுதிய பாடல்களில், அதாவது

படிப்பில் சிறக்க பயனுள்ள மந்திரம்!



ஸ்தோத்திரங்களில், முதன்மை யானது, அற்புதமானது ஸ்ரீ ஹயக்ரீவ அஷ்டகம், ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்திரம். இதனை பிரதி தினமும் பாராயணம் செய்து வந் தால், அஞ்ஞான இருள் நீங்கி, ஞானம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீஹயக்ரீவர் வரலாறு:

மது, கைடபன் என்ற இரண்டு அசுரர்கள், நான்முகனிடமிருந்து, படைப்புத் தொழிலின் ரகசிய வேதத்தை அபகரித்துக்கொள்ள, நான்முகன் திருமாலை நோக்கித் தவம் புரிந்தார்.

உடனே, திருமால், குதிரை போன்ற ஹயக்ரீவவடிவம் கொண்டு, அசுரர்களை, வதம் செய்து, வேதத்தினை மீட்டு நான்

முகனிடம் ஒப்படைத்தார். 'நால் வேதப் பொருளை பரிமுகமாய் அருளிய பரமன்' என்று போற்றப்படும் ஸ்ரீ ஹயக்ரீவர், யோக ஹயக்ரீவராகவும், ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீயராகவும் ஸேவை ஸாதிக்கின்றார். ஸ்ரீ தேசிகனுக்கு, தனது, விக்கிரமத் திருமேனியை வழங்கியதாகச் சொல்வார்கள்.

ஸ்ரீ ஹயக்ரீவரின் ஆதித்திருமேனிகள், இந்தியாவில் இரண்டே இரண்டு இடங்களில்தான் இருக்கின்றன. ஒன்று திருவஹீந்திரபுரம், மற்றொன்று மைசூரில் உள்ள பரகாலமடம். மேலும், செட்டி புண்ணியம், நங்கநல்லூர், மைலாப்பூரில் ஸ்ரீதேசிகர் கோயில் போன்ற இடங்களிலும் ஸ்ரீ ஹயக்ரீவர் ஸேவை ஸாதிக்கின்றார்.



வியாழக்கிழமை விசேஷம்!

ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமாளுக்கு வியாழக்கிழமை விசேஷம். எனவே, இவரை, வியாழக் கிழமைகளில் தரிசித்து, அர்ச்சனை செய்வது உகந்தது.

திருவஹீந்திரபுரம் கடலூருக்கு அருகில் உள்ளது. இங்குதான் ஸ்ரீவேதாந்ததேசிகருக்கு, திருவருள் புரிந்து, தரிசனம் தந்த ஸ்ரீ ஹயக்ரீவமூர்த்தி வாசம் செய்கின்றார். எனவே, ஒரே ஒருமுறை, இங்கு வந்து, 74 படிகள் ஏறிப் போய் தரிசனம் செய்து, மலை அடிவாரத்திலேயே கிடைக்கும், ஏலக்காய் மாலை, ரோஜா மாலை வாங்கிச் சாற்றினால் மிகவும் பலன் தரும். முடிந்த அளவு பிரதட்சணம் செய்தும் நமஸ்கரிக்கலாம்.

அங்கு செல்ல முடியாதவர்கள், அருகில் உள்ள நங்கநல்லூர் போன்ற பிற தலங்களிலும் தரிசிக்கலாம். நங்கநல்லூரில் 8-வது தெருவுக்கு எதிரில் உள்ள ஸ்ரீஹயக்ரீவர் ஆலயம், மிகவும் அற்புதமானது. ஐந்து தலைநாக ஆதி ஸேஷ ஸிம்மாசனத்தில், லக்ஷ்மி தேவியுடன் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவராக ஸேவை ஸாதிக்கும் அழகை இன்றெல்லாம் தரிசிக்கலாம். அத்தனை அழகு, லாவண்யம், அற்புதம். மிகவும் வரப்பிரஸாதி.

நெய் விளக்குகள் ஏற்றி வைத்து தரிசித்தாலும் பலன் நிச்சயம். சரி, ஆலயம் செல்ல நேரம் இல்லையா, கவலையே வேண்டாம். ஒரு அழகிய ஹயக்ரீவ மூர்த்தியின் படம் வாங்கி வைத்துக் கொள்ளவும்.

ஒவ்வொரு வியாழக்கிழமை அன்றும், இந்தப் படத்தை வைத்து, இரண்டு நெய் விளக்குகள் ஏற்றி எதிரில் வைக்கவும். பின்பு, மணையில் அல்லது ஸ்டூலில் வைத்து, இவரை 12 முறை பிரதட்சணம் செய்து, 12 முறை விழுந்து வணங்கி, பிரார்த்தனை செய்து கொள்ளவும். மாணவர்களோ அல்லது பெற்றோர்களோ இதனைச் செய்யலாம். பின்பு, கடலைப்பருப்பு வெல்லம் கலந்த, 'ஸ்ரீஹயக்ரீவ பிண்டி' என்ற பிரசாதத்தை செய்து நிவேதனம் செய்யலாம். கடலைப் பருப்பை வேக வைத்து, வடிகட்டி மசித்து, வெல்லப்பாகு, தேங்காய்த் துருவல், ஏலம் சேர்த்து செய்யப்படும் இந்த நிவேதனம்,

இயக்குநர் சி.ஜே. பாஸ்கர்:

சமாளிக்க முடியாமல் ஆண்களே மீடியா கம்பெனிகளை மூடி விட்டுச் செல்லும் சூழ்நிலையில், எத்தனை சவால்கள் வந்தாலும் அவற்றை எல்லாம்



நான் மதிக்கும் பெண்!



திறம்பட சமாளித்து, 'நான் வென்றே தீருவேன்' என்ற மனோ பாவத்தோடு செயல்பட்டு வரும் 'அரசி' ராதிகா சரத்குமார்தான் என்னைக் கவர்ந்த பெண்மணி.

இவருக்கு மிகவும் பிடித்தமான தாகும். இப்படி 11, 9, 7 என்ற கணக்கில், வியாழக்கிழமைகளில், விடாமல், தொடர்ச்சியாகச் செய்து வந்தால், நமது கோரிக்கைகள் கண் டிப்பாக நிறைவேறும். தேர்வில் முதலிடம், பரிசுகள் என ஸ்ரீஹயக்ரீ வரின் அருள்மழை பொழியும்.

ஸ்லோகம்:

மாணவர்கள் கீழ்க்கண்ட துதியை தினமும் சொல்ல வேண்டும்.

ஞானானந்த மயம் தேவம்
நிர்மல ஸ்படிகாக்ருதம்
ஆதாரம் ஸர்வ வித்யானாம்
ஹயக்ரீவம் உபாஸ்மஹே

மேற்கண்டவாறு பிரார்த்தனை செய்து, ஸ்ரீ ஸரஸ்வதி, ஸ்ரீ தட் சிணாமூர்த்தி, ஸ்ரீ குருராகவேந்திர ஸ்வாமி போன்ற பிற தெய்வங் களையும் வணங்கி வந்தால், தேர் வில் வெற்றி நிச்சயம்.

நாமக்கல் ஸ்ரீ நாமகிரித் தாயார் மீது பாடப்பட்ட இந்த அற்புத ஸ்லோகம், பாராயணம் செய்தால், கணிதப் பாடத்தில் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். கணித மேதை இராமானுஜருக்கு அருள் செய்தவர் ஸ்ரீநாமகிரித் தாயார்.

ஸ்ரீ நாமகிரி லக்ஷ்மி ஸஹாயம்!

(கணிதமேதை ஆக, பாராயணம் செய்யலாம்)

ஸ்ரீவித்யா மந்த்ர ரத்னா ப்ரகடித விபவா
ஸ்ரீ ஸுபலா பூர்ணகாமா ஸர்வேஸ
பிரார்த்திதா
ஸகல ஸீரநுதா ஸர்வ ஸாம்ராஜ்ய தாத்ரீ
லக்ஷ்மி ஸ்ரீ வேத கர்பா விதுரத மஹிஸா
விஸ்வகல்யாணபூமா
விஸ்வ க்ஷேமாத்ம யோகா விமலகுணவதீ
விஷ்ணு வக்ஷஸ்தலஸ்தா

கணிதப் பாடத்தில் சிரமப்படும் மாணவ, மாணவியர் இந்த ஸ்லோகத்தைச் சொல்ல லாம்.

(மேற்கண்ட ஸ்லோகம் 'குமுதம் ஜோதிடம்' இதழில் வந்தது. நன்றி கூறி மங்கையர்மலர் வாசகர்களும் பயன்பெற, இதனை எழுதுகின் றேன்.)

- வைஷ்ணவி,
சென்னை - 24

கலக்க வருதுப்பா

கல்கி

கெட் ரெடி!
கெட் ரெடி!
கெட் ரெடி!

உங்க மாவட்டத்துல
'சூப்பர்' எதுங்க? 'வேஸ்ட்' எதுங்க?

- நீங்க ஜாலியா ரவுண்டடிக்கிற டூரிஸ்ட் ஸ்பாட் எதுங்கோ?
- பார்த்ததும் பரவசமா கும்பிடு போடற கோயில் எங்கெல்லாம் இருக்குங்க?
- அசத்தலா போட்டுகிட்டு அதிரடி பண்ண சேலை.ஜீன்ஸ் சுத்துவட்டாரத்துல எங்கே பெஸ்ட்டா கிடைக்கும்ங்க?
- உங்க மாவட்டத்தோட தலை போற பிரச்னை எதுங்க? எப்படித் தீர்க்கலாம்ன்னு நினைக்கறீங்க?
- மிஸ்டர் மாவட்டம் யாருங்கண்ணா? என்ன காரணமுங்க?
- கலக்கலா கதை எழுதுவீங்களா? அசத்தலா கவிதை வருமா?
- லொள்ளு பண்ற 'ஜோக்ஸ்' கைவசம் இருக்கா?

-'ஆமா'ன்னா உடனே 'கல்கி'க்குத் தட்டி விடுங்க!

கோயம்புத்தூர்
கண்ணுங்களா... நாம 'லொள்ளு'
பண்றது மட்டுமில்ல...
எல்லாத்துலயும் 'சூப்பர்'னு
கல்கிக்கு நிரூபிங்க



நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடறோம்!

ஆமாம்! உங்கள் மாவட்டத்துக்கு 'கல்கி' குழு, நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்?

ஆனா சில கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- மாவட்டத்தின்...

பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்

ஆன்மிக, வியாபார சுற்றுலா
தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்

சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்

நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்

என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசி தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 14.3.2009



கலக்க வருதுப்பா கல்கி
கோவை மாவட்டம்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

"தர்மயுத்தம் தொடங்குங்கள்!"

தமிழ்நாட்டின் விழிப்பு என்ற தலைப்பில் பாரதி எழுதியுள்ள கட்டுரையில், பின்வருமாறு கூறியுள்ளார்:-

''ஸ்திரீகள் தமக்கிஷ்டமான பேரை விவாகம் செய்து கொள்ளலாம். விவாகம் செய்து கொண்ட புருஷனுக்கு ஸ்திரீ அடிமையில்லை. உயிர்த்துணை. வாழ்க்கைக்கு ஊன்றுகோல்.

ஜீவனிலே ஒரு பகுதி. சிவனும் பார்வதியும் விஷ்ணுவும் லக்ஷ்மியும் பரஸ்பரம் உதைத்துக்கொண்டதாக கதை சொல்லும் புராணங்களே கிடையாது. சிவன் ஸ்திரீயை உடம்பிலே பாதியாகத் தரித்துக் கொண்டார். விஷ்ணு மார்பின் மேலே இருத்தினார். பிரம்மா நாக்குக்குள்ளே மனைவியைத் தாங்கி நின்றார். ஜகத்துக்கு ஆதாரமாகப் பெருங்கடவுள், ஆண் பெண் என இரண்டு கலைகளுடன் விளங்குகிறது. இரண்டும் பரிபூரண சமானம், பெண்ணே அளவு உயர்வாகக் கூறுதலும் பொருந்தும்!

எனவே இன்று தமிழ்நாட்டில் மாத்திரமேயல்லாது பூமண்டல முழுதிலும் பெண்ணைத் தாழ்வாகவும் ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம். அநீதிகளுக்கெல்லாம் கோட்டை. கலியுகத்துக்குப் பிறப்பிடம்!

பரிபூரண ஸமத்வம் இல்லாத இடத்தில் நாம் ஆண் மக்களுடன் வாழ மாட்டோம் என்று சொல்லுவதனால் நமக்கு நம்முடைய புருஷனாலும் புருஷ சமூகத்தாராலும் நேரத்தக்க கொடுமைகள் எத்தனை யோவாயினும் எத்தன்மையுடையனவாயினும் நாம் அஞ்சக்கூடாது. சகோதரிகளே...? ஆறிலும் சாவு... நூறிலும் சாவு. தர்மத்துக்காக இறப்போரும் இறக்கத்தான் செய்கிறார்கள். ஆதலால் சகோதரிகளே... பெண் விடுதலையின் பொருட்டாக தர்மயுத்தம் தொடங்குங்கள். நாம் வெற்றி பெறுவோம். நமக்கு பராசக்தி துணை புரிவாள். வந்தே மாதரம்!''

'மாதர்' இதழில் அமரகவி பாரதி எழுதியதிலிருந்து...

– ராஜி ராதா,
வெங்கடபுரா



மகளிர் தின ஸ்பெஷல்

என் செல்லமே! ஆல்பம்



தாத்தா: பட்டுஸ்வாமி
பாட்டி : ஆண்டாள்
பேத்தி: ஹரிணி வெங்கட்



தாத்தா: ஆர். கோபாலகிருஷ்ணன்
பாட்டி : ஜி. ருக்மணி
பேத்தி: பி. சிவானி



தாத்தா: தி.தி. ஆனந்தன்
பாட்டி : லட்சுமி ஆனந்தன்
பேரன்: தி.தி. சூர்யா

தாத்தா: ர. ராஜமன்னார்
பாட்டி : ர.கலாவதி
பேரன்: எம். யஷ்வந்த்



தாத்தா: வீ. முத்தையா
பாட்டி : மல்லிகா
பேத்தி: மேக்னா



தாத்தா: ஆர். சுந்தரம்
பாட்டி : ஆர். சொர்ணம்
பேரன்கள்: பி.எஸ். அனிருத், எஸ். தனுஷ்



பகவான் பாபா!

மூத்த பத்திரிகையாளர் எஸ்.லட்சுமி சுப்ரமணியத்தின் அனுபவங்கள்!

அது 1962ம் ஆண்டு - நவம்பர் மாதம். அப்போது நான் திண்டிவனத்தில் பொறியாளராக வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். வாரா வாரம் 'இல்லஸ்டிரேடட் வீக்லி' வாங்குவது வழக்கம். அந்த வாரம் அப்படி வாங்கிப் பிரித்துப் பார்த்தபோது 'பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா'வைப் பற்றிய கட்டுரை ஒன்று வெளியாகி இருந்தது.

கட்டுரை ஆசிரியர் டாக்டர் பகவந்தம் குறிப்பிட்டிருந்த ஒரு பகுதி, என்னை மிகவும் கவர்ந்தது. ''அவர் ஒரு தாயைப் போல நம்மிடம் வந்து பரிவுடன் ஆறுதல் கூறுகிறார். அவர் நாம் கேட்காமலேயே நமது கவலைகளையும், துயரங்களையும் நீக்குகிறார். நம்மிடமிருந்து அவர் அதற்குப் பதிலாக எதையுமே எதிர்பார்ப்பதில்லை!'' என்று அவர் எழுதி இருந்தார். கட்டுரையின் முகப்பில் பகவான் பாபாவின் படம் முழுப் பக்க அளவில் வெளியாகியிருந்தது.



அப்போது சென்னையில் எனது மாமனார் இதயநோயால் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். நந்தை படுத்த படுக்கையாகப் பலவகையிலும் அவதிக்கு ஆளாகி இருந்தார். வீட்டில் மன அமைதி இல்லை. படத்தைக் கண்ணாடி போட்டு வீட்டில் மாட்டினேன். இரவு படுக்கப் போகுமுன் அவரிடம் அமைதியை நாடி வேண்டிக் கொள்வேன்; அவ்வளவுதான்.

ஆனால், அதிலிருந்து குடும்பத்தில் மெல்ல மெல்ல அமைதி பிறந்தது. சங்கடங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தீர்ந்தன. குறிப்பாக நான் பூஜையோ, வழிபாடோ செய்யாமலேயே, அவர் தாயினும் சாலப்பரிந்து என் வாழ்க்கையில் புதுமலர்ச்சியைத் தோற்றுவிக்க வந்தார்!

அதுவரை நான் அவரைத் தரிசித்ததில்லை. சென்னைக்கு வந்து அவர் தங்கும்போது போய்ப் பார்க்க நினைத்துப் பார்த்ததும் இல்லை. ஆனால் அதற்குப் பிறகு அவருடைய மானசிகப் பக்தன் ஆனேன்.



9

பகவானைத் தரிசிக்கும் பேறு எனக்குச் சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் கிடைத்தது. நானும் 'ஆனந்தவிகடன்' துணை ஆசிரியராக இருந்த மணியனும் பெங்களூருக்குப் போனோம். அங்கே நாங்கள் ஹோட்டலில் தங்கியிருந்தபோது பாபாவின் பக்தர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

''இங்கே அருகில் காடுகுடியில் (இப்போது ஒயிட் பீல்ட் என்று அழைக்கப்படுகிறது) அவர் வந்து தரிசனம் கொடுக்கிறார். அங்கே போய்த் தரிசியுங்கள். உங்களுடைய வேண்டுகோள் ஏதாவது இருந்தால் கடிதமாக எழுதி எடுத்துச் செல்லுங்கள். ஆனால், அது உங்கள் சொந்த லாபத்துக்காக இருக்கக் கூடாது. அங்கே

அனுராதா சேகர்



சூப்பர் ஸ்பெஷாலிடி மருத்துவமனை - புட்டபர்த்தி

அந்த ஒரு நிமிடம் என்னுடைய நினைவு கழன்று சுழன்றது!

அவர் வந்து மரத்தடியில் அமர்ந்து பக்தர்களுடன் பஜனை செய்வார். பிறகு எழுந்து சுற்றிலும் நடந்து வருவார். நீங்கள் கையில் கடிதம் வைத்த 'கவரை' வைத்துக் கொண்டு காத்திருங்கள். அவர் வரும்போது நீட்டினால், அதை அவர் ஏற்றுக்கொண்டால் உங்கள் வேண்டுகோளை அவர் நிறைவேற்றி வைப்பார் என்று அர்த்தம்'' என்று கூறினார்.

அவர் கூறியபடியே நாங்கள் அந்த ஆசிரமத்துக்குப் போனோம். கையில் 'கவரை' வைத்துக்கொண்டு காத்திருந்தோம். பகவான் பாபா எனக்கு மிக அருகில் வந்தார். ஆனால், நான் நீட்டிய 'கவரை' வாங்கிக் கொள்ளாமலேயே போய்விட்டார். 'சரி! நமக்குப் பிராப்தம் இல்லை!' என்று எண்ணிக் கொண்டேன். கொஞ்ச தூரம் போனவர் திரும்பி என்னிடம் வந்தார். நான் கவரை அவரிடம் நீட்டினேன். அவர் வாங்கிக் கொண்டு விட்டார்!

நான் முழுத் திருப்தியுடன் ஊர் திரும்பினேன். எனது வேண்டுகோள் மூன்று. அப்போது அடிக்கடி நோய் வாய்ப்பட்டிருந்த எனது தாயார், கடைசி வரை உடல் நலத்துடன் வாழ வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு முன் திருமணமாகி இருந்த எனது புதல்வி ஜெயஸ்ரீ விசுவநாத் சுகப் பிரசவம் நேர்ந்து வீடு திரும்ப வேண்டும். பகவானின் பேரருள் இருந்தால் அது ஆண் குழந்தையாக இருக்க வேண்டும் - இவைதான் நான் அவரிடம் சமர்ப்பித்த கடிதத்தில் இருந்தவை.

எனது புதல்வியின் கர்ப்பம் முழுமை அடைந்து கல்யாணி நர்சிங்ஹோமில் சேர்க்கப்பட்டுவிட்டாள். டாக்டர் கல்யாணி எனக்கு மிகவும் வேண்டிய நண்பர். அதனால் அவர் அவளைத் தனி அக்கறையுடன் கவனித்துக் கொண்டார். சுமாராகப் பிரசவத்துக்குரிய நாளையும் குறித்துவிட்டார். ஆனால், அவர் குறித்திருந்த தேதி நழுவிப் போய்விட்டது. மேலும் பத்து நாட்கள் ஆகிவிட்டன. டாக்டர் கல்யாணியே கொஞ்சம் கவலைப் பட்டு, ''இன்றிரவு பார்க்கலாம். அவசியமானால் நாளை காலை சிசேரியன் மூலம்தான் குழந்தையை வெளியே எடுக்க வேண்டும்!''

என்று சொல்லி விட்டார்.

நாங்கள் வீடு திரும்பிக் கவலையுடன் காத்துக்கொண்டிருந்தோம். இரவு ஒரு மணி. எங்களுடைய குடும்ப நண்பரான வனஜா என்ற பெண்மணி வந்து எங்களை எழுப்பினார். ''உங்களுக்குப் பேரன் பிறந்திருக்கிறான்'' என்று சொன்னார். நான் மெய்சிலிர்த்துப் போனேன்!

ஏனென்றால் அது நவம்பர் 23ம் தேதி, இரவு ஒரு மணி. பகவான் பாபாவின் அவதார தினம். அதே நேரம்! என்னுடைய வேண்டுகோளை ஏற்று அவர் அருட்பிரசாதமாக எனக்கு ஆண் குழந்தையைக் கொடுத்து அருளியிருக்கிறார்.

ஒருமுறை சென்னை ஆபட்ஸ்பரிக்கு பகவான் பாபா வந்திருந்த போது, என்னுடைய தலையில் கையை வைத்து ஆசீர்வதிக்கும் நற்பேறு எனக்குக் கிடைத்தது. அந்த ஒரு நிமிடம் என்னுடைய நினைவு கழன்று கழன்றது. அவர் என்னை ஆட்கொண்டதாக உணர்ந்தேன். அதற்குப் பிறகு எனக்கு செல்வத்தைப் போற்றிக் காக்கும் ஆசை முற்றிலுமாக நீங்கிவிட்டது.



* ஸ்ரீ பாதுகை

மணியன் 'ஞானபூமி' பத்திரிகையைத் தொடங்கினார். நான் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதால் அவருடன் இருந்து பக்திப் பணியில் தொண்டு செய்யவும் முடிந்தது.

அப்போது மதுரையில் இருந்த சுப்பிரமணியம் செட்டியார் என்ற பக்தர் 'ஓம் ஸ்ரீசாயிராம்' என்று ஒரு கோடி தடவை எழுதும்படி செய்யும் திருப்பணியில் ஈடுபட்டிருந்தார். அதைப் பற்றிக் கட்டுரை எழுத நான் மதுரைக்குச் சென்றிருந்தேன்.

அதைப் பற்றிய கட்டுரையை நான் எழுதி அச்சாவதற்கு முன்பே, கொடைக்கானலில் வரி வரியாகச் சொல்லிவிட்டார் சுவாமி. அந்த லிகித ஜபப் புத்தகங்கள் இப்போது பிரசாந்தி நிலையத்தில் குல்வந்த் ஹால் மண்டப வாயிலில் ஸ்ரீராம பக்த ஹனுமான் திருவுருவத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து செட்டியாரின் எண்பதாவது ஆண்டு நிறைவு, புட்டபர்த்தியில் ஆசிரம சன்னிதியில் கொண்டாடப்பட்டபோது, பகவான் பாபா நேரில் வந்து ஆசீர்வதித்துத் தனது மரப் பாதுகைகளை அவருக்கு அருட்பிரசாதமாக அளித்தார். அதை ஏற்றுக்கொண்ட செட்டியார், பகவான் அணிந்து அளித்த பாதுகைகள் உலகெங்கும் பக்தர்களின் பூஜா அறையில் இடம்பெற வேண்டும் என்று விரும்பினார்.

இவ்விதம் வருடா வருடம் புட்டபர்த்திக்குச் சென்று, பகவான் பாபாவின் பிரசாதமாகக் கிடைத்த பாதுகைகளை ஊர்வலமாகக் கொண்டு சென்று, சுவாமியின் அருளாசியைப் பெறும் திருப்பணியில் நாங்கள் அனைவருமே ஈடுபட்டோம்.

முதல் ஜோடியாக அமைந்த மாணிக்கக் கற்கள் பதித்த வெள்ளிப் பாதுகையை, அவ்வாறு பகவான் பாபா ஒரு வியாழக்கிழமையன்று எனக்குப் பிரசாதமாக வழங்கினார். அப்போது, ''இதை நீ எனது பக்தர்கள் வந்து நமஸ்கரித்து ஆசியைப் பெற வகை செய்யும் பாதுகாவலனாக மட்டுமே இருக்க வேண்டும். இதை நீ உனக்குரியதாகக் கருதக் கூடாது'' என்று கூறினார். அதன்படி அந்தப் பாதுகைகளை நான் வீட்டில் வைத்துப் பூஜித்து வருகிறேன். ஆயிரத்துக்கும் மேற்

பட்ட பக்தர்கள் வந்து வணங்கி பகவானின் அருளாசியைப் பெற்ற திருப்தியுடன் திரும்பு கிறார்கள்.

அப்போது ஒரு நாள் மணியனின் வாழ்க் கையில் அந்த அதி சயம் நிகழ்ந்தது. அலு வலகத்துக்கு வந்த அவர், திடீரென்று நினை விழந்தார். அவரை அரு கில் உள்ள மருத்துவ மனையில் சேர்த்தோம். ஆயினும் சிகிச்சை சரி வரப் பலன் அளிக்க வில்லை. உடன் சென்றி ருந்த நானும் அவரது குடும்பத்தினரும் அங் கேயே இருந்தோம்.

அவரை வந்து சோதித்துப் பார்த்த டாக் டர் செரியன் என்னி டம், ''அவருடைய நிலைமை மோசமாகத்தான் உள்ளது. எதற்கும் இரவு பத்து மணிக்கு மறுபடி வந்து பார்க்கிறேன்'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார். அப்போது மாலை ஏழு மணி. நான் அந்த அறை யின் வாசலில் இருந்த படிக்கட் டின் அருகில் அமர்ந்து பிரார்த் தனை செய்யத் தொடங் கினேன். இரவு சுமார் ஒன்பது மணி இருக்கும். கண் விழித் துப் பார்த்தபோது ஆரஞ்சு நிற உடையில் படியேறி, சுவாமி சென்றது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது!




இரவு பத்து மணியளவில் டாக்டர் செரியன் வந்து பார்த்தபோது வியந்து போனார். ''அவர் உடல் நிலை நன்கு தேறிவிட் டது! யாராவது டாக்டர்கள் வந்தார்களா?'' என்று கேட் டார். நான் யாரும் வர வில்லை என்று சொல்லி விட்டு நான் உணர்ந்த புனித அனுபவத்தைப் பற்றிக் கூறினேன். செரி யன் கண்களில் வியப் புடன் தனது கைவிரல் மோதிரத்தைக் காட்டி னார். அதில் பகவான் பாபாவின் திருவுருவம் பொறிக்கப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து பகவான் பாபாவின் தரி சனத்துக்காக மணியன் தனது குடும்பத்தாருடன் போயிருந்தபோது, பக வான் பாபா புன்சிரிப் புடன், ''உன்னைக் குணப் படுத்த டாக்டர் செரி யனால் மட்டுமே முடியும் என்று நினைத்தாயா? அதற்கு மேல் பெரிய டாக்டர் யாரும் இருக்க முடியாதா?'' என்று கேட்டார்!

அது முதல் மணியன் பகவான் பாபா வின் தீவிர பக்தர் ஆனார். அவ ருடன் பலமுறை புட்டபர்த் திக்குச் சென்று பகவானைத் தரிசிக்கும் வாய்ப்பும் எனக் குக் கிடைத்தது. பகவானின் பேரருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்..

❋ மணியன்



(அடுத்த இதழில் வாசகியர் அனுபவங்கள்...)

உடல் எடை குறைக்க
சுகர் – மூலிகை சிகிச்சை

உடல் எடை குறைக்க : அதிகபட்சமாக வீட்டில் இருந்தால் ஒரு மாதத்தில் 15 கிலோ வரை / இங்கு தங்கினால் 12 - நாட்களில் 10 கிலோ வரை குறைகிறது. உடலில் உள்ள அழுக்குகள், துர்நீர் வெளியேறுவதால் உடல் எடை குறைகிறது. அப்போது அல்சர், பிரசர், முழங்கால் வலி, தலைவலி, மாதவிடாய் பிரச்னைகள் போன்ற மற்ற நோய்களும் தொந்தரவுகளும் இயற்கை முறையில் பாதுகாப்பாக பெருமளவு குணமாகின்றன.

பலருக்கு ஒரே வாரத்தில் எடை குறைவது நன்கு தெரியும். இரண்டாம் மாதத்திலிருந்து மேலும் மேலும் எடை குறைவதோடு உடல் அளவும் வேகமாக குறைந்து உடல் நன்கு இறுகும், பலமும் அழகும் அதிகரிக்கும்.

உடலிலுள்ள கொழுப்பு, ஊளைச் சதை போன்றவை நீங்குவதால் பெண்களுக்கு கருத்தரிக்கும் வாய்ப்பு மிகவும் பிரகாசமடையும். ஆண்களுக்கு நேரம், பலம் திறன், உறுதி ஆகியவை நன்கு மேம்பட்டு முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு தாம்பத்திய உறவு சிறப்படையும்.

உடலின் இயற்கையான இயக்கத்தின் மூலம் அழுக்குகள் வெளியேற்றப்படுவதால் எவ்வித பின்/பக்க விளைவுகள் ஏற்படுவதில்லை. ஒரு மாத மருந்து **ரூ.1100/-** முதல் ஐந்து விலைகளில் கிடைக்கும். போனில் முகவரி தெரிவித்து வி.பி.பி. மூலமாகவும் நேரிலும் மருந்துகளைப் பெறலாம்.


சுகர் : உடல்நிலையைப் பொறுத்து நிறையப் பேருக்கு ஒரு மாதத்திற்குள் நார்மலாகிவிடும் வாய்ப்புள்ளது. பின்பு எமது மூலிகை மருந்துடன் எளிய உணவுமுறையில் வாழ்நாள் முழுவதும் பக்க/பின் விளைவுகளின்றி சுகரை நன்கு கட்டுப்படுத்தலாம். பூரண ஆரோக்கியத்தைத் திரும்பப் பெறலாம்.

எமது மூலிகை மருத்துவத்தில் எந்த தொந்தரவுக்காக சிகிச்சை பெற்றாலும் மொத்த உடல் ஆரோக்கியமே மேம்படும். பசி, தூக்கம் ஒழுங்காகும். அல்சர், கேஸ்ட்ரபுள் போன்றவை நீங்கும். முடி உதிர்வது, முகப்பருக்கள் குணமாகும். இரத்தம் சுத்தமாகும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். மேலும் தலைவலி, உடல் வலிகள், வயிற்றுக் கோளாறுகள் குழந்தையின்மை உட்பட, **உணவு சாப்பிட்டு நடமாடும் நிலையில் உள்ளவர்களின் எல்லா நோய்களுக்கும்**

Dr.M.முத்துக்குமார் B.Sc., DNYS., இயற்கை மருத்துவ இல்லம் (பதிவு), ஸ்ரீ குருகுலம் பள்ளி எதிரில், மூலவாய்க்கால், கரட்டடிபாளையம் (அஞ்சல்), கோபிசெட்டிபாளையம் - 638 453, ஈரோடு (தாலுக்கா)
போன் : (04285) 240650 செல் : 93602 09393, 97912 42425 e-mail : natureclinic@gmail.com

---

ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!



ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனை குறைத்து, மனவலிமையை தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்யத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்சனை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி போன்ற காரியங்களை பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் தீமை உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவைகளுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திர முண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறையிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் **மறையகம் பாபா**. உடனே அணுகவேண்டிய முகவரி:

அருள்
மறையகம்

1 B, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட், நெ.3, அப்துல் ராசாக் தெரு, நூர்ஜஹான் தியேட்டர் எதிரில் (நூர்போது ராஜ் தியேட்டர் என்று மாற்றப்பட்டுள்ளது), சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
☎ : 2435 1190, 2433 2047. செல்போன் : 98404 11551

குறிப்பு : வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சனை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சனைகளை எழுதி, ரூ. 10 (அ) அதற்கான அஞ்சல் தலையுடன் அனுப்பி வைத்து ஆலோசனை பெறவும்.


மினி தொடர்-2

(சென்ற இதழ் சுருக்கம்)

சாரு, இன்றைய மாடர்ன் பெண்! ஃபிரெஞ்ச் வகுப்பு, கார் டிரைவிங் என துடிப்பும் துள்ளலுமாக வளைய வருபவள். சுதந்திரமான அவளது போக்கு, சாருவின் தாயார் ஜானகிக்கு அச்சத்தைத் தருகிறது. சாருவை தமது மகன் சம்பத்துக்கு சம்பந்தம் பேசுகிறார் அவர்களது குடும்ப நண்பர் கோவர்த்தன்.

கோவர்த்தனின் வெளிப்படையான அணுகுமுறை, மூர்த்திக்குச் சந்தோஷ அதிர்ச்சியைக் கொடுத்தது.

சம்பத்தைப் பார்த்ததிலிருந்து, அவருக்கும் அந்த



பானு ரவி

அஞ்சும் மூணும் எட்டு!

எண்ணம் துளிர் விட்டிருந்தது. இந்தச் சின்ன வயதிலேயே ஒரு பெரிய இண்டர் நேஷனல் சாஃப்ட்வேர் கம்பெனியில் உயர் பதவியில் இருந்தான். முன்னுக்கு வரக்கூடிய துடிப்பும், உயர்ந்த இலக்கை அடையக்கூடிய திறமையும், அவனது கண்ணியமான தோற்றமும் மூர்த்தியைக் கவர்ந்ததில் வியப்பேதும் இல்லை. யோசிக்காமல் கண்ணை மூடிக்கொண்டு 'யெஸ்' சொல்லி விடலாம்தான்... ஆனால், சாருவைக் கேட்காமல் அப்படியெல்லாம் சொல்ல அவர் விரும்பவில்லை.

அதற்குள்ளாகச் சாருவும், சம்பத்தும் ஒபாமா, இலங்கைப்போர், ஸ்லம்டாக் மில்லியனர் என எதையும் விட்டு விடாமல் அலசிக்கொண்டிருந்தனர். அவர்களது இயல்பான பேச்சும், ஒருமித்த எண்ணமும் அவர்களைச் சற்றே நெருக்கத்துக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

கோவர்த்தனின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் மூர்த்தி மிகுந்த யோசனையுடன் சாருவைப் பார்த்தபோது, கோவர்த்தன் சாருவிடமே கேட்டுவிட்டார்.... "ஓ! அங்கிள், என்னோட அப்பா எது சொன்னாலும் எது பண்ணினாலும் எனக்கு ஓ.கே'' என்ற போது, சாருவின் திருமண விஷயம் அந்த நிமிஷத்திலேயே நிச்சயமாகிப் போனது.



அசுர வேகத்தில் எல்லா ஏற்பாடுகளும் செய்து,இதோ சாருவின் கல்யாணம் முடிந்து விளையாட்டுப் போல் ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. ஷாம்பூ தலை பறக்க, பாட்டும் சப்தமுமாக வளைய வந்துகொண்டிருந்த சாரு இல்லாமல் வீடு வீடாகவே இல்லை. அவள் போய் வந்த சுற்றுலாப் பயணம் போலவே... அவளது திருமணமும் ஒரு கணத்தில் முடிவானது தான், ஜானகிக்கு இன்னமும் ஆச்சர்யத்தைத் தந்து கொண்டிருந்தது.

'அப்பாடி! என்னவெல்லாம் நினைத்

துப் பயந்து கொண்டிருந்தேன்... சாருவின் திருமணம் நல்லபடியாக முடிந்ததில் சந்தோஷம்தான்...' ஆனாலும் இயற்கையாகவே அவ்வப்போது எழும் பயம் அவளைக் கொஞ்சம் நிம்மதி இல்லாமல் செய்துகொண்டிருந்தது. சம்பத்தின் தாத்தா, பாட்டி, சித்தி, சித்தப்பா, அத்தை, மாமா, கஸின்ஸ், கிட்ட... தூரத்துச் சொந்தம் என்று ஏகப்பட்ட பேர் வந்தபோது, அவர்களைக் கவனிப்பதில், ஜானகியும் மூர்த்தியும் சற்றே திணறித்தான் போனார்கள். இத்தனை பெரிய குடும்பத்தில், இந்தப் பெண் சாரு எப்படி புகுந்து புறப்பட்டு வரப்போகிறாளோ என்று இனந் தெரியாத கலக்கம் அவளிடத்தில் இருந்துகொண்டேதான் இருந்தது.

இங்கிருந்த வரையில், கடுகு மிளகாய் தாளித்து ஒரு சமையல் செய்தோ, இரண்டிழை கோலம் போட்டு சுவாமி விளக்கேற்றியதோ இல்லை... அங்கே என்ன செய்கிறாளோ? சாருவிடமிருந்து ஃபோன் வரும்போதெல்லாம்... ஏதேனும் புகார் சொல்வதாக... குற்றம் காண்பதாகச் சொல்லி விடுவாளோ என்று மனது அடித்துக் கொள்ளும்.

டெலிபோன் மணி ஒலித்தது... ''ஜானா! அடுத்த வாரம் நான் டெல்லிக்கு ஒரு காண்ஃபரன்சுக்காகப் போகணும். அப்படியே போய் சனி... ஞாயிறன்று நம்ப சாருவைப் பார்த்துட்டு வரலாம்னு இருக்கேன்.''

மூர்த்தி சொன்னதுதான் தாமதம்... உடனே சாரு மிகவும் விரும்பிச் சாப்பிடும் பத்த லாடும், ரிப்பன் பக்கோடாவும் பாக் செய்தாள். கல்யாணத்தின்போது திரட்டுப் பால் என்றால் தனக்கு ரொம்ப இஷ்டம் என்று சம்பத் சொன்னது நினைவுக்கு வரவே, அதையும் டப்பர்வேரில் போட்டு வைத்தாள். சாருவுக்கு ஒரு லெஹங்காவும், புது மோஸ்தரில் வந்திருக்கும் ஜெட் ப்ரேஸ்லெட்டும் வைத்து கிஃப்ட்ராப் செய்தாள். ராதாவுக்கு ஒரு வெங்கிடகிரி புடைவையும் கோவர்த்தனுக்கு அருணாசாயிராமின் இசைவட்டுகளும் வாங்கி அழகாக லெதர் சூட்கேசில் எடுத்து வைத்தாள்.

சாருவிடமிருந்து ஃபோன்.

''நீயும் அப்பாவோட வந்திருக்கலாமே அம்மா...! உன்னை ரொம்பவும் மிஸ் பண்றேம்மா...'' சாரு நெகிழ்ச்சியோடு சொன்ன போது, ஜானகியின் கண்களில் குற்றால அருவி பொங்கிற்று.

டெல்லியிலிருந்து மூர்த்தி வந்தாயிற்று. ''இந்தா ஜானா! சாரு என்னமோ கொடுத்து விட்டிருக்கா பாரு...'' அவர் நீட்டிய பையில் அவளுக்குப் பிடித்த பெரிய சைஸ் சீதாப் பழங்களும், மயில் கழுத்து கலரில் வல்கலம் புடைவையும்... வெளேரென்று ஒரு மார்பிள் பிள்ளையாரும்... கூடவே 'என்னோட ஸ்வீட் அம்மாவுக்கு' என்று முத்து முத்தாக எழுதிய கடிதமும் இருந்தன.

''அம்மா! என்னோட ஸ்வீட் அம்மா! உன்னை, முக்கியமா உன்னோட அறுவையை இடைவிடாத தொண தொணப்பை, நான் ரொம்பவே மிஸ் பண்றேன். அப்பா சொன்னார்... கல்யாணத்துக்கு அப்புறமும் நீ, என்னைப் பத்திக் கவலைப்படறதை நிறுத்தலைனு. ஏன்மா...? அம்மா... நான் ரொம்பவே அதிர்ஷ்டசாலி... சம்பத் அருமையானவர். எனது இன்-லாஸூம் அவ்வளவு அருமை

கண்ணின் கீழே கருவளையமா? இரண்டு பேரீச்சம் பழத்தை [கொட்டை நீக்கி] சில துளிகள் கிளிசரின் மற்றும் ஒரு டீஸ்பூன் பாலேட்டுடன் அரைத்துத் தடவி வந்தால் விரைவில் கருவளையத்துக்குக் குட்பை சொல்லலாம்.

– சரஸ்வதி வெங்கட்ராமன், சென்னை–75

யாகப் பார்த்துக் கொள்கிறார்கள். என்னோட குட் ஃப்ரெண்ட்ஸ் யார் தெரியுமா... தாத்தாவும் பாட்டியும்தான்...

ஒவ்வொருவருக்கும் ஒருவித டேஸ்ட் இருக்கு. ரசனை இருக்கு. யாரும் எதையும் பிறர் மீது திணிப்பதில்லை... அதனால் அவரவர்களின் தனித்தத்துவத்தை இழக்காமல், ரொம்பவும் இயல்பா இருக்க முடிகிறது. சமையல் செய்யத் தெரியாது என்று சொன்னபோது, மனசுக்குள் முதல் தடவையா பயமும்... கூடவே உனது முகமும் எட்டிப் பார்த்தன. ஆனால், பாட்டி என்னைத் தட்டிக் கொடுத்தபடி....

'சாரும்மா, சமையல் என்ன பிரம்ம வித்தையா? அஞ்சும் மூணும் எட்டானால்



அறியாப் பொண்ணும் கறி சமைப்பாள் தெரியுமா? ரெண்டு நாள், அப்புறம் ரெண்டு வாரம்னு சும்மா இப்படி சமையல்கட்டுக்கு வந்து கூடவே இருந்து பாரு... விளையாட்டுப் போல கவனி! அப்புறம் பாரு... தன்னால உனக்கும் ஆர்வம் வந்து, நீயும் தூள் கிளப்புவாய்' என்றார். உண்மைதான்! ஓர் அதட்டல் இல்ல... அதிகாரம் இல்ல... இப்போ வாரத்தில ரெண்டு நாட்கள் என்னோட சமையல்தான்...

... தாத்தாவோட தினமும் வாக் போகும்போது, நமது சாஸ்திரங்களையும் சம்பிரதாயங்களையும் ரொம்ப அழகாச் சொல்லிக்கிட்டே வருவார். அம்மா! உனக்குத் தோன்றலாம்... இப்போ மட்டும் எனக்கு எப்படி திடீர்னு ஆர்வம் வந்ததுனு? அம்மா, ஒன்றை யோசித்துப் பார்... என் மீது உனக்கு என்றாவது நம்பிக்கை வந்திருக்கிறதா? உனக்கு நான் பரம எதிரியாகத்தான் தெரிந்தேன். நான் எது செய்ய விரும்பினாலும் உடனே உன்னிடமிருந்து ஆட்சேபம்தான் கிளம்பும்.

... அம்மா! நானும் ஒரு பெண்தான்... நீயும் ஒரு பெண்தான். ஒரே மண்ணில் செய்த இரண்டு வித்தியாசமான பொருட்களைப் போல்தான்... கொதித்துக் கொதித்துப் பண்டத்தைச் சிதறவிடாத பானை தான் நீ என்றால், மணமும் வண்ணமும் கொண்ட மலர்களைத் தாங்கிய பூ ஜாடி நான்! ட்ரைவிங் கற்றுக்கொள்ள விரும்பியபோது, நாமென்ன ராயல் ஃபாமிலியா என்று கேட்டாய்? அம்மா, இங்கு சம்பத்தை கம்பெனியில் ட்ராப் செய்து, பிக்கப் செய்து... எனது மாமியாரைக் கோயிலுக்கு அழைத்துச் சென்று, தாத்தா பாட்டியை டாக்டரிடம் கூட்டிச் சென்று... இந்த வேலையெல்லாம் நான்தான் செய்கிறேன் தெரியுமா?

இன்னொரு குட் நியூஸ். ஃபிரெஞ்ச் தூதரகத்தில் எனக்கு வேலை கிடைச்சிருக்கு... இப்போதைக்கு இங்குள்ள சுற்றுவட்டாரக் குழந்தைகளுக்குப் பாட்டும், வயலினும் சனி, ஞாயிறுகளில் சொல்லித் தர்றேன்...

...அம்மா, இனிமேலாவது, என்னைப் பற்றிக் கவலைப்படாதே. நீ வாழ்வில் கெட்ட பெயர் வாங்காதபோது, உன்னோட பெண்... நான் மட்டும் விதிவிலக்கா என்ன? பாட்டி சொன்ன மாதிரி, அஞ்சும் மூணும் என்னைக்குமே எட்டுதான்! தப்பே வராது...''

கடிதத்தைப் படித்து முடித்தபோது, ஜானகியின் மனம் நிரம்பியது போலவே கண்களும் நிரம்பித் தளும்பின.


(முற்றும்)

குந்தன் கற்களில்









தேவையான பொருட்கள்

விதவிதமான கலர்களில் துளையுள்ள குந்தன் கற்கள் சிறியதும், பெரியதுமாக (திலகம், ஓவல், இதய வடிவங்கள் கொண்ட, சிறிய, பெரிய கற்கள்), கோல்ட் கம்பி (மெல்லிய கம்பி, உள்ளூர் கம்பி என்று கேட்டு வாங்கவும்.) 10ம் நூல், பச்சை டேப், கட்டர்.




விதவிதமான நிறங்களில், கண்ணைக் கவரும் குந்தன் கற்கள் கிடைக்கின்றன. அவற்றைக் கொண்டு எப்படி பூ செய்வது என்று தெரிந்துகொண்டால் பற்பல அலங்காரப் பொருட்களை செய்யலாம். பழைய சி.டியில் துளை போட்டோ அழகிய சிறு சட்டியில் அடுக்கியோ, அல்லது வேறு விதமாக அலங்கரித்தோ பரிசுப் பொருட்களாகக் கொடுக்கலாம்.

ஒரே ஒரு பூ மட்டும் செய்து சிறு பொக்கே மாதிரி கூட கொடுக்கலாம். நிறைய பூக்களைக் கொண்டு அலங்கரித்து கலர்ஃபுல் மலர்கொத்தாகவும் தரலாம்.


முதலில் தெரிந்து கொள்ள:

★ உட்புறம் சிறிய கற்களும் வெளிப்புறம் பெரிய கற்களும் ஒரே

அழகிய அலங்காரம்!



3



4



7



8

வடிவமாகவும், ஆனால், மாறுபட்ட கலர்களிலும் இருக்குமாறு வைத்தால் பார்க்க அழகாக இருக்கும். உதாரணத்துக்கு உள்ளே சிறிய வெள்ளை திலகம் வைத்தால் வெளியே சிவப்பு பெரிய திலகம் வைத்தால் பார்க்க நன்றாக இருக்கும்.

★ வட்ட வடிவக் கற்களைத் தவிர்க்கவும். அவற்றில் 'பூ' போன்ற இதழ் அமைப்பு வராது.

★ கோல்ட் நிறக் கம்பியை மட்டுமே பயன்படுத்துங்கள். அது தான் மினுமினுப்பாக இருக்கும். மெல்லிய கம்பி வைத்தால் காம்புப் பகுதி தடிமனாக இல்லாமல் இருக்கும். பச்சை டேப் சுற்றினால் அசல் அழகாக இருக்கும்.



அதேபோல துளையின் உள்ளே நுழைத்து திருப்பி



9

பஞ்சாமிர்தம்



குழந்தை **ஆர்.லயாமிர்தா**, குழந்தையின் அம்மா **ஆர். பூங்கொடி**, பூங்கொடியின் அம்மா - **டி. சுலோசனா**, சுலோசனாவின் அம்மா - **ஆர். கமலம்**, கமலத்தின் அம்மா - **அம்மாபிள்ளை**

வளைக்கும் கம்பியானது, பெரியதாக இல்லாமல் சிறிதளவே வளைக்கவும். அப்போதுதான் மற்ற கம்பிகளோடு சேர்த்து வளைக்க இலகுவாக இருக்கும்.

இனி... பூ செய்முறை:

★ குறைந்தது 2 அங்குல, கம்பிகளாக வெட்டிக் கொள்ளவும். கல்லின் நல்ல (மேற்புற) பகுதியின் கீழ்புறம் இருக்கும் துளையில் நுழைத்து, பின்புறமாகக் கொண்டு வந்து அதையே மேலே இருக்கும் துளையில் நுழைத்து அதை அப்படியே பின்புறமாக வளைத்து, கீழே இருக்கும் கம்பியோடு முறுக்க வேண்டும். (மேலே நுழைக்கும் கம்பியைச் சிறியதாக நுழைத்தால் போதும்.)

★ இப்படியே இணைத்த எல்லா கற்களிலும் சிறிய கற்களை மட்டும் மூன்று (அ) நான்கு கற்களை ஒன்றாக இணைத்து நூல் கொண்டு இறுகக் கட்டவும். பின் அதைச் சுற்றி பெரிய கற்களையும் இணைத்து இறுக்கக் கட்ட வேண்டும். (நூல் கொண்டு கட்டினால்தான் இறுக்கமாக இருக்கும். கம்பியைக் கொண்டு சுற்றினால் தடினமாக ஆகிவிடும்.

★ எல்லா இதழ்களையும் இணைத்த பின்பு, காம்புப் பகுதியில் எல்லா கம்பிகளையும் முறுக்கி, விருப்பப்பட்டால் பச்சைக் கற்களை இலை போல சேர்த்து முறுக்கி, கம்பி மீது பச்சை டேப் கொண்டு சுற்றி விடவும். ஜொலிஜொலிக்கும் குந்தன் பூ தயார்! அதற்குப் பிறகு உங்கள் கற்பனைக்கேற்ப அழகழகாக அலங்கரித்து மகிழலாம்!

- வனஜா சௌந்தர்ராஜன், சென்னை - 83

- ரிஷிதாவின் 'ஸ்லிம் அண்ட் கேர்' நிறுவனம் பல பெண்களின் வாழ்க்கையில் வசந்தம் வீச வைத்திருக்கிறது. அங்கு சேர்ந்து எடையைக் குறைத்து புது வாழ்க்கையை அமைத்துக் கொண்ட பெண்கள் பலர். இருபது செஷன்களில் 20 கிலோ எடை வரை குறைத்துக் கொள்ளலாம். சிலருக்கு 110-120 கிலோ என்பது போல் மிக அதிக எடை இருக்கும். அப்படிப்பட்டவர்கள் மேலும் அதிக செஷன்களில் சேர்ந்து 30 கிலோ எடை வரை குறைத்துக் கொள்ளலாம். எடைக் குறைப்புக்கான கட்டணத்திலேயே தியானம், பிராணாயாமம், யோகா ஆகியவற்றையும் கற்றுத் தருகிறார்கள்.

ரிஷிதாவின் 'ஸ்லிம் அண்ட் கேர்' நிறுவனம் பல பெண்களின் வாழ்க்கையில் வசந்தம் வீச வைத்திருக்கிறது. அங்கு சேர்ந்து எடையைக் குறைத்து புது வாழ்க்கையை அமைத்துக் கொண்ட பெண்கள் பலர்.

- அங்குள்ள இறக்குமதி செய்யப்பட்ட கருவிகள் உடலில் அதிகப்படி சதை போட்டிருக்கும் பகுதிகளாகப் பார்த்து எடையைக் குறைப்பதால் உடலும் அழகான வடிவத்தைப் பெறுகிறது.
- கடுமையான உணவுக் கட்டுப்பாடுகள் கிடையாது. சமச்சீர் உணவு என்பது போன்ற சின்ன மாற்றங்கள், அவ்வளவு தான். மற்றபடி வாக்கிங் பயிற்சி கூடத் தேவை இல்லை. குறைந்து விட்ட எடை வகுப்புகளுக்குப் பிறகு மறுபடியும் வந்து சேராமலிருக்க எளிய ஆலோசனைகளைத் தருகிறார்.
- தொடர்ந்து சரியாகத் தூக்கம் இல்லாததாலும் மனச் சோர்வாலும் கண்ணுக்குக் கீழே உண்டான கருவளையங்கள் மறையவும் வகுப்புகள் உண்டு. இந்தக் கோர்ஸில் சேர்ந்த மூன்றிலிருந்து நான்கு வகுப்புகளிலேயே விளைவுகள் தெரியத் தொடங்கிவிடுகிறது. எட்டு செஷன்களில் வேண்டிய மாறுதல்கள் ஏற்படும்.
- மிகவும் அழகான முகம், டபுள் சின், முகச் சுருக்கங்கள் போன்றவற்றால் தவிப்பவரா நீங்கள்? கவலை வேண்டாம். இந்தக் குறைகளைப் போக்கத்தான் ஃபேஸ் லிஃப்டிங் கோர்ஸ் நடத்துகிறார்கள்.

ரிஷிதாவின் ஸ்லிம் அண்ட் கேர் நிறுவனத்தில் பெண்களுக்கு மட்டும் தான் அனுமதி.



ரிஷிதா

எடை குறைந்து உடல்வாகு சீராகும், அழகு கூடும்!

கோயமுத்தூரிலும் எங்கள் கிளை திறக்கப்பட்டிருக்கிறது.

தொடர்பு கொள்ள - **ரிஷிதா**
Slim and Caare,
14/56, 1D, 1st Floor,
Hill Crest Apts., Venkatanarayana
Rd, T.Nagar, Chennai - 17.
Ph: (044) 2433 2838, 94444 13224
Combatore Address: # 32/1, Bharathi Park,
2nd Cross street, Saibaba Colony, Combatore,
Ph: 94444 13224

Advt.

வழிபாடு

பஞ்சாமிர்த மகிமை!



ஒரே மாதிரியான பாலதண்டாயுத பாணியின் மூன்று சிலா மூர்த்திகளை போகர் எனும் மகாசித்த புருஷர் தயாரித்தார். அதில் ஒன்றுதான் தொன்று தொட்டு பழனியிலுள்ள பூஜா விக்ரகம். அச்சிலைக்கு அபிஷேகித்த பஞ்சாமிர்தம், உடற்பிணிகளைப் போக்குகின்றது. மேலும் தனிப்பட்ட சுவையும் நறுமணமும் கொண்ட இப் பஞ்சாமிர்தம் பல நாட்கள் வரை கெடுவதில்லை! (விருப்பாட்சி மலையில் காய்க்கும் விருபாக்ஷி வாழைப்பழத்தினால் செய்வதால் இது கற்கண்டு போல இனிக்கும்!) முருகனின் தெய்விக அருளுடன் நவபாஷாணங்களின் மருத்துவ குணமும் ஒன்று சேர்வதால் பல பிணிகளைப் போக்கும் மருந்தாகிறது இப்பிரசாதம். முருகன் சிலையை போகர் நவபாஷாணம் கொண்டு உருவாக்கியுள்ளார்!

நவபாஷாணங்களின் மருத்துவ குணம் பின்வருமாறு:-

1. லிங்க பாஷாணம் - இருதய வலிமை தருகின்றது.
2. குதிரை பாஷாணம் - நரம்புகளை வலுப் பெறச் செய்கிறது.
3. கார்முகில் பாஷாணம் - உடல் சூட்டைத் தணித்து சமமான நிலை தருகிறது.
4. செந்தூர பாஷாணம் - சரும வியாதிகளைப் போக்குகிறது.
5. வெள்ளை (ஸ்வேத) பாஷாணம்- தாது புஷ்டி பெற.
6. ரக்த பாஷாணம் - கண் கோளாறுகளை நிவர்த்திக்கிறது.
7. கௌரி பாஷாணம் - உடலை வலிவடையச் செய்கிறது.
8. கம்பி நவாச்சார பாஷாணம் - உடலிலுள்ள துர்நீரை வியர்வை, சிறுநீர் மூலம் வெளியேற்றுகிறது.
9. சீதை பாஷாணம் - மற்ற அனைத்து பாஷாணங்களும் உடலில் கிரஹிக்க உதவுகிறது.

– மனோரமா கோபிநாத், பெங்களூரு

நமக்கு ஏற்ற தலை சாயத்தை, நாமே எப்படித் தேர்வு செய்வது?

- ஆர். விமலா, ஆலத்தூர்

இன்று மார்க்கெட்டில் விதவிதமான தலைசாயம் கிடைக்கிறதே விமலா மேடம்! அட்டைக் கறுப்பு சாயம் பூசி, ஒரு செயற்கைத் தன்மையை வரவழைப்பதைவிட, அடர்ந்த ப்ரௌன் போன்ற சாயங்களை உபயோகிக்கலாமே! அழகுக்காக கூந்தல் சாயம் பூசுபவர் என்றால் வயலட், பர்கண்டி போன்ற வண்ணச் சாயங்களை உபயோகிக்கலாம்! நமது இந்தியச் சூழலுக்கு ஏற்ற மாதிரி வண்ணங்கள்... நிறையவே வந்திருக்கின்றன.

❋ படம்: "சன்ஷைன்" மனோஜ் கிருஷ்ணா



அழகா

கால் பாதங்களில் தசை சுருக்கம் விழுந்து, காய்ந்து போய் காணப்படுகிறது. எனக்கு வயது 39. அது சரியாக என்ன செய்யலாம்?

- டி. புவனேஸ்வரி, சென்னை

கால் தசைகளில் சுருக்கம் என்று கவலை ஏன்? வீட்டில் சர்க்கரை இருக்கிறதல்லவா, கொஞ்சம் எடுத்து எலுமிச்சை சாறு கலந்து கால்களில் தேயுங்கள். (இயற்கையான ஸ்க்ரப் இது.) இதன் மூலம் இறந்த செல்கள் உதிர்ந்துவிடும். அப்புறம் கிளிசரின் தடவி வாருங்கள். கால் தசைகள் சுருக்கமின்றி பொலிவாகும். இன்னொரு முறைகூட இருக்கிறது. இரண்டு பக்கெட்டுகளில், ஒன்றில் மிதமான வெந்நீரும், இன்னொன்றில் குளிர்ந்த நீரும் எடுத்துக் கொள்ளுங்கள். வெந்நீரில் இரண்டு நிமிடங்கள் காலை வைத்து விட்டு,

பின் குளிர்ந்த நீரில் இரண்டு நிமிடம் வைத்திருங்கள். மாற்றி மாற்றி பலமுறை இப்படிச் செய்யலாம். அந்த நீரில் கல் உப்பு சிறிது சேர்த்தால் கால்களுக்கு மிகவும் நல்லது.



கேளுங்க!

அழகுக் கலைஞர் நேச்சுரல்ஸ் வீணா பதிலளிக்கிறார்!

நகங்களில் சிலருக்கு கறுப்பாகவும் சொத்தையாகவும் ஏன் ஏற்படுகிறது?

- கீதா வாசுதேவன், திண்டுக்கல்

பொதுவாக நகத்தில் அடிபட்டால் தான் கறுப்பாகவோ சொத்தையாகவோ மாறுகிறது. சில சமயம் ஹார்மோன் பிரச்னையாலும் நிறம் மாறலாம். மற்றபடி செய்யும் வேலையைப் பொறுத்து அழுக்கு, தூசி சேர்வதால் கறுப்பாகலாம். ஆலிவ் எண்ணெய் தடவி மசாஜ் செய்தால் நகங்கள் உறுதியாகும். நல்ல நிறம் பெறும். கூடுமானவரை அழுக்கு சேராமல் அடிபடாமல் இருந்தால் நகம் கறுப்பாகாது.

கண் இமைகளின் முடி கருகருவென அடர்த்தியாக வளர டிப்ஸ் ப்ளீஸ்?

- ஆர். விஜயஸ்ரீ, சென்னை

கண் இமைகளுக்கு விளக்கெண்ணெயைவிட நல்ல மருந்து எது? தினமும் இரவில் இமைகள் மேல் விளக்கெண்ணெய் தடவி வாருங்கள். கருகரு என்ற நீண்ட அடர்ந்த இமைகள் கிடைக்கும்.

நாம் உபயோகிக்கும் க்ரீம், காஸ்மெடிக்ஸ் வேறு வேறு ப்ராண்ட் மாற்றி உபயோகிக்கலாமா? அல்லது ஒரே ப்ராண்ட் உபயோகிப்பதுதான் நல்லதா?

- இராஜி வாசகன், சென்னை

அடிக்கடி காஸ்மெடிக்ஸை மாற்றுவது நல்லதல்ல. எப்போதாவது வேறு பிராண்ட் முயற்சிக்கலாம். ஆனால் அலர்ஜி ஏற்பட்டால் நிறுத்திவிடவும்.

எச்சரிக்கை

கம்ப்யூட்டரில் வேலை பார்க்கறீங்களா?

கம்ப்யூட்டரில் வேலை பார்க்கும் போது, நம் உடம்பின் சில உறுப்புக்களை மட்டும் அதிகம் உபயோகிக்கிறோம். கண், கழுத்து, மணிக்கட்டு, கை, விரல்கள் மற்றும் முதுகு இவற்றுக்கு மட்டுமே அதிக வேலை. இதனால் கைவலி, முதுகு வலி, ஸ்பாண்டிலைடீஸ் என பல்வேறு உடல் உபாதைகளுக்கு உள்ளாகிறோம். கண் வலி, கண் வீக்கம், கண்ணில் நீர் வடிவது என்று கண்களும் பாதிப்படைகின்றன.

சரி, பயமுறுத்த விரும்பவில்லை. பெண்கள் எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்வது என்று மட்டும் சொல்கிறேன்.

★ சரியான பொசிஷனில் கம்ப்யூட்டர் சேரில் உட்கார வேண்டும். நேராக நிமிர்ந்து உட்காரப் பழகிக் கொள்ள வேண்டும். பாதங்கள் தரையையோ, ஃபுட்ரெஸ்டையோ தொட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

★ கடின வேலைக்கு இடையே கண்களுக்குப் போதிய ஓய்வு தர வேண்டும். எப்போதும் கம்ப்யூட்டரையே பார்த்துக் கொண்டிராமல், மற்ற பொருட்களையும் இடையிடையே பார்க்க வேண்டும். கம்ப்யூட்டர் ஸ்கிரீனுக்கு 'ஆன்டி-கிளேர் ஸ்கிரீன்' பொருத்த வேண்டும். கண்களை இமைக்க மறக்கக் கூடாது. அறையில் போதிய ஒளி இருத்தல் வேண்டும். வீட்டில் இருக்கும்போது, வெள்ளரிக்காய் சிலைஸ் கண்களின் மேல் வைத்து சிறிது நேரம் ஓய்வெடுக்க வேண்டும்.


★ கீ போர்ட் மற்றும் மவுஸ் உபயோகப் படுத்தும்போது, கைகளை சரியான பொசிஷனில் வைக்க வேண்டும். கைகள் சுமாராக 90° கோணத்தில் இருக்க வேண்டும். இடையிடையே கைகளுக்கு ஓய்வு தருதல் அவசியம்.




★ ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை நாற்காலியை விட்டு எழுந்து சற்று தூரம் நடந்து விட்டு வர வேண்டும். யாருடனாவது இரண்டு வார்த்தை பேசலாம். சிரிக்கலாம். நம் மனத்தை வேலையிலிருந்து வேறு விஷயத்துக்கு சிறிது நேரம் திருப்புவது நல்லது.

– சி.எஸ். சித்ரா,
கோயமுத்தூர்


கடைசித் தேதி:
12.3.09



பெயர்............................
நகரம்............................



பெயர்............................
நகரம்............................



பெயர்............................
நகரம்............................



பெயர்............................
நகரம்............................



பெயர்............................
நகரம்............................

கண்டு பிடியுங்க பார்ப்போம்!

இங்கே பிரபலமான ஐந்து இந்தியச் சுற்றுலா தலங்களின் படங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயரையும், ஊரையும் எழுதி அனுப்புங்க. மிகச் சரியானவற்றில் குலுக்கல் முறையில் தேர்வாகும் 5 வாசகர்களுக்கு தலா ரூ.100/- பரிசு

பெயர் :.................................... வகுப்பு : .... ஈ மெயில்..............................

கல்லூரி : ....

வீட்டு முகவரி : ....

சட்டென்று

''ஏன்டா, பொண்ணை நீ மட்டும் போய், ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்லே வச்சுப் பார்த்தாப் போதுமா... நாங்க பார்க்க வேண்டாமா...?''

பிரசாத்தின் தாயார் வஞ்சுளம் புலம்பினாள்.

''பிரசாத்து... போன இடத்துல ஃபிகரைப் பார்த்து ஜொள்ளு விட்டுட்டு உட்கார்ந்திருக்காதே... கத்தரிக்கா காரக் குழம்பும், உருளைக் கிழங்கு பொரியலும் பண்ணத் தெரிமான்னு கேளு...''

பிரசாத் திரும்பிப் பார்த்தான். நாகுதான்... சோழிப் பற்கள் தெரியச் சிரிக்கிறாள்.

''வர, வர இவளுக்கு வாய்க் கொழுப்பு அதிமாயிடுச்சு. நல்லாச் செல்லம் கொடுத்து, கெடுத்துக் குட்டிச் சுவராக்கியிருக்கே.''

அம்மாவிடம் சண்டைக்குப் போனான் அவன்.

''ஆமா. நாங்கதான் அவளோட வாயை வளர்த்தோம். அவ அம்மாவோட வேலைக்கு வர்றப்பவே, வாயும் கையுமாத் தானேடா வந்தா? உன்னைவிட மூணு வயசு சின்னவ. ஆனா, பள்ளிக்கூடத்துப் பசங்க எல்லாம் உன்னை ரவுண்டு கட்டி அடிச்சப்ப எல்லாம், 'நாகு, நாகு, அடிக்க வர்றாங்கடி'



STRICTLY FOR YOUTH

மாறுது வானிலை!

யூத் எடிஷன் பக்கங்கள்

யின்னு அவ முதுகுக்குப் பின்னாலேதானே ஒளிஞ்சுப்பே?''

பிரசாத்தின் அப்பா சுப்பு, ஒரு சமையற்காரப் பெண்ணுக்காகப் பரிந்து வந்தது, அவனுக்கு எரிச்சலாகத்தான் இருந்தது. சுப்புவுக்கும், வஞ்சுளத்துக்கும் நாகுவை ஒரு வார்த்தை சொல்லி விடக் கூடாது.

நாகு, படிப்பில் கெட்டி. பிளஸ் டூ முடித்த கையோடு ஏதோ ஒரு கம்ப்யூட்டர் சென்ட்டரில் சேர்ந்து நிறைய சர்டிஃபிகேட்டுகளை வாங்கி வைத்திருப்பதனால், சுப்புவின் பிஸினஸுக்கு வீட்டோடு இவள்தான் கம்ப்யூட்டர் ஆபரேட்டர். நாகுவின் தாயாருக்கு வயதாகிவிட்டதுடன் முழங்கால் மாற்று சிகிச்சையும் நடந்துள்ளதால், கிச்சன் டிபார்ட்மென்ட்டும் இவளுடையதுதான். பிரசாத்தின் தங்கை கோகிலாவின் ஆத்ம சிநேகிதி இவள்.

பிரசாத்திடமும் அவள் அன்பாகத்தான் பழகுவாள். ஆனாலும் பிரசாத்துக்கும் அவளுக்கு ஏதாவது ஒரு விஷயத்தில் மோதல் இருந்துகொண்டேதான் இருக்கும். அதற்கு அநேகமாக அவன்தான் காரணமாக இருப்பான்.

''என்னங்க... அழுக்கு மூட்டை அமெரிக்கன் ரிடர்ன்... இன்னமும் ஊருக்கு வர்றப்ப, சூட்கேஸ் நிறைய அழுக்குத் துணியோடத்தானே வர்றே... ஒவ்வொருத்தன் ஃபாரின் சென்ட், ஹாண்ட் பேக், நறுக் சுற கத்தி சுபடான்னு வாங்கிட்டு வர்றான்... நீயும் இருக்கியே...

''இந்தா, எத்தனை சோப்பைத் தேய்ச் சாலும் உன் நிறம் மாறாது. என்னோட கலர் வேணுமா... பக்கத்துல வா... கொஞ்சம் தர்றேன்... மத்தபடி கண்ட சோப்பைத் தேய்ச்சிட்டு, தேமல் வரப் போறது... பார்த்துக்க...''


பிரசாத்தும் பாய்வான்.

''ச்சீ... யாருக்கு வேணும் உன் நிறம்...? அமெரிக்காவுக்கு வந்து பாரு. என்னோட கலருக்கு என்ன மதிப்புன்னு தெரியும்... ஒவ்வொருத்தியும் மேல வந்து ஈஷிட்டுப் போவா...''

''அப்ப அதுல ஒண்ணைக் கட்ட வேண்டியதுதானே... ஏன் பொண்ணு தேடி இங்கே வந்தே?''

இதற்கு மட்டும் அவன் பதில் சொல்ல மாட்டான்... எப்படிச் சொல்வான்?

அவனுக்கு அழகான பெண்களுடன் மானசிகமாய் டூயட் பாடப் பிடிக்கும். ஆனால், கொஞ்சம் கொஞ்சலும் வெட்கமுமாய் இருக்கும் பெண்ணைத்தான் மிக்வும் பிடிக்கும். வஞ்சுளத்துக்கு தன் மகனின் ருசி அறிந்து சமைத்துப் போடத் தெரிந்திருக்க வேண்டுமே என்கிற ஒன்றுதான்



ஸ்டார் எழுத்தாளர்கள் எழுதும் யூத் சிறுகதைகள் வரிசையில் இந்த மாதம்

அனுராதா ரமணன்

கவலை.

ஆனாலும், கூடவே, தனக்குத்தானே சமாதானப்படுத்திக் கொள்வது போல சொல்லிக்கொள்வாள்.

'சமையல் என்ன பிரும்ம வித்தையா... இந்தக் காலத்துப் பொண்ணுங்க சொடுக்குப் போடறதுக்குள்ளே கத்துப்பாங்க...''

நேற்றோடு மூன்று பெண்களைப் பார்த்தாயிற்று. ஒன்றும் தேறவில்லை. அதாவது அவன் மனசுக்குள் இருக்கிற கனவுக் கன்னிக்குப் பக்கத்தில்கூட எவளும் வரவில்லை.

நல்ல அழகான, களையான முகமா இருக்கணும். கன்னம் பாலேடு மாதிரி... உதடு ரெண்டும் ஆரஞ்சு கலர்லே... மூக்கு சானியா மிர்சாவுது மாதிரி... கழுத்து...

''டேய், நேரமாகலையா?''

நாகு, ஒரு தட்டு நிறைய மைசூர் பாகுத் தூளைக் கொண்டு வந்து வைத்து விட்டு நக்கலாகச் சொன்னாள்:

''சாப்பிட்டுட்டுப் போ... சின்ன வயசுல, மைசூர் பாகு கிளறிய வெங்கல உருளிய, எனக்கோ கோகிக்கோ தராம, அல்பம் மாதிரி அடிச்சுப்பியே... என்ன பார்க்கிறே... அமெரிக்கா போயிட்டா, அதெல்லாம் மறந்துடுமா... எடுத்துக்கோ... உனக்காகவே தாராளமாக் கொண்டு வந்தேன்.''

''கொடுடீ ராட்சஸீ...''

பிரசாத்தின் நாவில் மைசூர் பாகு கரைந்தாலும், மனசுக்குள் நாலாவதாகப் பார்க்கப் போகும் பெண்... பெயரென்ன... நந்திதா... அவள்தான் வந்து நின்றாள்.

புகைப்படத்தில் நல்ல உயரமாக, நிறமாகத்தான் இருந்தாள். முகவாயில் விரலை வைத்து அழுத்தினாற்போலச் சின்னக் குழி. ரொம்பவும் கவர்ச்சியாக...

'கல்யாணம் ஃபிக்ஸ் ஆயிடுச்சுன்னா, முதல்லே அந்த 'டிம்ப்பிளை'த் தொட்டு பார்க்கணும்.'

'இடுப்புல இருக்கற பேண்ட் இப்படியேத்தான் இருக்குமா... இல்லே எப்பவாவது மேல ஏத்தி விட்டுப் பாளா-ன்னு கேட்கணும்.'

அவன், தனக்குள் ஆயிரம் கேள்வி, பதில்களைக் கேட்டு, தானே அழிக்க -

''பிரசாத்து... எங்கே போனாலும் சாயந்திரம் ஏழு மணிக்கு வீட்டுல இருக்கணும் நீ...'' - நாகுதான்.

''எதுக்குடீ?''

''உம்... என் நிச்சயதார்த்தத்துக்கு

டியர் காலேஜ் ஸ்டூடன்ட்ஸ் ஒன்லி... இந்தக் கதையைப் படியுங்க... கதையின் முடிவு என்ன? பிரசாத் என்ன சொல்லியிருப்பான்? யோசிச்சு எழுதுங்க. சூப்பர் கற்பனைக்கு ரூ.500/- பரிசு! கல்லூரிப் படிப்புக்கான அத்தாட்சியை இணைக்கவும். கடைசித் தேதி 14.3.09

தேதி குறிக்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்றாங்க. அவங்க பேசறப்ப நீயும் இரு...''

''அது ஒண்ணுதான் குறைச்சல். போடீ... சாயந்திரம் என்னால வர முடியாது. நந்திதாவைப் பிடிச்சிருந்தா அவளோட டின்னரும் சாப்பிட்டுத்தான் வருவேன்...''

நாகு, விழிகளில் நீர் தளும்ப, அவனை ஆழமாய்ப் பார்த்துவிட்டு 'சடக்'கென நகர்ந்தாள்.

அமெரிக்கா போயும் இந்த முன் கோபமும், நிஷ்டூரமும் விடலையே....''

வஞ்சுளம்தான் அடித் தொண்டையில் முனகினாள். அதற்கே உள்ளிருந்து நாகுவின் குரல்...

''விடுங்க மாமி... இவனோட தாட்டுபூட்டுத்தனத்தை எல்லாம் என் கிட்டதான் காட்ட முடியும். அந்த நந்திதாகிட்ட காட்ட முடியுமா... வந்து தோரணம் கட்டிடுவா. அதையும்தான் பார்க்கப் போறேனே... எங்கே போயி டப் போறேன் நான்...''

பிரசாத் மௌனமாய் வெளியேறி னான்.

உண்மையில் அவன், இந்த ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் யோசிக் கவே இல்லையே...

நந்திதாவோ வந்தனாவோ... அழ காக இருக்கலாம். படித்து, பெரிய உத்தியோகத்தில் கை நிறைய சம் பாதிக்கிறவளாக வும் இருக்க லாம். ஆனால், தன் முசுட்டுத் தனத்தையும், முன் கோபத்தை யும் சகித்துக் கொள்வாளோ...



'என்னை மாதிரி அவளும் கோபக் காரியா இருந்தால்...?'

'இல்லே, நான் ஏதாவது சொன்னா, உடனே பொல பொலன்னு அழுது, ஊரைக் கூட்டி, நாற அடிச்சால்...'

'முன்னே பின்னே பழக்கமே யில்லாத ஒரு பெண்... என்னை ஒரு காஃபி குடிக்கும் நேரத்துக்குள் எப்படிப் புரிந்துகொள்வாள். இல்லை, நான்தான் அவளை எப்படி...'

அவன், நந்திதாவுக்கு ஃபோன் செய்து, தான் வர முடியாததை நாசூக்கான ஆங்கிலத்தில் சொன் னான்.

'ஓ.கே.. டஸன்ட் மேட்டர்...'

அங்கிருந்தும் நாகரிகமான பதில்...

அன்றிரவு பதினொரு மணிக்குத் தான் வீடு திரும்பினான் அவன்.

வஞ்சுளம், கோகி, அப்பா, ஏன், நாகு வுக்குக்கூட முகத்தில் சந்தோஷச் சிதறல் கள்தான் அதிகம்.

''பிடிச்சுப் போச்சா... பிடிச்சுப் போச்சா...?'' கோகி குதித்தாள்.

''அவன் பேசட்டும். கடைசியிலக் கட வுள் கண் திறந்தாரே...''

வஞ்சுளத்தின் குரல்... நெகிழ்ந்தது.

பிரசாத், நாகுவின் பக்கம் திரும் பினான். சமையல் அறையைத் தேய்த்துக் கழுவிவிட்டு, துடைப்பமும் கையுமாய் ஓடி வந்து நின்றவளுக்கு மூச்சு வாங்கியது.

பிரசாத் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

''ஆமா... மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வரல்லே?''

''த்ச்... ஏதோ சகுனத் தடையாம். அடுத்த வெள்ளி வர்றாங்க...''

''நான் பொண்ணு பார்த்ததைப் பத்தி நீ எதுவும் கேட்கலையா... மத்தியா னம் அப்படிப் பேசிட்டேனேயின்னு கோபமா?''

''ஆமா போ. நமக்குள்ள கோபம் வேற வச்சு வாழறது... அதான் உன் முகத்துல லிட்டர் கணக்கா அசடு வழியுதே... பொண்ணு பிடிச்சுப் போச்சு...''

''கரெக்ட். ஆனா, அந்த அசடு, அந்தப் பொண்ணைப் பார்த்ததுனாலே இல்லே...''

''பின்னே...?'' கோகி பதறினாள்.

''நான், அந்தப் பொண்ணைப் பார்க் கணும்னுதான் கிளம்பினேன். ஆனா... பிடிக்கும்னு தோணலை...''

''அதான் ஏண்டான்னு கேட்கிறோ மில்லே?''

(கதாசிரியர் அனுராதா ரமணன் எழுதிய கதை முடிவும், பரிசு பெறும் உங்கள் முடிவும் அடுத்த இதழில் வெளியாகும்.)

ரூ.500/- பரிசு பெறும் யூத் சிறுகதை முடிவு!

"நான் பணிபுரியும் நிறுவனத்தில் வேலைக்கு ஆள் எடுக்கிறார்கள். நம்பகமான நபர்கள் இருந்தால் கூறுமாறு சொன்னார்கள். நீங்கள் நாள்தோறும், தவறாமல் நேரத்துக்கு வந்து, எங்களை கிண்டல் கேலி செய்தாலும், உங்களுக்கென்று வேலை கிடைத்தால், வேலை நேரத்தில் நேரந் தவறாமை இருக்கும் என்று கருதியே இந்த வாய்ப்பு. பயன்படுத்திக் கொண்டால், உங்கள் நேரம், திறமை,

நீலா என்ன எழுதியிருப்பாள்?

இளவயது, உற்சாகம் போன்றவை வெட்டி வம்பில் கழியாமல், பெற்றவர்களுக்கு உபயோகமாக இருக்கும். உங்கள் வசதி எப்படி?

வேலை வேண்டும் என நினைத்தால் கீழ்க்கண்ட நபரை தொடர்பு கொள்ளுங்கள் நண்பர்களே! தொலைபேசி எண்..."

நட்புடன்
நீலா

– எஸ். திவ்யா,
செயின்ட் ஜோசஃப்ஸ் பொறியியல் கல்லூரி,
சென்னை – 119.

'அவள் கொடுத்த கடிதம்' யூத் சிறுகதையில் ஜோதிர்லதா கிரிஜா எழுதிய ஒரிஜினல் முடிவு!

"வணக்கம். எனக்கு ஓர் அண்ணன் இருந்தான். அவனும் இப்படித்தான். பேருந்து நிறுத்தத்தில் தன் நண்பன் ஒருவனுடன் நின்றுகொண்டு பெண்களைச் சீண்டிக் கொண்டிருந்தான். அந்தப் பெண்களில் துணிச்சலான ஒரு பெண் பொறுமை இழந்து ஒருநாள் காவல் துறைக்குப் புகார் செய்ய, அவன் கைது செய்யப்பட்டான். அந்த நண்பன் ஓடிவிட இவன் மட்டுமே அகப்பட்டான். பின்னர், அவமானம் தாங்காமல் தற்கொலை செய்துகொண்டான்.

அப்படி ஒரு நிலைமை உங்களுக்கு ஏற்படக்கூடாது என்பதாலேயே இதை எழுதுகிறேன்.

உங்களைச் சொல்லிக் குற்றமில்லை. இளைஞர்களைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி வரும் பல்வேறு ஊடகத்தையும், சூழலையும் கடந்து நீங்கள் இந்த அளவுக்கு இருப்பதே பெரிய விஷயம். இருப்பினும், 'எதனாலும் எங்களைக் கெடுக்க முடியாது' எனும் உறுதியுடன், நல்ல வழியில் செல்லுங்கள், நண்பர்களே. கடவுள் உங்களுக்கு நல்ல புத்தியைக் கொடுப்பாராக. வாழ்த்துகள்!"

நால்வரும் சொல்லி வைத்தாற்போல் தலை குனிந்து எச்சில் விழுங்கினார்கள்.

"சாரிங்க!", "மன்னிச்சிடுங்க!", "இனிமே இது மாதிரி நடந்துக்கமாட்டோம்" என்றார்கள் தாழ்ந்த குரலில்.

தனக்கு இல்லாத ஓர் அண்ணனைப் படைத்து, அவன் தற்கொலை செய்து கொண்டதாக் கதை கட்டியதற்காகக் கடவுளிடம் மானசிகமாய் அவள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.



"புடவை கட்டினா எனக்குப் பிடிக்கலே..." "ஊஹூம்... இடுப்பிலேயே நிக்க மாட்டேங்குது..."



இனி டோன்ட் வொர்ரி யூத் லேடீஸ்...

"உங்களுக்குப் பிடிச்ச மாதிரி இடுப்பில நிக்கற மாதிரி யூத் லேடீஸுக்கு அழகழகான நவீன டிசைன் புடவைகளை அறிமுகப்படுத்தி, அவர்களுக்கு அம்சமான தோற்றத்தைத் தர வேண்டும் என்பதற்காகவே இந்த 'இளைய தலைமுறைப் புடவைகள்' பிரிவை ஏற்படுத்தினோம்" என்கிறார் 'ஸ்ரீ பாலம் சில்க்ஸ்' உரிமையாளர் ஜெயஸ்ரீ ரவி. வாங்களேன்... ஒரு ரவுண்டு போய்ப் பார்க்கலாம்...

அடடா... புடவை கலாட்டா!



சுத்தமான பட்டு நெசவில் கண்ணை உறுத்தாத எளிய டெஸ்டட் ஜரிகை பார்டர், ஆகாய நீல உடலில் மாங்காய் மோடிஃப் எம்ப்ராய்டரி கொண்டது. பாவன்ஜி ஜரி இதன் சிறப்பம்சம்.



"பாரம்பரியப் புடவை மாதிரி கிராண்டா தெரியணும்... ஆனா பழைய லுக்கும் கூடாது..." என்று உங்கள் வீட்டு இளம் பெண்கள் முரண்டு பிடிக்கிறார்களா... இதோ உடலில் போல்கா புள்ளிகள் கொண்ட ப்ளூர் ஹான்ட்லூம் லைட் வெயிட் பட்டுப் புடவையை அணியச் சொல்லுங்க!

யூத் எடிஷன் பக்கங்கள்



இந்தச் சேலையைப் பார்த்தால் கண்ணை எடுக்க முடியுதா? இந்த டபியான் ஸில்க் புடவையிலும் தலைப்பிலும் பார்டரிலும் ஜரிகைக் கொடி படர்ந்திருப்பதால் நிச்சயம் அழகிலும் கொடி கட்டிப் பறக்கும்.



அடேங்
கப்பா
காட்டன்,
டிசைனர்
புடவை!
செல்ஃப்
டிசைன்
இழையோடும்
புடவையில்,
ஜரிகை
எம்ப்ராய்டரி
டிசைன் மற்றும்
அப்ளிக்
வேலைப்பாடு
வித்தை காட்டும்
அற்புதமான பார்டர்...
புதுசாப் புடவை
கட்டும் பெண்கள்
விரும்பும் புடவை!



பாதிப்
பாதியாய்
இரட்டை
வண்ணம் நடுவே
இழையோடும்
ஜரிகை மனசைக்
கொள்ளையடிக்கிற
மாதிரி லைட்
வெயிட் ப்யூர்
சில்க் புடவை.
அலைகள்
வரிவரியாய் ஓடும்
அழகில், அள்ளி
உடுத்தச் சொல்லும்
அழகுப் புடவை!



எந்த
நிகழ்ச்சிக்கும்
பாந்தமாய்
பொருந்திப்
போகும் இந்த
சாம்பல் நிற
டுபியான் ஸில்க்
புடவையில்
பார்டரில் மட்டும்
இளசுகளுக்குப்
பிடித்த மாதிரி
மெல்லிய ஸீக்வன்ஸ்
வேலைப்பாடு!
இதுதான் புடவையின்
ப்ளஸ் பாயின்ட்!



இந்த நீல நிற
100% காட்டன்
புடவைக்கு
கஞ்சி
போடாவிட்டால்
கூட, அதன்
ஃபால் படிந்து
பக்குவமாய்
உடம்பில் நிற்கும்.
செல்ஃப்
பிரிண்டோடு,
மெரூன் பேட்ச்
வேலைப்பாடும்
சேர்ந்ததில் என்ன
ஒரு ராயல் லுக்!
கான்ட்ராஸ்ட் ஷேட்
கொண்ட ப்ளவுஸ்
இதன் புதுமை!



கவர்ச்சியான, ஜாமெட்ரிக் டிசைன் கொண்ட பிரிண்டட் ஸில்க் புடவை... ஜியோமெட்ரிக் ஸீக்வன்ஸ் டிசைன் அழகு சேர்க்கிறது. பிளவுசோடு சேர்ந்து வரும் இப்புடவை எந்த நிகழ்ச்சிக்கும் படு பொருத்தம்!



ஹா!

அட்டகாசமான டூபியான் பட்டுப் புடவை.. கறுப்பு நிறப் புடவை, மஸ்டர்ட் பிரிண்ட்! எவ்வளவு எடுப்பு? உடல் முழுக்க அலை அலையாக ஓட, முந்தானையிலும், ஓரங்களிலும் பெரிய பூக்கள்! அணிந்தால் பார்ப்பவர் கண்களை கட்டிப் போடும் நிச்சயமாய்!



யூத் ஸ்பெஷல் புடவை இது! ஃபேன்ஸி கிரேப் சில்க் ஸாரி. கிரே பிரிண்டுகளுடன் கூடிய உடல். மெரூன் நிற பிரின்டட் பார்டர் அண்ட் பல்லு!



ப்ளு க்ரீன் ஷாட் உடலில் ஜரி போல்கா டாட் புட்டாஸ் கொண்ட ரஸனமான இந்தப் புடவைக்கு மயங்காதவர் உண்டா? மெல்லிய பாவன்ஜி பார்டரும் ஸெல்ஃப் டிஸைனுமாக என்னவொரு அற்புதம்?



இதுவும் டுபியான் ஸில்க் புடவைதான். அழகான சிறு கட்டங்கள்... பார்டரிலும் தலைப்பிலும் ஸீக்வன்ஸ் வேலைப்பாடு... நடுவே நவீன டிசைன் பிரிண்ட் ஒர்க். சிறு எம்பிராயிட்ரி ஜரிகை வேலைப்பாடு இழைவது அருமை!



பொதுவா இந்த மெஹந்தி பச்சை... இன்றைய இளம் பெண்களின் அமோக சாய்ஸ்... அதிலும் இதைப் போல சுத்தமான பட்டு நெசவும், அதிலே அற்புதமான ஜூட் டிசைனும் சேர்ந்துக்கொண்டால் வாவ்!

கறுப்பு அலைகள் ஓடும் புடவையைப் பாருங்கள்... உயரமானவர் களுக்கு பாந்தமாய்ப் பொருந்தும்! யாராலும் தவிர்க்க முடியாத லைட் வெயிட் காஞ்சிபுரம் பட்டுச் சேலை...



மனைவிக்கும், மகளுக்கும் பிடிச்ச மாதிரி புடவையா? இந்த லைட் வெயிட் ப்யூர் ஹான்ட்லூம் சில்க் புடவைதான் உங்கள் சாய்ஸ்! என்னவொரு லுக்!



நன்றி:
**ஸ்ரீ பாலம் சில்க்ஸ்,
சென்னை - 17
www.palamsilk.com**

தொகுப்பு:
பத்மினி பட்டாபிராமன்

உயரே... உயரே...

2

யூத் எடிஷன் பக்கங்கள்

'கேட்டரிங் டெக்னாலஜி' என்று ஸ்டைலாகச் சொல்லப்படுவது வேறொன்றுமில்லை. சமையல்கலை நுட்பம்தான். எக்கச்சக்க வேலை வாய்ப்பு உள்ள துறை இது.

உலக அளவில் உணவு நிபுணர் ஆகணுமா?



ஜி.எஸ்.எஸ்



என்ன காரணம்? ஹோட்டல்கள் பெருகி விட்டதினாலா? அது மட்டுமல்ல, கப்பல்கள், விமானங்கள் இவற்றுக்கென்றே தனி உணவகங்கள், தர நிர்ணயத்தோடு இருக்கின்றன. தவிர நாடுவிட்டு நாடு செல்லும் சுற்றுலாப் பயணிகள் வேறு. ஆக பலவித உணவுகளைத் தயாரிக்கும் திறமைசாலிகளுக்கு டிமாண்ட் தொடர்ந்து இருந்து வருகிறது.

சமையலறையிலேயே நாளைக் கழிக்க வேண்டியிருக்குதே என்று அலுத்துக் கொள்வதற்கு பதிலாக அதையே ஒரு பணியாக்கிக்கொண்டால், அங்கீகாரம், பணம் இரண்டுமே கிடைக்க வாய்ப்புண்டு!

நன்றாக சமைக்கத் தெரிந்தால் மட்டுமே போதாது. அதே சமயம், சமைக்கத் தெரிந்தவர்கள்தான் இந்தத் துறையில் ஈடுபட முடியும் என்பதுமில்லை. நீங்கள் தகவல் பரிமாற்றத்தில் சிறந்தவரா? நாலு வெளியிடங்களுக்குப் போய், புதுப்புது மனிதர்களைச் சந்திப்பது உங்களுக்குப் பிடிக்குமா? அப்படியானால் உங்களது இந்தத்

தன்மைகளையும் திற மைகளையும் இத் துறையில் பயன் படுத்தி முன்னேற லாம்.

★ ப்ளஸ் டூ முடித்த வுடன் பி.எஸ்.சி. ஹோட்டல் மேனேஜ்மெண்ட் கோர்ஸில் சேரலாம். மூன்று ஆண்டுப் படிப்பு. சென்னை, காஞ்சி புரம், வேலூர், சேலம், நாமக் கல், தருமபுரி, கோயம்புத்தூர், ஈரோடு, தஞ்சை, திருச்சி, திண்டுக்கல், மதுரை ஆகிய தமிழகத்தின், முக்கிய நகரங் களில் உள்ள பல கல்லூரிகளில் இந்தப் பட்டப் படிப்பு உள்ளது.


★ அவுரங்காபாத்தில் உள்ள இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் மூன்று வருட டிப்ளமா கோர்ஸ் நடத்துகிறது.

★ 'இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஹோட் டல் மேனேஜ்மெண்ட் கேட்டரிங் டெக்னாலஜி அண்ட் அப்ளைட் நியூட் ரிஷன்' மும்பை, டெல்லி, சென்னை யில் உள்ளது.

★ தேசியக்குழு (National Council)வின் கீழ் இயங்கும் சில கேட்டரிங் கல்வி நிறுவனங்களும் இதற்கான பயிற்சி களை அளிக்கின்றன. இந்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு இது.

★ டிப்ளமா பெறுவதற்கு மூன்று வருடங்களும் பட்டப்படிப்புக்கு நான்கு வருடங்களும் தேவை.

மூன்று வருடங்களுக்கான டிப்ளமா கோர்ஸ் அதிகப் பிரபலமானது. அதில் 22 வாரங்கள் 'நான்கு அல்லது ஐந்து



சென்னையில் தரமணியில் உள்ளது 'இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மெட் கேட்டரிங் டெக்னாலஜி அண்ட் அப்ளைட் நியூட்ரிஷன்' கல்லூரி. முதலில் மும்பையிலும், பிறகு டெல்லியிலும் உருவான இந்த அமைப்பு 1953ல் சென்னையிலும் பரவியது.

இந்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு இது. மாநில அரசுகளும், மத்திய - மாநில சுற்றுலாத் துறைகளும் ...

நட்சத்திர ஹோட்டல்களில்' பயிற்சியும் கொடுக்கப்படுகிறது.

★ க்ராஃப்ட்மென்ஷிப் கோர்ஸ் ஒன்றரை வருடங்களுக்கானது. 'ஃபுட் அண்ட் பெவரேஜ் கோர்ஸ்' 24 வாரங் கள். ப்ளஸ் டூ படிப்பை முடித்தாலே இவற்றில் சேரலாம்.

★ ஆனால், வேறு சில கோர்ஸ் களில் சேர பட்டதாரியாக இருக்க வேண்டும். 'அகாமடேஷன் ஆபரேஷன்' என்பது நட்சத்திர ஹோட்டல்களில் தங்குபவர்களுக்கு ஏற்ற சேவைகளைப் பயிற்றுவிக்கும் கோர்ஸ். டயாடிக்ஸ் என்பது மருத்துவமனைகளில் தங்கும் நோயாளிகளுக்கு உணவு சமைப்பதில் பயிற்சி அளிக்கிறது. பட்டப்படிப்பை முடித்திருந்தால்தான் இவற்றில் சேர முடியும்.

பெரும்பாலான தரமான கேட் டரிங் கல்வி மையங்களில் தேவைக்கு

இந்தக் கல்லூரியின் பெரும் ஆதரவாளர்கள். கட்டட அமைப்பு போன்ற அடித்தள வசதிகள் மத்திய அரசு அளித்தவை. நடப்பு செலவினங்கள் கல்லூரி மையத்துடையவை. அந்த விதத்தில் இது ஒரு சுயநிதி நிறுவனம்.

இன்னொரு முக்கிய விஷயம். மற்ற பல கல்லூரிகளை மனத்தில் கொண்டு ஏப்ரல் அல்லது மே மாதத்தில் இங்கு அட்மிஷன் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். டிசம்பர் மாத இறுதியிலேயே இவற்றுக்கான விளம்பரங்கள் நாளிதழ்களில் வெளியாகின்றன. தேசிய அளவில்தான் தேர்வுகள். பிப்ரவரி மாதத்துக்குள் அட்மிஷன் முடிந்துவிடும். 'நேஷனல் கௌன்ஸில் ஃபார் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் அண்ட் கேட்டரிங் டெக்னாலஜி, புது டெல்லி' இந்தத் தேர்வுகளை நடத்துகிறது. இது மத்திய அரசின் சுற்றுலா மற்றும் கலாசாரத் துறையின் கீழ் செயல்படுகிறது.

வரும் ஆண்டு ஏப்ரல் மாதம்தான் பத்தாவது, ப்ளஸ்டூ அல்லது பட்டப் படிப்பை முடிக்கப் போகிறீர்கள் என்றால், இந்த டிசம்பர் மாதத்திலேயே விண்ணப்பிக்க அனுமதி உண்டு.

அதிகமாகவே விண்ணப்பங்கள் குவிவதால் எழுத்துத் தேர்வு, குழு விவாதம், நேர்முகத் தேர்வு என்று பலவிதங்களில் வடிகட்டுகிறார்கள்.

தேர்வு என்றால் ஆங்கிலம், தர்க்க ரீதியாக சிந்திக்கும் திறமை, பொது அறிவு, அடிப்படை விஞ்ஞானம் ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கும்.

கேட்டரிங் பட்டப்படிப்பை முடித்த பிறகு ஏதாவது ஹோட்டலில் பயிற்சி எடுத்துக் கொண்டால், உடனடியாக வேலை கிடைத்துவிடும். நாளடைவில் மேலும் மேலும் அதிகச் சம்பளம் தரக்கூடிய ஹோட்டல்களுக்கு மாறிக் கொள்ளலாம். கப்பல்கள், விமானங்கள் என்று பலவிதமாக உங்கள் திறமைக்கு ஏற்ப மிளிர்ந்து பல வெளிநாடுகளுக்கும் போகலாம்.

ஆனால் ஒன்று, ஒன்பது மணிக்குப் போனோம், ஐந்து மணிக்கு வந்தோம் என்று அரசு அலுவலகங்கள் போல இதில் இருக்க முடியாது. ஒருவிதத்தில் நேரம் உங்கள் கையில் இல்லை என்றே கூறலாம்.

பலவிதமான மக்களைச் சந்திக்கும் அனுபவம் இதில் கிடைக்கும். சவாலும் சுவையும் நிறைந்த தொழிலுக்கு நீங்கள் தயார் என்றால், தாராளமாக கேட்டரிங்/ஹோட்டல் மேனேஜ்மெண்ட்டைத் தேர்ந்தெடுக்கலாம்.

- ஜி.எஸ்.எஸ்



'நச்'என்று நாலு வார்த்தையில் டீ ஷர்ட் வாசகத்தை எழுதி அனுப்பவும் என்று கேட்டிருந்தோம். வந்து குவிந்த கூப்பன்களில் இருந்து ரூ 100/- பரிசு பெறும் வாசகங்கள்!



டீ ஷர்ட்

வாசகப் போட்டி முடிவு!



-ராஜ மாதங்கி, செயின்ட் பீட்டர்ஸ் பள்ளி, கும்பகோணம்.

-அ.சௌம்யா, புனித சிலுவை பெண்கள் தன்னாட்சி கல்லூரி, திருச்சி-2

-எஸ்.சிநேகப்பிரியா, எத்திராஜ் கல்லூரி, சென்னை-101

-சாலை மதுர நாயகி வாசன், அண்ணாமலை பல்கலைக்கழகம், செய்யார்

-ஆர்.எஸ்.ஐஸ்வர்யா, பாரதியார் பல்கலைக்கழகம், திருப்பூர்

மருத்துவக் குறிப்பு

நம்புங்க நாராயணனை!



இந்த நாளில் மூட்டுவலி, இடுப்பு வலி இல்லாதவர்களே கிடையாது. அதற்கு எளிய வைத்தியம் வாத நாராயண கீரை. கீரைக்காரர்களிடம் சொன்னால் கொண்டு வந்து தருவார்கள்.



★ அந்தக் கீரையுடன் வெங்காயம், இஞ்சி, பூண்டு, மிளகாய் ஆகிய வற்றைப் பொடியாக நறுக்கி கேழ்வரகு மாவுடன் சேர்த்து அடை செய்து சாப்பிடலாம்.

★ புதினா துவையல் செய்வது போல் இந்தக் கீரையையும் எண்ணெயில் வதக்கி, சிறு தேங்காய் பத்தையும் வைத்து துவையல் செய்து சிற்றுண்டிக்குத் தொட்டுக் கொண்டு சாப்பிடலாம்.


★ வத்தக் குழம்பு இறக்கும் முன் இந்தக் கீரையை வதக்கிச் சேர்த்து, கொதிக்க விட்டு இறக்கலாம்.

★ வாத நாராயண கீரையை வெய்யிலில் காயவைத்து தூளாக அரைத்துக்கொண்டு, கொதிக்கும் நல்லெண்ணெயில் போட்டு இறக்கவும். பூங்கற்பூரத்தை ஒரு கட்டி போட்டு, கிளறி ஆறிய பிறகு கண்ணாடி பாட்டிலில் ஊற்றி வைக்கவும். தினமும் வலி இருக்கும் இடத்தில் தேய்த்து ஐந்து நிமிடம் ஊறிய பிறகு வெந்நீரில் குளித்தால் வலி போயே போச்.

★ வாத நாராயண இலையைத் துணியில் முடிந்து காய்ந்த கடாயில் ஒற்றி, வலி உள்ள இடத்தில் மேற்கூறிய எண்ணெயைத் தடவி ஒத்தடம் கொடுக்க, கடுமையான வலிகூட குறைந்துவிடும்.

– எஸ். ஜனாபாய், சென்னை – 40

ஓசோன்



பூமியைச் சூழ்ந்து வாயுக்கள் நிறைந்திருக்கும் பகுதியே வளி மண்டலம் ஆகும். புவிப்பரப்பில் இருந்து முதல் 15 கிலோமீட்டர் உயரம் வரை உள்ள வளி மண்டலப் பகுதி அடிவளி மண்டலம் என்று அழைக்கப்படுகிறது. இதில் ஆக்ஸிஜன், நைட்ரஜன், கார்பன் டை ஆக்ஸைடு மற்றும் மந்த வாயுக்கள் கலந்துள்ளன.

இந்த வாயுப் பகுதியின் மேல் சுமார் 60 கிலோமீட்டர் உயரம் வரை உள்ள பகுதி ஸ்ட்ரேடாஸ்பியர் என்று அழைக்கப்படுகிறது. இதன் 15 கிலோமீட்டர் வரையிலான கீழ் வாயுப் பகுதியே ஓசோன் படலம் ஆகும். இதன் குறியீடு O_3. இது வெளிர் நீல நிறமும், நெடியும் உடையது.

ஓசோன் படலம் எல்லா இடங்களிலும் ஒரே அளவு கனமாக இருப்பதில்லை. குறிப்பாக அண்டார்டிகா துருவத்தின் மேல் ஓசோன் படலம் மிக இலகுவாக இருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் குளிர்காலத்தில் சூரிய ஒளி பனித்துளிகளோடு சேரும்போது வெளிப்படும் குளோரின், ஓசோனைக் குறைத்து விடுகிறது. இவ்வாறு ஓசோன் குறைந்த இடம் ஒரு துவாரம் போலக் காட்சி அளிக்கும். இதைத்தான் நாம் 'ஓசோன் ஓட்டை' என்கிறோம். சமீப காலமாக இந்த ஓசோன் ஓட்டை பெரிதாகி வருகிறது.




"இந்த முட்டை நெருப்புக் கோழி போட்டதுனு எப்படி சொல்ற?"

"தொட்டாலே சுடுதே..."

– வே. தனசேகர், ஒன்பதாம் வகுப்பு,
கலைமகள் வித்யா மந்திர், கும்மிடிப்பூண்டி

படலத்தைப் பாதுகாப்போம்!



குளிர்சாதனப் பெட்டி, ஏர்கூலர், ஏர் கண்டிஷனர், தீயணைக்கும் இயந்திரங்கள் போன்றவை வெளியிடும் குளோரோ புளூரோ கார்பன் என்ற ரசாயன வாயு விண் வெளிக்குச் சென்று ஓசோனை அழிக்கிறது.

இயற்கையில் உருவாகும் குளோரினும் ஓசோனின் எதிரிதான். எரிமலை, காட்டுத் தீ போன்றவற்றால் வெளிப்படும் புகையும் ஓசோனின் பகையாளிதான்.

நமது பூமியில் நிகழும் பருவகால நிகழ்வுகள் அனைத்தும், தற்போது உள்ள ஓசோன் மூலக்கூறுகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது ஆகும். இந்த எண்ணிக்கையில் ஏதேனும் மாற்றம் ஏற்படுமாயின் பூமியின் பருவகால நிகழ்வுகள் மிக அதிகமாக மாற்றமடையும்.

மனிதனுக்கும், பிற உயிரினங்களுக்கும் தீங்கிழைக்கும் புற ஊதாக் கதிர்கள் சூரியனிலிருந்து நேரடியாக பூமியைத் தாக்காத வண்ணம் திரையாக ஓசோன் படலம் பயன்படுகிறது. ஆனால் தரை மட்டத்தில் ஓசோன் படலம் மனிதனுக்குத் தீங்கே விளைவிக்கிறது. மற்ற வேதிப்பொருட்களுடன் ஓசோன் எளிதில் கலந்து ஆஸ்துமா மற்றும் நுரையீரல் நோய்கள் பெருக வழி வகுக்கிறது.

டயர், பிளாஸ்டிக் போன்ற பொருட்களை எரிப்பதைத் தவிர்த்தல், கரும் புகையைக் குறைத்தல், குளோரோ புளூரோ கார்பனை வெளியிடும் மின் சாதனப் பொருட்களை வாங்காமல் இருத்தல் போன்றவற்றால் ஓசோனின் ஓட்டை பெரிதாகாமல் தடுக்கலாம்.

- அ. அனிதா,
முதலாம் ஆண்டு,
எம்.எஸ்.ஸி, ஐ.டி இ.காம்,
விவேகானந்தா கல்லூரி,
அகஸ்தீஸ்வரம்.

எம்.பி3 பிளேயர் வாங்கறீங்களா?

எம்.பி3 ப்ளேயர்கள் இல்லாத வீடே இல்லை என்றாகிவிட்ட நவீன இசை உலகமிது. தினமும் புதுப்புது எம்.பி3 பிளேயர்கள் வந்து குவிந்து கொண்டேயிருக்கும் நிலையில் எதைத் தேர்வு செய்வது என்று குழப்பம் ஏற்படுவது சகஜம்தான். இதோ சில டிப்ஸ்:



வெளி அழகை மட்டுமே பார்க்கக் கூடாது

விலை மலிவாக இருக்கும் பல எம்.பி3 பிளேயர்களின் தோற்றமோ படு பந்தாவாக இருக்கும். உடனே மனம் மயங்கி வாங்கிடாதீங்க. நல்ல பிராண்ட்டாகப் பார்த்து வாங்குங்கள். பார்க்க ஸ்டைலிஷ்ஷாக இல்லாவிட்டால் என்ன? நீடித்து உழைக்குமில்லையா?

டிஸ்ப்ளே:-

நிறைய எம்.பி3 பிளேயர்களுக்கு டிஸ்ப்ளே ஸ்க்ரீன்கள் மிகச் சிறியதாகத்தானிருக்கும். ஆனால் சற்றே பெரிய ஸ்க்ரீன் கொண்ட எம்.பி3 ப்ளேயரைத் தேர்ந்தெடுங்க. அப்போதுதான் ஜேபெக், எம்.பி.பி போன்ற டிஜிட்டல் ஃபைல்களின் மூலம், டிஜிட்டல் இமேஜ்களைத் தெளிவாகக் காண முடியும்.

சில மாடல்களில் ப்ளே-லிஸ்ட்டைத்

தயாரிக்க முடியும். பாடல்களை வரிசைப் படுத்தும் தன்மையோடு, ஒலி கட்டுப்பாடு, ஃபைல்களைப் பரிமாற்றம் செய்யும் ப்ளூ டூத் தொழில் நுட்பம், எஃப்எம் ரேடியோ, ஆடியோ ரிகார்டர் என பலவிதமான நவீனத் தொழில்நுட்ப வசதிகள் இருக்கின்றன. உங் களுக்குத் தேவைப்படும் மாடலில் தேர்ந் தெடுங்க.

நீங்கள் கேட்க விரும்புவது இசையை மட்டுமே என்றால், வீடியோ வசதி உள்ள எம்.பி3 ப்ளேயரை கூடுதல் விலை கொடுத்து வாங்கி, பணத்தை வீணாக்கா தீர்கள்.

பேட்டரிகள் எத்தனை நாளைக்கு நீடிக் கும் என்பதை, கடையில் வாங்கும்போதே உறுதி செய்துகொள்ளுங்கள். ரீசார்ஜபிள் பேட்டரிகளைப் பயன்படுத்துவது புத்திசாலித்தனம்.

எம்.பி3 பிளேயர் என்பதே ஒலிமயமா னது. துல்லியமான சப்தம் தரக்கூடிய 3.5 எம்.எம் ஹெட்ஃபோன் ஜாக்கைப் பயன் படுத்துவது உசிதமானது. அதனால் போட் டுப் பார்க்காமல், காதால் கேட்டுப் பார்க் காமல், எம்.பி3 ப்ளேயரை வாங்காதீங்க.

கூடவே அனுசரணையான 'Dock' யையும் வாங்கிவிடுங்கள். வீட்டிலிருக்கும் ஹோம் சிஸ்டத்துடன் இணைப்பதாக இருந்தால், 'டாக்' கருவியானது, ப்ளேயரை சார்ஜ் செய்து விடும்.

- எஸ். சசிரேகா,
இரண்டாமாண்டு (மனோதத்துவம்),
சென்னை பல்கலைக்கழகம்,
சென்னை - 2

பேச்சு!

கோபமாகப் பேசினால் குணத்தை இழப்பாய்
அதிகமாகப் பேசினால் அமைதியை இழப்பாய்
வெட்டியாய் பேசினால் வேலையை இழப்பாய்
வேகமாகப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்
ஆணவமாய்ப் பேசினால் அன்பை இழப்பாய்
பொய்யாய்ப் பேசினால் பெயரை இழப்பாய்
சிந்தித்துப் பேசினால் சிறப்போடும் வாழ்வாய்!

- த. சிவலிங்கம், (பி.காம்)
மூன்றாமாண்டு,
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைகழகம்,
சென்னை



டீனேஜ்-16

**இன்றைய நாகரிக பெண்கள்
விரும்பும் 16 செல்வங்கள்!**

* வசதியான பாய் ஃபிரண்ட்ஸ்
* விதவிதமான லேட்டஸ்ட் சுடிதார்கள்
* கவர்ச்சியான ஹேண்ட்பாக்குகள்
* ரிங் வகைகள்
* ஃபாஸ்ட் ஃபுட், பீட்ஸா வகைகள்
* கூலிங்கிளாஸ் மாடல்கள்
* வண்ண வண்ண வளையல்கள்
* லிப்ஸ்டிக் பல வண்ணங்களில்
* காது வளையங்கள்
* மேட்சிங் கலர் ஷூக்கள்
* புதுப்புது டிசைன்களில் ஜீன்ஸ் பேண்ட், ஷர்ட் வகைகள்
* கேம் ஷோக்கள்
* பிடித்த நடிகர்களின் வண்ண வண்ண ஃப்ளோஅப்புகள்
* டிஜிட்டல் கேமரா
* ஹோட்டலில் அரட்டை
* சிட்டி ரவுண்ட்ஸ்!

- பி.ஸ்ரீநாத்,
சௌடேஸ்வரி கல்லூரி, சேலம் - 6



வாவ் வேலங்கோந்து!



ஆறிலிருந்து அறுபதுக்கு மேற்பட்டவர்களுக்கும் எலும்புகளுக்கு முக்கியமாக முதுகு, இடுப்பு மூட்டுகளுக்கு வலுவூட்டக்கூடிய அருமருந்துப் பொருள் வேலங்கோந்து. வெள்ளையாக பெருங்கல்கண்டு வடிவில் உள்ள இதை ½ கிலோ, 1 கிலோ அளவில் வாங்கி, தூய்மையான துணியில் வெய்யிலில் காய வைத்து பாட்டிலில் வைத்துக் கொள்ளலாம்.

என் கணவரின் அண்ணியின் தாயார் இக்கோந்தின் சிறப்பைக் கூறியிருக்கிறார். அதன்படி நாங்கள் எல்லாவித சமையலிலும் 'மிக்ஸ்' செய்வதாலோ என்னவோ, இன்றும் குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை, கர்ப்பப்பை நீக்கம் போன்றவற்றுக்குப் பிறகும், ஆண்டவன் அருளால் முதுகுவலி, மூட்டுவலி இன்றி இருக்கிறேன் என நினைக்கிறேன்.

வேலங்கோந்து உருண்டை

தேவையான பொருட்கள்:

வேலங்கொந்து - 15 துண்டு
கொப்பரைத் துருவல் - 4 டேபிள் ஸ்பூன்
பாதாம் பருப்பு - 6
கசகசா - 2 ஸ்பூன்
பொட்டுக் கடலை - 5 டேபிள் ஸ்பூன்
சர்க்கரை - 100 கிராம்
நெய் - 2 ஸ்பூன்



செய்முறை:

வேலங்கோந்தை சிறிது நெய் விட்டு, வறுக்கவும். உப்பி வந்ததும், இறக்கி விடவும். பிறகு, கொப்பரைத் துருவல், கசகசாவை வாசனை வர இலேசாக வறுக்கவும். ஆறியதும், சர்க்கரை, கோந்து, பாதாம், பொட்டுக்கடலை கலந்து மிக்ஸி யில் பொடிக்கவும். இலேசான பிசுபிசுப் புடன் இருப்பதால் எளிதாக சிறு உருண் டையாகப் பிடிக்க முடியும். இதை, சுத்தமான கண்ணாடி பாட்டிலிலிட்டு வைக்கவும்.

பிரசவம் முடிந்த பதினைந்தாம் நாளிலிருந்து ஆறு மாதம் வரை காலையில் வெறும் வயிற்றில் இந்த உருண்டைகளைச் சாப்பிட தாய்க்கும், சேய்க்கும் வலு கூடும். வயிற்றுப் புண்ணும் ஆறும். வாய்வுத் தொல்லை இருக்காது. சருமப்புண் விரைவில் ஆறும்.

கோந்து இட்லிப் பொடி

தேவையான பொருட்கள்:

வேலங்கோந்து - 12
கொள்ளு - 25 கிராம்
உளுத்தம்பருப்பு - 25 கிராம்
கடலைப் பருப்பு - 1 டேபிள் ஸ்பூன்
கறுப்பு எள் - 25 கிராம்
வற்றல் மிளகாய் - 8
பெருங்காயம் - சிறு துண்டு
உப்பு - தேவையான அளவு

உப்பைத் தவிர அனைத்தை யும் சிறிது எண்ணெய் விட்டு தனித் தனியே வறுத்து, ஆறிய பின் உப்பு சேர்த்து மிக்ஸியில் கரகரப்பாக அரைக்கவும்.

வேலங்கோந்து பருப்புப் பொடி

தேவையான பொருட்கள்:

வேலங்கோந்து வறுத்துப் பொடித்தது - ¼ டம்ளர்
துவரம் பருப்பு - 50 கிராம்
கடலைப் பருப்பு - 10 கிராம்
கொள்ளு - 25 கிராம்
வற்றல் மிளகாய் - 2
கொப்பரைத் துருவல் - 1 குழி கரண்டி
உப்பு - தேவையான அளவு

செய்முறை:

அனைத்தையும் வெறும் வாணலி யில் (கோந்து தவிர) சிவக்க வறுத்து, ஆறியதும் மிக்ஸியில் கோந்து பொடி, உப்பு சேர்த்து கரகரப்பாக அரைக்கவும்.



வேலங்கோந்து கன் பவுடர்


தேவையான பொருட்கள்:

பொட்டுக் கடலை - ¼ கிலோ
வறுத்த அரைத்த வேலங் கோந்து பொடி - 2 குழிக்கரண்டி
பூண்டு - 5 பல்
கொப்பரைத் துருவல் - ½ கப்
வற்றல் மிளகாய் - 4
உப்பு - தேவையான அளவு



ஓவியர் அரஸ்:

வாழ்க்கையில் பிரச்னைகள்,
உடல் உபாதைகள், சர்ச்சைகள் எனத்
தொடர்ந்து எத்தனையோ
இடர்பாடுகள் வந்தாலும்,
அவற்றையெல்லாம் மீறி,



நான் மதிக்கும் பெண்!

உற்சாகமாக உயிர்த் தெழுந்து வாழும்
அனுராதா ரமணன் - நான் மதிக்கும் பெண்மணி!

செய்முறை:

வெறும் வாணலியில் கொப்பரைத் துருவலை வாசனை வரும்வரை இலேசாக வறுத்து எடுக்கவும். பிறகு 2 சொட்டு தேங்காய் எண்ணெய் விட்டு பூண்டை வதக்கவும். பொட்டுக்கடலை, மிளகாயை எண்ணெயின்றி வறுக்கவும். ஆறியபின் அனைத்தையும் மிக்ஸ் செய்து கரகரப்பாக அரைக்கவும். கடைசியில் வேலங்கோந்துப் பொடி, உப்பு கலந்து மிக்ஸியில் இலேசாக ஒரு சுற்று சுற்றி எடுத்து விடவும்.

இந்தப் பொடியை சூடான சாதத்தில் உருக்கிய நெய்யை விட்டுப் பிசைந்து சாப்பிட தேவாமிர்தமாக இருக்கும்.

வேலங்கோந்து பச்சை சட்னி:

தேவையான பொருட்கள்:

மணித் தக்காளி கீரை - 1 கைப்பிடி அளவு
வேலங்கோந்து - 6
உளுத்தம் பருப்பு - 2 டேபிள் ஸ்பூன்
பச்சை மிளகாய் - 3
பெருங்காயம் - சிறிது
தேங்காய் - ¼ மூடி
எலுமிச்சை - ½ மூடி
எண்ணெய், உப்பு - தேவையான அளவு

செய்முறை:

வேலங்கோந்தை சிறிது எண்ணெய் விட்டு வறுக்கவும். உளுத்தம் பருப்பு, பெருங்காயம் சிறிது எண்ணெய் விட்டு வறுக்கவும். மறுபடி சிறு துளி எண்ணெய் விட்டு கீறிய பச்சை மிளகாய், மணித் தக்காளி இலையை வதக்கவும். ஆறிய பின் அனைத்தையும், தேங்காய், உப்பு சேர்த்து கரகரப்பாக அரைத்தபின் கடுகு தாளிக்கவும். எலுமிச்சைச் சாற்றைக் கலக்கவும். பச்சைப் பசேலென்ற 'ருசியான சட்னி' தயார். இதில் சிறிது கெட்டி தயிர் கலந்தால் அருமையான 'ரெய்த்தா' ரெடி.

– பா. கமலா பாலாஜி, புதுச்சேரி

"அவங்களை அனுப்பிடுங்க...!"

"இங்க பாருங்க, உங்க அம்மா, செய்யற காரியத்தை. கீழே நம்ம வீட்ல வாடகைக்கு இருக்கிறவங்ககிட்டே போய் என்னைப் பத்தி என்னவெல்லாமோ சொல்லியிருக்காங்க" என்று கோபத்தில் குமுறினாள் கோகிலா.

"நீங்க அவங்களுக்கு அன்பா வாழைப் பழம் வாங்கிக் கொடுத்தீங்களாம். அதை அவங்க சாப்பிடறப்போ, பாதியைப் பிடுங்கி குப்பையில போட்டுட்டேனாம். உங்கம்மாவுக்கு சர்க்கரை வியாதி... சரி, ஒரு பழம் தின்னா பரவாயில்லை. ஒரேயடியா மூணு பழம் தின்னா... அதான் அப்படி செஞ்சேன். அதைப்போய் அங்க சொல்லி என்னைக் கேவலப்படுத்தறாங்க. இதுக்குக் கண்டிப்பா ஒரு வழி பண்ணணும்."

கணவனுக்கு இலேசாக வியர்த்தது.

"நேத்துப் பாருங்க, தண்டத்துக்கு தின்னுட்டு, தின்னுட்டு சும்மா இருக்கீங்கன்னு நான் சொன்னதா அங்க போய் சரடு விட்டிருக்காங்க. அங்கயும், இங்கயும் கொஞ்சம் காலாற நடங்கன்னு சொன்னதுக்கு எனக்கு இந்தப் பழி" என்று ஆவேசமாகப் பேசிய கோகிலா, கடைசியில் ஒரு போடு போட்டாள்.

"அவங்களை இங்கிருந்து அனுப்பறது தான் சரி, ஆமா"

"அய்யய்யோ!" திகைத்துப் போய் நின்றுவிட்டான் கோகிலாவின் கணவன்.

"ஆமாங்க, அதுதான் சரி! உங்கம்மா வயசானவங்க. உடம்பு சரியில்லாதவங்க. ஏதோ மனச் சங்கடத்தில் என்னைப் பத்தி ஏதாவது சொன்னா, அதை அப்படியே என் கிட்ட கொண்டு வந்து கோள் மூட்டுறது நியாயமா? அதான் சொல்றேன். முதல்ல கீழ் வீட்டுக்காரங்களை காலி பண்ணச் சொல்லுங்க."

– ஏஞ்சல்பாப்டிஸ்ட்,
கன்னியாகுமரி



வண்ணக் கோலங்கள்!



எஸ்.கயல்விழி



கௌரி



எஸ்.சித்ரா



எஸ்.பாமா



ஜி.திருவேணி




சி. ராணி

வாசல் அழகு





நெய்வேலி ஜேசிஸ் சங்கம் சார்பாக நடைபெற்ற கோலப் போட்டியில் இடம்பெற்ற பரிசுக் கோலங்களின் அணிவகுப்பு!

வாசகியர் கோலங்கள்



17 புள்ளி 17 வரிசை
ஒவ்வொரு மூலையிலும் ஒரு புள்ளியை விட்டுவிட்டு
5 புள்ளிகள் வீதம் 5 வரிசைகள்
எல்லாம் மூலைகளிலும் வைக்கவும்.
சுகந்தாராம்,
சென்னை - 59





22 புள்ளி
2 வரிசை
2 வரை (நேர்)
என்.ராஜலஷ்மி ஷர்மா,
சென்னை - 92

15 புள்ளி 3 வரிசை 3-ல் நிறுத்தவும் (நேர்புள்ளி)
சுஜாதா,
சென்னை - 21



வீட்டில் மின்சாரத்தால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்க சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்க!

செய்ய வேண்டிய பரிசோதனைகள்:-

★ வீடு முழுவதும் உள்ள மின்சாரக் கம்பிகள் பழுதுபடா மல் நன்றாக இருக்கின்றனவா?

★ வீட்டின் குறுக்கும் நெடுக்கும் அதிகமான மின்சாரக் கம்பிகள் (cords) செல்கின்றனவா?

★ உபயோகிக்கப்படாத மின்சாரம் வெளிச் செல்லும் வழி (electrical outlets) மூடப்பட்டிருக்கிறதா?

★ மின்சாரம் வெளிச் செல்லும் வழி அதிகச் சுமையுடன் (overloading) இல்லாமல் இருக் கிறதா?

★ அவசரக் காலங்களில் சமையல் எரிவாயு, மின்சாரம் ஆகியவற்றின் சப்ளையை நிறுத்தத் தெரியுமா?

★ தரையில் கார்ப்பெட் விரிக்கப்பட்டிருந்தால், அது நன்றாகத் தரையில் பொருத்தப்பட்டுள்ளதா?

வீட்டுப் பராமரிப்பு

★ குத்து விளக்குகள், மெழுகுவர்த்திகள் போன்றவை சுவர்கள், திரைகள் ஆகியவற்றுக்கு எட்டாத தூரத்தில் இருக்கின்றனவா?

★ போலீஸ், தீயணைப்பு நிலையம், மருத்துவமனை முதலிய அவசரத் தேவைகளுக்கான போன் நம்பர்கள், கண்ணுக்குத் தெரியும்படி தொலைபேசிக்கு அருகிலேயே வைத்திருக்கிறீர்களா?

★ ஏறுவதற்கு வசதியாக உறுதியான ஏணிப்படிகள் இருக்கின்றனவா?

★ பாத்ரூம் கதவுகள், மற்ற அறைக்கதவுகள், உள்ளிருந்தும், வெளியில் இருந்தும் பூட்டித் திறக்கக் கூடியனவா?

★ எல்லா இடங்களிலும் ஈயம் (lead) கலக்கப்படாத வர்ணங்கள் உபயோகப் படுத்தப் பட்டிருக்கின் றனவா?

– மரகதம் ராகவசிம்மன், சென்னை - 5



2 சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

கோயில்களில் சித்தர்கள்!

பேராசிரியர். இல.கோமதி

‘‘**கோ**யில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பார்கள். இந்தியாவில், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டில்தான் கோயில்கள் அதிகம். ஊர்கள்தோறும் கோயில்கள் இருக்கும்போது திருப்பதியில் மட்டும் ஏன் இவ்வளவு கூட்டம்? திருச்செந்தூரிலும் பழனியிலும் வருஷம் முழுவதும் பக்தர்கள் கூட்டம் அலை மோதுகின்றதே? இது ஏன்? எப்படி? இந்தக் கேள்விகளுக்குப் பதிலைத் தேடுவதற்கு முன் கோயில்களின் அடிப்படைத் தத்துவத்தைப் பார்ப்போம்.

கோயில்களின் கருவறையில் கருங்கல்லினால் செய்யப்பட்ட விக்கிரகங்கள் பதிக்கப்பட்டுள்ளன. சிவலிங்கமோ, பெருமாளோ, அம்பாளோ, முருகனோ, உருவங்கள் வேறுபட்டாலும், அவை சாதாரணக் கருங்கற்கள்தான். நம் முன்னோர்கள் ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொரு சக்கரத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் சக்கரத்தை ஒரு செப்புத் தகட்டில் செதுக்கி, அதில் அந்த அந்த மூர்த்திக்குரிய கோணங்களை வரைந்து, கோணங்களுக்குள் அவற்றுக்குரிய எழுத்துக்களை எழுதிவிடுகின்றனர். இந்தச் சக்கரங்களை அடியில் வைத்து, அதன் மீது விக்கிரகங்கள் பதிக்கப்படுகின்றன. அந்த வகையிலான செப்புத் தகடுகளை சங்கரன்கோயிலில் உள்ள கோமதி அம்மன்

சன்னிதியில் கருவறைக்கு வெளிப் புறமாகவே இன்றைக்கும் காணலாம். மக்கள் சிறிது நேரம் அந்தத் தகட்டின் மீது அமர்ந்துவிட்டுச் செல்வர். அந் தத் தகட்டிலிருந்து அருள் சக்தி வெளிப்படுகிறது என்பது பரவலான நம்பிக்கை.

இவ்வாறு விக்கிரகங்களை, சக் கரங்களின் மீது பதித்த பின்னர், கோயி லுக்குக் கும்பாபிஷேகம் நடத்துவார் கள். கும்பாபிஷேகம் செய்யும்போது யாக சாலை அமைத்து, அதில் ஒவ் வொரு மூர்த்திக்கும் ஒரு குடம் வைத்து, அக்குடத்தை முப்புரிநூல் கொண்டு சுற்றி, தண்ணீர் நிரப்பி, மாவிலை, தர்ப்பை, தேங்காய் வைத்து மூர்த்தியை ஆவாஹனம் செய்து மந்திரங்களை ஓதுவார்கள். மந்திரங்கள் சக்தி வாய்ந்த ஒலிக் கூட்டங்கள். மந்திரங்கள் முறையாக ஓதப்படும்போது, அவற்றின் சக்தி யைக் குடத்திலுள்ள தண்ணீர் பெற்று விடுகின்றது. கும்பாபிஷேகத்தின் போது அந்தத் தண்ணீரை கர்ப்பக் கிருகத்திலுள்ள மூலமூர்த்திக்கும், அந்த மூர்த்தி அமர்ந்திருக்கும் கோபுரக் கலசத் துக்கும் அபிஷேகம் செய்வார்கள். அப் போது மந்திரங்கள் மூலம் ஆற்றல் பெற்ற நீர், சக்கரங்களுக்கும், அதன் மேல் வைக்கப்பட்டுள்ள விக்கிரகத் துக்கும், அருட்சக்தியை அளிக்கிறது. அதன் பிறகு அந்த மூர்த்தியை மக்கள் சென்று வணங்கும்போது, அந்த விக் கிரகம் அருள் சக்தியை அனைவருக்கும் வழங்குகிறது. அந்த விக்கிரகங்களின் ஆற்றல் குறையாமல் இருக்க, நாள் தோறும் அர்ச்சகர்கள் மந்திரங்களை முறையாக அவற்றின் முன்னால் ஓது கின்றனர்.


உதாரணத்துக்கு ஒரு விஷயம் பார்ப்போம். கார்களில் பாட்டரி இருக் கிறது. அது, உலோகத் தகடுகள், தண்ணீர், ஆசிட் கலந்த கலவை வைக்கப்பட்ட



ஒரு பெட்டி. அப்போது அதற்கு சக்தி கிடையாது. அதை டெட் பாட்டரி என்போம். அதனை 35 மணி நேரம் மின்சாரத்தில் வைத்து மின்சார சக்தியை அதில் ஏற்றினால், அது அச்சக்தியைப் பெற்று விடுகிறது. பின்னர் கார்களில் வைத்து இணைக்கும்போது தன் சக்தியை முழுமையாக வெளிப்படுத்துகிறது. கார் ஓட, ஓட பாட்டரி சக்தி குறைகிறது. மீண்டும் ரீசார்ஜ் செய்யச் செய்ய முழுமையடைகிறது. இதைப் போலத்தான் கோயிலும்.

நாள்தோறும் கோயிலுக்கு வருகின்ற பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அருள் ஆற்றலை வழங்குவதால் விக்கிரகங்களின் ஆற்றல் நாளா வட்டத்தில் ஓரளவு குறையக் கூடும். மக்கள் மனத்தில் எத்தனையோ எண்ணங்கள், எதிர்மறையான கருத்து வேறுபாடுகள் உள்ளதால் விக்கிரகங்களுக்கு சக்தி இழப்பு நேரலாம். இதனை ஈடு கட்ட பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடத்தப்படுகிறது. சிதிலமடைந்து போன கோயில்களைப் புதுப்பித்து, வர்ணம் பூசி, புது மெருகேற்றுவதற்காகவும், கும்பாபிஷேகம் நடத்தப்படுகிறது. எனினும், விக்கிரகங்களுக்கு முழுமையான அருள் சக்தியை வழங்க வேண்டும் என்பதே கும்பாபிஷேகத்தின் முக்கிய நோக்கம். எனவேதான் கும்பாபிஷேகம் நடந்து 48 நாட்களுக்குள் கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்னும் ஓர் உறுதியான நம்பிக்கை மக்களிடையே இருந்து வருகிறது. அப்போது விக்கிரகங்கள் முழு சக்தியுடன் விளங்குகின்றன.

கோயிலுக்குப் போகும்போது குளித்து, முடித்து ஸ்தோத்திரப் பாடல்களை ஜபித்துக்கொண்டு, உடலும், மனமும் தூய்மையாக இருக்க வேண்டும். தேவையில்லாத எண்ணங்கள், சண்டை, வாக்குவாதம் கூடாது என்று நம் வீட்டிலுள்ள பெரியவர்கள் சொல்வார்கள். அதற்குக் காரணம் என்ன தெரியுமா?



விக்கிரகங்களிலிருந்து வெளிப்படும் அருள் சக்தியை நம்முடைய மனமும், உடலும், தூய்மையாய் இருந்தால் மட்டுமே கிரகித்துக்கொள்ள முடியும். இது இவ்வாறு இருக்க எல்லாக் கோயில்களிலும் உள்ள விக்கிரங்களின் அமைப்பு ஒன்றாகவேதானே உள்ளது. சிவபெருமானின் சிவலிங்கத் திருமேனியின் அமைப்பு எல்லாக் கோயில்களிலும் ஒரே மாதிரியாகத்தான் உள்ளது. குன்று இருக்கும் இடமெல்லாம் குடியமர்ந்துள்ள குமரனின் வடிவம் ஒரே மாதிரியாகத்தான் உள்ளது. வேறு வேறு பெயர்களில் வணங்கப்படும் அம்பிகையின்

சூடாமணியும் கணையாழியும்...

ஸ்ரீ இராமன் அனுமன்மூலம் தான் கையில் அணியும் மோதிரத்தை அனுப்ப, பதிலுக்கு ஜானகி தன்னுடைய தலையில் அணியும் சூடாமணியை அடையாளமாக அனுப்பியதில் ஆழ்ந்த பொருள் உண்டு. வில் திறத்தால் காப்பேன் என்று ஸ்ரீஇராமனும், [சிரம் தாழ்த்திச்] சரண் அடைந்ததன் நம்பிக் கையிலேயே உயிர் வாழ்கிறேன் என சீதையும் அவற்றின் மூலம் குறிப்பால் உணர்த்தினராம்.

– அ.ஷண்முகசுந்தரம், பெங்களூரு – 72



உருவ அமைப்பும் எல்லாக் கோயில்களிலும் ஒரே மாதிரியாகத்தான் வடிவமைக்கப்பட்டுள்ளது. விக்கிரகங்களை ஆவாஹிக்கும் முறையும் ஒரே மாதிரிதான் நடைபெறுகிறது. பின்னர் எப்படி பழனி, திருப்பதி, திருச்செந்தூர், திருவண்ணாமலை, மதுரை, வைத்தீஸ்வரன் கோயில், காஞ்சிபுரம், மருதமலை உள்ளிட்ட இடங்களில் உள்ள கோயில்கள் இவ்வளவு சாந்நித்யம் பெற்றுள்ளன?

பழனிக்கு நூறு பேர் போகிறார்கள் என்றால், 90 பேருக்கு போகரைப் பற்றித் தெரியாது. திருச்செந்தூருக்குப் போகிறவர்களுக்கு 'பஞ்ச சித்தர்களை'ப் பற்றித் தெரியாது. திருப்பதிக்குப் போகிறவர்களில் ஒரு சில பேருக்குக்கூட கோரக்கரைப் பற்றித் தெரியாது. ஏதோ சிலர் விஷயம் தெரிந்தவர்கள் மட்டும் பழனியில் போகர் சமாதிக்குச் சென்று வணங்கிவிட்டு வருவார்கள். பழனியில் போகர், திருவண்ணாமலையில் இடைக் காடர், மருதமலையில் பாம்பாட்டிச் சித்தர், வைத்தீஸ்வரன் கோயிலில் தன்வந்திரி, திருப்பரங்குன்றத்தில் மச்சமுனி, அழகர் மலையில் அகப்பேய்ச் சித்தர், திருப்பதியில் கோரக்கர், எட்டுக்குடியில் வால்மீகர், திருவரங்கத்தில் சட்டநாதர், திருச்செந்தூரில் பஞ்ச சித்தர்கள் என அந்த இடங்களில் உள்ள கோயில்களில் சித்தர்கள் அடக்கமாகி இருக்கின்றனர்.

சித்தர்கள் முக்தி அடைந்த இடங்களிலிருந்து, பிற்காலத்தில் சிவலிங்கம் அல்லது அம்பிகையின் வடிவம் சுயம்புவாக வெளிப்பட்டது. அந்த இடங்களே புகழ் பெற்ற கோயில்களாக உருவாகின. சித்தர்கள் தாங்கள் அடக்கமான கோயில்களில் சூக்கும நிலையில் இன்றும் இருக்கின்றார்கள். அங்கு வரும் மக்களுக்குத் தொடர்ந்து அருள் சக்தியை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த இடங்கள் மக்களை ஈர்க்கின்றன. மக்கள் கூட்டம் குறையாமல், தங்கள் வேண்டுதல் நிறைவேறிவிட்டதற்காகவும், மேலும் அருளை நாடியும் இந்த க்ஷேத்திரங்களுக்குச் செல்கின்றனர். இந்தக் கோயில்களின் மகிமைக்கும், பிரசித்திக்கும் சித்தர்களே காரணம்.

சித்தர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதில்லை. சிவபெருமானே முதல் சித்தரானதால், சிவ பெருமானின் அருளாணைப்படி என்றைக்கும் சூட்சுமமாக, அருள் ஆற்றலாக, மீண்டும், மீண்டும் பிறவி எடுக்கும் நிலையை விட்டு அகன்று, பிறவாப் பெருநிலையில் நிலைத்து நிற்கிறார்கள்.

('சித்தர் நெறி' தொடரும்...)

ஜனவரி மங்கையர் மலர் இதழில்
பெங்களூரில் தனக்கு ஏற்பட்ட ஷாப்பிங் அனுபவம் பற்றி சகோதரி மாலதி எழுதியிருந்தார். அது போன்ற அனுபவம் ஒன்று எங்கள் தந்தைக்கு ஏற்பட்டது.

அன்று எனது தாயுடன் அவர் பெங்களூர் செல்ல வேண்டும். இரண்டே மணி நேரத்துக்குள் வங்கி சென்று, பெட்டகத்திலுள்ள தாயின் நகைகளை எடுத்துவர வேண்டியதாகிவிட்டதால் டென்ஷனுடன் சென்றிருக்கிறார்.

பெட்டகத்திலிருந்த நகைகளை, பரபரப்புடன் ஒரு ப்ளாஸ்டிக் பையில் திணித்துக்கொண்டு, அவசர அவசரமாக வீடு திரும்பியிருக்கிறார். பாதி வழியில் ப்ளாஸ்டிக் பைக்குள் நகைகள் எல்லாம் இருக்கின்றனவா என்று பார்த்தவருக்குப் பகீரென்றது. எனது அம்மாவின் நெக்லெஸைக் காணோம். அவர் நகைகளை அள்ளித் திணித்திருந்த பர்ஸ் வாயைப் பிதுக்கிக் கொண்டிருந்தது. அதன் ஜிப் சரியில்லை என்பதை அப்போதுதான் உணர்ந்திருக்கிறார். யார் கையில் கிடைத்ததோ! மனமெல்லாம் பதற, உடல் வியர்த்துப்போக, ஆட்டோவை பாங்குக்குத் திருப்பச் சொல்லியிருக்கிறார். அதற்குள் அவரது செல்ஃபோன் ஒலித்தது. வீட்டிலிருந்து தாயார் பேசி, வங்கியிலிருந்து அழைப்பு வந்ததாகச் சொல்லியிருக்கிறார்.



என் தந்தை, வங்கிக்குப் போனதும் அங்கேயிருந்த பெட்டகக் காப்பாளர் அடையாளம் காட்ட, நெக்லெஸ் என் தந்தையின் கைக்கு வந்தது. அந்த நெக்லெஸ் திரும்பக் கிடைக்க வேண்டும் என்று வழியில் அவர் வேண்டாத தெய்வமேயில்லையாம்!

உதவிய உள்ளங்கள்!

கையில் கிடைத்ததும் அந்த மனித தெய்வங்களுக்கு அவர் சரியாக நன்றி சொன்னாரா என்பதுகூட நினைவில்லையாம்.

''இதைக் கண்டுபிடித்துக் கொடுத்தவர்களுக்கு சன்மானம் ஏதாவது தர விரும்புகிறேன்'' என்று என் தந்தை சொல்ல, ''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்'' என்று மறுத்து விட்டார்கள்.

- என்.எம்,
ஆழ்வார்திருநகர்



'இன்று ஏன் எனக்கு மாலதியின் நினைப்பு அநாவசியத்துக்கு வந்து கொண்டேயிருக்கிறது?' என்று நினைத்துக்கொண்டேன் நான். இந்த மகளிர் பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கியதிலிருந்து பெண்கள் பற்றிய பிரச்னை, பெண்களின் குணாதிசயங்கள், பெண்களின் அபத்த அல்லது புத்திசாலித்தனமான கேள்விகள் என்று ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் தொழில் ரீதியாக மனசில் ஓடிக்கொண்டேதான் இருக்கின்றன.

ஏதோவொரு நினைவின் தொடர் சங்கிலிதான் ஏதாவது ஒரு நிகழ்வையோ, ஆசாமியையோ ஞாபகத்துக்கு இழுத்து வருகிறது.

அப்படித்தான் வந்ததாக இருக்க வேண்டும் இந்த மாலதியின் நினைவும்!

அது ஒன்றும் அப்படி மகிழ்ச்சியான நினைவாக இல்லையே... அதனால் இந்த நினைப்பு...

ஓ... நேற்று கேள்வி - பதில் பகுதிக்கு வந்திருந்த ஒரு கேள்விதான் இதற்குக் காரணமாக இருக்கும்...

பரமக்குடியிலிருந்து ஒரு பெண்மணி எழுதி இருந்தாள்.

'அன்புள்ள சகோதரி... என்னுடைய மகன் அமெரிக்காவில் மிகப் பெரிய வேலையில் இருக்கிறான். (ம்ஹூம்... தெரிந்த விஷயந்தான்!) அவனுடன் தங்கி இருக்க என்னை அழைத்திருந்தான். அவன் மனைவியும் வேலையாக இருக்கிறாள். என்னை வரச் சொன்ன பிறகுதான் தெரிந்தது, அந்த ஊரில் வீட்டு வேலைக்கு ஆட்கள் கிடைப்பது மிகவும் கஷ்டம் என்று... நானும் என் கணவரும் அங்கு சென்ற நாள் முதல் கிளம்பி வரும் வரையில் அவர்

இச்சிறுகதைத் தலைப்பு
ஒபாமாவின்
வெற்றிக்கு முன்
வைக்கப்பட்டது.

தேவவிரதன்

புஷ் தேசமும் டிஷ் வாஷரும்!

களின் வீட்டு வேலைகளைத்தான் செய்து கொண்டிருந்தோம். தோட்ட வேலை, வீட்டைச் சுத்தம் செய்வது போன்றவற்றை என் கணவரும், சமையல், டிஷ் வாஷரில் போட்ட பாத்திரங்களை எடுத்து சுத்தம் செய்வது, வாஷிங் மெஷினில் துணி துவைப்பது முதலியவற்றை நானும் செய்து கொண்டிருந்தோம். அங்கு, எங்களுக்கு வேறு பொழுது போக்கும் இல்லை. வார இறுதி நாட்களில் பார்ட்டி என்று பத்து பதினைந்து பேர் வந்து விடுவார்கள். அப்போது வேலை அதிகமாகி விடும். மருமகளை மாமியார் வேலை வாங்கியதாகச் சொன்ன காலம் போக, இன்று மருமகளுக்காக மாமியார்கள் நாடு விட்டு நாடு சென்று வேலை செய்வது தான் நடக்கிறது.

இது பற்றி உங்கள் கருத்து என்ன?''



அப்போதுதான் எனக்கு மாலதியின் ஞாபகம் வந்தது. நான் கல்யாணமாகி வந்த மறுநாள், என் மாமியார் வீட்டில் மாலதி என்ற என் நாத்தனார் பரணிலிருந்து பத்து, பதினைந்து பித்தளைப் பாத்திரங்களை எடுத்து முற்றத்தில் போட்டு, 'சரளா... இதையெல்லாம் புளிபோட்டு நன்றாகத் தேய்ச்சு வைச்சுடேன்..' என்றாளே பார்க்கலாம்! அதில் கொடுமை என்னவென்றால் காதுடன் பிடி வைத்த கங்காளம் என்று அந்தக் காலத்தில் சொல்வார்களே - அந்தப் பிரம்மாண்டமான பாத்திரமும் இருந்தது.

எனக்கு இருபத்தியொரு வயதுதான். அப்போதுதான் எம்.ஏ.லிட்டரேச்சர் முடித்திருந்தேன். பதில் சொல்லக் கூடத் தெரியாமல் நம் வீட்டு வேலைதானே என்று வாயை மூடிக்கொண்டு, அத்தனை பாத்திரங்களையும் தேய்த்து அலம்பி வைத்தேன். நாங்கள் அப்போது இருந்தது பழைய மாம்பலத்தில். கூடம், தாழ்வாரம், முற்றம் என்று இருந்த பழைய கால வீடு.

அதற்குப் பிறகு கூட அந்த மாலதி சும்மா இருக்கவில்லை.

'இன்னும்கூட பளபளன்னு

தேய்க்கலாமே... கை இன்னும் அழுந்தலை போல இருக்கு' என்று நொடித்துக் கொண்டு போனாள்.

இப்போது காலம் மாறிவிட்டது.

பரமக்குடி பெண்மணி போல் எத்தனை நடுத்தர, வயதான மாமியார்களோ, அம்மாக்களோ? முன்னொரு காலத்தில் மாமியார் - நாத்தனார் ஆட்சி செய்த நாட்களில் இந்தியாவில் கங்காளம் தேய்க்க வைத்த பாவத்துக்காக, புஷ் தேசத்துக்குப் போய் 'டிஷ் வாஷரில்' கழுவிக் கொள்ள வேண்டும் போல் இருக்கிறது இந்தியத் தாய்க் குலம்.

வீட்டுக்குள் நுழைந்து முகம் கழுவிப் பொட்டு வைத்துக் கொண்டு சுவாமி விளக்கேற்றித் திரும்புகையில் காலிங்பெல் ஒலித்தது.

என் கணவர் இன்று சீக்கிரம் வந்து விட்டார் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு கதவைத் திறந்தால்...

மாலதி... என் நாத்தனார்.

'திங்க் ஆஃப் டெவில்... தேர் இட் ஈஸ்' என்பார்களே, அது போலவோ...

'இவள் எங்கே வந்தாள் இப்போது?' என்று மனசில் நினைத்துக்கொண்டு, ''வாங்கோ அக்கா!'' என்று உபசரிக்கிறேன்.

இவள் அன்றைய- இருபது வருடத்துக்கு முந்தைய - மாலதி இல்லை. ஸ்தூலமாகிப் போன உடம்பு, நரைத்த தலை...

''நீ ஆபீஸிலிருந்து வந்திருப்பியோ மாட்டியோன்னு நெனைச்சிண்டே வந்தேன். நல்லவேளை... சூடா ஒரு கப் காஃபி கொடேன்'' என்றபடி உள்ளே வந்து உட்கார்ந்தாள் மாலதி.


''உங்களைப் பத்தித்தான் நெனச்சிண்டேன் இரண்டு நாளா...'' என்று புன்சிரிப்போடு சொன்னேன்.

''நல்லபடியாத்தானே...?'' என்ற மாலதியின் கேள்விக்குப் பதில் சொல்லாமல், ''என்ன அக்கா திடீர் விஜயம்?'' என்றேன்.

''திடீர்னுதான்... மத்தியானம் ரவிகிட்டேயிருந்து போன் வந்தது. திவ்யாவுக்கு இரண்டு மாசமாம்... மசக்கை படுத்துகிறதாம்... என்னையும் அவரையும் உடனே அமெரிக்கா வரச் சொல்லி ரிக்வெஸ்ட் பண்ணிண்டான். அதுபத்தி உன் ஆம்படையான்கிட்ட பேசணும்... அவனுக்குத்தானே நிறைய ட்ராவல் ஏஜெண்ட் தெரியும்...'' என்றாள்.

''அப்படியா... ரொம்ப சந்தோஷம்...''

கேஸ் சிலிண்டர் டெலிவரி செய்ய...



இன்று பெரும்பாலான பெண்கள் வேலைக்குச் செல்லும் பெண்களாக இருக்கிறார்கள். அதனால் அவர்கள் கேஸ் சிலிண்டரை பதிவு செய்தால், அதை விநியோகிக்கும்போது அவர்கள் வீட்டில் இருக்க முடிவதில்லை. இல்லையென்றால் அக்கம் பக்கத்தினர் உதவியை நாட வேண்டியுள்ளது. கேஸ் நிறுவன ஊழியர்கள் ஷிப்டில் வந்தால் நலமாக இருக்கும். சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்வார்களா?

– வி.ஜி, சென்னை – 23

இட்லிக்கு நனைக்கும்போது அரிசியை இலேசாக வறுத்துவிட்டு நீரில் நனைக்கவும். இப்படி அரைத்த மாவில் மறுநாள் இட்லி செய்யும்போது இட்லி பஞ்சுபோல் மிருதுவாக இருக்கும்.

– உமா நாராயணசுவாமி, சென்னை



என்றேன் நிஜமான சந்தோஷத்துடன். வாஸ்தவம்தான். மாலதியின் பிள்ளை ரவி... அவனுக்குக் குழந்தை பிறக்கப் போவது சுபசமாசாரம். ஆனால், அதை விட சுபசமாசாரம், மாலதி அமெரிக்காவிலிருக்கும் மருமகளுக்கு 'ஒத்தாசை' பண்ண 'பரமக்குடி' மாமி மாதிரி போகப் போவது...

என் மனசில் ஓடியதை அப்படியே படித்தது போல் மாலதி பேசினாள்.

''அந்த ஊர்ல கார் க்ளீன் பண்றதிலிருந்து பாத்திரம் சுத்தம் செய்யற வரையில் எல்லாத்துக்குமே மெஷின் இருக்கிறதாமே... செய்யறது ரொம்ப ரொம்ப சுலபம்னு அன்னபூரணி சொன்னா...''

''யாரு அன்னபூரணி?''

''உனக்குத் தெரியாதா... எங்க ஃப்ளாட்டுக்கு எதிரே புதுசா வந்திருக்காளே... அவ பிள்ளையும் மாட்டுப் பெண்ணும் கூட கலிஃபோர்னியாலதான் இருக்கா... அவனுக்கு பிள்ளை பிறந்து ஆறு மாசம் ஆறதாம்... இவ வந்துட்டா..!''

''ஏனாம்?!''

''அவளோட அப்பா அம்மா வந்து இவாளை ரிலீவ் பண்ணியிருக்கா...''

''ஏன் அவம்மான்னா முன்னாடி போயிருக்கணும்...பொண்ணு இல்லையா?''

''அதையேன் கேக்கற... அவளோட மூத்த பெண் ஆஸ்திரேலியால இருக்காளாம். அவளுக்குப் பிரசவம் பார்க்க அவாளுக்கு அங்கே போக வேண்டியிருந்ததாம்'' என்றாள் மாலதி.

எனக்கு இந்த நாலுமூலைதாச்சி விளையாட்டு விசித்திரமாக இருந்தது. காலம் எப்படியெல்லாம் மாறினாலும் அந்த நாளைய இந்தியப் பெண்ணுக்கு சமையல் வேலையும், பாத்திரம் தேய்ப்பதும் விடாது போல் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன்.

''என்னடி சரளா... ஒன்றும் சொல்லாமே யோசிக்கற!'' என்றாள் மாலதி.

''நல்லவேளை... அந்த ஊரில் கங்காளம் இருக்காது... இருந்தாலும் அதை டிஷ் வாஷரில் தேய்க்க முடியாது...'' என்றேன்.

''கங்காளமா... என்னடி உளர்றே...?'' என்று புரியாமல் விழித்தாள் மாலதி.

''காலம் மாறிப் போச்சு அக்கா... சரி... அவரை மொபைல்ல கூப்பிடுங்கோ...'' என்றபடி மாலதி என்ற இன்னொரு பரமக்குடி மாமியை நினைத்து மனசுக்குள் சிரித்தபடி சமையலறைக்குள் போனேன்.

பரமக்குடி மாமியின் கேள்விக்கு என்ன பதில் எழுதினேன் என்கிறீர்களா?

அடுத்த மாத 'மங்கையர் திலகம்' இதழை வாங்கிப் பாருங்களேன்... தெரிந்து விடும்!

அரை நூற்றாண்டு பழைமையானது ஜெமினி சர்க்கஸ். சென்னையில் முகாமிட்டுள்ள ஜெமினி சர்க்கஸுக்குப் போய் அங்கே பணிபுரியும் பெண்களுடன் பேசினோம்...



"அந்தரத்தில்


★ ஜெமினி சர்க்கஸ் சுமார் 300 பேர்கள் கொண்ட ஒரு மெகா குடும்பம். அதில் சுமார் 75 பெண்கள் இருக்கிறோம். முன்பெல்லாம் சர்க்கஸில் பணியாற்றுபவர்களில் பெரும்பாலானவர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். ஆனால், இப்போது உள்ளூரிலேயே சௌகரியமாக வேலை கிடைத்து விடுவதால், அவர்கள் வருவது குறைந்து விட்டது. நேபாளத்திலிருந்தும், வட கிழக்கு மாநிலங்களில் இருந்தும்தான் இப்போது நிறைய பேர் வருகின்றனர்.

★ பொதுவாக பெண்கள் பதினைந்து, பதினாறு வயதில் சர்க்கஸில் வேலைக்குச் சேருவார்கள். சர்க்கஸில் வேலை செய்யும் பெண்ணுக்கு அவ்வளவு சீக்கிரத்தில் மாப்பிள்ளை கிடைக்க மாட்டார். எனவே, திருமணத்துக்குப் பிறகு சர்க்கஸ் வேலையை விட்டு விடத் தயாராக இருக்க வேண்டும்.

★ சர்க்கஸ் கூடாரத்திலும் காதல் மலர்வதுண்டு. அவை பெரும்பாலும் திருமணத்தில் முடியும். அத்தகைய காதல் திருமண ஜோடிகள், திருமணத்துக்குப் பிறகும் தொடர்ந்து சர்க்கஸிலேயே வேலை செய்வார்கள். அதுபோல பத்து, பன்னிரண்டு ஜோடிகள் இங்கே இருக்கிறார்கள்.

★ சர்க்கஸில் வேலைக்கு வந்த முதல் ஆறு மாதம் கடுமையான பயிற்சிகள் அளிக்கப்படும். ஊளைச் சதை இல்லாமல், சிக்கென்றும், அதே சமயம் வலிமையாகவும் இருக்க வேண்டும். உடம்பு சும்மா ரப்பர் மாதிரி வளைய வேண்டும். சர்க்கஸ் விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கு அசாத்தியமான தன்னம்பிக்கையும், மனோ தைரியமும் அவசியம். அதற்கும் போதனைகள் செய்வார்கள்.

★ நாற்பது அடி உயரத்தில் பார் விளையாட்டுக்கள் செய்கிறபோது, கீழே பாதுகாப்பு வலை இருக்கும் என்றாலும் கூட, ரிஸ்க்தான்! முன்பெல்லாம் சிங்கம் அல்லது புலியின் வாய்க்குள் தலையை விடுகிற சாகசத்தைக்கூட பெண்கள் செய்வார்கள். இப்போது அத்தகைய வன விலங்குகளை சர்க்கஸில் வைத்துக் கொள்ள தடை வந்துவிட்டது. மற்ற பல்வேறு சாகசங்களையும் செய்கிறபோது, பாதுகாப்புக்கு ஒரு கம்பி இடுப்பில்



கட்டப்பட்டிருக்கும் என்றாலும், கீழே வலை இருக்காது. நாங்கள் செய்யும் சர்க்கஸ் சாகசங்கள் எத்தனை ரிஸ்க் ஆனவை என்பதை நேரில் பார்க்கிறபோதுதான் புரியும்.

★ தினமும் சர்க்கஸில் பங்கேற்கும் ஐட்டங்களுக்கான பயிற்சி மிக அவசியம். காலையில் எழுந்தவுடன் காலைக் கடன்களை முடித்துவிட்டு, சுமார் மூன்று மணி நேரம் பயிற்சி செய்ய வேண்டும். அப்புறம்தான் காலை சிற்றுண்டி சாப்பிடுவோம். சத்தான, சதை போடாத உணவு சாப்பிட வேண்டும்.

★ எங்களுக்கெல்லாம் இன்ஷ்யூரன்ஸ் இருக்கிறது. என்றாலும், கரணம் தப்பினால் மரணம்தான்! ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு முறையும் சர்க்கஸ் அரங்கத்துக்குள் நுழைகிறபோது, நல்லபடியாக நம் ஐட்டத்தைச் செய்து முடித்து, திரும்ப வேண்டுமே என்ற பயம் ஆழ்மனத்தில் இருந்துகொண்டேதான் இருக்கும். அதையே நினைத்து பயந்துகொண்டிருந்தால், அதுவே விபத்துக்களுக்குக் காரணமாகிவிடும். எனவே, அரங்கத்தினுள்ளே நுழைந்து விட்டால் மற்ற எல்லா விஷயங்களையும் மறந்து விட்டு, சர்க்கஸ் சாகசத்தில் மட்டுமே முழு கவனம் செலுத்துவோம்.

ஆடுகிறோம்...!"



★ தினமும் பகல் ஒரு மணி, நாலு மணி மற்றும் இரவு ஏழு மணி என்று மூன்று காட்சிகள் நடைபெறும். ஒரு காட்சிக்குக் கூட்டம் குறைவு என்றால், சில ஐட்டங்களை விட்டுவிடுவது என்பது மரபில்லை. எனவே, அத்தனை பேரும் மூன்று காட்சிகளிலும் பங்கேற்க வேண்டும். விசேஷ நாட்கள் என்றால் காலைக் காட்சியும் இருக்கும். அசதிக்கு அளவேயில்லை!

★ ஆண்கள், பெண்கள் என்று தனித் தனியாக தங்குமிடங்கள் இருக்கும். பெரிய நகரங்களில் சர்க்கஸ் வளாகத்திலேயே தகர ஷீட்கள் கொண்டு அமைக்கப்பட்ட அறைகளில் தங்க வைப்பது வழக்கம். தம்பதியருக்குத் தனி இடம் வழங்கப்படும். மூன்று, நான்கு வயது வரை தம்பதிகளின் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடனே வளரும். அதன் பிறகு தங்கள் உறவினர்களுடைய வீடுகளுக்கு அனுப்பி வைத்து விடுவார்கள். விடுமுறை நாட்களில் சிறு வயதுக் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடன் வந்து தங்குவார்கள்.



★ வருஷத்துக்கு ஒரு முறை விடுமுறை எடுத்துக் கொண்டு, ஊருக்குப் போய் வரலாம். குடும்பத்தில் விசேஷம் என்றாலும் ஊருக்குப் போவதில் பிரச்னை எதுவுமில்லை. அப்போது எந்த ஊரில் சர்க்கஸ் நடக்கிறது என்பதைப் பொறுத்து பயணத்தின் சௌகரியம் இருக்கும்.

★ ஒரு ஊரில் சர்க்கஸ் நடத்தி முடித்து விட்டு, அடுத்த ஊருக்குச் சென்று ஆரம்பிப்பதற்கு இடையில் பத்து, பதினைந்து நாட்கள் இடைவெளி இருக்கும். அப்போது ஊரை விட்டுப் புறப்படுவதற்கு முன்னால், அந்த ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும். இதுபோல இந்தியாவின் பல்வேறு ஊர்களில் இருக்கிற முக்கியமான இடங்களைப் பார்த்து ரசித்திருக்கிறோம்.

★ சினிமா, டீ.வி ஆகியவற்றின் தாக்கம் காரணமாக, இன்று சர்க்கஸுக்கு மவுசு குறைந்து விட்டது. ஆனால், பராமரிக்கும் செலவு என்னவோ அதிகரித்துக் கொண்டே வருகிறது. சர்க்கஸ் மைதான வாடகை, மின்சாரக் கட்டணம், மனிதர்கள், மிருகங்களுக்கான உணவுச் செலவு, இன்ன பிற என்று எழுபதாயிரம் ரூபாய் ஆகிறது என்று எங்கள் முதலாளி சொல்வார். எனவே, எங்களுக்கு ரொம்ப அதிகமான சம்பளம் தருவது கஷ்டம். ஆரம்பத்தில் மூவாயிரம், நாலாயிரம் ரூபாய் வரை கிடைக்கும். சீனியர் ஆண்களுக்குப் பத்தாயிரம் வரை சம்பளம் கிடைக்கும்.

★ எங்கள் சாகசக் காட்சிகளைப் பார்த்து அதிசயித்து, ரசித்து ரசிகர்கள் கைதட்டுகிற போது, எங்களுடைய பெயரையும், எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்வார்கள். அப்போது கைதட்டல் இன்னும் பலமாக ஒலிக்கும். அந்தக் கணங்களில் எங்கள் மனசும் மகிழ்ச்சியில் மேலே பறக்கும். பத்திரிகைகளில் எங்கள் பெயர்களைக் குறிப்பிட்டு, போட்டோ போட்டுப் பாராட்டுகிற போதும் மகிழ்ச்சியாக இருக்கும்.

சந்திப்பு, படங்கள்:
எஸ். சந்திரமௌலி

குக்கரி க்வீன்!

மிக்ஸ் அண்ட் மேட்ச் சமையல் போட்டி முடிவுகள்!



கண்டிப்பாகப் பயன்படுத்த வேண்டிய பொருட்கள்: கோதுமை மாவு+வெங்காயம்

கட்டே கி சப்ஜி

கட்டேக்கு தேவையான பொருட்கள்:

கோதுமை மாவு - 100 கிராம்

பனீர் துருவல் - 75 கிராம்

பொடிதாக நறுக்கிய வெங்காயம் - 50 கிராம்

வெண்ணெய் - 25 கிராம்

ஓமம், சோம்பு - ½ டீஸ்பூன்,

மிளகாய்த்தூள் - ½ டீஸ்பூன்,

உப்பு - ருசிக்கு

சர்க்கரை - ½ டீஸ்பூன்

வறுத்துப் பொடித்த நிலக்கடலை - 2 டீஸ்பூன்

கிரேவிக்கு

வெங்காயம் - 100 கிராம்

தக்காளி - 50 கிராம்

கசகசா - 1 டீஸ்பூன்

தேங்காய்த் துருவல் - ½ கப்

இஞ்சி, பச்சை மிளகாய் - சிறிதளவு

மிளகாய்த் தூள் - ½ டீஸ்பூன்

சீரகத் தூள் - 1 டீஸ்பூன்

எண்ணெய் உப்பு, மஞ்சள் தூள் - தேவைக்கு

புளிக்காத கட்டித்தயிர் - ½ கப்

கொத்தமல்லித் தழை - சிறிது

செய்முறை:

வெண்ணெயை இளக்கி, மசாலா சேர்த்து, வெங்காயத்தைப் போட்டு வதக்கி பின் கோதுமை மாவைச் சேர்த்து நன்றாகக் கிளறி ஆற விடவும். பின் பனீர்துருவல், கடலைப்பொடி சேர்த்துப் பிசைந்து சிறு உருண்டைகளாக உருட்டி ஆவியில் வேக

வைக்கவும். வெங்காயத்தை ஒரு குச்சியில் செருகி, இளம் தீயில் பதமாகக் காட்டவும். வெந்ததும் தோல் உரித்து, எல்லாவற்றையும் சேர்த்து மிக்ஸியில் அரைக்கவும்.

வாணலியில் 2 டேபிள் ஸ்பூன் எண்ணெய் விட்டு, தாளித்து, அரைத்த விழுதைச் சேர்த்து நன்றாக வதக்கவும். இரண்டு கப் தண்ணீர் விட்டு, உப்பு சேர்த்துக் கொதிக்க விடவும். கொதிக்கும் போது, உருண்டைகளை மெள்ள சேர்க்கவும். அடுப்பை சிம்மில் வைத்து உருண்டைகள் கலையாமல் மெள்ள கிளறிக் கொடுக்கவும்.

ஐந்து நிமிடம் கழித்து தயிரைச் சேர்த்து அடுப்பை அணைத்துவிடவும். கொத்தமல்லி, கரம் மசாலா தூவி கிளறிப் பரிமாறவும். சப்பாத்தி, பூரிக்கு சுவையான சைட் டிஷ்.

– ஆர். லக்ஷ்மி,
கொல்கத்தா - 29



குக்கரி க்வீன் போட்டிக்கு வந்து குவிந்த சமையல் குறிப்புகளைப் பொறுமையாக அலசி, சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துத் தந்த கிருஷ்ணகுமாரிக்கு நன்றி!

கோதுமை மாவு பூரண் கொழுக்கட்டை

தேவை:

கொழுக்கட்டை மேல் மாவுக்கு

கோதுமை மாவு - 2 கப்
தண்ணீர் - 1 கப்
மிளகாய் வற்றல் - 2
கடுகு - ½ டீஸ்பூன்
உளுத்தம் பருப்பு - 2 டீஸ்பூன்
காயத் தூள் - ¼ டீஸ்பூன்
கறிவேப்பிலை - ஒரு கைப்பிடி
உப்பு - சுவையாக
எண்ணெய் - தேவையான அளவு

பூரணத்துக்கு:
பெரிய வெங்காயம் - 1
உருளைக் கிழங்கு - 2
பீன்ஸ் - 3
கேரட் - 1

ரூ.250/- பரிசு பெறும் ரெஸிபிகள்!



முட்டைக்கோஸ் - 4 இலை
மிளகாய்த் தூள் - ½ டீஸ்பூன்
உப்பு - அளவாக
மல்லித் தழை - விருப்பம் போல்
எண்ணெய் - தேவைக்கு

செய்முறை:

மேல் மாவுக்கு:

கோதுமை மாவைச் சிவக்க வறுத்துக் கொள்ளவும். எண்ணெயில் கடுகு, உளுத்தம் பருப்பு தாளித்து, கிள்ளிய மிளகாய் வற்றல், காயத்தூள், கறிவேப்பிலை சேர்த்து வதக்கி தண்ணீர் ஊற்றி, உப்பும் போட்டுக் கொதிக்க விடவும்.

வறுத்த கோதுமை மாவைத் தூற்றி, கட்டி விழாமல் கிண்டி இறக்கவும்.

பூரணத்துக்கு:

கோஸ், கேரட், பீன்ஸைப் பொடியாக அரியவும். வெங்காயத்தைப் பொடியாக அரிந்து, பச்சை மிளகாயை நறுக்கிக் கொள்ளவும்.

உருளைக் கிழங்கை வேக வைத்துத் தோல் நீக்கி மசிக்கவும்.

நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய் காய்களை எண்ணெயில் வதக்கி, மசித்த உருளைக் கிழங்கு, உப்பு, மிளகாயத்தூள் சேர்த்துக் கிளறி இறக்கி மல்லி இலை சேர்க்கவும்.

கொழுக்கட்டை மாவு ஒரு உருண்டை எடுத்துச் செப்பு போல் செய்து, அதனுள் காய்கறி மசாலா உருண்டையை உள்ளே வைத்து உருட்டி ஆவியில் வேக வைக்கவும்.

குறிப்பு: சாம்பார் அல்லது புதினா, மல்லி, தக்காளி, என எந்தச் சட்டினியுடன் சாப்பிட்டாலும் 'பேஷ், பேஷ்' சொல்ல வைக்கும் ஐட்டம் இது. காய்கறி சேர்க்காமல் தனி கோதுமை மாவு கொழுக்கட்டை செய்தாலும் ருசி அபாரம் தான்.

– எம்.டி. வனஜா சுப்ரமணியன், குற்றாலம்



மெது குழல்

தேவையான பொருட்கள்:

கோதுமை மாவு - 3 கப்
உளுந்து - 1 கப்
வெண்ணெய் - 1 டேபிள்ஸ்பூன்
பெரிய வெங்காயம் - 4
உப்பு, எண்ணெய் - தேவைக்கு

கோதுமை மாவைச் சலித்து ஒரு துணியில் கட்டி, இட்லித் தட்டில் இருபது நிமிடங்கள் வேக வைக்கவும். மாவைத் தொட்டால் கல் போல் இறுக்கமாக இருந்தால் வெந்துவிட்டது என்று அர்த்தம். உளுந்தை பொன்னிறமாக வறுத்து நைசாகப் பொடிக்கவும். வெங்காயத்தை நறுக்கி நைசாக அரைத்துக்

திரை இசைப் பாடகி ஸ்ரீமதுமிதா:-

என்னை மிகவும் கவர்ந்த பெண்மணி நம் கர்னாடக இசை உலகத்துக்குத் தனிப்பெரும் பெருமை சேர்த்த எம்.எஸ். அவர்கள்தான். சிறு வயது முதலே அவரது இசையால் ஈர்க்கப்பட்டவள். நான் சிறுமியாக இருந்தபொழுது பக்த மீராவைப் போல வேடம் ஏற்று மாறு வேடப் போட்டியில் அவரது 'கிரிதர கோபால' பாடி பரிசு பெற்றேன். நான் ஆறு வயதுச் சிறுமியாக இருந்தபொழுது அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்பொழுது 'காற்றினிலே வரும் கீதம்' பாடல் பாடினேன். உடனே அவர், 'பால மீராவுக்கு எனது



நான் மதிக்கும் பெண்!



ஆசிர்வாதங்கள்' எனக்கூறி, என் தலை மீது கை வைத்து ஆசிர்வதித்ததை மறக்கவே முடியாது. அவர் பாடிய திரைப்படப் பாடல்களை ஆல்பமாக 2001ல் வெளியிட்டதை, பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன்.

கொள்ளவும். கோதுமை மாவைத் திரும்பவும் சலித்து உளுந்து மாவு, பெருங்காயப் பொடி, மிளகாய்ப்பொடி, உப்பு, வெண்ணெய், வெங்காயம் அரைத்த விழுதுடன் சேர்த்து நன்கு பிசையவும். தேன்குழல் அச்சில் பிழிந்து, பொன்னிறமாகப் பொரிக்கவும். இதுவே மெதுகுழல்!

– எஸ். மோகனவல்லி,
திருநின்றவூர்,

கோதுமை கார துக்கடா

தேவையான பொருட்கள்:

கோதுமை மாவு - ½ கிலோ
பொட்டுக் கடலை
(அ) பாசிப்பருப்பு - 100 கி
நிலக்கடலை - 100 கி
வெங்காயம் - 100 கி
இஞ்சி - தேவைக்கு
பூண்டு - சிறிதளவு
வர மிளகாய் - 10
உப்பு - தேவைக்கு
எண்ணெய் - ½ லி

செய்முறை:

முதலில் கோதுமை மாவை பச்சை வாசனை போகும்வரை வாணலியில் வறுத்துக் கொள்ளவும்.

பொட்டுக்கடலை, நிலக்கடலை, இரண்டையும் மிக்ஸியில் நன்கு பொடியாக்கி சலித்துக் கொள்ளவும். வெங் காயம், இஞ்சி, பூண்டு, வர மிளகாய், உப்பு ஆகியவற்றை நீர் விட்டு விழுதாக அரைத்துக் கொள்ளவும். கோதுமை மாவு ஆறியதும் பொட்டுக்கடலை, நிலக்கடலை மாவையும், அரைத்த விழுதையும் கலந்து பிசையவும். சிறு சிறு சப்பாத்திகளாக இடவும். கத்தியால் சிறு சிறு துண்டுகளாக

கர்நாடக இசைப் பாடகி காயத்ரி சங்கர்:

சுப்புலக்ஷ்மி ஜெகதீசனை ரொம்பப் பிடிக்கும். அவரை மேடம் என்றோ, அமைச்சர் என்றோ பெயரிட்டு நான் ஒரு கடிதம் எழுதினால்கூட, ''இந்த அமைச்சர் பதவி என்பது ஒரு தற்காலிகப் பதவிதான். என்னை அப்படி



நான் மதிக்கும் பெண்!



அழைக்காதே. என்றென்றும் நிரந்தரமாக உனக்கு அம்மாவாகப் பதவி வகிக்கவே ஆசைப்படுகிறேன். அதனால் என்னை அம்மா என்றே கூப்பிடு'' என்பார் அவர். ஐந்து வயதிலேயே தாயை இழந்துவிட்ட எனக்கு, ஒரு தாயைப் போல பாசம் காட்டும் அவரை ரொம்பவே மதிக்கிறேன்.

'கட்' செய்து எண்ணெய் காய்ந்த பின் பொரித்து எடுக்கவும். குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும் மாலைச் சிற் றுண்டி இது.

குறிப்பு: பாசிப்பருப்பு போட்டால் வறுத்துப் பொடிக்கவும்.

- கிரிஜா சீனிவாசன்,
கொடியாலம்.

கோதுமை மாவு குழிப் பணியாரம்:

தேவையான பொருட்கள்:

உருளைக் கிழங்கு - 200 கிராம்
பட்டாணி - 50 கிராம்
பெரிய வெங்காயம் - 2
பச்சை மிளகாய் - 2
உப்பு - தேவைக்கேற்ப
கோதுமை மாவு - 2 கப்
எண்ணெய் - 3 டீஸ்பூன்
கடுகு, கறிவேப்பிலை, மஞ்சள் தூள் - சிறிதளவு

செய்முறை:

கோதுமை மாவுடன் உப்பைச் சேர்த்துக் கரைத்துக் கொள்ளவும். உருளைக்கிழங்கு, பட்டாணி இரண்டையும் வேக வைக்கவும். உருளைக் கிழங்கின் தோலை நீக்கி, மசித்துக் கொள்ளவும். ஒரு வாணலி யில் 3 டீஸ்பூன் எண்ணெய் ஊற்றி கடுகு, கறிவேப்பிலை போட்டு பிறகு பச்சை மிள காய், பொடியாக நறுக்கிய வெங்காயம் சேர்த்துப் பொன்னிறமாக வதக்க வேண்டும். வேக வைத்த உருளைக் கிழங்கு, பட்டாணி, சிறிதளவு மஞ்சள்தூள் சேர்த்து, கெட்டியாக வதக்கவும். இதனைச் சிறு சிறு உருண்டைகளாகச் செய்து, கரைத்து வைத்த கோதுமை மாவில் தோய்த்து, குழிப்பணியாரக் கல்லில் எண் ணெய் விட்டு வெந்தவுடன் எடுக்கவும்.

மிகவும் சுவையான கோதுமை குழிப் பணியாரம், மாலை நேரச் சிற்றுண்டிக்கு ஏற்றது.

- ஆர். சக்குபாய்,
குமராட்சி


மார்ச் மாதம் எப்படி?



சுக்	சந்		
சூரி	1.3.2009 அன்று ராசி கிரகநிலை		கேது
ராகு புத செ			சனி

கிரக நிலை

ராசி பலன்களும், எளிய பரிகாரங்களும்



கணித்து வழங்குபவர் :
டாக்டர் முருகடிமை துரைராஜ்




மேஷம்

(அசுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்)

*மே*ஷ ராசி வாசகர்களே! உமது ராசிநாதன் செவ்வாய், உமது ராசிக்கு 10ல் உச்ச பலத்துடன் சஞ்சாரம் செய்கிறார். உமது முயற்சிகளில் அபார வெற்றி கிட்டும். தந்தை மூலம் தனலாபம் கிட்டும். சுபச் செலவுகள் வரும். கணவன் மனைவி கருத்தொருமித்து வாழ்வார்கள். காதல் கைகூடும். பெண்களுக்கு விருப்பமான ஆடை, ஆபரணம் சேர்க்கை உண்டாகும். கருவுற்ற தாய்மார்கள் உடல்நலனில் கூடுதல் கவனம் தேவை. மாணவர்கள், போட்டித் தேர்வுகளில் அபார வெற்றி பெறுவர். உத்யோகஸ்தர்களுக்கு விரும்பிய இடமாறுதல் கிட்டும். வியாபாரிகளுக்கு முதலீட்டுச் செலவுகளுக்கு நிதி உதவி கிட்டும். விவசாயிகளுக்கு அரசு வழியில் உதவிகள், மானியம் என கிட்டும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் பெருகும். 16.3.2009 அதிகாலை மணி 3.11 முதல் 18.3.2009 பகல் மணி 2.59 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம்: பிரதி செவ்வாய்க்கிழமை ஸ்ரீதேவி கருமாரியம்மனை வழிபடவும். 'சக்தி கவசம்' பாராயணம் செய்யவும்.



ரிஷபம்

(கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோகிணி, மிருக சீரிஷம் 1,2 பாதங்கள்)

*ரி*ஷப ராசி வாசகர்களே! உமது ராசிநாதன் சுக்ரன், உமது ராசிக்கு லாப ஸ்தானம் எனும் 11ல் உச்சம் அடைந்து சஞ்சாரம் செய்கிறார். வாக்கினால் ஜீவனம் புரிபவர்கள் மிகுந்த அனுகூலம் அடைவர். புதிய வீட்டில் குடியேறலாம். வாகன வசதி பெருகும். வீடு, மனை, பூமி வாங்குவீர்கள். சொந்த பந்தங்கள் வலிய வந்து குழைவார்கள். பெண்கள் புகுந்த வீட்டில் அனுசரித்துப் போவது நலம். மாணவர்கள் கடினப் பிரயாசையுடன் தேர்வுகளைச் சந்திக்க நேரும். வியாபாரிகளுக்கு தொட்டது துலங்கும். விவசாயிகளுக்கு பாசன வசதி பெருகும். கலைஞர்களுக்கு நிலுவையில் உள்ள வேலைகளை விரைந்து முடிக்க வேண்டிய நிலை உண்டாகும். பெயரும் புகழும் சேரும். 18.3.2009 பகல் மணி 2.39 முதல் 21.3.2009 காலை மணி 5.39 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம்: பிரதி வெள்ளிக்கிழமை, காலை 10.30 - 12 ராகு காலத்தில் வீட்டில் விளக்கு பூஜை செய்க. மாலை விஷ்ணு ஆலயம் சென்று அங்குள்ள தாயாருக்குக் குங்கும அர்ச்சனை செய்க.



மிதுனம்

(மிருக சீரிஷம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், 1,2,3 பாதங்கள்)

மிதுன ராசி வாசகர்களே! உமது ராசிநாதன் புதன், உமது ராசிக்கு 8ல் குருவுடன் இணைந்து சஞ்சாரம். 'மறைந்த புதன் நிறைந்த பலன் தருவார்' என்று வழக்கில் உள்ளது. கொடுத்த வாக்கைக் காப்பாற்றலாம். தூர தேசத்திலிருந்து நற்செய்திகள் வரும். சிலர் வெளிநாடு செல்வர். சிலர் பூர்விகத் தொழிலை ஏற்று நடத்த நேரும். பெருமை சேரும். வலிமை கூடும். பெண்களுக்கு உதவிகள் கிட்டும். மாணவர்களுக்குப் படிப்பில் கவனம் தேவை. வியாபாரிகளுக்கு இருப்பில் உள்ள சரக்குக்கு அதிக லாபம் கிடைக்கும். உத்யோகஸ்தர்களுக்கு இனிப்பான செய்தி கிட்டும். கணிசமான பணப் புழக்கமிருக்கும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். 21.3.09 காலை மணி 5.29 முதல் 23.3.09 பகல் மணி 2.58 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. யாருக்கும் ஜாமீன் மற்றும் வாக்குறுதி தர வேண்டாம்.

பரிகாரம்: பிரதி புதன்கிழமை மகாவிஷ்ணுவை துளசியால் அர்ச்சித்து வணங்கவும். விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் செய்க. இயலாதவர் ஒலி நாடா மூலம் கேட்கலாம்.




கடகம்

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்)

கடக ராசி வாசகர்களே! உமது ராசிநாதன் சந்திரன், மாத ஆரம்பத்தில் உமது ராசிக்கு 10ல் குரு பகவானுக்கு கேந்திரத்தில் சஞ்சாரம். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் ஆகும். பிரிந்த தம்பதியர் இணைவர். பூர்விகச் சொத்தில் வில்லங்கம் தீரும். கண் சம்பந்தமான உபாதைகள் வந்து விலகும். மனைவி வழியில் உதவியும் ஒத்தாசையும் கிட்டும். மாணவர்கள் உயர்கல்வி தொடர வெளிநாடு செல்ல வாய்ப்பு கிட்டும். உத்யோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு காரணமாக இடமாறுதலுக்கு இடம் உண்டு. வியாபாரிகளுக்கு அரசு வழியில் நிலவிய நெருக்கடிகள் குறையும். கலைஞர்களுக்கு நீண்டகால விருப் பங்கள் நிறைவேறும். 23.3.09 பகல் மணி 2.58 முதல் 25.3.2009 இரவு மணி 11.42 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம்: தினசரி விநாயகரை வழிபட்டு, அன்றாட அலுவலைத் துவங்கவும். பிரதி திங்கட்கிழமை, அம்பாளுக்கு நெய்தீபம் ஏற்றி வழிபடவும். 'சௌந்தர்யலஹரி' பாராயணம் செய்ய நன்று.



சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)

சிம்ம ராசி வாசகர்களே! உமது ராசிநாதன் சூரியன், 2வது ராசிக்கு 7ல் இருந்துகொண்டு உமது ராசியைப் பார்வை செய்கிறார். சூரியனும் சனியும் பரிவர்த்தனை ஆகியுள்ளனர். எதிர்ப்புகள் விலகும். விரோதியும் நண்பன் ஆவான். உமது பெயரும் புகழும் கூடும். உமது வாக்கிற்கு நல்ல மதிப்பு கூடும். பொது வாழ்வில் புகழ் கூடும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். பெண்கள் தங்கள் பிடிவாதத்தை சற்றே குறைத்துக் கொள்வது நலம். மாணவர்கள், இரவு பகல் பாராது கடினமாகப் படித்து இலக்கை எய்த நேரும். உத்யோகஸ்தர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். வியாபாரிகளுக்குச் சேமிப்பு வளரும். விவசாயிகளுக்கு, பணப்பயிர் நல்ல மகசூல் தரும். கலைஞர்களுக்கு வேறுமொழி பேசுவோரால் நன்மை கிட்டும். 25.3.09 இரவு மணி 11.52 முதல் 28.3.09 காலை மணி 5.10 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம்: தினசரி தவறாமல் சந்தியாவந்தனம் செய்க. காயத்ரி மந்திரம் எவ்வளவு கூடுதலாக ஜெபிக்க முடியுமோ அவ்வளவு ஜெபிக்கவும். பிரதோஷ காலத்தில் சிவாலய தரிசனம் செய்யவும்.



கன்னி

(உத்திரம் 2,3,4 பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1,2 பாதங்கள்)

கன்னி ராசி வாசகர்களே! உமது ராசிநாதன் புதன், உமது ராசிக்கு பூர்வ புண்யஸ்தானம் எனும் 5ம் வீட்டில் குரு பகவானுடன் இணைந்து சஞ்சாரம் செய்கிறார். புத்திர பாக்யம் கிட்டும். உமது மகன் (அ) மகள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். வெளிநாடு செல்வதற்கும் வாய்ப்பு கிட்டும். தொழில் வழியில் அனுகூலம் கிட்டும். காதல் நிறைவேறும். அரசு வழி அல்லல் அகலும். உத்யோகப் பிரிவினர் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். வியாபாரிகளுக்கு புதிய ஏஜென்சி கிடைக்கும். வங்கிகள் மூலம் நிதி உதவி கிட்டும். விவசாயிகளுக்கு பணப்பயிர் அமோகமான லாபம் தரும். கலைஞர்கள் விருதுகள், பரிசுகள் பெறுவர். மாத ஆரம்பம் முதல் 3.3.09 காலை 3.04 வரை மற்றும் 28.3.09 காலை மணி 5.10 முதல் 30.3.09 காலை மணி 8.06 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம்: பிரதி புதன்கிழமை, யோக நரசிம்மரை வழிபடவும். பிரதோஷ காலத்தில் வழிபடுவது மிகவும் விசேஷம். பிரதோஷ காலம் சிவன் கோயிலைப் போலவே நரசிம்மருக்கும் விசேஷம்.



துலாம்

(சித்திரை 3,4 பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 பாதங்கள்)

துலாம் ராசி வாசகர்களே! உமது ராசிநாதன் சுக்ரன், உமது ராசிக்கு ருணப்ராப்த ஸ்தானம் என்னும் 6ம் இடத்தில் உச்சபலத்துடன் சஞ்சாரம் செய்கிறார். எதிர்ப்புகள் விலகும். காதல் நிறைவேறும். பிரயாணங்கள் அனுகூலம் தரும். வீடு, மனை, பூமி என வாங்க இடம் உண்டு. அரசு வழி அல்லல் அகலும். மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் முன்னிலை பெறுவர். வியாபாரிகளுக்கு வர வேண்டிய பாக்கிகள் வசூலாகும். உத்யோகஸ்தர்களுக்கு மேல்முறையீட்டால் வெற்றி கிட்டும். கணிசமான நிலுவை ஊதியம் பெற இடமுண்டு. விவசாயிகளுக்கு உழவு சாதனம் பெற, வங்கிகள் உதவி புரியும். விளைபொருளுக்கு நல்ல மார்க்கெட் கிடைக்கும். கலைஞர்களுக்குப் புகழ் கூடும். இசைக் கலைஞர்கள் மிக்க அனுகூலம் பெறுவர். 3.3.09 காலை 3.04 முதல் 5.3.09 காலை மணி 6.27 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம்: பிரதி வெள்ளிக்கிழமை, மகாலட்சுமியை தாமரை மலர் சாத்தி குங்கும அர்ச்சனை செய்து வழிபட நன்று. மகாலட்சுமி அஷ்டோத்திரம் சொல்லவும்.



விருச்சிகம்

(விசாகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை)

விருச்சிக ராசி வாசகர்களே! உமது ராசிநாதனும் 6க்குடையவரும் ஆன செவ்வாய் உமது ராசிக்கு வீரிய விக்ரம பராக்ரம ஸ்தானம் என்னும் 3ம் வீட்டில் சஞ்சரிக்கிறார். குருவுடன் இணைந்து 'குரு மங்கள யோகம்' தருகிறார். கடன் தீரும். விரோதிகள் விலகுவர். கோர்ட் வழக்கில் வெற்றி கிட்டும். சரளமான பணப்புழக்கம் உண்டாகும். அரசு வழி அனுகூலம் தேடி வரும். மனைவி வழியில் எதிர்பாராத வகையில் வசதி வாய்ப்புகள், சுக சௌகரியங்கள் சேரும். வியாபாரிகளுக்கு முதலீடு பெருகும். எனினும் வங்கி நடைமுறைகளில் கூடுதல் கவனம் செலுத்துவது நலம். பணியில் மிகுந்த அலைக்கழிப்பு உண்டாகும். 5.3.09 காலை மணி 6.27 முதல் 7.3.09 காலை மணி 8.51 வரை மற்றும் 30.3.09 காலை மணி 8.06 முதல் முதல் மாத இறுதிவரை சந்திராஷ்டமம்.

பரிகாரம்: பிரதி செவ்வாய், அருகில் உள்ள மாரியம்மனை வழிபடவும். மங்கள சண்டிகை ஸ்லோகம் 9 முறை படிக்கவும். வாழ்வில் எதிர்ப்படும் இன்னல் தீரும். இன்பம் சேரும்.




தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம்)

தனுசு ராசி வாசகர்களே! உமது ராசிநாதன் குரு பகவான், தன ஸ்தானம் எனும் 2ம் இடத்தில் நீசம் அடைந்து சஞ்சரித்தபோதிலும் உமது ராசிக்கு, 11க்குடைய சுக்ரன் 4ல் உச்ச பலத்துடன் சஞ்சாரம் செய்வது ஆறுதல் தருகிறது. சரளமான பணப்புழக்கம் உண்டு. மனைவியின் சொல்லுக்கு மதிப்பளிக்க நேரும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. அரசு வழி உதவிகள் பெறுவதில் தேவையற்ற கால தாமதம் ஆகும். வீடு கட்டும் பணியில் நிலவிய கால தாமதம் தீரும். மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவர். வாய்மொழி மற்றும் செய்முறைத் தேர்வில் கூடுதல் கவனம் தேவை. வியாபாரிகளுக்குப் புதிய ஒப்பந்தம் பெறுவதில் சிக்கல் உண்டாகும். உத்யோகஸ்தர்கள் மேல் முறையீட்டால் வெற்றி பெறுவர். 7.3.09 காலை மணி 8.51 முதல் 9.3.09 காலை 10.58 வரை சந்திராஷ்டமம்.

பரிகாரம்: பிரதோஷ காலத்தில் சிவாலய தரிசனம் செய்யவும். பிரதி வியாழன், தட்சிணாமூர்த்திக்கு நெய்தீபம் ஏற்றி, மஞ்சள் நிற மலர் சாத்தி வில்வ அர்ச்சனை செய்து வழிபடவும். தட்சிணாமூர்த்தி அஷ்டகம் பாராயணம் செய்க.



மகரம்

(உத்திராடம் 2,3,4 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)

மகர ராசி வாசகர்களே! உமது ராசிநாதன் சனி பகவான், உமது ராசிக்கு ஆயுள் ஸ்தானம் என்னும் 8ல் அமர்வு. 8க்குடைய சூரியன் 2ல் அமர்வு. சனி - சூரியன் பரிவர்த்தனை ஆகியுள்ளனர். சரளமான பணப்புழக்கம் நிலவும். கடன் தீரும். கணவன் - மனைவி இடையில் அன்னியோன்யம் அதிகம் ஆகும். பெண்களின் விருப்பங்கள் நிறைவேறும். மாணவர்கள், ஞாபக மறதிக்கு ஆளாக நேரிடும். கவனமாக இருக்கவும். வியாபாரிகளுக்கு அபிவிருத்தி மற்றும் புதிய முதலீடுகளுக்கு நிதி உதவி கிட்டும். உத்யோகஸ்தர்கள் பணி நிமித்தமாக அடிக்கடி வெளியூர் செல்ல நேரும். விவசாயிகளுக்கு அரசு வழியில் உதவி மற்றும் மான்யம் கிடைக்கும். கலைஞர்கள் வெளியூர் படப்பிடிப்புக்கு அதிக முக்கியத்துவம் தர நேரும். 9.3.09 காலை மணி 11.58 முதல் 11.3.09 காலை மணி 1.54 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம்: பிரதி சனிக்கிழமை, ஆஞ்சநேயருக்கு வெண்ணெய்க் காப்பு செய்து வழிபடவும். தினசரி காக்கைக்கு அன்னமிடவும்.



கும்பம்

(அவிட்டம் 3,4 பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 பாதங்கள்)

கும்ப ராசி நேயர்களே! உமது ராசிநாதன் சனி பகவான் உமது ராசிக்கு 7ல் பகை வீட்டில் சஞ்சரித்தபோதிலும் 7க்குடைய சூரியன் உமது ராசியில் சஞ்சாரம் செய்வதால் பரிவர்த்தனை யோகம் உண்டாகிறது. எதிர்ப்புகள் விலகும். ஏற்றம் கிட்டும். வர வேண்டிய பாக்கிகள் வசூலாகும். கடன் தீரும். பெண்களுக்கு தாய் மற்றும் தந்தை மூலம் உதவிகள் கிட்டும். வீடு, மனை, பூமி வாங்க உதவுவர். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவது நலம். வியாபாரிகளுக்கு சாதகமான உத்தரவுகள் கிட்டும். புதிய முதலீடுகள் பெருகும். விவசாயிகளுக்கு உரத் தட்டுப்பாடு அகலும். தண்ணீர் வசதி பெருகும். பணப்பயிர்கள் நல்ல லாபம் தரும். 11.3.09 பகல் மணி 1.54 முதல் 13.3.09 மாலை மணி 6.57 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம்: பிரதி சனிக்கிழமை, சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றவும். தினசரி சூரிய நமஸ்காரம் செய்யவும். பிரதி வெள்ளிக்கிழமை, மகாலட்சுமியை வழிபடவும். மகாலட்சுமி சதநாம ஸ்தோத்திரம் படிக்கவும்.



மீனம்

(புரட்டாசி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

மீன ராசி வாசகர்களே! உமது ராசி நாதன் குரு பகவான் உமது ராசிக்கு லாபஸ்தானம் எனும் 11ம் வீட் டில் நீச்சம் அடைந்து சஞ்சரிக்கிறார். எனினும் 3, 8க்குடைய சுக்ரன் உச்சம். புதிய முயற்சிகளில் அபார வெற்றி கிட்டும். பெண்கள் நினைத்தது நிறைவேறும். கணவன் - மனைவி அன்புடன் வாழ்வார்கள். மாணவர்கள் கடினமாக உழைத்து இலக்கை எய்தலாம். வியாபாரிகளுக்கு அரசு முறையில் நிலவிய நெருக்கடிகள் விலகும். புதிய வணிகப் பிரிவுகள் துவக்கவும் இடமுண்டு. உத்யோகஸ்தர்கள் மேல் முறையீடுகளில் வெற்றி பெறுவர். கணிசமாக நிலுவை ஊதியம் பெற வாய்ப்பு உள்ளது. விவசாயிகளுக்கு அரசு வழி அனுகூலம் தடையின்றி கிட்டும். கலைஞர்கள் வேறு மொழியில் வாய்ப்புக்களைப் பெறுவர். 13.3.09 மாலை மணி 6.57 முதல் 16.3.09 அதிகாலை மணி 3.11 வரை சந்திராஷ்டமம்.

பரிகாரம்: பிரதோஷ காலத்தில் சிவாலய தரிசனம் செய்க. பிரதி வியாழன் தட்சிணாமூர்த்திக்கு நெய் தீபம் ஏற்றவும். குலதெய்வ வழிபாடு மிக மிக நன்று.

அயல்நாட்டில் சுதந்திரம்

கடந்த சில வருடங்களாகவே மக்களின் மனப்போக்கு மாறி வருகிறது. பெற்றோர், தம் பிள்ளைகள் பெண்களை முன்னுக்குக் கொண்டுவர மிகவும் மும்முரமாகப் பாடுபட்டு மேல்படிப்பு படிக்க வைத்து வெளிநாட்டுக்கு அனுப்பி, பெருமிதம் அடைகின்றனர்.

சில பிள்ளைகள் கடமை உணர்வாலும் மனசாட்சி உறுத்துவதாலும் சிரமப்பட்டு குடியுரிமைகளை வாங்கி, தங்களுடனேயே கொண்டு வந்து வைத்துக் கொள்கின்றனர். சிலர், குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள என்று அழைத்து வந்து விடுகின்றனர்.

சில பெற்றோர்கள், என்னவானாலும் சொந்த வீடு, ஆசாரம், அனுஷ்டானம் இவற்றை விட்டுவிட்டு வரமாட்டோம் என்று பிடிவாதத்துடன் தனியே தங்கியும் இருக்கிறார்கள்.

அப்படி வயதானவர்கள் தனியே தங்கியிருந்தால் நாளிதழ்களில் படிக்கிறோமே அதுபோல கொலை, கொள்ளைக்கு ஆளாகிவிடும் பரிதாப நிலையை நிறையப் பார்க்கிறோம். சிலர் இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை வந்து போய்க்கொண்டு இருக்கின்றனர். இன்னும் சிலர் ஆற்றில் ஒரு காலும் சேற்றில் ஒரு காலுமாய் குழம்பி இருக்கின்றனர்.

ஓர் ஆந்திர தம்பதி, யு.எஸ்.ஸில் பிள்ளையுடன் வந்து தங்கியிருக்கின்றனர்.

''என்ன சார் பெரிய 'ஃபாரின் லைஃப்' வேண்டியிருக்கு? காலை வீசி நடக்க முடியுதா? வாய்க்கு ருசியா ஒரு மசால் தோசை, காப்பி சாப்பிட முடியுதா? பணக்கார ஜெயில்னுதான் சொல்லணும். நினைத்தால் நண்பர் வீட்டுக்கோ, உறவினரைப் பார்க்கவோ, ஆட்டோ, பஸ் பிடித்தோம் போனோம் என்று உண்டா? எல்லாவற்றுக்கும் பிள்ளை அல்லது மருமகள் காரில் அழைத்துப் போனால்



தான் உண்டு. ஹேர்கட்டிங்குக்குக் கூட அப்படித்தான் அவர்களை எதிர்பார்க்க வேண்டியிருக்கு'' என்று வருத்தப் பட்டார்.

''பிள்ளையும், மருமகளும் வேலைக் குப் போகிறார்கள். மீதி மிச்சத்தை ஃப்ரிட்ஜில போட்டுக்கிட்டு, அப் பப்ப எடுத்து சுடவைச்சுச் சாப் பிட்டுக்கிட்டு, நாம பிள் ளைக்குச் சுமையா இருக் கக் கூடாதேன்னுட்டு வாக் குவம் செய்யறது, மெஷின்ல துணி போட றது, பாத்திரம் போட றது, குப்பை மூட்டை களைக் கட்டறது, வாசலில் கொண்டு வைக்கறது - இது போல சில வேலை

வந்ததால இரண்டு, மூன்று கல் யாணங்கள், இந்தியாவில் மிஸ் பண்ணியாச்சு. மற்றும் இரண்டு பெரிய சாவுகளுக்கும் போக முடி யலை'' - இது அவருடைய புலம்பல்.

என் உறவினர் மணி, ''பேரன்



இழந்த பறவைகள்!

களைச் செய்யறோம்'' என்கிறார் அந் தப் பெண்மணி.

இன்னொருவர் சாமிநாதன். ''இந்தியாவில ராஜபோகமா இருந் தோம் சார். இங்கேயும் வசதிக்கு ஒன் றும் குறையில்லை. பிள்ளைக்கு ஐந்து பெட்ரூம் கொண்ட வீடு, படகு போல கார். எல்லா இடமும் சுற்றிப் பார்த்தாச்சு. சனி, ஞாயிறு வந்தால் பால், தயிர் வாங்க இண்டியன் ஸ்டோர்ஸ் போறோம். இதுதான் இங்கே உள்ள வாழ்க்கை. இங்கே

பேத்திகளுடன் நிம்மதியாய் இருக்கப் போகிறோம் என்று வந்தால், இங்கே இவர்களுக்கு உட்கார்ந்து முகம் கொடுத்துப் பேசக் கூட நேரம் இல்லை. டான்ஸ், பாட்டு, கூமான் (மேத்ஸ்) படிப்பு, பியானோ என்று கிளாஸ்களுக்குப் போகவே நேரம் சரி யாகிப் போய் விடுகிறது'' என்று ஆதங்கத்துடன் பெருமூச்சு விடுகிறார்.

ஒருநாள் ஒரு பஞ்சாபி அம்மா ளைச் சந்தித்தோம். ''உடம்புக்குன்னு ஏதாவது வந்துவிடக் கூடாது! தின்

நடிகர் விவேக்: அமெரிக்காவின் புகழ்பெற்ற டி.வி நட்சத்திரம் ஓப்ரா வின்ஃப்ரேதான் நான் மதிக்கும் பெண்மணி. 160 கிலோ எடையுடன் நடிகர் பொன்னம்பலத்துக்கு லேடி கெட்-அப்



நான் மதிக்கும் பெண்!



போட்டது போல இருந்த அவர், விடா முயற்சியுடன் இளைத்து, இப்போது 80 கிலோ எடையுடன் 'சிக்' எனத் திகழ்கிறார். எவ்வளவு குண்டாக இருப்பவர்களும் மனது வைத்தால் உடல் இளைக்க முடியும் என்பதற்கு நல்ல உதாரணம் இவரே! இவருடைய 'ஸ்டே கனெக்டட்' என்ற புத்தகத்தைப் படித்ததிலிருந்து ஓப்ராவின் தீவிர ரசிகனாகிவிட்டேன்.

டாடிப் போவோம். அக்கம் பக்கம் பேசக்கூட பாஷை தெரியலை. வெளியிலேயும் போக முடியறதில்லை. ஆறு மாதம் பனி கொட்டிட்டு இருக்கு. டிப்ரஷன் வந்துடும் போல இருக்கு'' என வேதனை தெரிவித்தார்.

சிறுவயதினருக்கு வேண்டுமானால் சம்பாதிக்க வேண்டும் என்கிற ஆர்வமும், ஆவலும் இருக்கலாம். அவர்களுக்கு மேல்நாட்டு வாழ்க்கை அலுக்காது. ஆனால் வயதானவர்களுக்கு ஃபாரின் வாழ்க்கை ஒத்து வருவதில்லை. நான் எல்லோரையுமே குறைகூறவில்லை. அமைதியாய், ஆரவாரமற்ற நிம்மதியாகத் தனித்து வாழ விரும்பும் வயதானவர்கள் இங்கேயும் மகிழ்ச்சியுடன் இருக்கின்றனர். மற்ற பலர் மனத்தில் குறைகளுடன் சுதந்திரமற்ற பறவைகளாக வாழ்கிறார்கள்.

எனவே சகோதரிகளே... உறவுகளுக்காக ஏங்கினால் இந்தியா ஒரு சொர்க்கபூமிதான்! பிள்ளைகள், பெண்கள் என்ற பாசமும், உறவுப் பிணைப்பும் வேண்டினால் அமெரிக்காவும், நிச்சயம் சொர்க்கம்தான்! தேர்ந்தெடுக்க வேண்டியது நீங்கதான்!

- தங்கமணி ராமஸ்வாமி,
மும்பை.



எரிச்சலா? எரித்து விடுங்க!

பல மாதங்களுக்கு முன் எனக்கு மனக் குழப்பம், அழுகை, கோபம், எரிச்சல், எதிர் மறையான எண்ணம், தேவையில்லாமல் எல்லார் மேலேயும் வெறுப்பு என இருந்தது. இதிலிருந்து எப்படி மீள்வது என்று தெரியாமல் தவித்தேன்.

"நான் சொல்வதைவிட இந்தப் புத்தகம் உனக்கு சரியான வழிகாட்டும்" என்று சொல்லி எம்.எஸ். உதயமூர்த்தியின் நூல்களை வாங்கிக் கொடுத்தார் என் கணவர்.

அதில் அவர் 'எதிர்மறையான எண்ணம், கோபம், எரிச்சல் போன்ற வேண்டாத செயல்களை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி எரித்துவிடவும்' என்று எழுதியிருந்தார்.

நானும் அதன்படியே செய்தேன். இரண்டு, மூன்று முறை செய்தபிறகு எதிர் மறை எண்ணங்கள், என்னையும் என் மனத்தையும் விட்டுப் போயேவிட்டன. இப்பொழுது மனசு இலேசாகிவிட்டது. நான் அமைதியாக உணர்கிறேன். எனது வழிமுறை பல சகோதரிகளுக்குப் பயன் படும் என்று எழுதுகிறேன்.

– கே. விமலா, சென்னை – 42



"மனதில் உறுதியும், அணுகுமுறையில் நேர்மையும் இருந்தால், பெண்கள் எங்கும் எதிலும் ஜெயிக்கலாம்" என நம்பிக்கை தரும் தேனி மாவட்டத்து சுய உதவிக்குழுவினரின் வெற்றிக் கதைகளை இங்கே படியுங்கள்!

தேனி மாவட்டம், ஜக்கம்பட்டியில் உள்ள அரசு வணிக வளாகம்! அந்த இடமெங்கும் சத்து மாவின் 'கமகம' வாசனை! அங்கே முளை கட்டிய கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம், வெள்ளைச் சோளம், சோயாபீன்ஸ், பாசிப் பயறு, பார்லி, கோதுமை, ஜவ்வரிசி, வேர்க்கடலை, பொரிகடலை, காணப்பயறு, பாதாம், பிஸ்தா, முந்திரி, ஏலக்காய், சுக்கு அனைத்தும் குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து மூட்டையாக வைக்கப்பட்டிருந்தது. கையில் உறை அணிந்து, அவற்றை எடுத்து காண்பித்தபடி பேச ஆரம்பித்தார் 'இயற்கை' மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த சுகந்தி.

''ஐந்து வருஷத்துக்கு முன்னால நடந்த சம்பவம் இது. திடீர்னு என் குழந்தைக்கு உடம்பு சரியில்லாமப் போச்சு. காண்பிச்சேன். சத்து குறைவாக இருக்கறதால, சத்துமாவு தயாரிக்கும் முறையைச் சொல்லி, அதையே ஆகாரமா கொடுக்கச் சொன்னாங்க. குழந்தைக்கு அந்த ருசி பிடிச்சுப் போகவே, அடம்

"வாழ்ந்து காட்டும் திட்டத்தில் வாழும் வரை கற்கலாம்..." எனப் பாடிய தேனி மாவட்ட மகளிர் குழுவினரை 'ஸ்மைல் ப்ளீஸ்' என்றதும், கொஞ்சம் சிரிப்பு... நிறைய கூச்சத்துடன் போஸ் கொடுத்தனர். ஆனால், பேச ஆரம்பித்ததும் சரவெடிதான்.

வறுமையை ஒழித்து பெண்களை முன்னேற்றம் அடையச் செய்யும் நோக்கத்துடன் உலக வங்கி நிதியுதவியுடன் தமிழக அர

"பந்தல் போட்டு பணத்தை அள்ளறோம்!"





தரமே சாட்சி!

பிடிக்காமல் சாப்பிட்டா. நல்ல ஆரோக்கியமாவும் ஆயிட்டா. அப்பதான் இதையே தொழிலா துவங்கினா என்னானு யோசிச்சோம். வங்கிக் கடன் வாங்க ஆரம்பிச்சோம்.

சத்துமாவு தரமா இருந்தாலும் பாலித்தின் பையில் சாதாரணமா வித்ததால அவ்வளவு லாபம் கிடைக்கலை. அதனால வண்ணப் பாக்கெட்களில் விற்பனை செய்ய ஆரம்பித்தோம். நல்லபடி விற்பனை ஆக, அதிலிருந்தே மறுமுதலீட்டுக்குப் பணத்தைப் போட்டோம். இப்ப மதுரை, தேனி, சிவகங்கை மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனையில் விற்பனை செய்து வருகிறோம். இதுவே எங்களது தரத்துக்குச் சான்று. மாதம் 3000 கிலோ வரை ஆர்டர்கள் கிடைக்கின்றன. கூடுதலாக எவ்வளவு ஆர்டர்கள் வந்தாலும் சந்திக்கத் தயாராக உள்ளோம்'' என்றார் சுகந்தி.

''மகளிர் திட்டத்தின் கீழ் இங்கு 9745 சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குழுவிலும் சராசரியாக 12லிருந்து 20 பெண்கள் வரை உள்ளனர்'' என்கிறார் மகளிர் திட்ட

2 வெற்றி கொடி கட்டு!

சால் துவங்கப்பட்டதுதான் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம். தமிழகத்தில் 15 மாவட்டங்களில் மட்டுமே இத்திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டிக்கு உட்பட்ட ஜி. உசிலம்பட்டியில் இரண்டாண்டுகளாக சிறப்பாகச் செயல்பட்டு வரும் காளீஸ்வரி தொழிற் குழு உறுப்பினர்களிடம் பேசினோம். குழுவைப் பராமரித்து வரும் தேவியும், பாலம்மாவும் ஆர்வமாகப் பேச ஆரம்பித்தனர்.

''எங்க குழுவில் மொத்தம் 17 பேர் உறுப்பினர்கள். குழு சேமிப்பு துவங்கி ஆறு மாதங்கள் கழித்து மானியத்துடன் கூடிய சுழற்சி கடன் கிடைத்தது. மானியத்தை எல்லோரும் பிரிச்சுக்கிட்டோம். ஆறு பேர் மட்டும் தொழில் செய்யலாம் என நினைத்து எங்களது பங்குத் தொகையுடன் பந்தல் வாடகைத் தொழிலை ஆரம்பிக்க நினைத்தோம். எங்களது தொகையின் மூலம் மூலப் பொருட்கள் அனைத்தையும் வாங்க முடியவில்லை. 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின் கீழ் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் ஆரம்பிக்கப்பட்டு தொழிற்கடன் வழங்கப்பட்டதால், சங்கத்தின் மூலம் ஒரு லட்சத்து 32 ஆயிரம் ரூபாய் கடன் பெற்றோம். இதுதவிர வங்கியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் கடன் பெற்று பந்தல் தொழிலை ஆரம்பித்தோம்.

பந்தல் வாடகை தொழில் துவங்கியதற்கு முக்கியக் காரணமே எங்களது சுற்று வட்டாரப் பகுதிகளில் அதிகமாக இத்தொழில்

அலுவலர் தேவநாதன்.

"குழுக்களை இணைப்பது, பயிற்சி அளிப்பது, கடன் கொடுப்பது இதோட எங்கள் வேலை முடிஞ்சுடாது. குழுக்கள்ல உள்ளவர்கள் கடன் பெற்று தொழில் துவங்க திட்டமிட்டவுடன், தொழிற்பயிற்சி அளிப்பது, மூலப்பொருட்களின் சந்தையைத் தெரியப்படுத்துவது, உற்பத்தி செய்வது, உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்குரிய சந்தை வாய்ப்பு வரை அனைத்தையும் ஏற்படுத்தித் தர்றோம். தேனி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சுயஉதவிக் குழுவினர் தங்களது பொருட்களை விற்பனை செய்வதற்காக 66 கடைகளை அமைச்சிருக்கோம்.

விற்பனை சந்தையைக் கண்டறிவதற்கென தனியாக உற்பத்திப் பொருள் மற்றும் விற்பனை சங்கம் இயங்குகிறது.



இதன் மூலம் எங்கெங்கு அதிக ஆர்டர்கள் தேவையென கண்டறிந்து குழுக்களின் பொருள் உற்பத்தியை அதிகப் படுத்தி வருகிறோம். இந்தாண்டு தேனி மாவட்டத்தில் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருள் மற்றும் விற்பனை கண்

இல்லை. சுற்றியுள்ள கிராமங்களில் வீட்டு விசேஷம், கோயில் விசேஷங்களுக்குப் பந்தல் போடுவதற்கு தேனியிலிருந்துதான் ஆட்களை வரவழைப்போம். மூங்கில் கம்பு ஊன்றி, கிடுகு அமைத்து சாதாரணப் பந்தல் போடுவது முதல் வண்ணத்துணி, பிளாஸ்டிக் பூக்கள் அமைத்து அலங்காரப் பந்தல் வரை ஆட்களை வைத்து தொழில் செய்து வருகிறோம்.

பந்தல் அமைப்பதற்கு ஆண்கள்தான் தேவை. ஆனால் பந்தலில் அலங்கரிப்பதற்குத் தேவையான காடாத்துணியை சுத்தம் செய்வது, பிளாஸ்டிக் பூக்களை தொகுத்துக் கட்டி மாலையாக்குவது, பிளாஸ்டிக் தோரணங்கள் கட்டுவது, பந்தல் வாடகைக்கு விடுவது, கணக்குகளை பராமரிக்கும் வேலைகள் - இவற்றையெல்லாம் நாங்கள்தான் செய்து வருகிறோம். இந்தத் தொழிலைத் துவங்குவதற்கு முன்பாக கூலிக்கு வேலை பார்த்தோம். இப்போது முதலாளியும் நாங்களே... தொழிலாளியும் நாங்களே" என கோரஸாக சந்தோஷமாகக் கூறினர் தேவி, காளீஸ்வரி, பத்ரகாளி, முருகேஸ்வரி, பாலம்மாள், ஆண்டாள்.

இரட்டை நாயனம் போல பந்தல் வாடகையுடன், ரேடியோ, மைக் செட் அமைக்கும் பணியை மற்றொரு குழுவினர் செய்து வருகின்றனர். காளியம்மன் தொழிற்குழுவைச் சேர்ந்த புஷ்பம் இதை மேற்பார்வை செய்து வருகிறார். பந்தல் வாடகைக் குழுவினர் பந்தல் அமைக்கும்போது, சீரியல் செட் அமைப்பது, டியூப் லைட் மாட்டுவது, அம்மன் படங்கள் மற்ற உருவங்களுக்கு சீரியல் செட் வைத்துக் கட்டி ஜொலிக்க வைப்பது இவர்களின் வேலை.

'இருவர் ரேடியோஸ்' என்ற பெயரில் தொழிலை நடத்தி வரும் புஷ்பம் "எங்க குழுவில் ஏழு பேர் சேர்ந்து கடந்த ஒரு வருடமாக இத்தொழிலைச் செய்து வருகிறோம். எங்கள் 'தொழில் நேர்த்தி'யை வியந்த பிற மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் வண்டி வாடகை கொடுத்து, எங்களை அழைத்துச் செல்கின்றனர். 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தால் நாங்கள் தற்போது நல்ல நிலையில் உள்ளோம்.

வேலையில்லாத நேரங்களில் பிற

காட்சி நடத்தத் திட்டமிட்டுள்ளோம். ஒவ்வொரு ஆண்டும் மதுரையில் நடக்கும் மண்டலக் கண்காட்சியில் எங்கள் மாவட்டக் குழுவினர் விற்பனை செய்து வருகின்றனர்.

தேனி மாவட்டத்தில் விவசாயத் தொழில் அதிகமாக நடக்கிறது. அதேபோல கால்நடை மற்றும் பால் உற்பத்தியும் சிறப்பாக உள்ளது. இது தவிர ஆண்டிப்பட்டியில் சில்க் காட்டன் உற்பத்தியும், கம்பம், சின்னமனூர் பகுதியில் திராட்சை உற்பத்தியும் அதிகளவில் நடக்கிறது. பாரம்பரியம் கொண்ட, முதன்மைத் தொழில் களை ஊக்குவிக்கும் வகையில் 20 குழுக் களை இணைத்து கூட்டாகத் தொழில் செய்ய, பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளோம். தேனி மாவட்டம் சின்ன மனூர் ஒன்றியத்தில் உள்ள மூர்த்திநாயக் கன்பட்டி குழுவைச் சேர்ந்த பெண்கள் திராட்சை தொழில் உற்பத்தியில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக மாநில அரசின் மணிமேகலை விருதை கடந்தாண்டு பெற் றுள்ளனர். எங்களது முயற் சிக்குக் கிடைத்த வெற்றி இது!'' என்கிறார் திட்ட அலுவலர் தேவநாதன்.

வேலைக்குச் செல்வதற்கும் நாங்கள் தயங்குவதில்லை'' என்றார்.

''வறுமையில் இருப்பவர்களை வள மைக்குக் கொண்டு செல்வதே எங்கள் நோக் கம்'' என ஆரம்பித்தார் திட்ட மேலாளர் கருப் பையா. ஜூன் 2005ல் முன்மாதிரி கிராமமாக தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுகாவில் உள்ள ஜி. உசிலம்பட்டி கிராமம் தேர்ந்தெடுக் கப்பட்டு, அங்கு பணிகள் துவங்கப்பட்டன. ஏழை, மிகவும் ஏழை, ஊனமுற்றோர் மற் றும் நலிவுற்றோர்களைக் கண்டறிந்து, அவர் களைக் குழுவாக இணைக்கத் துவங்கி னோம்.

ஏற்கெனவே பிற தொண்டு நிறுவனங் களில் குழுவாகச் செயல்பட்ட பெண்களும், தன்னார்வமாக எங்களது திட் டத்தில் சேர்ந்தனர். 2006ம் ஆண்டு புதுவாழ்வுத் திட்டம் எனப் பெயரிடப்பட்டு, தற்போது வாழ்ந்து காட்டுவோம் திட்டம் என மாற்றப் பட்டுள்ளது. இந்தக் கிராமத்தில் மட்டும் 69 குழுக்களைத் தேர்ந்து, தர மதிப்பீடு செய்து, பயிற்சியளித்து மானியக்கடன் வழங்கி உள்ளோம்.

தேனி மாவட்டத்தைப் பொறுத்தவரை போடி, மயிலை ஒன்றியங்களில் பெண்கள் குழு, ஊனமுற்றோர் குழு, பழங்குடியினர் மற்றும் இளைஞர் குழுக்கள் என மொத்தம் 451 குழுக்களை இணைத்துள்ளோம். இப் பகுதிகளில் கிராம வறுமை ஒழிப்பு சங்கமும், சுய உதவிக் குழுக்களும் துவங்கப் பட்டுள்ளன. தேனி மற்றும் ஆண்டிப்பட்டி ஒன்றியங்களில் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மட்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தில் சேர விரும்பும் ஏழை மற்றும் நலி வுற்றோர், திட்டம் செயல்படக்கூடிய பகுதியில், அந்தந்த பஞ்சாயத்தில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தை அணு கிப் பயன் பெறலாம்'' என உற்சாகத்துடன் முடித்தார் திட்ட மேலாளர் கருப் பையா.

- எம்.எம். ஜெயலெட்சுமி, மதுரை

(வீறு நடை தொடரும்)

சென்ற இதழில் உயில் சம்பந்தப்பட்ட விவரங்களைப் பார்த்தோம். இப்போது 'செட்டில்மெண்ட் டீட்' என்று சொல்லப்படும் தானப் பத்திரம் குறித்துப் பார்க்கலாமா?

தானப் பத்திரம்



ஒருவர் தனக்கு உரிய சொத்துக்கள் யாருக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதை உயிலுக்குப் பதிலாக தானப் பத்திரம் மூலமாகவும் எழுதி வைக்கலாம் என்கிறார்களே... செட்டில்மெண்ட் பத்திரம் என்பது என்ன?

சட்டப்படி மேஜரான ஒருவர், தனக்குச் சொந்தமான சொத்தை, ஆழ்ந்த அன்பு மற்றும் அக்கறையின் அடிப்படையில் யாருக்கு வேண்டுமானாலும் தானப் பத்திரம் மூலமாக அளிக்கலாம். அப்படி தானம் பெறுகிறவர், ரத்த சம்பந்தப்பட்ட உறவினராக இருந்தால், அன்புக்கும், பாசத்துக்கும் விலை மதிப்பிட முடியுமா? எனவே, அந்தச் சொத்துப் பரிவர்த்தனைக்கு முத்திரைத்தாள் கட்டணத்தில் சலுகை வழங்கப்படுகிறது. சொத்தின் மதிப்பு 10 லட்சம் அல்லது அதற்கு மேல் இருந்தால், அதிக பட்ச முத்திரைத்தாள் கட்டணமாக பத்தாயிரம் ரூபாய் செலுத்தினால் போதும். இதைத் தவிர பதிவுக் கட்டணம் உண்டு. சொத்தின் மதிப்பு 10 லட்சத்துக்குக் குறைவு என்றால், கட்ட வேண்டிய கட்டணமும், அரசாங்க கைடு லைன் மதிப்பின்படி, பத்தாயிரத்துக்குக் குறைவாகவே இருக்கும். ரத்த சம்பந்தமில்லாத மற்றவர்களாக இருந்தால், கிரயப் பத்திரத்துக்குரிய கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்.

ஒருவர் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதுகிறபோது, தான் தானமாக அளிக்கும் சொத்து தனக்கு எப்படிக் கிடைத்தது? அதை இயற்கையான அன்பு, அக்கறையின் அடிப்படையில் யாருக்குக் கொடுக்க விரும்புகிறார்? இதையெல்லாம் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். ஸ்திரமான மனநிலையில், யாருடைய வற்புறுத்தலும் இல்லாமல் எழுதிய பத்திரத்தை, சொத்து எங்கே இருக்கிறதோ, அந்தப் பகுதிக்குரிய பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். பத்திரத்தில் இரண்டு சாட்சிகள் கையெழுத்திட வேண்டும்.

மேலே குறிப்பிட்ட ரத்த சம்பந்தப்பட்டவர்கள் என்ற பிரிவில் யார் யார் வருவார்கள்?

தாத்தா அல்லது பாட்டி தன் சொத்தை தங்கள் மகன் அல்லது மகளுக்கோ, பேரன் அல்லது பேத்திக்கோ தரலாம். சில ஆண்டுகளுக்கு முன் கொண்டுவரப்பட்ட திருத்தப்படி அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளும் இந்தப் பிரிவில் வருவார்கள். ஒரு ஆண் அல்லது பெண் திருமணமாகி, குழந்தைகள் பெற்றுக்கொண்ட பிறகு,

விவாகரத்து அல்லது மரணம் காரணமாக இன்னொரு பெண்ணை அல்லது ஆணை மணந்து, அதன் மூலமாகக் குழந்தைகள் பெற்றாலும், அந்தக் குழந்தைகள் அனை வருமே சகோதர, சகோதரி உறவு முறைக்குள் அடங்குவார்கள்.

ஒருவர், சென்னை புற நகரில் உள்ள ஒரு தொழிற்பேட்டையில் இருந்த, தனக்குச் சொந்த மான ஒரு இடத்தை தன் மகனுக்கு செட்டில் மெண்ட் பத்திரம் மூலமாக அளித்தார். சில ஆண்டுகளுக் குப் பிறகு, மகன் அந்த இடத்தை விற்க முடிவு



எழுதுறீங்களா?

செய்தபோதுதான் ஒரு உண்மை தெரிய வந்தது. அப்பா தானமாகக் கொடுத்து, அவர் தொழிற்கூடம் நடத்தி வந்த இடத் துக்குரிய சர்வே எண் 81. ஆனால், தானப் பத்திரத்தில் அது தவறுதலாக 18 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. பத்திரத்தை எழுதியபோதோ, பதிவு செய்தபோதோ இந்தத் தவறை யாருமே கவனிக்கவில்லை. இதுபோன்ற சூழ் நிலையில் என்ன செய்வது?

நடந்த தவறைச் கட்டிக் காட்டி, அது எப்படி நிகழ்ந் தது என்று விளக்கி, திருத் தம் செய்துதரக் கோரி பதி வாளருக்கு விண்ணப்பித்து தவறைச் சரி செய்ய வேண்டும். பத்திரத்தில் கவனக் குறைவால் தவறு ஏற்பட்டு விட்டால், அதைச் சரி செய்வது சட்டப்படி சாத்தியம் என்றாலும்கூட, பதிவாளர் அலுவலகத்தில் பழைய ரெகார்டுகளைத் தேடி எடுத்து வாங்குவது வீண் அலைச்சல்தானே? ஆகவே, தானப் பத்திரம் எழுதும் போது, தானமாக அளிக் கும்போது வீடு அல்லது மனைக்குரிய பழைய எண், புதிய எண், தெருப் பெயர், ஊர், சர்வே எண், நாற்புறமும் அமைந்துள்ள மற்ற சொத்து விவரம்



பாலா நடராஜன்

என்று அனைத்து தகவல்களையும் குழப்பமின்றி, தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

ஒரு தாத்தா, மைனர் வயதுடைய தன் பேத்திக்கு செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக சொத்தை அளிக்க முடியுமா?

தாராளமாக அளிக்கலாம். ஆனால், அவள் மேஜராகும்வரை அந்தப் பேத்தியுடைய அப்பா, அம்மா அல்லது நம்பிக்கைக்குரிய வேறு ஒருவரை, காப்பாளராகக் குறிப்பிட வேண்டும். அது மட்டுமல்ல; ஒரு அப்பாவே, தன் மைனர் மகளுக்கு செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் சொத்தை வழங்கிவிட்டு, அவள் மேஜர் ஆகும்வரை அவளுக்குக் காப்பாளராக இருந்து அந்தச் சொத்தைப் பராமரிக்க முடியும்.

ஒருவர் மரணத்துக்குப் பிறகே அவரது உயிலுக்கு உயிர் வருகிறது. ஆனால், செட்டில்மெண்ட் பத்திரத்துக்கு அப்படி இல்லை. பத்திரம் பதிவு செய்யப்பட்ட உடனேயே அமலுக்கு வந்துவிடுகிறது. ஆகவேதான், செட்டில்மெண்ட் பத்திரம் எழுதும்போது சில நிபந்தனைகளையும் சேர்க்க சட்டம் இடம் தருகிறது.

அதாவது, ஒரு வயதான பாட்டிக்கு ஒரு சொத்து இருக்கிறது. தனக்குப் பின் அந்த வீட்டை அவர் தன் பேரனுக்குத் தர விரும்புகிறார். அந்தச் சூழ்நிலையில் அவரது பேரனுக்கு, ''நான் உயிரோடு இருக்கும்வரை நான் இந்த வீட்டில் வசிப்பேன்; எனக்குப் பிறகு, சொத்து பேரனுக்கு வந்து சேரும்'' என்று பத்திரத்தில் ஒரு நிபந்தனை விதிக்கலாம். அப்போது பேரன், பாட்டியின் மறைவுக்குப் பின் அந்தச் சொத்துக்கு உரிமையாளர் ஆவார்.

ஒருவேளை, பத்திரத்தில் குறிப்பிட்டதைப் பின்பற்றாமல், பேரன், பாட்டியை அந்த வீட்டை விட்டு வெளியேற்றி விட்டால், பாட்டியால் ஏற்கனவே எழுதிய செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய முடியுமா?

ஓ! யெஸ்! தன் வசமுள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்து, அதை பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதுடன், பத்திரத்தை ரத்து செய்த விவரத்தை சம்பந்தப்பட்ட பேரனுக்கும் தெரிவிக்க வேண்டும். செய்தித்தாள்களில் அந்த விவரத்தை வெளியிடுவதன்மூலம்,



பேரன், ஏற்கனவே எழுதிய செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் சொத்தை வேறு யாருக்காவது விற்பதையும் தடுக்க முடியும்.

இதுபோல எதாவது நிகழக்கூடும் என்றுதான் பொதுவாகவே, நிபந்தனைகளுடன் கூடிய செட்டில்மெண்ட் பத்திரம் எழுதுபவரிடம், 'நீங்கள் நிபந்தனையோடு பத்திரம் எழுதி இருப்பதால், பத்திரம் உங்களிடமே இருக்கட்டும்' என ஆலோசனை சொல்வோம். ஒருவேளை முதலில் எழுதிய நிபந்தனை செட்டில்மெண்ட் பத்திரத்தை அந்தப் பாட்டி தன் பேரனிடம் கொடுத்துவிட்டிருந்தால்?

பத்திரத்தை ரத்து செய்யப் போவதாகச் சொல்லி பேரனிடமிருந்து பத்திரத்தைத் திரும்பி வாங்குவதில் சிக்கல் வரலாம். அப்போது பதிவாளர் அலுவலகத்திலிருந்து முன்பு பதிவு செய்த பத்திரத்தின் உண்மை நகலைப் பெற்று அதன்பிறகு பத்திரத்தை ரத்து செய்யும் நடவடிக்கையில் இறங்க வேண்டும். முன்னெச்சரிக்கையாக இருந்து இந்த அலைச்சலைத் தவிர்க்கலாம்.

ஒரு தந்தை செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக தன்னுடைய மூன்று பிள்ளைகளுள் ஒருவருக்கு மட்டும் தன் சொத்தை அளித்தால், அதை எதிர்த்து மற்றவர்கள் கோர்ட்டுக்குப் போகலாமா?

அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை அவர்களுடைய அப்பா சுயமாகச் சிந்திக்கும் மன நிலையில் இல்லாமல், அடுத்தவரது நிர்பந்தத்துக்குப் பணிந்து எழுதினார் என்பதற்கு, போதிய ஆதாரங்கள் இருக்குமானால் தாராளமாகப் போகலாம்.

அதேபோல, நிபந்தனை செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய ஒருவர், தான் போட்ட கண்டிஷன் நிறைவேற்றப்படவில்லை என்று காரணம் காட்டி, பத்திரத்தை ரத்து செய்தாலும், பாதிக்கப்பட்டவர், ''தான் கண்டிஷனை மீறவில்லை; வேறு நபரது நிர்பந்தத்தால் மனம் மாறி ஏற்கனவே எழுதியதை ரத்து செய்ய முயற்சிக்கிறார்'' என்று கோர்ட் உதவியை நாடலாம். அப்போது பத்திரத்தில் சாட்சிக் கையெழுத்துப் போட்டவர்களும், சம்பந்தப்பட்ட மற்றவர்களும் விசாரிக்கப்படுவார்கள். உண்மை வெளிவரும்.

எழுத்து வடிவம்: **எஸ்.சந்திரமௌலி**



சட்ட அகராதி: சில சட்ட வார்த்தைகளுக்கான அர்த்தம்

- Admonition - கண்டித்து விடல், குற்றம் சாட்டப்பட்டவரை, குற்றவாளி என்று தீர்மானித்த பிறகு, அவருக்குத் தண்டனையோ, அபராதமோ விதிக்காமல், கண்டித்து விட்டு விடுதல்.
- Affidavit - உறுதிமொழி ஆவணம்
- Agnate - தந்தை வழியார், தாயாதி
- Alibi குற்றம் நிகழ்ந்தபோது வேறு ஒரு இடத்தில் இருந்ததாகவும், குற்றம் நிகழ்ந்த காலத்தையும், இடத்தையும் கவனிக்கும்போது, தாம் குற்றம் நிகழ்ந்த இடத்தில் இருந்திருக்க முடியாது என்று குற்றம் சாட்டப்பட்டவரின் வாதம்.

சொத்து சம்பந்தமான வேறு சில சட்டப் பிரச்னைகளும், அவற்றின் தீர்வுகளும் அடுத்த மாதம்...

மிக்க நன்றி!

✉ கடைசி பக்கங்களை (அதான் அழகான, க, அ கூந்தலுக்கு 25 டிப்ஸ்) ஜெராக்ஸ் எடுத்து ஃபிரேம் போட்டு நிலைக் கண்ணாடிக்கு அருகில் மாட்டி விட்டோம். மிக்க நன்றி!

- கல்லை ரீட்டா ராஜ், வானூர்

வழிபாடு

✉ கோவை சகோதரி டி. பிரபாவதி தைப் பூசம் பழனி பாதயாத்திரை, காவடிப் பிரார்த்தனை பற்றி எழுதியிருந்தது ஆண்டுமலர் அமர்க்களத்தில் ஒரு நல்விருந்தாக அமைந்திருந்தது. அதில் எடப்பாடி பகுதியிலிருந்து ஏராளமான பக்தர்கள் தொடர்ந்து நடைப்பயணம் மேற்கொள்வதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். செட்டி நாட்டைச் சேர்ந்த நகரத்தார்கள், 96 ஊர்களிலிருந்தும் கி.பி. 1600ம் ஆண்டு தொடங்கி இன்றுவரை தொடர்ந்து நோன்பிருந்து பழனிக்கு நடந்து சென்று பழனியாண்டவரை வழிபட்டு வருகின்றனர்!

- எம். அழகம்மை, சென்னை-93

தானான திருமேனி

✉ ஆலய அதிசயம் 64-ல் ஸ்ரீபெரும்புதூரிலுள்ள இராமாநுஜரின் திருவுருவம் 'தான் உகந்த திருமேனி' என்பது மட்டும்தான் சரி. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சமாதியான பின் ஸ்ரீராமானுஜர் பத்மாஸனத்தில் மேல் எழுந்து வந்த திருவுருவம் திருவரங்கம் கோயிலில் உள்ளது. அந்தத் திருமேனிதான் வருடம் இருமுறை பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ சாற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஸ்ரீபெரும்புதூரில் உள்ளது மனிதர்களால், செய்யப்பட்ட விக்ரஹம் திருவரங்கத்தில் உள்ளது 'தானான திருமேனி' எனப்படும்.

- இரா. வேதவல்லி,
சென்னை - 33

நறுக்... சுறுக்!

✉ வாசகியரின் பல கேள்விகளுக்கு தாங்கள் 'நறுக் சுறுக்', 'பட் படா', 'டம் டமார்' என பதில் தருவதைப் பார்க்கும்போது வடிவேலு ஒரு படத்தில் அர்ஜுனைப் பார்த்துச் சொல்லும் 'எந்த பால் போட்டாலும் கோல் போடறானே' என்கிற வசனமே நினைவுக்கு வருகிறது!

- எல். மோஹனசுந்தரி,
கிருஷ்ணகிரி-1

எந்த பால் போட்டாலும்

மறக்கலாமா?

✉ 'அசத்திய 60! தம்பதியர் பெயரைப் போடவில்லையே?

- ராஜி குருஸ்வாமி,
ஆதம்பாக்கம்

(ஸாரி... தம்பதியர் லலிதா - நடராஜன் பெயர் விடுபட்டு விட்டது. ஆ-ர்)

பொய்யாக்கிய பெண்!

✉ ஆண்டுமலர் அட்டகாசம். ஒரே மூச்சில் படித்து முடித்தேன். அதிக பக்கங்கள்... அதிக பகுதிகள்... அதிகமான சிறுகதைகள்... புதிய போட்டிகள்... அசத்தி விட்டீர்கள்... ஆண்டொன்று போனால் வயதொன்று கூடும் என்பதை பொய்யாக்கி விட்டு.. சின்னஞ்சிறுபெண் போலே... சிக்கென்று சிம்மாசனமிட்டு

நமது மங்கையர்மலரில் 'ஆல் இன் ஒன்' சமையல் ஆரம்பித்தவேளை போலும்... 'குக், க்ரில் & பேக்' - அட் தி டச் ஆஃப் எ ஃபிங்கர்' என்ற என்னுடைய முதல் சமையல் புத்தகத்துக்கு, 'இந்தியாவின் சிறந்த டெலிவிஷன் செலிபிரிட்டி குக் புக்' என்ற உயரிய விருதினை, 'கோர்மண்ட் வல்ட் புக் அவார்ட் - 2008' என்ற பெருமைமிகு அமைப்பு தந்து கௌரவித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- கீதா பாலகிருஷ்ணன், சென்னை - 26

உட்கார்ந்து விட்டாளே... எங்கள் தோழி மங்கையர் மலர்!

- ஜே.சி. ஜெரினாகாந்த், சென்னை-16

கோல்!





பாராட்டு!

'தீப பந்தம்' என்ற தலைப்பில் இராஜ லட்சுமி பாலசுப்ரமண்யம் எழுதிய கவிதை அருமை! ஒரு விளக்கு அதன் திரி, எண்ணெய், அதன் ஒளி இவற்றைக் கொண்டு இல்லற வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டியது பாராட்டுக்குரியது!

- ஆர்.காயத்ரி, கொல்கத்தா

இன்ப அலை!

பிரதான இதழுடன் ஒட்டிப் பிறந்த - 'யூத்' எடிஷன் பக்கங்களில் இடம் பெற்ற விஷயங்கள் மனத்தில் இன்ப அதிர்வலைகளை எழுப்பின.

- ஆ.கே.உமாசங்கரி, கோவில்பட்டி - 2

பயன்!

உயிலைப் பற்றி ஒரு சில அடிப்படையான விவரங்கள் படித்தேன். உயிலைப் பதிவு செய்தே ஆக வேண்டும் என்ற கட்டாயமில்லை. பதிவு செய்யப்படவிட்டாலும் கூட செல்லுபடியாகும் எனத் தெளிவு படுத்தி விட்டீர்கள்.

- கே. சுலோசனா, மங்கலம்

தெளிவு!

'சித்தர்கள் என்பவர்கள் யார்?' என்பதையும், அட்டமா சித்துக்களைப் பற்றியும் தெளிவாகவும், புரியும்படியும் விளக்கியது சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு தொடர்.

- சு. கலாவதி மணியன், பெரணமல்லூர்

வில்லன்தான்!

சந்தேகமே இல்லாமல் உப்பு நம் வாழ்வின் வில்லன் தான்.

- காமேஸ்வரி கண்ணன், மதுரை



சொல்ல விரும்புகிறோம்

பூ பூக்கும்

மனோகர் போதையோடு பைக்கை ஓட்டிக் கொண்டிருந்ததால் காட்சிகள் உத்தேசமாகத்தான் தெரிந்தன. கண்களைக் குறுக்கி, பார்வையைக் கூர்மையாக்கி சற்றுப் பிரயத்தனத்துடன்தான் அவனால் வண்டியை ஓட்ட முடிந்தது.

சாலையோரமாக நின்று, சில இரண்டு சக்கரர்களை மடக்கி விசாரித்துக் கொண்டிருந்த போக்குவரத்து காவல் துறை அதிகாரியும், கான்ஸ்டபிளும் மனோகரின் பைக் தாறுமாறாகவும், அதிவேகத்திலும் வருவதை, தூரத்திலிருந்தே கவனித்தார்கள்.

''மைனர் ரொம்ப வேகமா வர்றாரு பாரு... நிறுத்துய்யா''

கான்ஸ்டபிள் கிட்டத்தட்ட நடுச்சாலைக்கு வந்து கைகளை ஆட்டி அவனை நிறுத்தச் சொன்னபோது, அவர் மேல் மோதிவிடக் கூடிய அபாயத்துடன் கிரீச்சென்று பிரேக் பிடித்து சற்றுத் தள்ளிச் சென்றுதான் மனோகரால் வண்டியை நிறுத்த முடிந்தது.

அவர் டிராஃபிக் கான்ஸ்டபிள் என்கிற தெளிவுக்கு வருவதற்கே மனோகருக்குச் சில விநாடிகள் பிடித்தன.

அவன் அருகில் வந்ததுமே மூக்கைச் சுளித்த சார்ஜெண்ட், ''என்ன சார், குடிச்சிட்டு வண்டி ஓட்டறீங்க? அதுலயும் எண்பது ஸ்பீட்ல, ஹெல்மெட் இல்லாம வர்றீங்க? எத்தனைத் தப்பு பாருங்க'' என்றார்.

அவனிடம் சொல்ல பதில் எதுவும் இல்லாததால் பேசாமல் அவரை முறைப்பாகப் பார்த்தான்.

''ஹலோ! உன்கிட்டதான் பேசிக்கிட்டிருக்கேன். வண்டியை விட்டு எறங்குய்யா முதல்ல... முறைக்கிறே?''

இறங்கினாலும் அவனால் தன் பைக்கைப் பிடிக்காமல் நிலையாக நிற்க முடியவில்லை.

''சார், நான் வேற ஒரு டென்ஷன்ல இருக்கேன். என்னை விட்ருங்க ப்ளீஸ்...'' என்று குழறலாகச் சொன்னான்.

''யாருக்குய்யா டென்ஷன் இல்ல? டென்ஷன்ல இருக்கறவனுங்கெல்லாம் தண்ணியடிச்சிட்டு வண்டி ஓட்டலாம்னு விதிவிலக்கு எதுவும் சட்டத்துல சொல்லலையே... நீ டென்ஷன்ல வண்டியோட்டி... ஆக்சிடெண்ட் ஆனா உன் பொண்டாட்டில்ல தாலி அறுப்பா. இல்ல எவன் வீட்லயாவது எழவு விழ வெச்சிடுவியே... பாரு... உன்னால நிக்கக்கூட முடியலை. இந்த நிலைமையில வண்டியை ஓட்டிக்கிட்டுப் போறியே. இது ரிஸ்க்குன்னு உனக்குத் தெரியலை.''

''சார்... ரொம்பப் பேசாதீங்க. எவ்வளவு வேணும்? வாங்கிட்டு ஆளை வுடுங்க.''

''ஏய்... என்னடா நினைச்சிட்டிருக்கே? எல்லா கேஸ்லயும் வாங்கிட்டு வுட்ற முடியுமா? இப்ப உன்னை இந்த நிலைமையில போக விட்டேன்னா நீ ஆக்சிடெண்ட் பண்ணிடுவேன்னு சொல்றேன். அது புரியலையா உனக்கு? போய் அப்படி ஜீப்புல உக்காரு. உன் மேல கேஸ் போட்டாகணும். யோவ்! வண்டியை ஓரங்கட்டுய்யா... யார், என்னன்னு கேட்டு கேஸ் எழுது!''

''தெரியும். அதிகமா பேசினா அதிகமா எதிர்பாக்கறீங்கன்னு தெரியும். எவ்வளவு வேணும்னு கேக்கறேன்ல?'' மனோகர் தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து மணி பர்ஸ் எடுத்தபோது...

பட்டுக்கோட்டை பிரபாகர்

ஓசை!

அந்த மடக்குக் கத்தி கீழே விழுந்தது.

அதைப் பார்த்த கான்ஸ்டபிள் எடுத்து, ''சார்... கத்தி வெச்சிருக்கான் சார்''

''என்னடா இது? யாரு நீ? ரவுடியா? எந்த குரூப்புடா? எங்க போயிட்டிருக்கே? எவனையாச் சும் போடறதுக்குப் போயிட்டிருக்கியா? அதான் டென்ஷன் ஆவறியா? கேக்கறேன்ல... பதிலைச் சொல்றா!'' என்ற அவர் இப்போது அவன் சட்டையைப் பிடித்து விசாரிக்கத் துவங்கினார்.

''இல்ல... அது... வந்து... கத்தி சும்மா...''

''பழம் நறுக்கறதுக்காக பாக்கெட்டுக்குள்ள வெச்சிருக்கியா? யோவ்... கண்ட்ரோல் ரூமுக்குத் தகவல்



குடும்யா. மேட்டர் வேற மாதிரி தெரியுது.''

மனோகருக்கு அதற்கு மேல் என்ன பேசுவதென்று புரியாததாலும், போதை தலைக்கேறியிருந்ததாலும் பேசாமல் நின்றிருந்தான்.

அந்த கான்ஸ்டபிள் பைக்கை ஓரமாக நிறுத்தி சாவி எடுத்துக்கொண்டு, அவனைத் தள்ளிச் சென்று ஜீப்பில் ஏற்ற... பொம்மை மாதிரி அவரோடு நடந்தான்.

ஆர்த்தி மருத்துவமனைக்கு வெளியில் இருந்த மரத்தடிக்கு வந்து செல் ஃபோனில் எண்கள் அடித்தாள்.

மறுமுனையில் அர்ச்சனா எடுத்ததும், ''அக்கா, ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சிருச்சக்கா. டாக்டர் எந்தச் சிக்கலும் இல்லன்னுட்டார். இன்னும் அஞ்சு நாள்ல வீட்டுக்குப் போகலாம்னு சொன்னாருக்கா'' என்றாள்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம்'' என்றாள் கங்காவின் அறையில் இருந்து அர்ச்சனா.

''ரொம்ப டென்ஷனா இருந்திச்சுக்கா. இப்பதான் மூச்சு வருது எல்லாருக்கும்.''

''இங்க நானும் சாமியை வேண்டிக்கிட்டே இருந்தேன் ஆர்த்தி. மயக்கம் தெளிஞ்சிருச்சா? பேசினாரா?''

''சும்மா ரெண்டு வார்த்தை பேசினாருக்கா. ஐ.சி.யூ.ல இருக்கறதால நாங்க ஒவ்வொருத்தரா போயி ஒரு நிமிஷம் மட்டும்தான் பாத்துட்டு வந்தோம். இன்னிக்கு சாயங்காலமே தனி ரூமுக்கு மாத்திடுவாங்களாம். நான் அப்பப்ப உனக்கு ஃபோன் பண்றேன். என்ன? நீ தைரியமா இரு.''

''சரி ஆர்த்தி'' என்றவள் உடைந்துபோய் அழத் துவங்கினாள்.

''ஏய்... என்னாச்சு? அதான் ஆபரேஷன் நல்லபடியா நடந்துடுச்சின்னு சொல்றேனே... அப்புறம் ஏன் இப்படி அழறே?''

''யாருமே இல்லாத அனாதையா நிக்கறேன் ஆர்த்தி'' என்று தொடர்ந்து அழு

ஓ.எஸ். அருண்:- லதா மங்கேஷ்கர்! பூங்குரல், தேன் குரல் கொண்ட அற்புதமான பாடகி அவர்! அவரது குரலின் பர்ஃபெக்ஷன் என்னை எப்போதுமே வியக்க வைக்கும். எத்தனைப் பிரபலமாக



நான் மதிக்கும் பெண்!



இருந்தாலும் எளிமையாகவே இருக்கும் லதா மங்கேஷ்கரின் சுபாவம் என்னைக் கவர்ந்தது.

நான் மதிக்கும் பெண்!



பட்டிமன்றம் எஸ். ராஜா: மேடைப் பேச்சு என்பது ஆண்களுக்கே சவாலாக, சிரமமாக இருக்கும் ஒரு விஷயம். அப்படியிருந்தும் அதில் தனக்கென தனி இடம் பெற்றுத் திகழும் பாரதி பாஸ்கர்தான் நான் மதிக்கும் பெண் மணி! தரம் குறையாத, மக்கள் மனம் கவர்ந்த இலக் கியப் பேச்சாளியாகவும் திகழ் கிறாரே!



தொகுப்பு:- **நளினி சம்பத்குமார்**

தாள் அர்ச்சனா.

''என்ன பேசறே? சும்மா எல்லாத் துக்கும் வருத்தப்படக்கூடாது.''

''இல்ல ஆர்த்தி. இங்க என் வாழ்க் கையில புயல் வீசிக்கிட்டிருக்கு. உனக்கு எதுவும் தெரியாது. நீயே அப்பாவோட ஆப ரேஷன் பிரச்னையில் இருக்கேன்னு எல் லாத்தையும் நான் மறைச்சிட்டேன் ஆர்த்தி.''

''என்னக்கா சொல்றே? எனக்கு ஒண்ணும் புரியலை.''

''நான் இப்ப அவரோட இல்லை. குழந் தையைத் தூக்கிட்டு வெளில வந்துட்டேன். இப்ப ஒரு ஃபிரண்டு ரூம்ல தற்காலிகமா தங்கிருக்கேன்.''

''கடவுளே! என்ன ஆச்சு? அந்த அள வுக்கு என்ன பிரச்னை? சரி... போன்ல வேணாம். இப்ப நீ எங்க இருக்கேன்னு சொல்லு. நான் வர்றேன். நேர்ல பேசலாம்'' என்றாள் ஆர்த்தி.

அடுத்த அரைமணி நேரத்தில் கங்கா வின் அறையில் இருந்தாள் ஆர்த்தி. முது கில் மெதுவாகத் தட்டி, உறங்கிப் போன குழந்தை ப்ரீதியைப் படுக்க வைத்துவிட்டு வந்து அவள் அருகில் அமர்ந்தாள் அர்ச் சனா.

''என்ன பிரச்னை? சொல்லுக்கா.''

''ஆர்த்தி, மனோகர் மேல நான் வெச் சிருந்த எல்லா நம்பிக்கையும் போயிடுச்சு. தினம் குடிக்கிறாரு. என்னை அடிக்கிறாரு. இவரு ஏமாந்துட்டு தன் பார்ட்னர் மேல பழியைப் போடறாரு. அவரை ஆள் வெச்சு அடிப்பேன். வெட்டுவேன். குத்துவேன்னு குதிக்கிறாரு. அந்தாளு என்னடான்னா சரியாதான் நடந்துக்கிட்டிருக்கான். இவரை கம்பெனியை விட்டு விலக்கறதுக்காக அவன் குடுத்த பத்து லட்ச ரூபாயை இவரு என்ன செஞ்சாருன்னே தெரியலை.''

''அப்படின்னா அந்த கம்பெனி இவ ரோடது இல்லையா?''

''இவர் ஆரம்பிச்சதுதான். நடுவுல வந்த பார்ட்னரோட தகராறு. ஏதோ அக்ரி மெண்ட்ல கையெழுத்து போட்ருக்காரு.

The following particulars regarding the ownership of 'MANGAYAR MALAR' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No. 36, New No.12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
4. Name of Publisher	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No. 36, New No.12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
5. Name of Editor	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No. 36, New No.12 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total captal: **Bharathan Publications Private Limited, 47-NP., Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 032.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2009 Lakshmi Natarajan
Publisher

எல்லாம் தலைக்கனத்துல, வீம்புல எடுத்த முடிவுகளாத் தெரியுது.''

''பத்து லட்சம்னு சொல்றே! பெரிய தொகைக்கா. அதை என்ன செஞ்சார்ன்னு தெரியலைன்னு சொல் றீயே?''

''அதைக் கேட்டா அப்படி கோபம் வருது. ஒரு மனுஷனுக்கு, பத்து லட்ச ரூபாய்க்கு அப்படி என்ன செலவு சொல்லு? வெளில சொல்ல முடியாத செலவுன்னா அது என்ன? யோசிச்சு யோசிச்சு எனக்கு மூளையே வெடிச்சிடும் போல இருக்கு. வார்த்தை எல்லாம் தப்பு தப்பா வருது. என் மேலயும், பாப்பா



மேலயும் இருந்த பாசம் எல்லாம் சுத்தமா போயிடுச்சி. எப்பப் பாரு... ஒரு அடிபட்ட புலி மாதிரி உறுமிக்கிட்டு... வறட்டுத் தனமா பேசிக்கிட்டு... அவமானப்படுத்திக் கிட்டு... எவ்வளவுதான் தாங்குவேன் சொல்லு. எனக்குன்னு கொஞ்சம்கூட மானம், ரோஷம் இருக்காதா? ஒரு கட்டத்துல திடீர்னு அடப் போடான்னு எல்லாத்தையும் உதறிடத் தோணிடுச்சு ஆர்த்தி. அவரோட ஓடிப் போய் கல்யாணம் பண்ணிக்கிறதா எடுத்த முடிவு ரொம்ப யோசிச்சு, திட்டம் போட்டு எடுத்த முடிவு. ஆனா... அவரை விட்டுப் பிரியலாம்னு எடுத்த முடிவு ரொம்ப ரொம்பத் திடீர்னு ஒரு விநாடியில எடுத்த முடிவு.''

''என்னக்கா இது? கையில குழந்தையை வேற வெச்சிக்கிட்டு... ச்சே! நீதான் கோபப்பட்டுப் புறப்பட்டாலும், உன்னைச் சமாதானப்படுத்தி தடுத்து நிறுத்தியிருக்க வேணாமா அவரு?''

''அதான் சொன்னனே... இவ எங்க போயிடுவான்னு ஒரு அலட்சியம்! மமதை! ஆயிரம் வார்த்தை தேவையில்லை ஆர்த்தி. ஒரு அலட்சியச் சிரிப்பாலகூட ஒருத்தரை ஆழமா காயப்படுத்த முடியும். அது அவருக்குக் கை வந்த கலை. அதை தினம் தினம் செய்வாரு.''

கண்கலங்கிய ஆர்த்தி, ஆறுதலாக அர்ச்சனாவின் கையைப் பிடித்தாள்.

''இப்ப என்னக்கா செய்யலாம்? நீ இங்க இப்படி இருக்கறது சரியில்லக்கா. நான் அவர்கிட்ட பேசட்டுமா?''

சற்று நேரம் யோசித்த அர்ச்சனா, ''வேணாம் ஆர்த்தி. நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். அதுக்கு நீ உதவி செய்தா போதும்'' என்றாள்.

(தொடரும்)

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

வழங்கும்

ஆன்மிகப் போட்டி - 2

ரூ. 5,000 பரிசு

பெருமைக்குரிய நமது இதிகாசங்கள், காவியங்கள், புராணம், திருக்கோயில்கள் போன்றவற்றிலிருந்து வினாக்களைத் தந்திருக்கிறோம். ஒவ்வொரு கேள்விக்குக் கீழேயும் மூன்று பதில்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்து '✔' செய்து அனுப்புங்கள். குலுக்கல் முறையில் 20 பேருக்கு தலா ரூ.250/- பரிசளிக்கப்படும்... எங்கே உங்க ஆன்மிக அறிவை சோதிச்சுப் பாருங்க!

1. சோற்றானிக்கரை (சோட்டாணிக்கரை) அம்மனின் பெயர் என்ன?

(அ) பகவதி காமாட்சி ☐ (ஆ) காமாட்சி ☐ (இ) வனதுர்கை ☐

2. தட்சிணாமூர்த்தி எந்தத் திசையை நோக்கி அமர்ந்திருப்பது வழக்கம்?

(அ) வடக்கு ☐ (ஆ) தெற்கு ☐ (இ) கிழக்கு ☐

3. எந்தப் பெயர் கொண்ட யானையை முதலையின் பிடியிலிருந்து திருமால் விடுவித்தார்?

(அ) ராஜேந்திரன் ☐ (ஆ) கஜேந்திரன் ☐ (இ) விஜயேந்திரன் ☐

4. மகாபாரதப் போரில் முதன்முதலாக கௌரவ சேனைக்குத் தலைமை தாங்கியவர் யார்?

(அ) துரோணர் ☐ (ஆ) கர்ணன் ☐ (இ) பீஷ்மர் ☐



5. மதுரையில் நடராஜர் செய்த வியப்பான செயல் எது?

(அ) முயலகனைக் கொன்றது ☐ (ஆ) கால் மாற்றி ஆடியது ☐ (இ) சிவகாமியுடன் போட்டி நடனம் ☐

6. பிரதோஷம் யாருக்குச் சிறப்பானது?

(அ) கருடன் ☐ (ஆ) நந்தி ☐ (இ) அனுமன் ☐

7. சூரியனுக்காக எழுப்பப்பட்ட ஆலயம் எது?

(அ) கொனாரக் ☐ (ஆ) கஜுுரஹோ ☐ (இ) திருநள்ளாறு ☐

8. எந்த ஊரின் விநாயகர் பிரபலமானவர்?

(அ) கற்பகப்பட்டி ☐ (ஆ) பிள்ளையார்பட்டி ☐ (இ) மாதவப்பட்டி ☐



9. வேடுவ குலத்தில் பிறந்து நாயன்மாராக உயர்ந்தவர் யார்?

(அ) நம்பிராஜன் ☐ (ஆ) மாணிக்கவாசகர் ☐ (இ) கண்ணப்பர் ☐

10. கிரிவலம் என்றதும் நினைவுக்கு வரும் தலம் எது?

(அ) வாரணாசி ☐ (ஆ) நாசிக் ☐

(இ) திருவண்ணாமலை

- ஜி.எஸ்.எஸ்.

போட்டி விதிகள் :

ஆன்மிக விடைகளை நிரப்பி இந்தப் பக்கத்தைக் கிழித்து அனுப்புங்க. ஒருவரே எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஜெராக்ஸ் கூடாது.

அனுப்ப வேண்டிய முகவரி : ஆன்மிகப் போட்டி - 2, மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

கடைசித் தேதி : 15.03. 2009

பெயர் : .... விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : .... ஈ-மெயில் :..............................

Gurunadhar Charanam

PRASHANTI

House of Silk Cottons

Presents

sale in Hyderabad for the first time!!



5% discount for all varieties

Ugadi Sale at YMCA hall

9-1-38, SP Road, Secunderabad - 500 003,

(Near clock tower) Tel No 040 - 27801936

for 4 days from March 6th to 9th (10 am to 8pm)

Enjoy & experience Prashanti's signature collections

Vivaham, Vaiboham, Priem, Prathyeham and Nithyam

சில்க் காட்டன் என்றாலே பிரசாந்தி

Visit our Website: www.prashanti.co.in

Main Show Room:
16, 6th Cross Street, CIT Colony,
(Behind Chettiar Hall, TTK Road),
Mylapore, Chennai - 4. Sunday Holiday
Ph: 24991850 / 24997636
e-mail: prashantisarees@gmail.com

PRASHANTI

Branches:

52, 4th Main, 17th Cross,
Malleswaram, Bangalore - 55.
Ph: 2334 1632

2080, East End, "B" Main Road,
38th Cross, 9th Block, Jayanagar,
Bangalore - 69. Ph: 2244 9595

Tuesday Holiday

Estd. 1989 ஸ்ரீசுந்தர விநாயகர் துணை உ திருச்சுழி ஸ்ரீ பழனியம்மாள் துணை

காலை காபி, 3 வேளை சைவ உணவு, தங்கும் வசதி, தினசரி ஒரு லிட்டர் மினரல் வாட்டர் 3 Tier இரயில் சுற்றுலாக்கள்.

13-3-2009 & 23-4-2009 & 10-5-2009 & 21-5-2009 & 14-6-2009 **முதல் 11 நாட்கள்** ரூ.5490
டெல்லி-திரிவேணி-காசி-வியாசகாசி-கயா-புத்தகயா-கல்கத்தா-பூரி-புவனேஸ்வர்-கோனார்க் உள்பட
★ இத்துடன் ஆக்ரா-மதுரா-அமிர்தசரஸ்-வாகாபார்டர்-ஹரித்துவார்-ரிஷிகேஷ் உள்பட – 14 நாட்கள் ரூ.6990

7-5-2009 & 18-5-2009 **முதல் 14 நாட்கள்** மதுரா–ஆக்ரா–பிருந்தாவன் ரூ.7590
டெல்லி–அமிர்தசரஸ்–ஹரித்துவார்–ரிஷிகேஸ்–**பத்ரிநாத் - கேதார்நாத்** உள்பட
★ இத்துடன் திரிவேணி–காசி–கயா–கல்கத்தா–பூரி–புவனேஸ்வர்–கோனார்க் உள்பட 19 நாட்கள் ரூ.9490

10-3-2009 & 20-4-2009 & 7-5-2009 & 18-5-2009 **முதல் 12 நாட்கள்** மதுரா–ஆக்ரா–பிருந்தாவன் ரூ.7290
டெல்லி-குருசேஷத்திரம்-சண்டிகார்-**சிம்லா-குப்ரி-மணிக்கரன்-குலு-மணாலி-** ரோத்தங்பாஸ்-வசிஷ்டாபாத்
★ இத்துடன் அமிர்தசரஸ்–வாகாபார்டர்–**ஜம்மு–வைஷ்ணவதேவி** உள்பட 16 நாட்கள் ரூ.8790

10-3-2009 & 20-4-2009 & 7-5-2009 & 18-5-2009 **முதல் 12 நாட்கள்** பூரி–புவனேஸ்வர்–கோனார்க் ரூ.7590
கல்கத்தா–**டார்ஜிலிங்–கேங்டாக்(சிக்கிம்)**–சங்குலேக்–பாபாமந்திர் உள்பட

22-03-2009 & 18-04-2009 & 12-05-2009 & 22-05-2009 **முதல் கப்பல் மற்றும் விமானம் மூலம்**
அந்தமான் சுற்றுலா சைவ உணவுடன் மாதம் தோறும் புறப்படுகிறது.

அனைத்து சுற்றுலாத்தலங்களுக்கும் சென்று வர DVD வசதியுடன் கூடிய, A/C மற்றும் Non A/C கார், வேன், மினி பஸ் வாடகைக்கு கிடைக்கும்.

* L.T.C. ரசீது தரப்படும். | II Tier A/c & III Tier A/c சுற்றுலா உண்டு

சன் டிராவல்ஸ்

Prop. K. சிதம்பரம், B.Sc., B.Ed.,
செல் : 98421 - 56668

மதுரை : 3, தெற்கு மாசி வீதி, T.M. கோர்ட் (நாகலஸ் காபி எதிரில்) மதுரை – 1. போன் : 2341133
சென்னை : 20, நடேசன் தெரு, (சிவா-விஷ்ணு ஆலயம் அருகில்) T. நகர், சென்னை-17. போன் : 24359194, செல் : 93645-59194
திருப்பூர் : J.R. சந்திரசேகர், C-32, சேரன் நகர், சினி பார்க் தியேட்டர் ரோடு, திருப்பூர்-6. செல் : 93446 10317
கும்பகோணம் : பிரசாத் போட்டோ ஸ்டுடியோ, 13-B, கோதண்டபாணி தெரு, கும்பகோணம். போன் : 0435 - 2433550





எல்லோரும் வியக்கும் சாதனைகளைப் புரிய, ஊனம் ஒரு தடையல்ல என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் ஜெஸ்ஸிகா காக்ஸ், வயது இருபத்தைந்து. பிறந்தபோதே இரண்டு கைகளும் இல்லாமல் பிறந்தவர். தோள் பட்டைகளுக்கு கீழே கைகள் இருக்கும் பாகம் காணப்படவே இல்லை. வசதி படைத்த குடும்பத்தில் பிறந்த அவளுக்கு, இந்தக் குறை எப்படி ஏற்பட்டது என்று தெரியவில்லை.

செயற்கைக் கைகளைப் பொருத்திக் கொள்ள அவள் விரும்பவில்லை. வாழ்க்கையின் தினசரி தேவைகளைப் பூர்த்தி செய்ய - எந்தெந்த காரியகளைக் காலினால் கொண்டு செய்ய முடியுமோ அவற்றை எல்லாம் காலினாலேயே செய்யப் பழகிக் கொண்டாள்.

இவ்வாறு செய்வதில் அவளுக்கு கூச்சமோ, வெட்கமோ, தாழ்வு மனப்பான்மையோ ஏற்படாதவாறு அவளது பெற்றோர்கள் பார்த்துக்கொண்டார்கள். அவளது செய்கைகளுக்கு, பயிற்சிகளுக்கு, ஆதரவு தந்து உற்சாக மூட்டினார்கள்.





கால் விரல்களில் கறுப்புப் பென்சிலைப் பிடித்






துக்கொண்டு, கண்ணுக்கு மை எழுதுவாள். புருவங்கள் திருத்துவாள். நீச்சல் கற்றுக் கொண்டாள். கைகள் செய்யும் வேலையையும், கால்களே செய்யும் வண்ணம், அதாவது கால்களுக்கு இருமடங்கு சக்தியைப் பயிற்சி மூலம் ஏற்படுத்திக்கொண்டு, நீச்சல் குளத்தில் ஒரு குறிப்பிட்ட தூரத்தை, கைகள் உள்ளவர்கள் சாதாரணமாக எவ்வளவு நேரத்தில் அடைவார்களோ, அதே நேரத்தில் சில சமயங்களில், அதை விடக் குறைவாகவே ஜெஸ்ஸிகா காக்ஸ் அடைந்தாள்.

நம்பிக்கை மனுஷி!



கராத்தே கற்றுக் கொண்டாள். கால்களால் ஸ்டீயரிங்கை இயக்கப் பயின்று கார் ஓட்டக் கற்றுக்கொண்டு லைசென்ஸ் வாங்கினாள். தனியாகவே, தைரியமாக முழு நம்பிக்கையுடன் காரில் சென்று வந்தாள். கார் ஓட்டக் கற்றுக் கொண்ட அவளுக்கு விமானம் ஓட்டவும் ஆசை வந்தது. பலரும் அவளுக்கு இந்த ஆசை தேவையா? அவளால் செய்ய முடியுமா? வானில் பறக்கும்போது, எதையாவது இயக்க வேண்டிய சமயத்தில் இயக்க முடியாமல் போனால் என்ன ஆகும்? ஆனாலும் ஜெஸ்ஸிகா காக்ஸ் மனம் தளரவில்லை.

விமானம் ஓட்டும் பயிற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள். அவளுடைய இரண்டு கால்களில் ஒரு கால், தேவையான



இயக்கங்களை தேவையான சமயத்தில் செய்ய, இன்னொரு கால் விமானத்தை அங்கும் இங்கும் திருப்பப் பயன்படும் ஸ்டீயரிங்கை இயக்க பழக்கப்படுத்திக்கொண்டாள். அதைப் போல கடுமையான பயிற்சி பெற்று, உற்சாகத்துடன், நம்பிக்கையுடன் பயின்று தன்னுடைய 25 வயதில் ஸ்போர்ட்ஸ் பைலட் சர்டிபிகேட் வாங்குவதற்கு தகுதி பெற்றாள். 10000 அடி உயரத்தில் அதிக கனமில்லாத ஸ்போர்ட் விமானத்தை ஓட்ட அனுமதி பெற்றாள்.

யாருடைய உதவியும் இல்லாமல், விமானத்தின் கதவைத் திறந்துகொண்டு ஏற வேண்டிய இடத்தில், தன்னுடைய ஒரு காலால் கதவைத் திறந்து அவள் ஏறுவதைப் பலரும் வியப்புடன் பார்ப்பார்கள்.

அவளுக்குப் பயிற்சி தந்த பாரிஷ்ட் ராவீக் என்பவர் ஜெஸ்ஸிகாவைப் பற்றிக் கூறும்போது, ''அவள் ஒரு சிறந்த பைலட். எந்தவிதமான பயமும் இன்றி முழுநம்பிக்கையுடன் ஓட்டுபவள்' என்று கூறி இருப்பது ஜெஸ்ஸிகாவின் திறமைக்கு ஒரு சான்று. உலகிலேயே கைகள் இல்லாமல் விமானம் ஓட்டும் சான்றிதழைப் பெற்ற ஒரே நபர் ஜெஸ்ஸிகாதான்.

தான் விமானம் ஓட்டத் தகுதியடைந்தது மட்டுமல்லாமல்ல - தன்னைப் போல அல்லது வேறுவிதமாக உடல் குறைபாடுகள் உள்ளவர்கள், விமானம் ஓட்டத் தைரியமாக முன் வர வேண்டும் என்று பிரசாரம் செய்து, உற்சாகமூட்டி வருகிறாள்.

அமெரிக்காவில் உள்ள நார்த் கரோலினா என்னும் மாகாணத்தைச் சேர்ந்த Able Flight என்னும் நிறுவனத்திடம் ஸ்காலர்ஷிப் பெற்று, ஊனமுற்றவர்களுக்கு விமானம் ஓட்ட, இலவசமாகப் பயிற்சி அளித்து வருகிறாள். ஏபிள் ஃப்ளையிட் உடலில் குறைகள் உள்ளவர்களுக்கு விமானம் ஓட்டப் பயிற்சி தருவதையே தங்கள் இலட்சியமாகக் கொண்டு இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கராத்தேயில் இரண்டு பிளாக் பெல்ட், சைக்காலஜியில் பட்டம் என வாங்கிக் குவித்துள்ள ஜெஸ்ஸிகா, மன எழுச்சி தரும், உற்சாகமூட்டும் பேச்சுக்களைப் பேசும் சொற்பொழிவாளரும்கூட! டைப்ரைட்டரில், தன் கால்களாலேயே நிமிடத்துக்கு 25 வார்த்தைகளை டைப் செய்வார்.

ஜெஸ்ஸிகா காக்ஸின் சாதனைகளைப் பார்த்த பிறகு, உலகின் சிறந்த ஆங்கில அகராதிகளைத் தயாரிக்கும் ஆக்ஸ்போர்டு நிறுவனத்தினரும், கேம்பிரிட்ஜ் நிறுவனத்தினரும் தங்களது அகராதிகளில் இருந்து முடியாது (can't) மற்றும் செய்ய இயலாது (impossible) என்னும் வார்த்தைகளை நீக்கிவிடலாம் என்று தீர்மானத்துள்ளனராம்.

இன்டர்நெட்டிலிருந்து...

– கமலநாதன், திருவனந்தபுரம்



வீடியோ தொல்லை!

அண்மையில் குடும்பத்தோடு ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன். வழக்கம் போல் மண மக்களை வாழ்த்துபவர்களை சேர்ந்து நிற்க வைத்து, புகைப்படமும், வீடியோவும் எடுத்தார்கள். டைனிங்- ஹாலுக்குள்ளும் வீடியோ எடுப்பவர்கள் நுழைந்தார்கள். மணமகளின் அலுவலகத் தோழிகள், கல்லூரி நண்பிகள் என்று கூடிப் பேசிக்கொண்டே அருந்தினார்கள். இங்கிதம் தெரியாமல் வீடியோ காமிராவை அப்படியும் இப்படியும் சுழற்றினார்கள். எதைச் சாப்பிடுகிறோம், எப்படிச் சாப்பிடுகிறோம் என்று வீடியோவில் பதிவு செய்தால் பெண்மணிகளுக்கு லஜ்ஜையாக இருக்காதா? பொது விழாக்களில் வீடியோ ஏற்பாடு செய்பவர்கள் இதைக் கருத்தில் கொள்ளலாமே!

- ஸ்ரீ வித்யா ஜம்புநாதன்,
வடபழநி

அனிதாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது. பரத்தைக் குளிப்பாட்ட வேண்டும், வயிற்றுக்கு ஏதாவது கொடுத்து பள்ளிக்குக் கிளப்ப வேண்டும். இன்றைக்கென்று பார்த்து குழந்தைக்கு 'மூடே' சரியில்லை.

அனிதாவின் கோபம் பரத் மேல் இல்லை. பரத் அழுவது, அனிதா பரபரப்பது எல்லாம் தெரிந்தும், தலையே நிமிராமல் கர்மமே கண்ணாக, செய்தித்தாளில் ஆழ்ந்திருக்கும் மாமனாரிடம்தான். கொஞ்சம் பேரனைக் கூப்பிட்டுச் சமாதானப் படுத்தி வைத்துக்கொண்டால் 'பரபர' என்று எத்தனை காரியங்களை அனிதா முடிப்பாள்?



மாமியார் கல்யாணி ஊரிலில்லை யென்றால், பரத்துக்கு கையில் நூடுல்ஸோ, பிரட்டோதான் அனிதாவால் கட்டிக் கொடுக்க முடியும். இங்கே சாப்பிட எளிதாக 'கார்ன்ஃப்ளேக்ஸ்' போட்டுக் கொடுத்து விடுவாள்.

பசை போட்டு ஒட்டினாற் போல சோபாவில் அமர்ந்து நாள் முழுவதும் செய்தித் தாள் படித்து, டீ.வி. பார்த்துப் பொழுதைப் போக்கும் மாமனாரைப் பார்த்தாலே அனிதாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும்.

''நாம எல்லோரும் பரபரப்பா ஏதோ பண்ணிக்கிட்டிருக்கிறதைப் பார்த்தும், எந்த உதவியும் செய்யாம நாள் முழுக்க வெட்டியா உட்கார்ந்திக்கிட்டிருக்காரே, நீங்க அவரை ஒரு வார்த்தையாவது கேக்கறீங்களா?'' என்று வெங்கடேஷிடம் சீறுவது சமயங்களில் கல்யாணியின் காதுகளிலும் விழத்தான் செய்யும். ஆனால், அம்மாவின் சாந்தமான முகபாவத்திலிருந்து அவள் என்ன நினைக்கிறாள் என்று வெங்கடேஷால் கண்டு பிடிக்கவே முடியாது.

அனிதா, வெங்கடேஷ் இருவரும் இரவு தாமதமாக வீட்டுக்கு வருவதால், முதலிலிருந்தே பரத்துக்கு ட்யூஷன் ஏற்பாடு செய்து விட்டாள். ட்யூஷன் மிஸ் சிந்து, மாலையில் வந்ததும் முகம் மலர அவளை வரவேற்று பிஸ்கட்டும் டீயும் கொடுத்து உபசரிப்பாள் கல்யாணி. சிந்துவும் பள்ளி ஆசிரியையாக வேலை

ஜெய ஸ்ரீ ராஜ் நினைவுச் சிறுகதைப் போட்டி ரூ.2000 பரிசுக் கதை!

சின்ன முள்ளும் பெரிய முள்ளும்!

செய்துவிட்டு களைத்துப் போய் வருவதால், நன்றியுடன் அதைப் பெற்றுக் கொள்வாள்.

அன்று ஏதோ விடுமுறைநாள். அனிதாவும் வீட்டில் இருந்தாள். பரத்துக்கு சிந்து அன்று, கடிகாரத்தில் மணி பார்க்கக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

பெரிய முள், பன்னிரண்டு கட்டங்களையும் ஒரு முழு சுற்று சுற்றி வந்ததும்தான் சின்ன முள், ஒரு கட்டத்தை விட்டு அடுத்த கட்டத்துக்கு நகரும் என்று சிந்து சொன்னதும், பரத் சட்டென்று 'சின்னமுள் சரியான சோம்பேறி முள் மிஸ்!'' என்றான்.

சிந்து சிரித்தாள்.

''வேகமா ஓடிக்கிட்டே இருந்தாதான் சுறுசுறுப்பு. நிதானமா ஒவ்வொரு கட்டமா நகர்ந்தா சோம்பேறின்னு அர்த்தமில்லே பரத்!'' என்றாள்.

''பன்னிரண்டு கட்டங்களையும் பெரிய முள் ஒரு சுற்று சுற்றி வந்ததும் சின்ன முள் ஒரே ஒரு கட்டம் நகருது இல்லே, அப்பத்தான் ஒரு மணி நேரங்கற காலக் கணக்கு நமக்குக் கிடைக்குது. இரண்டும் சேர்ந்து செய்யற வேலையாலதான் நமக்கு நேரம் பார்க்க முடியுது'' என்றாள் சிந்து மிஸ்.

அனிதாவின் காதுகளிலும் அது விழுந்தது. ஆனால் மனத்தில் பதியவில்லை!



ரேவதி பாலு

அடுத்த மாதம் தான் மும்பைக்குக் கிளம்பியபோது, தன் கணவரையும் வற்புறுத்தித் தன்னுடன் அழைத்துப் போனாள் கல்யாணி.

''பெரியவனுக்கும் வர முடியல. பேத்தியும் உங்களைப் பார்க்கணும்னு கேட்டுக் கிட்டேயிருக்கா. ஒரு பத்து நாள்தானே? வந்துரலாம்!'' லேசில் வீட்டை விட்டுக் கிளம்ப மனசு வராமல் கிளம்பினார் அவர்.

மாமியார், மாமனார் இருவரும் இல்லாமல் மொத்தமாக பத்து நாட்கள் தனியாக இருப்பது அனிதாவுக்கு இதுதான் முதல் தடவை.

காலையில் எழுந்ததும் டி.வி.க்கெதிரே காலியாக உள்ள சோஃபாவைப் பார்த்து, 'அப்பாடா! சோம்பேறி முகத்தில முழிக்கற வேலை இன்னிக்கு இல்லை!' என்று இகழ்ச்சியாகத் தன் மாமனாரை நினைத்துக் கொண்டாள்.

பரபரவென்று இயங்கி பரத்தை பள்ளிக்குத் தயார் செய்தாள்.

பரத் குழந்தையென்பதால் வீட்டுச் சாவியை அவனிடம் கொடுக்க முடியவில்லை. அக்கம்பக்கத்தாருடன் பழக்கமில்லாததால் அவர்களிடமும் கொடுக்க முடியவில்லை. அதனால் பரத் சாயந்திரம் வந்ததும் பில்டிங் வாட்ச்மேன் அருகேயே விளையாடிக் கொண்டிருக்க வேண்டும், வெங்கடேஷ் வந்ததும் வீட்டுக்குள் வந்துவிடலாம் என்று முடிவாயிற்று. எல்லா

வேலைகளையும் முடித்து விட்டோம் என்கிற மனத் திருப்தியுடன் அனிதா ஆஃபீசுக்குக் கிளம்பினாள்.

இரவு எட்டு மணிக்கு அனிதா வீடு திரும்பியபோது, பரத்தின் முகம் சுரத்தாகவேயில்லை.

''அப்பாவும் லேட்டா வராரு. நீயும் லேட்டா வரே. நா எப்போதான் ஹோம் வொர்க் பண்றது?'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே உதடு பிதுங்கி அழுகை வந்துவிட்டது.

''ஏன் ட்யூஷன் மிஸ் இன்னிக்கு வரலியா?'' என்றாள் அனிதா கோபமாக.

''மிஸ் வந்தாங்க. ஆனா எங்கே ஒக்காந்து சொல்லிக் குடுப்பாங்க? நீதான் வீட்டைப் பூட்டிட்டுப் போயிட்றயே?'' என்றான் பரத் அழுகையினூடே.

''அடச்சே!'' அனிதா வெறுப்போடு கைகளை உதறிக்கொண்டாள்.

''யார் வீட்டில சாவி குடுக்கிறது? வாட்ச்மேன்கிட்டே கொடுக்கவும் பயமாயிருக்கு! அது மட்டுமில்லே! வீடு திறந்திருந்தாலும் குழந்தை எத்தனை நேரம் தனியாயிருப்பான்? உள்ளே தாழ்ப்பாள் போட்டுக்கிட்டு அலுப்பில தூங்கிப் போயிட்டா என்ன செய்யறது?''

''இன்னும் ஆறே நாள்தான்! அப்புறம் அப்பாவும் அம்மாவும் வந்துருவாங்களே?''

மறுநாள் காலை எழுந்ததுமே பரத்துக்கு லேசாக ஜுரம். வெங்கடேஷ் அலுவலகம் போயாகிவிட்டது. அனிதாவுக்கு, தான் அலுவலகத்தில் அன்றைய தினம் முடித்துக் கொடுக்க வேண்டிய முக்கியமான 'ப்ராஜெக்ட்' நினைவுக்கு வர, குழந்தைக்கு ஹார்லிக்ஸைக் கரைத்துக் கொடுத்து ஜுரத்துக்கு மருந்தும் கொடுத்து, பள்ளிக்கு அனுப்பி வைத்தாள்.

அலுவலகம் வந்துவிட்டாளே தவிர, அனிதாவுக்கு வேலையே ஓடவில்லை. 'குழந்தை என்ன செய்கிறானோ தெரியவில்லையே? ஜுரம் அதிகமாயிருக்குமோ?' என்ற கவலை மனத்தை அரித்துக்கொண்டேயிருந்தது. பரத் முந்தைய நாள் இரவும் ஒன்றும் சாப்பிடவில்லையென்பது நினைவுக்கு வந்ததும், அலுவலகத்தில் அவளுக்கு காலை உணவு உள்ளே இறங்க மறுத்தது.

மாலையில், ''ஸாரி அனி! இரவு எத்தனை மணிக்கு வீட்டுக்கு வருவேன்னே தெரியல. இங்கே எக்கச்சக்கமா ஒரு பிரச்னைக்கு நடுவில இருக்கேன். நீ கொஞ்சம் சீக்கிரம் கிளம்பிடேன்!'' என்று வெங்

பொடுகு தொல்லையா?



பல்லாங்குழி விளையாடப் பயன்படும் சோழிகள் ஏழு எடுத்து கண்ணாடித் தம்ளரிலிடவும். அது மூழ்கும் வரை எலுமிச்சைச் சாறு விட்டு, பத்து நாட்கள் வரை ஊறப் போடவும்.

கொஞ்சம் தேங்காய் எண்ணெய் காய்ச்சி சூடாக்கி, அதில் ஊறிய எலுமிச்சைப் பழத் தண்ணீரை ஊற்றி சடசடப்பு குறைந்ததும் இறக்கி ஆற விடவும். பாட்டிலில் பத்திரப்படுத்தவும். தினமும் இந்த எண்ணெயைத் தலையில், மயிர்க்கால்களில் படும்படி அழுத்தித் தேய்த்துக்கொண்டு வந்தால், பொடுகு இளநரை நீங்கும். முடியும் கொட்டாது.

- எஸ். சுகந்தி சுந்தர், கீழ்வேளூர்

எழுத்தாளர் பாலகுமாரன்: மருத்துவர் ராதிகா பாலகிருஷ்ணன்தான் என்னைக் கவர்ந்த பெண்மணி. தன்னலம் பார்க்காமல் பொது



நான் மதிக்கும் பெண்!



நலத்தோடு சேவை செய்யும் பாங்கு, அனுபவமிக்க மருத்துவர்களே வியந்து போற்றக்கூடிய ஆழ்ந்த மருத்துவ அறிவு, ஏழை எளிய மக்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கும் மனித நேயம் என பற்பல நற்குணங்களை ஒருங்கே கொண்டவர் அவர்.

கடேஷ் ஃபோன் செய்ய, அனிதா அவசர அவசரமாகக் கிளம்பினாள்.

பரத் அலுப்பில் வாட்ச்மேன் அருகிலேயே ஒரு செய்தித்தாளின் மீது படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். ஜுரம் நன்றாக விட்டிருந்தது.

மறுநாள் யார் பெர்மிஷன் போட்டு வீட்டுக்கு வருவது என்று இரவு அனிதாவும் வெங்கடேஷும் பேசிக்கொண்டிருந்த போது,

''பாட்டியில்லேன்னாகூட பரவாயில்லே! தாத்தா மட்டும் இருந்தாகூட வீடு தொறந்திருக்கும் இல்லே? அப்ப சிந்து மிஸ் வர முடியுமே? ஹோம்வொர்க் முடிக்கலாம். மண்டே டெஸ்ட் வேற இருக்கு'' என்றான் பரத் கவலை தோய்ந்த முகத்துடன்.

'அட! இவன் சொல்வது கரெக்ட்தான்!' அனிதாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

அடுத்தநாள் மாலையும் அனிதாதான் முதலில் வீடு திரும்பினாள். வாட்ச்மேன் அருகே சின்னதாய் கும்பலைப் பார்த்ததும், பரபரப்பாய் அங்கே சென்றாள்.

''பரத்து, இஸ்கோல் வுட்டு வந்து இங்கே எம் பக்கத்திலேயேதான் குந்திக்கினு இருந்தான். திடீர்னு 'கேர்' ஆயிருச்சா இன்னான்னு புரியலீங்கம்மா. மயக்கம் போட்டு வுழுந்திருச்சி!'' என்றான் வாட்ச்மேன்.

அனிதா பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல், பரத்தை வாரிப் போட்டுக்கொண்டு காரை அருகிலுள்ள நர்ஸிங்ஹோமுக்கு ஓட்டினாள்.

வெங்கடேஷுக்குத் தகவல் போக, பதறியடித்துக்கொண்டு நேராக மருத்துவ மனைக்கு ஓடி வந்தான்.

''ரெண்டு பேரும் லட்சங்களில் சம்பாதிக்கிறோம். என்ன பிரயோஜனம்? நம்ம ஒரே குழந்தை பசியில மயக்கம் போட்டு...'' மேற்கொண்டு பேசமுடியாமல் அனிதா இருதயமே வெடித்துவிடும் போல விம்மி விம்மியழுதாள்.

இரண்டு நாட்களாக அனிதா அலுவலகம் போகவில்லை. லீவு எடுத்துக்கொண்டு குழந்தையுடன் வீட்டிலேயே இருந்தாள். பரத் உடல் சற்றே தேறினாற் போல இருந்தது.

மாலை கல்யாணியிடமிருந்து ஃபோன் வந்தது. வெங்கடேஷிடம் பேசியபோது, பரத்துக்கு உடம்பு சரியில்லாதது, மருத்துவ மனையில் சேர்த்து 'டிரிப்ஸ்' ஏற்றிய விவரமெல்லாம் சொன்னானாம். பதறிப் போய் ஃபோன் செய்தாள்.

''நாளைக்குக் காலை ஃப்ளைட்ல டிக்



கெட் கெடச்சிருக்கு. அப்பா உடனே புறப்பட்டு வந்துருவா. நானும் இந்த வாரக் கடைசியில வந்துருவேன். ரொம்பக் கவலையா இருக்கு. குழந்தையை ஜாக்கிரதையா பார்த்துக்கோ!'' என்றாள்.

ஒரு வாரத்தில் அனிதா அன்றுதான் சற்று ஆசுவாசமாக உணர, பரத் சந்தோஷத்தில் நடனமாடினான்.

''ஹையா! ஜாலி! தாத்தா வந்துருவாரே!''

மறுநாள். மாலை வீடு திரும்பும்போது வீடு திறந்திருக்கும். தாத்தா இருப்பார் என்று சந்தோஷமாக பரத் பள்ளிக்குச் செல்ல, பரபரப்பாக அலுவலகம் செல்லத் தயாரான அனிதா சட்டென்று தயங்கி நின்றாள்.

'யார் வீட்ல சாவி கொடுத்துவிட்டுப் போவது? இதோ மாமனார் வந்து விடுவாரே?' அவள் மனத்தில் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்கும்போதே, வெங்கடேஷிடமிருந்து ஃபோன்!

''அப்பாகிட்டே வீட்டுச் சாவி ஒண்ணு இருக்காம். உன்னைப் பூட்டிண்டு ஆஃபீசுக்குக் கிளம்பிடச் சொன்னார்'' என்றான்.

பளாரென்று கன்னத்தில் அறை விழுந்தது போலத் துடித்துத் திகைத்துப் போய் நின்றாள் அனிதா.

தன் மருமகளுக்கு இன்னொருத்தர் வீட்டில் போய் சாவி கொடுத்து 'இன்னார் வந்தால் கொடுத்து விடுங்கள்' என்று தயவாகக் கேட்பதெல்லாம் பிடிக்காது என்பதை எவ்வளவு நன்றாக உணர்ந்திருந்தால், அனிதாவை எவ்வளவு நன்றாகப் புரிந்து வைத்திருந்தால், இவ்வளவு முன்யோசனையோடு வீட்டுச்சாவி ஒன்றைத் தன்னோடு எடுத்துப் போய், அவளுக்கு எந்த மனச் சங்கடமுமின்றி காப்பாற்றியிருப்பார்?

அன்று சிந்து மிஸ் போதித்த 'சின்ன முள்... பெரிய முள்' தத்துவம் புரிய ஆரம்பித்தது. ●




ரூ. 5,000 பரிசு ஆன்மிகப் போட்டி-1 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்!

1.வி.எஸ்.பாலசுப்பிரமணியம், சந்நியாசிகரடு
2. பி. கமலா, கல்பாக்கம்
3. ஜீவா சுந்தர், பெங்களூரு.
4. சங்கரி, ஸ்ரீரங்கம்
5. ஆர். ஜெயலக்ஷ்மி, குடவாசல்
6. கல்யாணி சுப்ரமணியன், ஈரோடு
7. என். ராதிகா, மதுரை
8. சுமதி சேகர், பெங்களூரு
9. எஸ். மைதிலி, தஞ்சாவூர்
10. சுனிதா ஆனந்த், பெங்களூரு
11. சரோஜா சந்தானம், கோச்சடை
12. அட்சயா, சுத்தமல்லி
13. ஜி. ராமச்சந்திரன், திருக்கண்டேஸ்வரம்
14. எல். ஹரிஹரன் எல்.அய்யர், தேனி
15. டி. பிரேமாவதி, சென்னை - 88
16. கே. மீனாக்ஷி, திருப்பூர்
17. சுவர்ணமூர்த்தி, நாக்பூர்
18. தன்யா சுப்ரமணியன், திருவான்மியூர்
19. இரா. கலைச்செல்வி, நெய்வேலி
20. எஸ். மிருணாளினி, கோயமுத்தூர்-36

பிப்ரவரி 2009ல் வெளியான ஆன்மிகப் போட்டி-1 விடைகள்

1. ஜனகர், 2. வாழைப்பழம்
3. சம்பாதி 4. திருத்தணி
5. வாபர் 6. லட்சுமி
7. அங்கம் 8. துங்கபத்ரை

மகளிர் தின ஸ்பெஷல்



* தாய் குலத்துக்குக் கருணை அதிகம். அதனால் தான் நர்ஸ் வேலை அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

* கணவன் வெளியே செல்லும் இடத்தை மனைவி தெரிந்து கொள்ள வேண்டும்.

* தாயை ஒருமுறை விழுந்து வணங்கினால் உலகத்தை ஆறுமுறை வலம் வந்த பலன் கிட்டும்.

* வாசுகியால் வள்ளுவர் புகழ் பெற்றார். சந்திரமதியால் அரிச்சந்திரன் புகழ் பெற்றான்.

தொகுப்பு : வாரியார் மொழியிலிருந்து
லட்சுமி சிவம், சென்னை - 7

பெண் மொழிகள்!



பூவுலகில் நரகமும், சொர்க்கமும் பெண்கள் வசமே அடங்கியுள்ளன.

-டென்னிஸன்

மற்றவை எல்லாம் அதிர்ஷ்ட வசத்தால் வந்து விடும்

மனைவி மட்டும் ஆண்டவர் அருளாலேயே கிடைப்பாள்.

- போப்

- டி. பூபதிராவ், காஞ்சிபுரம்

14 பிள்ளைகள்... நேரா

அண்மையில் சென்னையில் நடந்த மாரத்தான் ஓட்டப் பந்தயத்தில், ராஜஸ்தான் வீரர் ஷில்தன் சிங் முதலாவதாக வந்தார். பூனாவில் உள்ள ஆர்மி ஸ்போர்ட்ஸ் இன்ஸ்டிட்யூட்டைச் சேர்ந்த இவர் ஓடிய





தூரம் 42.2 கிலோ மீட்டர். கடந்த நேரம் 2 மணி 24 நிமிடம். இதற்கு முன் 18 மாரத்தான் பந்தயங்களில் வெற்றி பெற்ற இவருக்கு, சென்னை பந்தயத்தில் வென்றதன் மூலம் 5 லட்சம் ரூபாய் பரிசு கிடைத்தது.

2009-10ம் ஆண்டுக்கான நிதியாண்டில், பட்ஜெட்டில், 'இந்திரா காந்தி தேசிய ஓய்வூதியம்' என்ற புதிய திட்டம் மூலம் ஆதாரவற்ற விதவைகளுக்கும் உடல் ஊனமுற்றோருக்கும் உதவித் தொகை வழங்கப்பட உள்ளது. 'இந்திரா ஆவாஸ் யோஜனா' மூலம் 60 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகள், ஏழைகளுக்காக கட்டப்படும் திட்டமும் உள்ளது.

உலகிலேயே மிகக் குள்ளமான மனிதர் என்று கின்னஸ் சாதனையில் இடம்பெற்றவர் ஹேபிங்பிங் (Hepingping) என்ற ஜப்பானியர். இவரது உயரம் 74.1 செ.மீ (சுமாராக 2½ அடி) எடை 7 கிலோகிராம். குள்ள



கல்யாணம்!




அமெரிக்கரின் சில நடவடிக்கைகள் வினோதம்தான்! நாடியா ஸுலேமான் (Nadya Suleman) என்ற அமெரிக்கப் பெண்ணுக்கு ஏற்கெனவே அழகான ஆறு குழந்தைகள் இருக்கின்றன! இருந்தாலும் நவீன மருத்துவ உதவி பெற்று மேலும் குழந்தைகள் பெற்றிருக்கிறார். அதுவும் எப்படி? ஒரே பிரசவத்தில் எட்டுக் குழந்தைகள்!

''இந்தப் பதினாலு குழந்தைகளையும் என் பெண் எப்படி வளர்க்கப் போகிறாள்?'' என்று புலம்புகிறார் நாடியாவின் அம்மா... இன்னோர் வினோதம். இந்தப் பதினாலு குழந்தைகளின் ஒரே அப்பாவான தன் ஆண் நண்பரை, நாடியா இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை!

மாக இருப்பதை மிகப் பெருமையாக நினைக்கிறார் இவர். உலகிலேயே உயரமான மனிதராக இருந்த அமெரிக்கர் ராபர்ட் வால்டோவின் (272 செ.மீ. அதாவது சுமார் 9 அடி). (தற்சமயம் இவர் உயிரோடு இல்லை) ஷூவுக்குள் இந்த ஜப்பானியர் சென்று விட முடியுமாம்!

'தி ஹிந்து' நாளிதழ் வழங்கும் சிறந்த நாடகத்துக்கான ஒரு லட்ச ரூபாய் பரிசு இவ்வருடம் 'ஸ்கெலிடன் உமன்' என்ற நாடகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந் நாடகத்தை எழுதிய பிரஷாந்த் பிரகாஷ், கல்கி கொயச்லின் இருவரும் சேர்ந்து இப்பரிசைப் பெறுகிறார்கள்.



தமிழ்நாட்டில் தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள குகைகள் மற்றும்

நியூ(ஸ்)மார்ட்



பாறைகளில் கோட்டுச் சித்திரங்கள் காணப்படுகின்றன. இவை சுமார் கிறிஸ்து பிறப்புக்கு 10,000 வருடங்களுக்கு முந்தைய ஓவியங்களாக இருக்கலாம் என்று புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். சில ஓவியங்கள் நியோலித்திக் காலத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம் என்கிறார்கள். (கிறிஸ்து பிறப்புக்கு 3000 ஆண்டுகளுக்கு முந்தைய காலகட்டம்.)

சைபர் நைஃப் என்ற ரேடியோ சர்ஜரி முறையை, சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள்.



உடலின் எப்பகுதியிலும் கேன்சர் போன்ற கட்டிகளைக் கண்டறிந்து, துல்லியமாக கதிரியக்கம் செலுத்தும் வகையில் இக்கருவி செயல்படும். இம் முறையில் இரு நன்மைகள் உண்டு. ஒன்று, மற்ற சாதாரண செல்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் கட்டிகள் மட்டுமே நீக்கப்படும். இன்னொன்று ஒரே நேரத்தில் அருகருகே இருக்கும் பல கட்டிகளை நீக்க முடியும். இதனால் சிகிச்சை நேரம் வெகுவாகக் குறைக்கப்படும்.

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில், கலப்பு இரட்டையர்களுக்கான கிராண்ட் ஸ்லாம் சாம்பியன் விருதை, சானியா மிர்சா - மகேஷ் பூபதி ஜோடி பெற்றது. சாம்பியனாகியிருக்கும் முதல் இந்திய ஜோடி இதுவே! ஆஸ்திரேலிய ஓபன் ஜூனியர் சாம்பியன் - கிராண்ட் ஸ்லாம் விருது பெற்றார், 16 வயதான யூகி பாம்ப்ரி. இந்த சாம்பியன் விருது பெறும் நான்காவது இந்தியர் இவர். இதற்கு முன் இவ் விருதைப் பெற்றவர்கள் ராமநாதன் கிருஷ்ணன், ரமேஷ் கிருஷ்ணன், லியாண்டர் பயஸ் ஆகியோர்.

உலகின் தென், வட துருவங்களிலிருந்து காந்த அலைகள் எழும்புகின்றன அல்லவா... இவை விண்வெளியில் உள்ள அணுத் துகள்களுடன் இணைந்து பல வகையான சக்தியை வெளிப்படுத்துகின்றன. அதில் வண்ணங்கள் கொண்ட வெளிச்சமும் ஒன்று (வானவில் போல). நியூஸிலாந்து வானில், தற்சமயம் குளிர்காலத்தில் தெரியும் இந்தக் காந்த வெளிச்சம், இயற்கையின் வனப்பான அதிசயங்களில் ஒன்று.

தொகுப்பு: **பத்மினி பட்டாபிராமன்**



மிக்ஸர் கிரைண்டர் ஸ்பெஷல்
Prestige™
Issue 8 • 2009
சாலிட் ஸ்டைல்
750W சக்திவாய்ந்த மோட்டார் - சந்தடி இல்லை. உஷ்ணம் இல்லை. அதிர்வு இல்லை.
உங்களைப் போன்று அழகானது
அழகும் செயல்திறனும் ஒன்றிணைந்தது
சுவையான உணவு உத்தரவாதம்
உங்கள் சமையலுக்கு ஏற்றது
ட்ரிம் அண்டு ட்ரெண்டி
உங்கள் சமையலறையின் இடத்தை அதிகரிக்கிறது.
ஆல் இன் ஒன் ஃபுட் புராஸஸ்ஸர்
எதையும் எந்த நேரத்திலும் புராஸஸ் செய்திடும்
நீங்க இன்னும் ஸ்மார்ட்டான கிச்சனுக்கு தயாரா?
சக்திவாய்ந்த 750 வாட்ஸ் மோட்டார் மற்றும் இதிலுள்ள ஒப்பற்ற கைத்திறன் கொண்ட ப்ளேடு, மசாலாக்களை பாரம்பரிய சுவையில், மிருதுவாக தயாரித்து கொடுக்கிறது. பிரெஸ்டிஜ் மிக்ஸர் கிரைண்டரின் ரசனையான வண்ண டிசைன், உங்கள் சமையலறையை மேலும் மெருகூட்டுவதுடன், சமையலையும் எளிதாக்குகிறது.
Prestige
Prestige SMART KITCHEN
A World of Ideas
Also available at other leading outlets.

Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN/CC(S)DN/170/09-11 - Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/103/09-11 - Registered as a Newspaper in Srilanka

'த்தகம்-2 • என்றும் உங்களுடன் • மார்ச் 2009

மங்கையர் மலர்

திருமண மலர்



மங்கையர் மலரால் இணைந்த ஜோடி மதுரா-ஹரீஷ்

தோள் மேலே தோள் மேலே பூமாலை பூமாலை...

மறக்க முடியுமா?

என் திருமணம் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் நடந்தது. அப்பொழுதே மாமியார், மாமனார் இல்லை. குடும்பத்துக்கு எல்லாம் கணவரது அண்ணனும் அண்ணியும்தான்.

எல்லா சடங்குகளும் முடிந்து, திருமாங்கல்ய தாரணம் நடைபெறவிருந்தது. எங்கள் வழக்கப்படி, என்னை அப்பாவின் மடியில் உட்கார வைத்தார்கள். சுற்றிலும் உறவினர்களும் நண்பர்களும்...

அத்தனை நேரம் அருகில் நின்றிருந்த அண்ணாவும், மன்னியும் அந்த நேரம் பார்த்துச் சென்றுவிட்டார்கள். அதற்கு என்ன காரணம் என்பது இன்றுவரை விளங்காத ஒன்று. மாடியில் அவர்கள் இருந்த அறைக்குச் சென்று விட்டனர். மந்திரத்தைச் சொல்லியபடியே, சாஸ்திரிகள், ''அண்ணாவைக் கூப்பிடுங்கோ'' என்றதும், கூட்டத்தில் யாரோ என்னுடைய அண்ணனை அழைத்து வர, தாலியும் கட்டிவிட்டார் மாப்பிள்ளை.

கூட்டத்தில் நின்றிருந்த அவரது அண்ணாவும் மன்னியும் அங்கிருந்ததை எல்லோரும் பார்த்தோம்; சென்றதைப் பார்க்கவில்லை. கெட்டி மேளச் சத்தம் கேட்டு, அவர்களுக்குத் தெரியாமல் தாலி கட்டிவிட்டான் தம்பி என்று 'ஓ'வென அழ ஆரம்பித்தார் அவரது அண்ணா. மன்னியும் கூடச் சேர்ந்து கொள்ள, அவருடன் சகோதரிகளும், தம்பி இப்படி செய்துட்டான் என்று அழ ஆரம்பித்தார்கள்.

தாலி கழுத்தில் ஏறியதும் சந்தோஷப்பட வேண்டிய என் மனம் துடித்துப் போய்விட்டது. பெரியவர்களின் ஆசிக்குப் பதிலாக ஏச்சு பேச்சுதான் எனக்குக் கிடைத்தது. என் பெற்றோர்கள் அவர்களைச் சமாதானப்படுத்த எத்தனை பாடுபட்டிருப்பார்கள்... நினைத்துப் பாருங்கள்.



இன்றும் திருமண நாள் வந்தாலும் சரி, என் குடும்பத்தில் துன்பம் வந்தாலும் சரி, இந்த நிகழ்ச்சி என் கண் முன் தோன்றும். இவர்கள் அழுததினால்தான் துன்பங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதோ என நினைப்பேன். சம்பந்தப்பட்டவர்கள் உயிருடன் இல்லை. மற்றவர்கள் மறந்து போயிருப்பார்கள். பாதிப்புக்குள்ளானவள் நான். மறக்க முடியுமா?

– எம்.வி, சென்னை

கல்யாணமா! **கவலையே வேண்டாம்!!**



ஜெ.கே.

மேரேஜ் கேட்டரிங் சர்வீஸ்

Best Catering in Tambaram

பிளாட்- 32, ஜெயலக்ஷ்மி நகர், சந்தோஷ்புரம், சென்னை-600 073.

73, எம்ஜிஆர் தெரு, (சர்வமங்கள விநாயகர் கோவில் அருகில்) நங்கநல்லூர் சென்னை – 63.

நளபாக மாமணி

குடந்தை ஜெ. கிருஷ்ணமூர்த்தி ஐயர்

போன்: 2278 0769/ 2278 1483/ 98418 21327/ 98418 21328

கல்யாணம் மற்றும் அனைத்து விசேஷங்களுக்கும் தங்கள் பட்ஜெட்டுக்குள் காண்பவர் பாராட்டும்படி எல்லா ஏற்பாடுகளையும் நாங்களே முழு பொறுப்பு ஏற்று மிக மிக குறைந்த செலவில் மிகவும் சிறப்பான முறையில் தங்கள் விருப்பம் போல் செய்து தர காத்திருக்கிறோம்.

திருமணத்திற்கு நாங்கள் செய்து தரும் ஏற்பாடுகள்

- கல்யாண மண்டபம்
- மங்கள வாத்தியம்
- பூ,மாலை வகைகள் வேண்டிய அளவு
- அங்குமணி சாமான்கள் ஜீப்பட ஜாருடன்
- வைதிகாள் சாமான்கள்
- தாம்பூல (தேங்காய்) பை பிரிண்டிங் கவருடன்
- சீர்பட்சணங்கள் இருவர் ஆத்துக்கும்
- மண்டபம் கோலம் ஏற்பாடுகள்
- ஆரத்தி பச்சைப்புடி ஏற்பாடுகள்
- முதல்தர சாப்பாடு டிபன் வகைகள்
- 24 மணி நேர காபி, டீ, பூஸ்ட், பால்
- குடந்தை வெற்றிலை, சீவல், ரசிக்லால் பாக்கு பீடா
- யூனிபார்ம் சர்வீசஸ்
- பேப்பர் ரோல், மினரல் வாட்டர்
- காசியாத்திரை சாமான்கள் (பட்டுபாய்,குடை,வாக்கிங் ஸ்டிக்)
- கூல் வாட்டர் மற்றும் ஹாட் வாட்டர்
- தங்களை வரவேற்க இன்முகத்துடன் ஆட்கள்
- டைனிங் ஹாலில் உபசரிக்க ஆட்கள்
- வைதிகாளுக்கு சாமான்கள் கொடுக்க ஆட்கள்
- காபி ஸ்டால் மற்றும் ஜூஸ் ஸ்டால்


திருமணத்திற்கு எல்லா ஏற்பாடுகளையும் நாங்கள் உங்கள் ஒத்துழைப்புடன் செய்து தர காத்திருக்கிறோம். இவ்வளவு வசதிகள் செய்து விட்டு பணம் அதிகம் இருக்கும் என்று எண்ணி விடாதீர்கள். உங்கள் பட்ஜெட் எப்படியோ அதைவிட குறைவாக நாங்கள் செய்து தருகிறோம். உங்கள் இல்லத்தில் திருமணம் என்றால் எங்களை ஒருமுறை அணுகுங்கள். பிறகு இவரை பார்க்காமல் விட்டுவிட்டோமே என்று வருந்த வேண்டாம்.

ஆர்டரின் பேரில் அனைத்து விசேஷங்களுக்கும் 25 நபருக்குமேல் முதல்தர சாப்பாடு, டிபன், காபி மற்றும் சீர்பட்சணங்கள் உங்கள் இல்லத்துக்கே வந்து சர்வீஸ் செய்து தருகிறோம்.

உண்மையான உழைப்பே உயர்வு தரும்

கைராசி! நம்பிக்கை!! நாணயம்!!! **தரம் ஒன்றே எங்களது தாரக மந்திரம்!**

கல்யாண வரம்



சைவ சமயத்தினரால் 'பெருங்கோயில், பூங்கோயில்' என்று அழைக்கப்படும், 'திருவாரூர்' திருக்கோயிலில் 'அருள்மிகு கமலாம்பாள்' இரண்டு கரங்களுடன் ஞான சக்தி பீடத்தில் தவக் கோலத்தில் காட்சியளிக்கின்றாள். இவளும் இறைவனைப் போன்றே முடியில் கங்கை, சந்திரனைச் சூடிக் கொண்டிருக்கிறாள்.

கலைமகள், மலைமகள், அலைமகள் ஆகிய மூன்று தேவியரின் சங்கமமாக இருப்பவள் (க - கலைமகள், ம- மலைமகள், ல- அலைமகள்). மேலும் 64 சக்தி பீடங்களில் தேவி ஆட்சி புரியும் ஐந்து பீடங்களில் (காசி - விசாலாட்சி, காஞ்சி - காமாட்சி, மதுரை - மீனாட்சி, ஆருர் - கமலாயதாட்சி, நாகை - நீலாயதாட்சி) முதன்மையானவளாகவும் திகழ்கின்றாள். மூன்று தேவியரும் ஒன்றாக இணைந்து நிற்கும் இந்த கமலாம்பிகா தேவியை 'துர்வாச முனிவர்' வழிபட்டுள்ளார். திருவாரூரில் பிறந்த இசை மும்மூர்த்திகளில் ஒருவரான 'முத்துசாமி தீட்சிதர்' ஸ்ரீகமலாம்பாள் மீது 'நவாவரண கீர்த்தனை' பாடியுள்ளார்.



திருக்கோயிலுக்குள் அமைந்த ஒரு தனிக் கோயில் 'நீலோத்பலாம்பாள்' (அல்லியங் கோதை) இரண்டு கரங்களுடன் ஆதி சக்தியாகத் திகழ்கிறாள். அம்பாளுக்கு அருகில் விகயை என்ற ஒரு தோழி



தரும் கமலை!

நிற்க, அவளது தோளில் முருகப் பெருமான் அமர்ந்துள்ளார். தேவி தோழியின் தோளில் அமர்ந்துள்ள முருகப் பெருமானின் தலையை தொட்டுத் தடவுவது போன்று தேவியின் திருமேனி அமைக்கப்பட்டுள்ளது. (பெரும்பாலான சிவாலயங்களில் சிவன், பார்வதி இருவருக்கும் இடையில் முருகப் பெருமான் குழந்தையாக அமர்ந்திருக்கும் சோமாஸ்கந்த உற்சவ மூர்த்திகளை வைத்தும் திருக்கல்யாண வைபவத்தை நடத்துகின்றனர். இதுவும் கலியாண சுந்தரரே.) இவ்வாறான திருவுருவம் வேறு எந்த ஆலயத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த 'நீலோத்பலாம்பா'ளின் கருவறையில் 'பள்ளியறை'யும் அமைந்து தனித்தன்மையுடன் விளங்குகிறது. இத்தலத்தில் அல்லியங்கோதையுடன் இறைவன் திருமணம் நடந்தபடியால் இதுவும் ஒரு திருமணத் திருத்தலமாகிறது.

கமலாம்பாள் சன்னிதியின் மேற்கு மூலையில் அட்சர பீடமொன்று உள்ளது. அதில் பீடமும், ஐம்பத்தொரு எழுத்துக்கள் எழுதப்பட்ட திருவாசியும் உள்ளன. அன்னையின் தவத்தினால் வன்மீக நாதரே (புற்றிடங்கொண்ட பெருமான்) இத்தலத்துக்கு எழுந்தருளியதாகக் கூறப்படுகிறது. அருள்மிகு கமலாம்பாள் தனித் திருக்கோயில், தனிக் கொடி மரம், தனித் திருமதில் கொண்டு காட்சியளிக்கிறாள். ஆடிப் பூர விழா மற்றும் ஆடி வெள்ளி, தை வெள்ளிக் கிழமைகள் இங்கு சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. 54 நாட்கள் 17 முறை ஒன்றிய மனத்துடன் அன்னையை வலம் வந்தால் திருமணப் பேறு, புத்திர பாக்கியம், வேலை வாய்ப்பு போன்ற வரங்கள் கிட்டுமென்று நம்பப்படுகிறது. கல்வி, கலைகளைத் தர வேண்டி ஞானதீபம் ஏற்றி, அட்சர தீப அர்ச்சனையும் பக்தர்கள் மேற்கொள்கின்றனர்.

'எரிசனக் கொற்றவை' எனப்படும் 'அருள்மிகு ரௌத்திர துர்க்கை' சன்னிதியில் திருமணத் தடை நீங்க ராகு காலத்தில் அர்ச்சனை செய்கின்றனர். காரிய சித்திக்காக நிறைய ஆராதனைகள் நடக்கின்றன. இந்த துர்க்கையையும் சேர்த்து திருவாரூர் ஆலயத்தில் பிரதான துர்க்கையாக மஹிசாசுரமர்த்தனியுடன் அஷ்ட

என்ன சம்பந்தம்?



திருமணத்தின் முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்று காசி யாத்திரை! கையில் மூங்கில் தண்டும், குடையுமாக மாப்பிள்ளை புறப்படுவார்.

பெண்ணின் தகப்பனார் தடுத்து, 'என் மகளைத் திருமணம் செய்து கொள்ளுங்கள்' என்று அவரை அழைத்து வருவார். எதற்காக இந்த வழக்கம்?

வாழ்க்கை என்பது துறப்பதற்கல்ல... ஏற்பதற்கு!

பொறுப்புகள், கடமைகள் என்ற அனைத்தையும் எவன் ஏற்கிறானோ அவனே வீரன்! அவனே சிறந்தவன்!

இதை உபதேசமாகச் சொல்லாமல் சம்பவமாக ஆக்கியிருக்கிறார்கள்.

'துறவு என்று சொல்லி நழுவப் பார்க்காதே; உன்னை மட்டுமே தற்காத்துக் கொள்ள நினைக்காதே, துறவு சிறப்பானதுதான். ஆனால் அதைவிட சிறந்தது இல்லறம்தான்' என்று பாடமாக நடத்தாமல் உணர்த்தும் சம்பவம்தான் இது!

- ஆர். ஜானகி ரங்கநாதன், சென்னை - 4

துர்க்கைகள் உள்ளனர்.

இறைவனது கருவறை நிலைப்படி மேல் விளிம்பில் கைலாயநாதர் பார்வதி தேவியின் கரம் பற்றி தேவர்கள் புடை சூழ திருமணக் கோலத்தில் உள்ள காட்சி, நுண்ணிய சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. மற்றும் திருமகள் திருமாலையே மணந்துகொள்ள வேண்டும் என்று இத்தலத்துக்கு வந்து தவம் செய்து தன் பெயராலேயே இந்நகரம் வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டபடியால், இத்தலம் 'கமலாலயம்' என்று அழைக்கப்பட்டதாம்!

புற்றிடங்கொண்ட பரமனின் பூங்கோயிலுக்கு இணையாக தெற்குச் சுற்றில் 'தியாகராஜர் திருக்கோயில் உள்ளது.

இந்த ஆலயத்தில் திருமணக் கோலத்தில் உள்ள சுவாமி, அம்பாள் இருவருக்கும் இரண்டு மாலைகளைச் சார்த்தி மூன்றாவதாக ஒரு மாலையை ஆணாக இருந்தால் அம்பாள் சன்னிதியிலும் பெண்ணாக இருந்தால் சுவாமியின் கரத்திலும் சார்த்தி அர்ச்சனை செய்து மங்களப் பொருட்களோடு நிவேதித்து கழுத்தில் அணிவிக்கப்படும். அதை அணிந்து திருக்கோயிலை வலம் வந்து மாலையினை வீட்டில் பூஜையறையில் வைத்து பூசிக்க, விரைவில் திருமணம் நடைபெறும். திருமணம் முடிந்த பின்னர் தம்பதியினர், இறைவனை வழிபட்டு திருக்கோயிலில் பெற்று வீட்டில் பூசித்த மாலைகளை ஆலயத்திருக்குளங்களில் சேர்ப்பிக்க வேண்டும்.

- விஜயலட்சுமி சுப்ரமணியம், கோயமுத்தூர் - 5

குரு கிருபா



அசத்தலான உயர்தர திருமண சமையலுக்கு

SCS


SARASWATHI
CATERING SERVICE

தலைமுறையினர் வாழ்த்தும் அளவுக்கு உங்கள் இல்லத்தில் திருமணம்
இருக்க வேண்டுமென்றால் சமையல், சாப்பாடு என்பது தான் மிகசிறந்தது!
திருமணத்திற்கு சமையல் என்று சொன்னால் நினைவுக்கு வருவது
பாரம்பரியம் சுவைமிக்க தென் இந்தியாவின் மிகச்சிறந்த
ஒரே ஒரு முன்னணி ஸ்தாபனம்





சரஸ்வதி கேட்டரிங்



வேத மந்திரம் ஒலிக்க...
வேள்வி அக்னிஜ்வலிக்க...
மணாளன் அடியொற்றி
மங்கையவள் வலம் வர...
அறிவும், ஆயுளும்
வளமாக ஆசி பெற்றனர்
இன்சுவை பரிமாறலோடு
புது வாழ்வில் பிரவேசித்தனர்

சரஸ்வதி கேட்டரிங்



கல்யாணமா எங்களை கூப்பிடுங்க
நீங்களே பிரமிச்சுபோவீங்க

SARASWATHI
CATERING SERVICE

Ellorukkum Favourite

Insuvai Vendan **G. Subramani Iyer**

No.65, (old no. 30), Subramanian St., West Mambalam, Chennai - 33.
Off: 24742433 Res: 23719535 Cell: 98400 54900 Tele Fax: 24742433
Branch off: Coimbatore Ph: (0422) 2343710
E- Mail: insuvaivendhan@yahoo.com www.saraswathicateringservice.com

We undertake Marriage Catering all over India

அன்னாசி கொஜ்ஜூவும்



சமீபத்தில் மும்பையில் ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தேன். அதிகம் கூட்டம் சேர்க்காத கல்யாணம். சாப்பாடு ரொம்ப நன்றாக இருந்தது.

ஒரே சீரான அளவில் நறுக்கிய, சுத்தமான நுனி வாழை இலை போட்டபோதே அவர்களது தரம் தெரிந்தது. பரிமாறியவர்கள் பொருத்தமான, சுத்தமான, இஸ்திரி மடிப்பு கலையாத சீருடை போட்டிருந்தார்கள். அவர்கள் பரிமாறும் விதத்தை மேற்பார்வை பார்க்க என்று இருந்தவர்கள் பெரிய ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் இருப்பது போல சீருடை அணிந்திருந்தனர். எல்லோருமே இளைஞர்கள். அந்த வேலை செய்யத் தேவையான மனப்பாங்கு உள்ளவர்களைத் தேர்வு செய்து, முறைப்படி பயிற்சி கொடுக்கப்பட்டவர்கள் என்பது அவர்கள் நடத்தையிலேயே தெரிந்தது.

அருமையான காம்பினேஷனில் பாலக்காட்டு மெனு. அவியல், பருப்புசிலி, அடைப் பிரதமன், ஜிலேபி, புளி - இஞ்சி என்று எல்லாமே கச்சிதமாக ரொம்ப நன்றாக இருந்தன. சிந்தாமல், சிதறாமல், ஒரு அவசரமோ, பரபரப்போ இல்லாமல் பரிமாறினார்கள். ஒரு பதார்த்தம் இன்னொன்றில் ஒட்டவில்லை. ஓடவில்லை. வைத்த அளவும் கச்சிதமாக இருந்தது. மறுபடி மறுபடி வந்து விசாரித்தார்கள்.

அங்கு மானேஜர் போல இருந்தவரிடம் என் பாராட்டைத் தெரிவித்து, கல்யாண சமையலில் இருந்த ஒரு வித்தியாசமான கிரேவியின் செய்முறை கொடுக்க முடியுமா என்று கேட்டேன். மறுநாளே அதன் செய்முறை விளக்கத்துடன் ஈமெயிலில் பதில் வந்துவிட்டது. அந்தச் செய்கையிலும் அந்த நிறுவனத்தின் வெற்றியின் ரகசியம் வெளிப்பட்டது. இதோ அவர் கொடுத்த அந்த வித்தியாசமான கொஜ்ஜூவின் செய்முறை விளக்கம்:

அசத்தல் விருந்தும்!



அன்னாசி கொஜ்ஜு!

பைனாப்பிள் - ½ kg (4-6 slices)
அரிசி - 1 டேபிள்ஸ்பூன்
புளி - சின்ன எலுமிச்சங்காய் அளவு
பச்சை மிளகாய் - 4
தேங்காய் துருவியது - 1 கப்
வெல்லம் - 25 கிராம்
மஞ்சள் பொடி - ½ டீஸ்பூன்
ஜீரகம் - ½ டீஸ்பூன்
கடுகு - ½ டீஸ்பூன்
உளுத்தம் பருப்பு - ½ டீஸ்பூன்
எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்
கருவேப்பிலை - 4 ஆர்க்
உப்பு - 2 டீஸ்பூன்



செய்முறை:

★ பைனாப்பிளை சிறு சிறு துண்டங்களாக (சுண்டைக்காய் அளவு) நறுக்கிக் கொள்ளவும்.

★ புளியை வெந்நீரில் ஊறப் போட வும்.

★ பச்சை மிளகாய், தேங்காய், ஜீரகம், அரிசி எல்லாவற்றையும் ஒன் றாகப் போட்டு அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

★ புளியைப் பிழிந்து 3 கப் புளித் தண்ணீர் எடுத்து பெரிய பாத்திரத்தில் விட்டு, மஞ்சள் பொடி சேர்த்து புளி வாசனை போக கொதிக்க விடவும்.

★ வெல்லமும், கருவேப்பிலையும் சேர்த்து 5 நிமிடம் கொதிக்க விடவும்.

★ பைனாப்பிள் துண்டங் களைச் சேர்த்து இரண்டு நிமிடங் கள் கொதிக்க விடவும்.

★ தேங்காய் அரைத்த விழு தையும், உப்பையும் சேர்த்துக் கலந்து மேலும் இரண்டு நிமிடங்கள் கொதிக்க விடவும். மிகவும் கெட்டி யாக இருந்தால் தேவையான அளவு வெந்நீர் சேர்த்துக் கலந்து அடுப் பிலிருந்து இறக்கவும்.

★ வாணலியில் காய்ந்த எண் ணெயில் கடுகு போட்டு வெடித் ததும், உளுத்தம் பருப்பு சேர்த்துப் பொன்னிறமாக வறுத்து கொஜ் ஜுவில் கொட்டிக் கலக் கவும்.

– வி. ஜெயா,
இராணிப்பேட்டை

முறிந்த நட்பு இறுகியது!

என்னுடைய ஆருயிர்த் தோழியின் மகள் திருமணம், நவம்பர் இருபத்து நான்காம் தேதி நடந்தது. பத்து நாட்கள் முன்பாகவே பத்திரிகையை அனுப்பி என்னையும் என் கணவரையும் வரும்படி என் தோழி கடிதம் எழுதி விட்டாள்.

எனக்கு இருபதாம் தேதியிலிருந்து பொறுக்க முடியாத தலை சுற்றல். கண்களைத் திருப்பினாலே ஒருவித மயக்கம். மருத்துவர், எனக்கு 'வெர்டிகோ' என்ற வியாதியிருப்பதால் எங்கும் அலைச்சல் கூடாது என்று எச்சரித்துவிட்டார். ஆதலால் திருமணத்துக்கு வர முடியாத சூழ்நிலையை அவளுக்கு ஃபோனில் சொல்லி மன்னிக்கும்படி கூறினேன். ஆனால், அவள் நம்பாமல் கோபித்துக் கொண்டு விட்டாள்.

நான் பத்து நாட்கள் கழித்து அவளுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில், 'நான் கல்யாணத்துக்கு வர இயலாத காரணம் பொய்யாக இருந்தால் எனக்கு ஏதாகினும் கெடுதல் நடக்கட்டும். ஆனால், உண்மையாக இருந்தால் உனக்கு ஏதாவது ஒரு நல்ல சமாசாரம் வரட்டும்' என்று எழுதினேன். அதற்கும் பதில் இல்லை.



திடீரென்று ஒருநாள் எனக்கு அவளிடமிருந்து ஒரு டெலிஃபோன் கால் வந்தது. ''ராதா, என்னை மன்னிச்சுடு! நீ எழுதிய காரணத்தை நான் முழுமையாக நம்புகிறேன். எனக்கு இன்று ரூ. 25,000 பணம் வந்தது. நான் எதிர்பாராதது. ஏதோ பென்ஷன் அரியர்ஸாம்!'' என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

- ராதா கிருஷ்ணமூர்த்தி,
கும்பகோணம்

உண்மை சம்பவம்

மங்கையர் மலரின்

திருமண மலர்

திருமண மலர் விளம்பரக் கட்டண விவரங்கள்

முதல் முப்பது வார்த்தைகளுக்கு ரூ. 500/-

30க்கு மேற்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ. 15/-

வண்ணத்தில் ஹைலைட் செய்ய கூடுதல் கட்டணம் ரூ. 100/-

1" X 1" அளவில் வண்ணப் புகைப்படத்துடன் 30 வார்த்தைகள் அடங்கிய விளம்பரத்துக்கு ரூ. 800/- (அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ. 15/-)



வண்ணப் புகைப்படத்துடன் விவரங்கள் அடங்கிய அரை பக்க **Profile** விளம்பரம் ரூ. 2500/-



வண்ணப் புகைப்படம் அனுப்புபவர்கள், தெளிவான புகைப்படமாக, பாஸ்போர்ட் அளவில் இரண்டு பிரதிகள் அனுப்பவும். புகைப்படங்களை திருப்பி அனுப்ப இயலாது.

கட்டணத்தை நேரில் ரொக்கமாகவோ அல்லது சென்னை செக்காகவோ, வெளியூர் டிமாண்ட் டிராப்டாகவோ, **மங்கையர் மலர்** என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

மங்கையர் மலரின் திருமண மலர்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.
தொலைபேசி : 4343 8888 Fax : 044 - 4343 8899
email: marketing@kalkiweekly.com

மணமகள் தேவை



K.N. கணேசன்

◆ ஐயர், பிரஹசரணம், பாரத்வாஜம், உத்திரட்டாதி, 32 வயது, **BA., Prop TVS & Sons** கேன்டின், வருட வருமானம் 3 லட்சம், நல்ல குடும்பப்பாங்கான பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். **Contact: Mr.V.P. Seetharaman, 944464514/9444685312. Box No. 15548**

S. GANESH, M.Com




◆ **Father (Brahmin), Mother (Non-Br),** பாரத்வாஜம், பூசம், **28, 5'11", Project Coordinator,** தனியார் நிறுவனம், ரூ.25,000/, வேலையில் உள்ள, **Mixed Parentage,** உடைய பட்டதாரி பெண் தேவை. செல்போன்: 9790922864, **Box No. 15556**



பி. கணேசன்

◆ ஐயர், பிரஹச்சரணம், கௌண்டின்யம், 1972, அஸ்வினி, 5'7", டிப்ளமோ, தனியார், 13,000 சம்பளம் சுமாராக படித்த மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். வரதட்சணை தேவையில்லை. சகோதரிகள் கிடையாது. செல்: 9965319440/04567-227143. பெட்டி எண்: 15623

V.S SRIRAM



◆ **Iyer, Vadama, Vadhulam, Uthrattathi, Jul 1980, 5'7", fair, handsome, VHSC & Computer, officer in GGPL near Hyderabad, hearing impaired, seeks bride SSLC above & Computer, any Brahmin job assured for girl. 044-24963584, 9444417366. Box No. 15624**

◆ **Tirunelveli Iyer, Vadamal, Kousikam, Ashwini, Mesha Rasi, 20.6.1979, 5.6', B.B.A, Own Catering Business (Mount Catering), Rs. 8 lakhs per annum, having own house, two cars, very charming boy seeks unemployed girl. Ph. 044-24320699/ 9941342269. Box No. 15541**

◆ **Iyer, Vadamal, Haritham, Swathi, fair, 30/161, M.B.B.S. D.C.H. DNB Doctor, Child Specialist, Reputed Hospital and Clinic, Chennai, Rs.80,000/- per month seeks suitable bride. Contact 23722303, Cell: 9840759790. Box No. 15542**

◆ Iyer, Vadamal, Haritham, Kettai, 34/172, Territory Executive, Fourrts India, Chennai, 25,000 p.m. seeks suitable bride. Subsect no bar. Contact 23722303. Cell: 98408 00608. Box No. 15543

◆ Brahmin, Gurukkal, Bharadwajam, Krithigai, Reshabam, 28, 171 cm, B.E. Software Engineer, MNC, fair boy seeks alliance preferably, B.E, M.C.A, M.B.A. Contact 0416-2255454. Box No. 15544

◆ Iyer, Vathima, Srivatsa, Poorattathi - Four, 33/170, Diploma from Trichy Seshasayee, own business, 3,60,000 p.a seeks suitable girl. 9841006203. Box No. 15545

◆ Wanted bride 30 to 34, graduate, employed, affectionate, for B.Com, TCS MNC, Chennai, 9.5 lacs per annum, July 72, Bharadwajam, Pooratadhi, Vadamal, 5'5", clean habits, very smart, Subsect no bar. Ph:044-23719055, 9444569755. Box No. 15546

◆ Iyer, Brahacharanam, Srivathsa Gothram, Rohini 4, M.B.A, 30, 170, Assistant Manager, ICICI Bank, Ramnagar Branch, Coimbatore City, Rs. 25,000/- p.m, Own house, Orthodox Family, seeks religious, God fearing employed girl, perferably Banking, L.I.C, Educational Institutions (Transferable) with Kethu - Rahu in 1 and 7th place in girl's horoscope. Contact 04322-228512. Box No. 15547

◆ Pallakad Iyer Groom, Brahacharnam, Kaushikam, Pooram, 30, 170 cms, B.Com, MBA, Bangalore, Salary 12L seeking bride of south Indian Brahmin origin only - height 5 and above, age between 25- 29. professionally qualified, employed in India, good family background. Divorcees please excuse. Subsect no bar. Reference Tamil matrimony id M 1385734. Contact subbulata@yahoo.com mobile 09821679153. Box No. 15550

◆ Iyer, Vadama, Bharathwaja, Mirugaseerisham, Second Padam, 32/5.10', B.E, Sr. Software Engineer, Chennai, Rs. 50,000 p.m, seeks working / non working girl. Subsect no bar. Ph: 044-22440676. Box No. 15551

◆ Iyer, Vadama, Mirgasiridam 4, Harita, M.Sc., M.Phil, PhD (Phy), LLM, MBA, Section Engineer, Railway, Jabalpur Division, 43/168/ 28,000, clean habits, seeks preferably unmarried girl. Send Box No. 15552

◆ Iyer, Vathimal, Athreya, Ayilyam-3, 34, 167 cm, very fair, MA, MBA, Indian Air Force, Coimbatore, Rs. 25,000/- per month. Seeks educated, employed/unemployed, bride from Respectable family. Ph: 044-24733839, 9444433639. Box No. 15553

◆ Tamil Iyer, Brahacharanam, Naithruva Kasyaba, Uthram (Kanya), slim, 27 Aug, 1976, 178 cm, M.Com, DCA, Rs. 30,000/ p.m, well settled, own house at Kodambakkam, Clean habits expects graduate employed/ unemployed girl. Ph: 044-24880182. Box No. 15554

◆ Iyer, Vadamal, Bharatwajam, Poorattathi - 4, December 1958, Height 5.7', B.Com, CAIIB, Senior Asst, SBI, Rs. 22,000 p.m, un married, seeks, suitable bride. Ph: 022-28952604. Box No. 15555

◆ **Tamil Iyer, Vadamal, Uthiradam Sankruthi 26, 5.5', MBA, working in EMEN (UAE) seeks good looking graduate girl from Tamil Iyer Family. Contact Ananthanarayanan 9003089750, 9444929387. Box No. 15557**

◆ ஐயர், வடமாள், பாரத்வாஜம், ரேவதி, 31/6', டி.எம்.இ. சென்னையில் தனியார் நிறுவனத்தில் 10,000 மாத வருமானம், சொந்த வீடு உள்ள வரனுக்கு, 10வது/ 12வது/ டிகிரி படித்த, வேலைக்குச் செல்லும்/ செல்லாத பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். போன்: 09901693197/080-23411599 (பெங்களூர்), 97911 24240 (சென்னை). பெட்டி எண்: 15558

◆ **வடமாள் (சுக்லயஜுர்), தனியார் தவிரவும் Sundram MF Agent, 6,000, சொந்த வீடு, 1976, எட்டாம் வகுப்பு, Bhajan Instrument player, பிராமணர் எப்பிரிவும் சம்மதம். மனப்பொருத்தம் போதுமெனினும் சம்மதம். Simple marriage contact 9442865530, 9486839580. Box No. 15559**

◆ Iyer, Vadamal, Naithruva Kashyapa, Anusham-2, 34, 5'8", B.Com, (MBA), BCSE, CCNA, Software, HR Consultant, Own

Business, Rs. 35,000/- p.m, seeks graduate girl. Sub.sect no bar. Ph: 044-22244273. Box No. 15560

◆ **Compatable match for smart, fair and extrovert brahmin Iyer Boy 1979/6.1', B.Com, MBA finance, well settled in Delhi seeks homely brahmin Iyer girl. People intrested can contact 09873-669780 (Mrs Meenambal), view profile ID: M995531. Box No. 15561**

◆ ஐயர், வடமாள், பராசரம், மிருகசீர்ஷம், +2, மாத வருமானம் 15,000/- சென்னையில் சொந்த வீடு உள்ள மணமகனுக்கு +2 , 10th, படித்த 35/41 வயது உள்ள மணமகள் தேவை. எளிமையான திருமணம். எதிர்பார்ப்பு இல்லை. Contact: 080-28482953, 09945530276. Box No. 15562

◆ **Iyer, Vadama, Kousigam, Kettai, 32/168, B.Sc, GNIIT (MCA), Senior Software professional in Reputed MNC, Chennai seeks suitable bride. Subsect no bar. Contact: 044 - 22780189. Box No. 15563**

◆ Iyer, Vadamal, Bharathvajam, Poosam, Kadagam, 1968, fair, state Govt job, Rs. 11,500/-p.m. M.A.B.Ed, 165 cm, Innocent, legal divorcee, no encumbrance, seeks homely good looking, degree/ +2, affectionate, adjustable, good habit girl, simple marriage. Box No. 15564

◆ **மணமகன் அய்யர், வடமான், விஸ்வாமித்ர கோத்திரம், கிருத்திகை நக்ஷத்திரம், 37 வயது எம்.டெக், என்ஜினீயர், 14 வருடங்கள் வெளிநாட்டில் வேலை செய்து விட்டு இந்தியாவில் தற்போது செட்டில் ஆகி உள்ளார். விவாகரத்து நிலுவையில் உள்ளது. குழந்தைகள் இல்லை. இந்த மணமகனுக்கு, 32 வயதுக்குள் பிராமண வகுப்பைச் சேர்ந்த (உட்பிரிவுகள் ஆட்சேபணை இல்லை) குடும்பப்பாங்கான திருமணம் ஆகாத, அழகான, வசதியில்லாத குடும்பத்தைச் சேர்ந்த பெண் தேவை. படிப்பு அவசியம் இல்லை. எந்த எதிர்பார்ப்பும் கிடையாது. பெட்டி எண். 15565**

◆ டெல்லியில் MNC கம்பெனியில் 20,000/- சம்பளத்தில் பணிபுரியும் பிள்ளைமார் (துளுவ வெள்ளாளர்) இனத்தைச் சேர்ந்த (M.Com, DCA, 31, 170 cm, ரிசபராசி, கார்த்திகை நட்சத்திரம்) மணமகனுக்குக் குறைந்த பட்சம் பட்டப்படிப்பு படித்து வேலையில் உள்ள/இல்லாத மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். போன்: 011-27853793. பெட்டி எண். 15566

◆ **Balaji, Vadamal, Vadhulam, Uthiram - I, 38/5.6', Diploma in Radio & T.V, Private firm, Rs.8,000/- seeks working/non working girl. Subsects no bar. Divorcees without encumberance can also apply. Ph: 2452-3746/ (0)9841046559. Box No. 15567**

◆ Iyer, Brahacharanam, Sankruthi, Chitirai (4), 20-6-83, 5.6', BE (CSE) SWE in Pvt concern at Bangalore. Rs 4 lakhs, P.A, seeks good looking qualified bride with good family background. Send horoscopes to Box No. 15568

◆ தந்தை கருணீகர், தாய் பிராமணர். சுத்த சைவம். ஹஸ்த நட்சத்திரம், கன்னிராசி, 14.10.1974, 185 செ.மீ, D.F.Tech, சிவந்த நிறம். ஆண்டு வருமானம் ரூ 7லட்சத்திற்கு மேல். ஒரே மகன். சென்னையில் வசிப்பு. +2க்கு மேல் படித்த பிராமண குலத்தைச் சார்ந்த அழகான மணமகள் தேவை. பிராமணர்களில் எந்தப் பிரிவும் சம்மதம். எதிர்பார்ப்பு இல்லை. போதிய வசதி உள்ளது. பெட்டி எண். 15569

◆ Iyer, Brahacharanam, Haritha, Uthratadhi, 26, BEMS USA boy, employed in USA, Well settled family seeks qualified employed, home loving Iyer girl. Sub-sect no bar. Send horoscope, Bio-data, family details. Box No. 15570

◆ J. Rajesh, B.E., Avittam, Gouthama, Vadamal, 31 yrs, 5.9', HP (Houston), Decent salary seeks suitable graduate girl with computer knowledge. Ph: 22333571, 9840663872. Box No. 15571

◆ ஐயங்கார், வடகலை, ஆத்ரேய, மூலம், 42 / 6', பி.ஏ.டி.சி.ஏ, மாத வருமானம் ரூபாய் 40,000/-, மஸ்கட்

டில் பணி. ஒரே பையனுக்கு தகுந்த பிராமண பெண் தேவை. எந்தப் பிரிவும் சம்மதம். எளிய திருமணம். எந்தவித எதிர்பார்ப்பும் இல்லை. தொலைபேசி எண்: 9710205896, 9710436618. பெட்டி எண். 15572

◆ Iyer, Vadamal, Rohini (1), Vathulam, M.Com, 30y, working Bank, hearing impaired, handsome and clean habits, seeks graduate, employed girl. Ph: 24863886, 9445288616. Box No. 15573

◆ Iyer, Brahacharanam, Garga, Anusham (2), 83/180, BCS, MPM, MBA, DCL, Team Lead (HR), MNC, Pune, 5.6 Lpa, seeks well educated employed/unemployed home loving Brahmin girl. Contact Ph 020 - 25284179, Mobile 9011060226. Box No. 15574

◆ MCA, Iyer, Brahacharanam, Haritha, Moolam, 31, Software Engineer, Bangalore, Rs.20 lacs per annum seeks, Good looking, qualified, employed girl from respectable family. Ph: 9840411500/044-24643260 e.mail:nagups@yahoo.com Box No. 15575

◆ Ashtasahasram, Athreyam, Sathayam, 02.02.76, 5.9', MNC, Bangalore, 1.50 L/pm, BA, MCSE, PMP, படித்த வரனுக்கு குடும்பப்பாங்கான, படித்த பெண் தேவை. TM-M1069325 விவரம் பார்த்து பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கவும். உட்பிரிவு சம் மதம். சசிசேகரன், 09980310621, 080 - 26796714. Box No. 15576

◆ தமிழக அரசில் வேலை பார்க்கும் கிருஸ்துவ நாடார், வயது 27, உயரம் 165 செ.மீ, மாநிறம், இவருக்கு அரசில் வேலை பார்க்கும் அல்லது வசதி உள்ள பெண் தேவை. சாதி, மதம், பேதம் இல்லை. போட்டோ மற்றும் முழு விபரங்களுடன் தொடர்பு கொள் ளவும். பெட்டி எண்: 15577

◆ Saiva Vellala, 28 yrs, 185 cm, Poosam, MS(IT), MBA, quali - fied and employed in MNC as executive in Chennai, 4.5 lac p.a seeks good looking pious and educated girl from respected family. Contact: 09381029427. email: sam1952 @ yahoo.co.in Box No. 15578

